வரு. 76 இல. 13 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28 பக்கங்கள் 100/-
தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
2024 மார்ச் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
March 31 Sunday, 2024

கருணை இல்லம் கோகுலம்

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No.- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 287010080891
Fax 2430011 Email: iskcon@sltnet.lk Web: www.iskcon.lk

/ Thinakaran.lk / ThinakaranLK


03
'ஜயகமு ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியது ஏன்?


07
இலங்கையின் பொருளாதார மீட்சியை உறுதி செய்த சர்வதேச நாணய நிதியம்!


11
அமெரிக்க – இஸ்ரேல் முறுகலும் ஐ.நா.வின் போர்நிறுத்த தீர்மானமும்


24
இலங்கை கால்பந்தின் புதிய ஆரம்பம்

# அரசாங்க பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் அனைவருக்கும் பட்டப்படிப்பு ஆரம்பம்



## இலங்கை கல்விப் பல்கலைக் கழகம் ஜூன் மாதம் திறப்பு

## 2033 இல் 242,000 ஆசிரியர்களும் கல்வித்துறையில் நிபுணத்துவம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றப்படுவர்

கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் 2033ஆம் ஆண்டுக்குள் அரசாங்க பாடசாலைகளிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றும் நோக்குடன் இலங்கை கல்விப் பல்கலைக்கழகம் (Sri Lanka University of Education) எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் திறக்கப்படுமென கல்விச் சீர்திருத்த நிபுணத்துவ குழுவின் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ள முதல் கல்வி தொடர்பான பல்கலைக்கழகம் இதுவாகும். இப்பல்லைக்கழகம் திறக்கப்பட்டதன் பின்னர் 2033 ஆம் ஆண்டாகும் போது இலங்கையில் ஆரம்ப தரம் முதல் உயர்தரம்வரை கற்பிக்கும் அனைத்து 242,000 ஆசிரியர்களும் கல்வித்துறையில் நிபுணத்துவம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றப்படுவார்கள்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தின் ஆலோனையின் படி இயங்கும் இந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமையகம் மஹரகமவில் ஸ்தாபிக்கப்படுமென்றும், தற்போது இயங்கிவரும் 19 கல்வியியற் கல்லூரிகளும் இப்பல்கலைக்கழகத்தின் வளாகங்களாக இயங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பல்கலைக்கழகத்தின் பிரதான தலைமையகத்துடன் தொடர்புடையதாக விஞ்ஞான தொழில்நுட்பம், கல்வி, விசேட கல்வி, தகவல் தொடர்பாடல் மற்றும் உடற்கல்வி உள்ளிட்ட 08 பீடங்கள் இயங்கும். மேலும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஆய்வுத் துறைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு தேவையான கட்டட வசதிகளுக்காக தற்போதுள்ள கட்டடங்கள் பயன்படுத்தப்படுமெனவும், இதற்காக 2024 ஆம் ஆண்டு 01 பில்லியன் ரூபா 04


இன்று உயிர்த்த ஞாயிறு

## ஒற்றுமை, நல்லிணக்கம் நாடு முன்னேற அவசியம்

### ஜனாதிபதி ரணில் ஈஸ்டர் தின வாழ்த்து



இலங்கையர்களாகிய நாம், எமது ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணுவதுடன், அவற்றுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சக்திகளிடமும் சிக்காமல், அறிவுபூர்வமாக நாட்டின் பாதுகாப்பு, சமாதானம், அபிவிருத்திக்காக அர்ப்பணிக்க 04

## சமூகத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல உயிர்ப்பு நாளில் உறுதி பூணுவோம்



"இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை போதனைகளின் மூலம் எமது வாழ்வை ஒளி பெறச் செய்வோம். இன்றைய சிக்கலான சமூக புரிதலின்மைகளுக்கு மத்தியில் மனித உறவுகள் மற்றும் சமூக நெறிமுறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் சமூகத்தை 04

## IMF நிறைவடையும்வரை தேர்தல் நடத்த வாய்ப்பில்லை

### அமைச்சரவை, ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தப் பணிகள் நிறைவடையும்வரை எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு வாய்ப்பில்லையென்று அமைச்சரவைக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நாடு பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதெனவும், ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளை தனித்தனியாக சந்தித்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை 04

### 35ஆவது லக்ஸ் சரசவிய விருது விழாவில் நந்தா மாலினிக்கு சரசவிய கௌரவம்



லக்ஸ் சரசவிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த பாடகிக்கான விருது நந்தா மாலினிக்கு வழங்கப்பட்டது. அவருக்குரிய விருதை இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, அவர் அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருகேயே சென்று வழங்கினர். அவருடன் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும் கலந்துகொண்டார்.

## முன்னாள் போராளிகளின் நலன் காக்க 'அம்மான் படையணி' தயார்

### கிழக்கில் செயற்பாடுகளை விரிவாக்க திட்டம்



முன்னாள் போராளிகளின் நலன் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட 'அம்மான் படையணி' அமைப்பின் செயற்பாடுகளை கிழக்கு மாகாணத்தில் விரிவாக்க திட்டமிட்டுள்ளதாக, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 04

## இலங்கை – இந்திய இருதரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து புதுடில்லியில் மீளாய்வு

இலங்கை இந்தியாவுக்கிடையிலான இருதரப்பு பொருளாதார திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான சந்திப்பொன்று கடந்த வியாழன் (28) புதுடில்லியில் நடைபெற்றது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் குவாத்ராவின் (Vinay Kwatra) அழைப்பின் பேரில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் 04



## யாழ். மயிலிட்டி துறைமுகத்துக்குள் மீன்பிடி படகுகளால் இடநெருக்கடி

### அமைச்சர் டக்ளஸ் நேரடியாக ஆய்வு



யாழ். மயிலிட்டி துறைமுகத்துக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (30) கள விஜயம் செய்து, அங்குள்ள நிலைமையை ஆராய்ந்ததுடன், மயிலிட்டி கடற்றொழிலாளர்களின் 04



04
பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி 01Kg ரூ.1,000க்கு விற்பனை

### எங்கள் கருத்து...

## ஆரோக்கியத்துக்கு ஆபத்தாக மாறிய உணவுக் கலாசாரம்!

உணவின் தரம் குறித்து இக்காலத்தில் அநேகர் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்று அக்காலத்தில் எமது முன்னோர் கூறியிருக்கின்றனர். ஆரோக்கியமான உணவுப்பழக்கமானது எமது உடலுக்கு மருந்தைப் போன்று தொழிற்பட்டு, வியாதிகள் வராமல் தடுக்கின்றது என்பதே இதன் பொருளாகும்.

அக்காலத்தில் எமது முன்னோர் மத்தியில் கொடிய வியாதிகள் இருந்ததில்லை. நீரிழிவு, இருதய வியாதிகள், புற்றுநோய், மனஅழுத்தம் போன்ற பல்வேறு வியாதிகளையெல்லாம் அக்காலத்தில் மக்கள் அறிந்திருக்கவில்லை. ஆயுள்வரை அவர்கள் ஆரோக்கியமாகவே வாழ்ந்தார்கள். முதுமை காரணமாகவே மரணத்தைத் தழுவினார்கள்.

இக்காலத்தில் மக்கள் மத்தியில் வியாதிகள் அதிகரித்து விட்டன. புதிய புதிய வியாதிகளால் இளவயதினரே பீடிக்கப்படுகின்றார்கள். நீரிழிவு, இருதய வியாதிகள், சிறுநீரக செயலிழப்பு என்றெல்லாம் இளவயதினர் கூட பாதிக்கப்படுகின்றார்கள். இக்காலத்தில் அரச வைத்தியசாலைகள் மாத்திரமன்றி, தனியார் வைத்தியசாலைகளும் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

மக்கள் தமது வீட்டில் இயற்கை உணவுகளை சமைத்து உண்டு வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு 04

### சென்னை– யாழ். பலாலிக்கு இடையே

## விமான சேவையை ஆரம்பிக்க IndiGo இலங்கையிடம் அனுமதி கோருகிறது

இந்தியாவின் சென்னைக்கும் யாழ். பலாலிக்கும் இடையே விமானங்களை இயக்க இண்டிகோ எயார் லைன்ஸ், இலங்கை அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளது. கொவிட்-19 காலத்தில் யாழ். பலாலிக்கும் 04



### காணாமல் போனோர் அலுவலகம்

## முறைப்பாடுகளை 2025க்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பு

காணாமல் போனோர் அலுவலகத்துக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அடுத்த வருட இறுதிக்குள் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலை 04



## முதலீட்டை இரட்டிப்பாக்கும் சீனாவின் Sinopec நிறுவனம்

### 4.5 முதல் 09 பில். டொ. வரை முதலீடு



ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் முதல் 09 பில்லியன் அமெரிக்க 04

## ஏப்ரல் 08ஆம் திகதி முழு சூரிய கிரகணம்

### வட அமெரிக்காவில் அவதானிக்கலாம்



முழு சூரிய கிரகணம் எதிர்வரும் ஏப்ரல் 08ஆம் திகதி தோன்றுமென்பதுடன், சூரிய கிரகணத்தை வட அமெரிக்காவில் மட்டுமே அவதானிக்க முடியுமெனவும் அமெரிக்க 04

### பிரபல தமிழ் வில்லன் நடிகர்

## டேனியல் பாலாஜி நேற்று சென்னையில் காலமானார்

### அவரது கண்கள் தானம்

தமிழ் திரையுலகின் பிரபல வில்லன் நடிகர் டேனியல் பாலாஜி தனது 48ஆவது வயதில் மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் (29) இரவு காலமானார். அவரது 06



## மட்டு.– கல்முனை பிரதான வீதியில் அதிசொகுசு தனியார் பஸ் விபத்து

### பாலமுனை சந்தியில் கடைகள் பல சேதம்; பஸ் சாரதி, நடத்துநர் உட்பட மூவர் படுகாயம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதி 4ஆம் கட்டை பகுதியில் நேற்று 04



### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 31 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.39 |
| ஸுபஹ் | 04.54 |
| சூரிய உதயம் | 06.10 |
| ளுஹர் | 12.16 |
| அஸர் | 03.22 |
| மஃறிப் | 06.20 |
| இஷா | 07.30 |

# தெற்காசியாவின் மிகப் பெரிய மகப்பேற்று மருத்துவமனை







தெற்காசியாவின் மிகப் பெரிய மகப்பேறு மருத்துவமனையாக காலி கராபிட்டியவில் அமைக்கப்பட்டுள்ள "ஜேர்மன் இலங்கை நட்புறவு புதிய மகளிர் மருத்துவமனை" ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த 27ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.திறப்பு விழாவின் போது, புதிதாக திறக்கப்பட்டுள்ள மகப்பேறு வைத்தியசாலைக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க விஜயம் செய்து அதிநவீன சத்திர சிகிச்சை கூடங்கள் உட்பட அதன் வசதிகளை பார்வையிட்டார்.

மூன்றரை தசாப்தங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக போதிய மூலதனச் செலவுகள் வழங்கப்படவில்லை எனவும் இந்த வருடத்தில் இருந்து கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக அதிக மூலதனச் செலவுகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.ஆறு மாடிகளைக் கொண்ட இந்த வைத்தியசாலை 640 படுக்கைகள், 6 அறுவை சிகிச்சை நிலையங்கள், அவசர சிகிச்சை பிரிவுகள், தீவிர சிகிச்சை பிரிவுகள், ஆய்வகங்கள், சிசு தீவிர சிகிச்சை பிரிவுகள், விசேட குழந்தை பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து நவீன மருத்துவ வசதிகளையும் கொண்டுள்ளது. கழிவுநீரைச் சுத்திகரித்து வெளியேற்றும் பிரிவும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

2004 டிசம்பரில் விடுமுறைக்காக இலங்கைக்கு வந்து, ஹபராதுவ தல்பே பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த ஜேர்மனியின் முன்னாள் சான்சலர் ஹெல்மட் கோல், சுனாமி அனர்த்தத்தினால் தென் மாகாணத்தில் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலையான காலி மகமோதர வைத்தியசாலைக்கு ஏற்பட்ட சேதத்தை நேரில் பார்த்துவிட்டு புதிய மகப்பேற்று வைத்தியசாலையை அமைக்க முன்வந்தார்.வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக ஜெர்மன்அரசாங்கம் 25 மில்லியன் யூரோக்களை (சுமார் 357 கோடி ரூபாய்) வழங்கியிருந்தது. வைத்தியசாலைக்கான செலவுகளில் ஒரு பகுதி நன்கொடையாகவும், மற்றைய பகுதி இலகுக் கடனாகவும் கிடைத்துள்ளது. ஜேர்மன் அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட இந்த நன்கொடைக்காக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியூமனுக்கு (Felix Neumann) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவு பரிசு ஒன்றையும் வழங்கினார்.

வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக ஆரம்பத்தில் 800 பேர்ச் காணி ஒதுக்கப்பட்டது. பின்னர் மேலும் இரண்டு காணிகள் கையகப்படுத்தப்பட்டு தற்போது வைத்தியசாலையின் மொத்த பரப்பளவு சுமார் ஆயிரம் பேர்ச்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. புதிய மகப்பேறு வைத்தியசாலையை திறந்து வைத்ததன் பின்னர், நவீன சத்திர சிகிச்சை நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க :

''முன்னர், நமது மருத்துவர்களுக்கு மலேரியாவுக்கு எதிராக போராட வேண்டியிருந்தது. ஆனால் தற்போது முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், பல்வேறு நோய்கள் ஏற்படுவதாலும் சுகாதாரத் துறையின் சவால்கள் அதிகரித்துள்ளன. எனவே, சுகாதார சேவை அதற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.மேலும், இந்த நாட்டில் கல்வி முறையும் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும். இதுவரை, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான மூலதனச் செலவு குறைவாகவே ஒதுக்கப்பட்டது. முன்னர் சுகாதாரம் மற்றும் கல்விக்கு போதுமான பணம் செலவிடப்படவில்லை. யுத்தத்திற்கு பெருமளவு பணம் ஒதுக்க வேண்டியேற்பட்டதே அதற்குக் காரணம்.

இரண்டாவதாக, அதிக அளவு கடன் வாங்கியிருப்பதால், அதிக பணத்தை வட்டியாகச் செலுத்த நேரிட்டுள்ளது. 1980 _ 1989 களில் நான் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கல்விக்காக அதிக நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேன். ஆனால் பின்னர் பல்வேறு காரணங்களால் கல்விக்காக அதிக பணம் செலவிட வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் நாம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் கடந்த காலத்தில் அதிக அளவில் கடன் வாங்க நேரிட்டதால், எங்கள் வருமானத்தில் 50% கடன் மற்றும் வட்டிக்காகச் செலவிடப்படுகிறது. இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 07 டிரில்லியனுக்கும் மேல் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 3.9 டிரில்லியன் கடனை திருப்பிச் செலுத்த ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மூன்றில் ஒரு பங்கு கடனைத் திருப்பி செலுத்தவும், மூன்றில் இரண்டு பங்கு வட்டியைச் செலுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், 1.2 டிரில்லியன் சம்பளத்திற்காக செலவிடப்படுகிறது. மூலதனச் செலவுகளை ஒதுக்கிய பின்னர், மிகக் குறைவான தொகையே எஞ்சுகிறது. நீர்ப்பாசனம் உள்ளிட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும்.இவ்வாறு நாம் தொடர்ந்து பயணிக்க முடியாது. அதனால் தான் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை உடனடியாக மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறு எங்களுக்குத் தெரிவித்தன. இந்த ஆண்டுக்கான செலவினங்களுக்குத் தேவையான பணத்தை நாட்டிற்குள் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் முதல் முடிவாகும். நாட்டில் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதில் இது முக்கியமான முடிவாகும். எக்காரணத்திற்காகவும் இனி பணம் அச்சிட முடியாது. மேலும், அரசு வங்கிகளில் பணம் பெற முடியாது. நாட்டிற்குள் இருந்து தேவையான வருமானத்தை ஈட்டிக்கொண்டு, முன்னேற வேண்டும்.இதில் எமக்கிருந்த ஒரே வழி வரியை உயர்த்துவதுதான்.இதற்காக அனைவரும் எங்களைக் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இந்த நடவடிக்கையால், முதல் முறையாக வரவு செலவுத்திட்டத்திற்காக பணத்தை அச்சிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. அனைவரும் எதிர்கொள்ளும் சிரமங்களை நாம் அறிவோம். ஆனால் வரி அதிகரிப்பால் இன்று வரவு செலவுத் திட்டத்திற்காக கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. அதன் பெறுபேறுகளை இன்று நாட்டில் காணமுடிகிறது. டொலருக்கு நிகராக 370 ரூபாவாக இருந்த ரூபாயின் பெறுமதி, தற்போது 300இற்கும் குறைவாக சரிந்து, ரூபா வலுப்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் மேலும் ரூபா வலுவடையும்.

மேலும் பணவீக்கம் குறைவதால் வட்டி வீதத்தைக் குறைக்க முடியும். அப்போது தொழிற்துறைகள் முன்னேற்றமடையும். தொழிற்துறை வளர்ச்சியால் நாடு முன்னேற்றமடையும். கஷ்டமாக இருந்தாலும், எடுத்த தீர்மானங்களினால் நாடு இன்று பலனடைந்துள்ளது. மேலும், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்துள்ளோம். குறைந்த வருமானம் பெறும் அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக உயர்த்தியுள்ளோம். இதனுடன் தனியார் துறையிலும் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுத்தால், அடுத்த 02 வருடங்களில் நாம் செலுத்த வேண்டிய கடன் தொகை படிப்படியாக குறையும். அந்த பணத்தை நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தலாம்.கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை நவீனமயப்படுத்தாமல் எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்க முடியாது. 1930களில் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் நாம் முன்னேறினோம். 1980களில், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் நாங்கள் முன்னேறினோம். இன்று இலங்கையில் மாத்திரமன்றி ஐக்கிய இராச்சியத்திலும் எமது மருத்துவத் துறையினரால் சுகாதார முறைமை இயங்கி வருகின்றது. எனவே, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைக்கு தேவையான பணத்தை நாமே உருவாக்கி அந்த துறைகளில் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்துவோம்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்ததாவது;

''அதிநவீன மகப்பேற்று வைத்தியசாலையை வழங்கியதற்காக முன்னாள் ஜெர்மன் சான்சலர் ஹெல்மொட் கோலுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். 2010ஆம் ஆண்டு நான் முதன்முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவான போது எனக்கு இரண்டு கனவுகள் இருந்தன.சுனாமியால் சேதமடைந்த காலி பிரதான பேருந்து நிலையத்தை புனரமைப்பதும், அக்காலகட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த ஜேர்மன் இலங்கை நட்புறவு பெண்கள் வைத்தியசாலையை நிர்மாணிப்பதும் அந்த இரண்டு கனவுகள் ஆகும். காலி பிரதான பேருந்து நிலையம் 2010 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அந்த சமயம் இந்த வைத்தியசாலைக்காக 26 அத்திவார தூண்கள் மட்டுமே கட்டப்பட்டிருந்தன. இந்த வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு அரசு ஆதரவு அளித்தது. இன்று இவ் வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்து மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளது.2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் கராபிட்டிய வைத்தியசாலைக்கு 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சத்திர சிகிச்சைப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, பேராசிரியர் பிரிவு, பக்கவாதப் பிரிவு ஆகியவற்றுக்கு 100 கோடி ரூபாவும், மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் நூறு கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பம் மற்றும் அளவின் அடிப்படையில் கராபிட்டிய வைத்தியசாலையானது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. இன்றைய தினம் மகப்பேற்று வைத்தியசாலையுடன் கராபிட்டிய வைத்தியசாலையின் சேவைகள் மேலும் விரிவுபடுத்தப்படுகிறன.'' என்று தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி:

''சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற நாளையும் இன்றைய நாளையும் பார்க்கும் போது நாட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அவரது வெளிநாட்டு உறவுகள் பெரும் உதவியாக இருந்தன. கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் ஈரானுக்கு செலுத்த வேண்டிய கடனை செலுத்த ஆரம்பித்து, இன்றுடன் கடனைச் செலுத்தி முடித்துள்ளதை உதாரணமாக கூறலாம். இலங்கையின் பெருமையை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.'' என்று தெரிவித்தார்.

## கர்ப்பிணி வேடமிட்டு பஸ்களில் திருட்டு!

# பொலிஸாரிடம் வசமாக மாட்டிய கொள்ளைக் கும்பல்



அவர் பெயர் சிறியாவதி. தம்புத்தேகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். 60 வயது நிரம்பிய இரண்டு பிள்ளைகளின் தாய். மூத்தமகன் ஊரில் மனைவியுடன் சிறு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். இளைய மகன் முகாமைத்துவ பட்டதாரி. இங்கிலாந்தில் வசிக்கின்றார். இவருடைய வழக்கொன்றுக்காக அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டியிருந்தது.

அது கடந்த 21ஆம் திகதி, அநுராதபுரம் செல்வதற்காக ஆயத்தமானார் சிறியாவதி. தம்புத்தேகம பஸ்தரிப்பிடத்துக்கு வந்தார். எனினும் நீண்டநேரமாகியும் பஸ் எதுவும் வரவில்லை. அதனால் கொழும்பிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் செல்லும் தனியார் பஸ்ஸில் ஏறினார். பஸ்ஸில் அப்போது சற்று கூட்டம் அதிகமாகவிருந்தது. இதனால் சிறியாவதி நின்றுக்கொண்டே பயணித்தார். சிறிதுநேரத்தில் இரண்டு, மூன்று பேர் இறங்க அவருக்கு யன்னல் அருகில் ஆசனமொன்று கிடைத்தது. தம்புதேகம நகரை அண்மிக்கையில் நபரொருவர் வேகமாக ஓடி வந்து பஸ்ஸில் ஏறி சிறியாவதிக்கு அருகிலிருந்த காலியான ஆசனத்தில் அமர்ந்தார். எனினும் அவரால் வெகுநேரம் அமர்ந்திருக்க முடியவில்லை. இடையில் கர்ப்பிணிப் பெண்கள் இருவரும் இளம் பெண்ணொருவரும் ஏற, அவர் எழுந்து கர்ப்பிணிப் பெண்ணொருவருக்கு ஆசனத்தைக் கொடுத்தார். அந்த கர்ப்பிணிப்பெண் நீலநிற சட்டையும் காற்சட்டையும் அணிந்திருந்தார். பார்க்க 25 வயதுடையவர் போன்ற தோற்றம். அவருடன் வந்த இன்னொரு கர்ப்பிணிப் பெண்ணும் அதே வயதை ஒத்திருந்தார். அவர் சட்டை அணிந்திருந்தார். அதுமட்டுமின்றி இவர்கள் இருவருடனும் மற்றொரு பெண்ணும் இருந்தார். இதை சிறியாவதி உன்னிப்பாக அவதானித்தார். இவர்கள் மூவரும் பஸ்ஸில் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் இவர்கள் மூவருக்குள்ளும் ஏதோ கருத்துப் பரிமாற்றங்கள் நடப்பதை அவர் அவதானித்தார். எனினும் அதுபற்றி அவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. சிறிதுநேரத்தில் சிறியாவதி இறங்கும் இடமும் வந்தது. அவர் பஸ்ஸிலிருந்து இறங்குவதற்காக தனது ஆசனத்தை விட்டு எழுந்தார். அப்போது பக்கத்து இருக்கையிலிருந்த கர்ப்பிணிப்பெண் மற்ற கர்ப்பிணிப்பெண்ணிடம் ஏதோ சொன்னார். சிறியாவதிக்கு அது புரியவில்லை.



சிறியாவதி பஸ்ஸிலிருந்து இறங்குவதற்காக பின்பக்க கதவருகில் வந்து நின்றார். அப்போது இரண்டு கர்ப்பிணிப் பெண்களும் அவர்களுடன் வந்த இன்னொரு பெண்ணும் அவசர அவசரமாக எழுந்து சிறியாவதி இறங்க முடியாதபடி அவரைத் தள்ளிவிட்டனர்.

இதனிடையே 'குழந்தை இறுகுகின்றது 'என்று யாரோ கூச்சலிடும் சத்தம் கேட்க, சிறியாவதி பதறிப்போய் சுற்றும் முற்றும் பார்த்தார். அருகிலிருந்த கர்ப்பிணி பெண்தான் கூச்சலிட்டுள்ளார் என்பது அவருக்கு பின்னர்தான் தெரிந்தது. இதற்கிடையில், கழுத்திலிருந்த தங்க சங்கிலி நழுவிச் செல்வதை சிறியாவதி உணர்கின்றார். அப்போது தான் அவருடைய தங்கச் சங்கிலி காணாமல் போயுள்ளதை அவர் உணர்ந்தார்.

உடனே தன்னுடன் பஸ்ஸிலிருந்து இறங்குவதற்கு பெரும் ஆர்வம் காட்டிய கர்ப்பிணிப்பெண்கள் மீது அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவர் உடனடியாக பஸ் நடத்துனரிடம் சென்று 'பஸ்ஸிலிருந்து யாரையும் இறங்க அனுமதிக்க வேண்டாம். என்னுடைய கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை காணவில்லை. இரண்டு பவுண் இருக்கும். எனக்கு இந்த கர்ப்பிணிப் பெண்கள் மீது தான் சந்தேகமாக உள்ளது. பஸ்ஸை நேராக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு செலுத்துங்கள்' என்று சொன்னார். அதற்கு பஸ் சாரதியும் நடத்துனரும் செவிசாய்ந்தனர். அதன்படி பஸ் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுச்செலப்பட்டது.



பொலிஸ் குழுவினர் அவ்விடத்துக்கு வந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களில் பெண் பொலிஸ் அதிகாரிகளும் இருந்தனர். இரண்டு கர்ப்பிணிப் பெண்களையும், உடன் வந்த பெண்ணையும் பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். பயணிகள் எவரையும் பஸ்ஸிலிருந்து வெளியேற வேண்டாம் என அறிவுறுத்தினர்.

அதன்படி இரண்டு கர்ப்பிணிப் பெண்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று சோதனையிட்டனர். இதன்போதே கர்ப்பிணி பெண் தங்க நகையை மறைத்து வைத்திருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சிறியாவதி அவதானமாக இருந்ததால் கையும் களவுமாக சிக்கிய மூவரும் திட்டமிட்டு பஸ்களில் கொள்ளையடிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலைச் சேர்ந்த மூவர் எனத் தெரியவந்தது.

இந்த கும்பல் அநுராதபுரத்தில் மட்டுமின்றி நாடு பூராகவும் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதுமட்டுமின்றி இந்த மூன்று பெண்களும் பொலிஸாரிடம் சிக்குவது இது முதல் முறையல்ல. அவர்கள் தங்கச் சங்கிலிகள் திருடிய குற்றச்சாட்டில் பலமுறை சிறைக்கு சென்று வந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது. எனினும் தங்கச் சங்கிலி திருட்டை அவர்கள் மூவரும் நிறுத்தவில்லை. தங்கச் சங்கிலி திருட்டு, பிக்பாக்கெட் அடிப்பது அவர்களின் பிரதான தொழிலாகவே தற்போது மாறிவிட்டது.

பொலிஸ் தகவல்களின்படி இந்த மூன்று பெண்களும் ஒழுங்கமைக்கப்பட்ட 'சங்கிலித் திருட்டு' கும்பலைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்ளைக் கும்பலில் 15க்கும் மேற்பட்ட சங்கிலி திருட்டில் ஈடுபடும் பெண்கள் உள்ளனர். இவர்கள் இலங்கையில் வாழும் நாடோடி இனத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது.

ஆரம்பகாலங்களில் குறி சொல்லுதல், பாம்பு, குரங்கு போன்ற பிராணிகளை வைத்து வித்தைகள் காட்டுதல் என்று தொழில் செய்து வந்த இந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் தற்போது அந்த தொழிலை கைவிட்டு தங்கச் சங்கிலி திருட்டை பிரதான தொழிலாக கொண்டு நடத்துவதாக தெரியவருகின்றது.

கொவிட் தொற்றுக்குப் பின்னர் இவர்கள் தங்கச் சங்கிலி திருட்டில் ஈடுபட ஆரம்பித்ததாக தெரிவிக்கின்றனர்.

இவர்கள் பஸ்களில் மட்டுமின்றி, திருவிழாக் காலங்களில் கோயில்களுக்கு சென்று சங்கிலி திருட்டில் ஈடுபடுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் நல்லூர், திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம், சிலாபம் முன்னேஸ்வரம், மன்னார் மடுமாதா, தலவிலை போன்ற தேவாலயங்களில் நடைபெறும் சமய வழிபாடுகளையும், திருவிழாக்களையும் இலக்காக கொண்டே இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்கள் தம்புத்தேகம தெலுங்கு கிராமத்தில் வசிப்பவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



வசந்தா அருள்ரட்ணம்...

# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# 'ஜயகமு ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியது ஏன்?

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார விபரிக்கிறார்

**பாடசாலை செல்லும் சிறுவர்கள் முதல் வெளிநாடு செல்ல விரும்பும் இளைஞர்கள் வரை அனைவரையும் ஸ்மார்ட்டாக இயங்கச் செய்யும் நோக்கிலேயே 'ஜயகமு ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். இத்திட்டமானது பல்வேறு வழிகளில் தொழிலாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் அமைந்திருப்பதாக எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட அவர் குறிப்பிட்டார்.**

**கே: 'ஜயகமு ஸ்ரீலங்கா' என்றால் என்ன?**

பதில்: ஜயகமு ஸ்ரீலங்கா என்பது தொழிலாளர்கள் ஸ்மார்ட்டாக வேலை செய்ய, நாட்டை விட்டுச் செல்லும் இளைஞர்களை நாட்டுக்கு பலமாக இருக்கச் செய்யும், கல்வியை இடைநடுவில் விட்டுச் செல்லும் இளைஞர்களுக்கு முறையான தொழில் வழிகாட்டலை வழங்கும், புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களுக்கு வழிகாட்டலை வழங்கும், பாடசாலை செல்லும் சிறுவர் சிறுமியரை எதிர்காலத்தில் ஸ்மார்ட் ஆக்கும் வேலைத்திட்டமாகும். இது பொதுவாக அமைச்சு ஒன்றின் நடமாடும் சேவையின் ஆரம்பம் அல்ல. ஜயகமு ஸ்ரீலங்கா என்பது நாட்டின் எதிர்காலத்துக்காக மேற்கொள்ளப்படும் பாரிய தேசிய வேலைத்திட்டமாகும்.

**கே: தொழிலாளர் சந்தையை உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப மாற்றுவதில் இது எவ்வாறு பங்காற்றுகின்றது?**

பதில்: உலகத்தின் தேவைக்கு ஏற்ப தொழிலாளர் சந்தையை உருவாக்குவதே எமது அமைச்சின் முதன்மையான பணியாகும். உலகத் தொழிலாளர் சந்தையில் வேலைவாய்ப்புகள் மற்றும் அந்த வாய்ப்புகளை அடையத் தேவையான தொழிற்கல்வி வழங்குவது பற்றி விஞ்ஞானபூர்வமாக ஆய்வு செய்ததில்லை. சர்வதேச மற்றும் கணக்கெடுப்புகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் உதவியுடன் இது குறித்து முதலில் ஆய்வு நடத்துகிறோம். அதன் மூலம் கிடைக்கும் பதில்களுக்கு அமைய எதிர்காலத்தில் உலகத் தொழிலாளர் சந்தையின் தேவைகளுக்கும் நமது தொழிலாளர்களின் பயிற்சிக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கே: ஜயகமு ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் இதில் எவ்வாறு பங்களிக்கின்றது?**

பதில்: ஜயகமு ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் 'ஸ்மார்ட் யுத் கிளப்' உருவாக்கப்பட்டு வருகின்றது. இதுவரையில் பிரதேச செயலக மட்டத்தில் ஸ்மார்ட் யுத் கிளப்களை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஸ்மார்ட் யூத் கிளப்பின் இரண்டாயிரம் உறுப்பினர்களை ஒரு மாவட்டத்தில் நாங்கள் உருவாக்குகிறோம். எதிர்காலத்தை வெல்வதற்கான வழியை நாங்கள் அவர்களுக்கு வழங்குகின்றோம். அதேநேரம் ஜனாதிபதி நிதியத்தின் ஆதரவுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஐந்நூறு இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மனிதவளம் மற்றும் பாதுகாப்புத் துறை அதன் ஒருங்கிணைப்பைச் செய்து வருகிறது. அதற்கான செலவை ஜனாதிபதி நிதியம் ஏற்கிறது.

**கே: இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வாறான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன?**

பதில்: இந்தப் பயிற்சியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைகளை இலக்காகக் கொண்டது. இலங்கை ஹோட்டல் பயிற்சிக் கல்லூரியின் பாடநெறிகளுக்கு இளைஞர்கள் வழிநடத்தப்படுகிறார்கள், குறிப்பாக ஹோட்டல்துறையில் வேலைவாய்ப்பைக் குறிக்கோளாகக் கொண்டு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், இளைஞர்கள் நேரடியாக வேலைகளுக்கு வழிவகுக்கும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பாடநெறிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

**கே: வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற இந்தத் திட்டத்தின் ஊடான பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது?**

பதில்: வெளிநாட்டில் எப்படியாவது வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது பலருடைய கனவாக உள்ளது. வெளிநாட்டு வேலைகளுக்கான அதிக ஆர்வம் மற்றும் தேவை காரணமாக, சில நேரங்களில் கடத்தல்காரர்கள் மிரட்டி பணம் பறிக்கும் மோசடிகளில் ஈடுபடுகின்றனர். ஜயகமு ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தில் கடத்தல்காரர்களிடம் பிடிபடாமல் எப்படி வேலை பெறுவது என்பதை அறியலாம். பல்வேறு நாடுகளில் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை கொண்டு வரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கண்காட்சி இங்கு நடத்தப்படுகிறது. அதன்படி, ஒருவரின் தகுதிக்கேற்ப வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கே: வெளிநாட்டில் வேலைக்குச் செல்ல விருப்பம் இருந்தும் தகுதி இல்லாதவர்கள், இங்கு வருவதற்கு ஏதும் வழி உள்ளதா?**

பதில்: வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குத் தேவையான தகைமைகளை வழங்கும் பயிற்சி நிறுவனங்களும் ஜயகமு ஸ்ரீலங்கா நிக்ழச்சித் திட்டத்தில் பங்கெடுத்துள்ளன. தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை போன்ற அமைப்புக்கள் ஜயகமு ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தில் தமது காட்சிக் கூடங்களை அமைத்து மக்களைத் தெளிவுபடுத்துகின்றன. வெளிநாட்டில் வேலை தேடுபவர்கள், ஆனால் தகுதி இல்லாதவர்கள் இதன் மூலம் தொழில்பயிற்சி வாய்ப்புகளை பெறலாம்.

**கே: வெளிநாடுகளில் தொழில்களில் ஈடுபடுபவர்களின் குடும்பங்கள் இதனால் பலன் பெறவில்லையா?**

பதில்: புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு பெரும் நன்மைகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் வெளிநாட்டில் இருக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலும், புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வெளிமாநில தொழிலாளர்களின் குழந்தைகள் அதிகம் படிக்கும் பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்ட் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை அனுராதபுரம், மொனராகலை, கேகாலை, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு இந்த ஸ்மார்ட் பலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கே: வெளிநாடு சென்று இலங்கை திரும்பியவர்களுக்கு ஜயகமு ஸ்ரீலங்கா திட்டத்தின் ஊடாக எவ்வாறான நன்மைகள் கிடைக்கின்றன?**

பதில்: வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு மீண்டும் இலங்கைக்கு வந்து தொழில் தொடங்குபவர்களுக்கு தொழிலை மேம்படுத்த இங்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. வணிகத்தைத் தொடங்கவும் வணிகத்தை மேம்படுத்தவும் இங்கே உதவி வழங்கப்படுகின்றது. வெளிநாட்டு ஊழியர்களின் நலனை மேம்படுத்தும் ஆண்டாக கடந்த ஆண்டை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பெயரிட்டுள்ளது. இந்த ஆண்டு புலம்பெயர்ந்த தொழிலாளி தொழில்முனைவோராக மாறும் ஆண்டாக பெயரிடப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் நாடு மீண்டு வர வேண்டுமானால், தொழில் முனைவோர் மேலும் வளர்ச்சியடைய வேண்டும்.

**கே: புலம்பெயர் தொழிலாளிக்கு ஜயகமு ஸ்ரீலங்கா திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் விடயங்களை குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக மட்டுமல்ல, தொழிலாளர் துறை அமைச்சராகவும் இருப்பதால், இலங்கையில் உள்ள தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் ஊடாக எவ்வாறான நன்மைகள் கிடைக்கின்றன?**

பதில்: இங்கு இரண்டு முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தியுள்ளோம். ஒன்று, தொழிலாளர் குடும்பங்களின் பாடசாலை செல்லும் குழந்தைகளுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்குவது. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் குறைந்த வருமானம் பெறும் உழைக்கும் குடும்பங்களைச் சேர்ந்த ஐந்நூறு பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இதற்குத் தேவையான நடவடிக்கைகள் 'ஷ்ரம வாசனா' நிதியத்தால் செய்யப்படுகின்றன.

**கே: இதில் உள்ள இரண்டாவது விடயம் என்ன?**

பதில்: இரண்டாவது முக்கிய விடயம் என்னவெனில், முன்னேறிய துறை தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கரு சரு திட்டத்தை ஜயகமு ஸ்ரீலங்காவுடன் இணைந்து நாடு முழுவதும் கொண்டு செல்கிறோம். முச்சக்கர வண்டி சாரதி, மின்சார தொழில்நுட்பவியலாளர், முன்பள்ளி ஆசிரியர் ஆகியோருக்கு ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதியில் எவ்வித பாதிப்பும் கிடையாது. சில நேரங்களில் தினக்கூலி மட்டுமே கிடைக்கும். சமூக பாதுகாப்பு இல்லை. பெரும்பாலும் அவர்களுக்கு தொழில் மரியாதை கிடைப்பதில்லை. தொழிலுக்கு மரியாதையும் மதிப்பும் அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தை தேசிய அளவில் விவாதித்த பிறகு, மாவட்ட அளவில் சென்று, அவர்களுடன் அடிமட்ட அளவில் விவாதித்து, அங்கு திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்.



# சமாளிக்க முடியாத கடன்நெருக்கடியினால் இந்தியாவிடம் மண்டியிட்டது மாலைதீவு!

## வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த காலஅவகாசம் கோருகிறார் ஜனாதிபதி முய்ஸு!

இத்தனை காலம் இந்தியாவைக் கடுமையாக விமர்சித்து வந்த மாலைதீவு ஜனாதிபதி முய்ஸு, திடீரென தனது குரலை மாற்றி இருக்கிறார். மாலைதீவு தற்போது எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளே இந்த மாற்றத்துக்கான காரணமெனத் தெரிகின்றது.

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள குட்டித் தீவுகள் கூட்டம் மாலைதீவு ஆகும். இது குட்டிநாடாக இருந்தாலும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. இதனால்தான் இந்தியாவும், சீனாவும் மாலைதீவு மீது முக்கியத்துவம் செலுத்தி வருகின்றன.

கடந்த சில காலமாகவே இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையே மோசமான உறவு நிலவி வருகின்றது. மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக முகமது முய்ஸு பொறுப்பேற்றது முதல் அவர் இந்தியாவுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறார்.

முகமது முய்ஸுவை பொறுத்தவரை அவர் சீன ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவராகவே அறியப்படுகிறார். இதன் காரணமாகவே அவர் தேர்தலில் வென்றவுடன் முதலில் சீனாவுக்குச் சென்று வந்தார். மாலைதீவு வரலாற்றில் எப்போதும் முதலில் வெல்லும் ஜனாதிபதி இந்தியாவுக்குத்தான் செல்வது வழக்கம். ஆனால், முஸ்ஸு அந்த வழக்கத்தை மாற்றி, சீனாவுக்குச் சென்று வந்தார். அது மாத்திரமன்றி, ஆயுதங்களை வாங்கவும் சீனாவுடன் முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அதுஒருபுறமிருக்க, மாலைதீவில் தங்கியுள்ள இந்தியப் படைவீரர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இதனால் இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையேயான உறவு மோசமடைந்தது.

நிலைமை அவ்வாறிருக்கையில், தற்போது மாலைதீவு ஜனாதிபதி தனது போக்கை திடீரென மாற்றிக் கொண்டுள்ளார்.

உள்ளூர் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி அளித்த மாலைதீவு ஜனாதிபதி முய்ஸு, தங்கள் நாட்டில் இந்தியா எண்ணிலடங்காத திட்டங்களைச் செயல்படுத்தி இருப்பதாகவும் இந்தியா தங்களுக்கு நெருங்கிய நட்பு நாடு என்றும் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு திடீரென இவ்வாறு குரலை மாற்றுவதற்கு என்ன காரணம் என்பது ஆராயப்பட வேண்டியதாகும். இந்தியாவிடம் பெற்றுக் கொண்ட கடன்தான் இந்த மாற்றத்துக்குக் காரணமென்று தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்கு இந்த வருட இறுதிக்குள் மாலைதீவு 400.9 மில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால், மாலைதீவில் இப்போது இருக்கும் பொருளாதார சூழலில் அந்நாட்டினால் இந்தளவுக்குத் தொகையைத் திருப்பி அளிக்க முடியாது. இந்தியாவிடம் கூடுதல் அவகாசம் கேட்பதற்காகவே மாலைதீவு தனது குரலை மாற்றிக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

அதேநேரம் மாலைதீவு இந்தியாவிடம் வாங்கிய கடன் என்பது மிகமிகக் குறைவு. மாலைதீவு உண்மையில் சீனாவிடம்தான் மிகப் பெரிய தொகையைக் கடனாக வாங்கியுள்ளது.

மாலைதீவில் கடந்த 2018 வரை 5 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தவர் அப்துல்லா யாமீன். இவரும் முய்ஸுவை போலவே சீன ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவராகவே அறியப்படுகிறார். இவர் ஜனாதிபதியாக இருந்த போது, சீனாவிடம் கடன்களை வாங்கிக் குவித்தார்.

மாலைதீவில் வளர்ச்சித் திட்டங்களுக்காக சீனாவிடம் பெருந்தொகையைக் கடன் வாங்கியதே இப்போது மாலைதீவுக்குப் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. மாலைதீவுக்கு மொத்தம் 3 பில்லியின் டொலர் வெளிநாட்டுக் கடன் இருக்கிறது. அதில் 42 வீதம் சீனாவிடம் இருந்து பெற்ற கடன் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடனும் மாலைதீவின் கழுத்தை நெரித்து வருகிறது. மாலைதீவு ஜனாதிபதியாக முய்ஸு பதவியேற்ற உடனேயே இந்தக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு சீனா கூடுதல் கால அவகாசம் அளித்தது. இருப்பினும் கடன் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

இந்தக் கடன் காரணமாகவே புதிய வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்க முடியவில்லை என்று முய்ஸு கூறியிருந்தார். அந்தளவுக்கு வெளிநாட்டுக் கடன், குறிப்பாகச் சீனாவின் கடன் மாலைதீவுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புகள் இது தொடர்பாக மாலைதீவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே பாகிஸ்தான், இலங்கை போன்ற பல நாடுகள் இதேபோல சீனாவிடம் பெற்ற கடன்களால்தான் பெரிய சிக்கலில் அகப்பட்டன. இரு நாடுகளுமே திவால் ஆகும் நிலைக்குத் தள்ளப்பட்டன. இதை உலக நாடுகள் சீனாவின் 'மாய வலை' என்றே குறிப்பிடுகின்றன. அதன் பிறகு சர்வதேச நாடுகளின் உதவிக்குப் பின்னரே நிலைமை சற்று சீரடைந்தது.

இந்தப் பட்டியலில் மாலைதீவும் சேர்ந்து விடுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.

இந்தியாவுக்கு மிகவும் அருகில் உள்ள மாலைதீவு, பூகோள ரீதியாக இந்தியாவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளை எல்லாம் வளைத்து இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்க ஒருபக்கம் சீனா முயற்சி செய்து வரும் நிலையில், மாலைதீவு முன்னர் இந்தியாவுக்கு நெருக்கமான நாடாக இருந்து வந்தது. ஆனால், கடந்த ஆண்டு மாலைதீவு நாட்டில் நடைபெற்ற தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரே நிலைமை சிக்கலாகியுள்ளது.

சீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட முய்ஸு பதவியேற்ற பிறகு, சீனாவுடன் மிக நெருக்கம் காட்டத் தொடங்கியது மாலைதீவு. இந்தச் சூழலில்தான், லட்சத்தீவில் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் பிரதமர் மோடி தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட புகைப்படம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் மாலைதீவு அமைச்சர்கள் பதிவிட்டனர்.

இதனால், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவானது. மாலைதீவில் இருந்து இந்திய இராணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி முய்ஸு உத்தரவிட்டார். இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவுக்குப் பின்னடைவாகப் பார்க்கப்பட்டது.

மாலைதீவு இவ்வாறு இந்தியாவுக்கு எதிராக முஷ்டியை முறுக்கினாலும், இந்தியாவையே பெரிதும் அந்த நாடு நம்பியிருக்கிறது. சுற்றுலா வருவாயை பெரிதும் நம்பியிருக்கும் மாலைதீவுக்கு இந்தியர்கள் அதிக அளவு செல்கிறார்கள். இது அந்த நாட்டிற்கு கணிசமான வருவாயை கொடுக்கிறது. அதுபோக, இந்தியா ஏகப்பட்ட கடனுதவியையும் மாலைதீவுக்கு வழங்கி வந்தது. தற்போது இந்தியாவுடனான மோதலால் மாலைதீவு சீனாவுடன் அதீத நெருக்கம் காட்டியது.

தற்போது திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றியிருக்கும் மாலைதீவு ஜனாதிபதி முய்ஸு, இந்தியா கடன் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். அதுமட்டுமன்றி இந்தியா நெருங்கிய நட்பு நாடு எனவும் கூறியுள்ளார்.

"இந்தியா எங்களின் நெருங்கிய நட்பு நாடாக உள்ளது. அந்த நெருக்கம் தொடர்ந்து அப்படியே இருக்கும். இந்தியாவிடம் மாலைதீவு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை திருத்தி அமைக்க வேண்டும். இத்தகைய கடன் நிவாரணத்தை இந்தியா அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. கடன் திருப்பி செலுத்தும் விவகாரத்தில் நான் இந்தியாவுடன் பேசிக்கொண்டு வருகிறேன்" என்று முய்ஸு கூறியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு பிடிவாதமாக இருப்பதை விட்டுவிட்டு, நிதிச்சவால்களை சமாளிக்க அண்டை நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ் தெரிவித்துள்ளார்.

"நாம் பிடிவாதமாக இருப்பதை விட்டுவிட்டு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். இதன் மூலம் பல நாடுகள் நமக்கு உதவி செய்யும். ஆனால் இந்த விஷயத்தில் முய்சு சமரசம் செய்ய விரும்பவில்லை.இப்போதுதான் அவர்கள் (அரசு) நிலைமையை புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் பொதுமக்களை ஏமாற்றி வருகிறது. பொய்களை மறைக்க அமைச்சர்கள் இப்போது பொய் சொல்கிறார்கள்" என முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் முகமது சோலிஹ் தெரிவித்துள்ளார்.

எஸ்.சாரங்கன்...



## சீனாவின் கடன்வலையில் மாலைதீவும் தப்பவில்லை!

### மகத்துவம் நிறைந்த இந்நன்னாளில்

# உயிர்ப்பு விழா நல்வாழ்த்துகளை தெரிவிப்பதில் அக மகிழ்கிறேன்



மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இந்த உன்னதமான, மகத்துவம் நிறைந்த நன்னாளில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாக, வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அவர் இறந்தார். பாவத்தை ஒழிக்க ஒரேயொருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார்” உரோ. 6 : 10. மானிட குலத்தை மீட்பதற்காக உருவெடுத்துவந்த இறைமகன் கிறிஸ்து, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இந்த உன்னதமான நாளை கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறு தினமாக கொண்டாடுகின்றனர்.

"சாவை ஏற்குமளவுக்கு, அதுவும் சிலுவை சாவை ஏற்குமளவுக்கு கீழ்படிந்தவரானார்” என்ற திருவிவிலிய வாக்கியத்துக்கமைய, அடிமைத்தன ஆதிக்கம் செலுத்திய காலத்தில் மீட்பு, சமாதானம், சமத்துவம், அன்பு, நட்புறவு என அனைத்தையும் இந்த உலகிற்கு பரிசளிப்பதற்காக அவமானத்தின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை சாவை கிறிஸ்து ஏற்றார். ஆனாலும் இறந்த கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து சாவின் ஆதிக்கத்திற்கு அந்தம் கொடுத்தார்.

உயிர்ப்பு விழாவுக்கான தயார்படுத்தலான தவக்காலத்தின் 40 நாட்களும், கிறிஸ்தவ மக்கள் ஒறுத்தல் முயற்சிகளிலும், நற்காரியங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இந்நாட்டை, பிரஜைகளாகிய நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும் மீட்டெடுத்துவரும் மகிழ்ச்சிகரமான வேளையிலேயே இந்த ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுகிறோம். நாட்டின் கடன் நெருக்கடிகள் நீங்கி மக்களுக்கு சுபிட்சமும் சமாதானமும் நிறைந்த நல்வாழ்வை உயிர்த்த கிறிஸ்து வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

நாட்டை உலுக்கிய ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களையும் இந்த வேளையில் நினைவு கூருகின்றேன். அவர்களின் பிரிவின் நிமித்தம் வாடுவோருக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் தேற்றுகை கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். அனைவர் மனங்களிலும் அமைதியும், மகிழ்வும் பெறும் இத்தருணத்தில் ஈஸ்டர் வாழ்த்துகளை தெரிவிப்பதில் அக மகிழ்வடைகின்றேன்" என்றார்.




# மகத்துவம் மிக்க லைலத்துல் கத்ர்

இஸ்லாம் போதிக்கும் உயர் நற்பண்புகளில் சகிப்புத்தன்மையும் ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனிடமும் காணப்பட வேண்டிய மிருதுவாக நடத்தல், இணங்கிச் செல்லுதல், விட்டுக்கொடுத்தல், பொறுமையை மேற்கொள்ளல், பெருந்தன்மையைக் கடைப்பிடித்தல் போன்ற அத்தனை நல்லம்சங்களும் சகிப்புத்தன்மையோடு மிக நெருங்கிய தொடர்பினை கொண்டிருக்கின்றன.

சகிப்புத்தன்மையினை அல்லாஹு தஆலா தன்னுடைய பண்பு என்பதாக அல்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறான். 'அல்லாஹ் உங்கள் உள்ளங்களிலுள்ளதை நிச்சயமாக அறிகின்றான் என்பதை நீங்கள் அறிந்து அவனுக்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள்.

நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், பொறுமையாளனாகவும் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.' (ஸூறா அல்பகரா : 235) அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'அடித்து வீழ்த்துபவன் வீரனல்ல. கோபத்தின் போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே வீரனாவான்' என்று கூறினார்கள். (ஆதாரம்; ஸஹீஹ் முஸ்லிம்)அந்த வகையில் ரமழான் நோன்பு அளிக்கின்ற பயிற்சியும் பக்குவமும் சகிப்புத்தன்மைக்கு பெரிதும் பங்களிக்கக் கூடியனவாகும்.

குறிப்பாக அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் நோன்பு காலத்தில் உணவையும் பானத்தையும் தவிர்த்து ஆசைகளையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடிகிறது. என்ன தான் பசி, தாக உணர்வு ஏற்பட்டாலும் இச்சை உணர்வுகள் மேலிட்டாலும் நோன்பு அவற்றைக் கட்டுப்படுத்தி சகித்துக் கொள்ளக்கூடிய பயிற்சியை அளிக்கக்கூடியதாக உள்ளது. எனவே நோன்பு அளிக்கின்ற சகிப்புத்தன்மைக்கான பயிற்சியை வாழ்நாள் முழுவதும் எடுத்து நடக்க ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டும். அது தனிப்பட்ட வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் பெரிதும் பயனளிக்கக்கூடியதாகும்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# பேராசிரியர் சோ.சந்திரசேகரம்; 02ஆவது வருட நினைவுப்பேருரை

மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் இரண்டாவது வருட நினைவு ப்பேருரை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பேரா. சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றத் தலைவர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நினைவுப் பேருரையை 'தொலைந்த இடத்தில் தேடுவோம்' எனும் தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் சி.மௌனகுரு நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரம் எழுதிய கட்டுரைகளின் தொகுப்புகள் வெளியிடப்படவுள்ளன. இதன் போது, மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரமும் கொழும்பு பல்கலைக்கழக கல்வி த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.அதிரதனும் இணைந்து எழுதிய மற்றுமொரு கட்டுரை தொகுப்பும் வெளியிடப்படவுள்ளது. 'இலங்கையில் கல்வியின் வரலாற்றுச் செல்நெறிகள்', 'சர்வதேசக் கல்வி முறைகளின் செல்நெறி' ஆகிய நூல் தொகுப்புகளே வெளியிடப்படவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பேருரையாளர் அறிமுகத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாநிதி க.இரகுபரன் நிகழ்த்தவுள்ளார். வரவேற்புரையை கலாநிதி அதிரதனும் நன்றியுரையை பேரா. சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்ற செயலாளர் ச.இந்திரகுமாரும் நிகழ்த்தவுள்ளனர்.

### பண்டிகைக் காலத்தில்

# கோழி இறைச்சி 01Kg ரூ.1,000க்கு விற்பனை



கோழி இறைச்சி ஒரு கிலோ 1,000 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியுமென இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை தட்டுப்பாடின்றி விநியோகிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார். பண்டிகைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 04 மில்லியன் முட்டைகள் சந்தைக்கு விடப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## முறைப்பாடுகளை 2025க்குள்...

விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1971 கிளர்ச்சியில் 12,000 பேரும், 1989 பயங்கரவாதத்தில் 60,000 பேரும், மூன்று தசாப்தகால பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் 60,000 பேரும் இறந்ததாக நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். காணாமல் போனோர் அலுவலகம் 2016 பெப்ரவரி 28ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டபோதிலும், நீதி அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் 62 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. விசாரணை தரவுகளை சரிபார்த்து செயல்முறையை விரைவுபடுத்த அறிவுறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தில் இதுவரை கிடைக்கப்பெற்ற 14,700 முறைப்பாடுகளில் சுமார் 5,600 முறைப்பாடுகள் ஆராயப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## முதலீட்டை இரட்டிப்பாக்கும்...

டொலர்வரை முதலீட்டை இரட்டிப்பாக்க சீனாவின் சினோபெக் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளதாக, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்தது.

இதற்கமைய மசகு எண்ணெய் சுத்திகரிப்பு திறனை இரு மடங்காக அதிகரிக்க சினோபெக் நிறுவனம் தீர்மானித்துள்ளதுடன், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படுமெனவும், அந்த அமைச்சு தெரிவித்தது.

தற்போது இந்த சுத்திகரிப்பு நிலையத்துக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது, முதலீட்டு சபை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்ட பின்னர் மானிய விலையில் எரிபொருளை வழங்க நிறுவனம் நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எங்கள் கருத்து...

# ஆரோக்கியத்துக்கு ஆபத்தாக மாறிய உணவுக் கலாசாரம்!

வியாதிகள் இருந்ததில்லை. ‘வீட்டு உணவுக் கலாசாரம்’ என்பது ‘ஹோட்டல் உணவுக் கலாசாரம்’ ஆக படிப்படியாக மாறத் தொடங்கியதும், வியாதிகளும் படிப்படியாக உருவெடுத்தன. அதிலும் இளவயதினர் மத்தியில் இக்காலத்தில் தொற்றாநோய்கள் பெருகி வருவதுதான் கவலைக்குரிய விடயமாகும்.

இளவயதினர் மத்தியில் இக்காலத்தில் நீரிழிவு, சிறுநீரக செயலிழப்பு, இருதய வியாதிகள் போன்ற பல்வேறு வியாதிகள் பெருகுவதற்கு தற்கால நவீன உணவுக் கலாசாரமே காரணமென்று மருத்துவ நிபுணர்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர். அதாவது உணவுக்கும் தொற்றாவியாதிகளுக்கும் தொடர்புண்டு என்பதுதான் மருத்துவர்களின் கருத்தாகும்.

ஹோட்டல் உணவுகள் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தவை அல்ல என்பது உலகளாவிய ரீதியில் மருத்துவர்களின் கருத்தாகும். அவ்வுணவுகளில் பயன்படுத்தப்படுகின்ற பதார்த்தங்கள் மற்றும் சமையல் முறைகள் ஆகியன மனித ஆரோக்கியத்துக்கு உகந்தவையா என்பதற்கு உத்தரவாதம் கிடையாது.

இக்காலத்தில் மக்கள் சுவையை மாத்திரமே கவனத்தில் கொள்கின்றனர். அத்தகைய சுவைக்காக உணவில் சேர்க்கப்படுகின்ற இரசாயனப் பொருட்களின் ஆபத்து குறித்து மக்கள் சிந்திப்பதில்லை. நச்சு இரசாயனங்களால் உடலில் ஏற்படுகின்ற கொடிய நோய்கள் குறித்தும் மக்கள் பொருட்படுத்துவதில்லை.

இன்றைய நவீன விரைவுணவுகளால் மக்களுக்கு ஏற்படுகின்ற உடல் உபாதைகள் குறித்து மருத்துவர்கள் தொடர்ந்தும் எச்சரித்துக் கொண்டே வருகின்றனர். ஆனாலும் மக்கள் அதுகுறித்து கவனம் செலுத்துவதாக இல்லை. நமது ஆரோக்கியம் பற்றி மாத்திரமன்றி, எமது குடும்பத்தினரின் ஆரோக்கியம் குறித்தும் நாம் ஒவ்வொருவரும் கவனம் செலுத்துவது இன்றியமையாதது.

## IMF நிறைவடையும்வரை...

குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் ஜூலை இறுதிவரை அமுலிலுள்ளதால் அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படமாட்டாதெனவும், ஜனாதிபதி தெரிவித்தார். அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான நேரம் நாணய நிதிய செயற்பாட்டின் பின்னரே வருகின்றது. எனவே ஜனாதிபதி தேர்தலை நடத்துவது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துக்கு இடையூறாக இருக்காதெனவும் அதற்கேற்ப தேர்தல் வரைபடத்தை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார். ஆயினும், முதலில் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகுமாறு அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முன்னாள் போராளிகளின்...

'அம்மான் படையணி' எனும் புதிய அமைப்பினூடாக முன்னாள் போராளிகளின் நலன் பேணுவதாகவும் இதற்கு புலம்பெயர் மக்களின் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த குடும்பத் தலைவிகளும், விடுதலைப் புலிகள் மாத்திரமல்லாது அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த போராளிகளும் உரிய வாழ்வாதார வசதியின்றி இரப்பதாகவும் அவர்களுக்காக புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்

## விமான சேவையை ஆரம்பிக்க...

சென்னைக்கும் இடையிலான விமான சேவைக்கு தடை ஏற்பட்டது.

இலங்கை அரசாங்கம் ஒப்புதல் அளித்தவுடன் தனது விமான சேவையை நிவாரண விமான சேவையாக ஆரம்பிக்கப்படுமென IndiGo எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

IndiGo எயார் லைன்ஸ் தற்போது கட்டுநாயக்காவுக்கும் சென்னைக்கும் இடையில் விமானங்களை இயக்குகிறது.

எனினும், யாழ்.பலாலிக்கும் சென்னைக்கும் இடையே சேவையை ஆரம்பிக்குமாறே அதிகளவான கோரிக்கைகள் இருப்பதாகவும், IndiGo நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஒற்றுமை, நல்லிணக்கம்...

வேண்டியது அவசியமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தினத்தையிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது,

"இயேசுவின் துன்பம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நினைவுகூரும் 40 நாள் தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மதக் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார சவாலை எதிர்கொண்ட ஒரு நாடென்ற வகையில், தாங்கிக்கொள்ளும் இயலுமை நிறைந்த தேசமாக ஆசிர்வாதத்துடன் உயிர்த்தெழ ஆரம்பித்திருக்கிறோம்.

பல்லின சமூகங்கள் வாழும் நாடென்ற வகையில் இலங்கை தற்போது எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்காக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும்..

இலங்கை கிறிஸ்தவர்களால் மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடப்படும் உயிர்த்த ஞாயிறு காலம், ஒரு கொடூரமான தீவிரவாத தாக்குதலை கண்டிருந்தது. அந்த மோசமான நினைவுகள் எமது மனங்களிலிருந்து மறையாது. அதேநேரம் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் சட்டம் அமுல்படுத்துவதற்கான சூழலை அரசாங்கம் உருவாக்கியுள்ளதுடன், இனிவரும் நாட்களில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய அரசாங்கம் அர்ப்பணிக்கும்.

அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட மகிழ்ச்சியான உயிர்த்த தினமாகட்டுமென்று பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

## சமூகத்தை சரியான பாதையில்...

சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு இந்த உயிர்ப்பு விழா நாளில் உறுதிபூணுவோமாக" என, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தையிட்டு விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தைரியத்துடன் நன்னோக்கங்களை அடைவதற்காக மனிதனை பாவத்திலிருந்து விடுவித்து சமூக நீதி, அன்பு, கருணை மற்றும் மனித நேயத்துக்காக தன் இன்னுயிரை தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவின் வாழ்வு சிறந்த முன்னுதாரணமாகும்.

எந்தவொரு நெருக்கடியான சூழ்நிலையின் போதும், அதற்கு தேவையான மனநிலையை எம்மிடம் உருவாக்க சமய போதனைகள் எமக்கு பெரிதும் உதவுகின்றன.

இது அன்பையும் கருணையையும் பரப்பிய இயேசுவின் வாழ்க்கை போதனைகளின் மூலம் கிடைத்த உயர் விழுமியங்களை மீண்டும் மீண்டும் சமூகமயப்படுத்த வேண்டிய காலம்.

அவற்றின் மூலம் வளம் பெற்று எமது உள்ளங்களை புதியதோர் மாற்றத்தை நோக்கி வழிநடத்தி, அன்புணர்வுடன் இந்த உயிர்ப்பு பெருவிழாவை அலங்கரிப்போம்" எனத் தெரிவித்தார்.

## யாழ். மயிலிட்டி துறைமுகத்துக்குள்...

பிரச்சினைகளுக்கு தீர்வையும் வழங்கினார். மயிலிட்டி துறைமுகத்தில் நீண்ட நாட்களாக தரித்து வைக்கப்படும் மீன்பிடிப் படகுகள் மற்றும் இழுவைமடிப் படகுகளால், தமது படகுகளை கரைசேர்ப்பதிலும் எரிபொருள் நிரப்புவதிலும் சிரமத்தை எதிர்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கடற்றொழிலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

மயிலிட்டி இறங்குதுறைக்கு தென்னிலங்கையிலிருந்து வரும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள், அத்துறைமுகத்தில் பல நாட்கள் தரித்து நிற்கின்றன. இதேவேளை இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்த போது கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைமடிப் படகுகளும் மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் தமது தொழிலை மேற்கொள்வதில் போதிய இடவசதியின்றி இருப்பதாக அமைச்சரிடம் மயிலிட்டி பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரியப்படுத்தினர்.

இந்நிலையில் மயிலிட்டி துறைமுகத்துக்கு சென்ற அமைச்சர், எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட தேவைகளுக்காக துறைமுகத்துக்கு வரும் மீன்பிடிக் கலன்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டதும், இறங்குதுறை தவிர்ந்த கடல் பகுதியில் தரித்து நிற்பதற்கும் இந்திய இழுவைமடிப் படகுகளை சற்றுத்தள்ளி நங்கூரமிடுவதற்குமான உரிய பொறிமுறையை நடைமுறைப்படுத்துமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

## இலங்கை – இந்திய இருதரப்பு...

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கையின் உயர்மட்டக் குழுவின் பங்கேற்புடன் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சாகல ரத்நாயக்க உள்ளிட்ட குழுவினருக்கு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிறப்பு வரவேற்பளித்ததுடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலைக்கு திரும்பி வருவதால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூலோபாய பொருளாதார வேலைத்திட்டத்தின் கீழ் இணக்கம் காணப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் இயலுமை இரு நாடுகளுக்கும் உள்ளதெனவும் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறிய சாகல ரத்நாயக்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தார்

இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த, துரித முன்னேற்றம் அடைய வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, அதற்காக இந்தியாவுடன் தற்போதுள்ள பொருளாதார ஒத்துழைப்பையும் பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது இந்திய இலங்கை வரலாற்று தொடர்புகளை நினைவுகூர்ந்த சாகல ரத்நாயக்க, இலங்கையின் அயல் நாடான இந்தியாவுடனான வலுவான தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவது குறித்து இருதரப்பும் கவனம் செலுத்தியதுடன், ஒவ்வொரு காலாண்டிலும் அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஏப்ரல் 08ஆம் திகதி...

விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா தெரிவித்துள்ளது.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் கடந்து செல்லும் போது, முழு சூரிய கிரகணம் ஏற்படுகிறது.

இதன்போது சூரியனின் ஒரு பகுதி அல்லது முழுவதுமாக மறைகிறது. எப்போதாவது அரிதாகவே முழு சூரிய கிரகணம் தோன்றும்.

இந்நிலையில் வட அமெரிக்கர்கள் இது போன்ற அரிதான முழு சூரிய கிரகணத்தை அவதானிக்கும் வாய்ப்பு எதிர்வரும் 2044ஆம் ஆண்டிலேயே கிடைக்குமெனவும், நாசா மேலும் தெரிவித்துள்ளது.

## டேனியல் பாலாஜி...

விருப்பப்படி அவரது இரண்டு கண்களும் தானம் செய்யப்பட்டன.

சூர்யா நடிப்பில் வெளிவந்த ‘காக்க காக்க’ படத்தில் ஸ்ரீகாந்த் எனும் பொலிஸ் பாத்திரத்தில் நடித்ததை தொடர்ந்து பிரபல்யமானார். இதன் பின்னர் ‘வேட்டையாடு விளையாடு’ படத்தில் மிரட்டும் வில்லனாக நடித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். இளைய தளபதி விஜயின் ‘பைரவா’ படத்திலும் வில்லன் வேடத்தில் நடித்திருந்தார். 'அவர் மறைந்த பின்னரும் மற்றவர்களுக்கு அவர் பார்வையை வழங்குகிறார்' என, டேனியல் பாலாஜி தொடர்பாக அவரது இரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது மறைவு திரையுலகினரை கவலைக்கு உள்ளாக்கியுள்ளதுடன், திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

டேனியல் பாலாஜி, சென்னையில் பிறந்தார். சென்னை தரமணியிலுள்ள திரைப்பட நிறுவனத்தில் திரைப்பட தயாரிப்பு படிப்பை முடித்துள்ளார்.

## ஆசிரியர் அனைவருக்கும்...

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தற்போது ஆண்டுக்கு 8,000 புதிய ஆசிரியர்கள் அரசாங்க பாடசலைகளுக்கு உள்வாங்கப்படுவதோடு, எதிர்காலத்தில் அந்த ஆசிரியர்கள் அனைவரும் உயர் கல்வி அறிவு பெற்ற பட்டதாரிகளாக பாடசலைக் கல்விக் கட்டமைப்பில் சேர்க்கப்படுவர். இந்த பல்கலைக்கழகம் பாராளுமன்றத்தில் சட்டமூலமாக நிறைவேற்றப்பட்டதன் பின்னர், ஜூன் மாத இறுதிக்குள் திறக்கப்படுமென்றும் கல்விச் சீர்திருத்த நிபுணர் குழுவின் பேராசிரியர் குணபால நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டு. கல்முனை பிரதான...

அ திகாலை 3.30 மணியளவில் பஸ் வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் சாரதி, நடத்துநர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளதுடன், சில கடைகள் சேதமடைந்துள்ளன.

கொழும்பிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற தனியார் அதிசொகுசு பஸ் வண்டியே விபத்துக்குள்ளானது.

வீதியை விட்டு விலகிச் சென்று பாலமுனை சந்தியிலுள்ள சில கடைகளை உடைத்துக் கொண்டு கடைகளுக்குள் புகுந்து இப்பஸ் விபத்துக்குள்ளானது.

இதில் காயமடைந்தவர்கள், காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதியின் உறக்க களைப்பே விபத்துக்கு காரணமென, பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பான விசாரணையை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


BANK
பென்சன் பணம் கைக்கு வந்துவிட்டது
வீட்டு பில்களுக்கு பணம் செலுத்தனும்
பாணும் வாங்கனும்
BANK
SUPER MARKET
ஐயோ... நீண்ட வரிசை
இன்னும் எவ்வளவு நேரம்தான் நிற்கிறது?
பில்களைக் கட்டுவதற்கு ஏன் இங்கு வரிசையில் நின்று கஷ்டப்படுகின்றீர்கள்?
தற்போது பில்களை ஒன்லைனிலேயே செலுத்திவிடலாம்
மொத்தமாக ரூ.1,729.50 சேர்
5000 தானா..? மாத்தின காசு இல்லையா.
இல்லையே
QR வசதியுள்ளது. போன் மூலம் செலுத்தமுடியுமா?
ஐயோ! இயலாதே
டிஜிட்டல் மூலமான கொடுக்கல்வாங்கலைப் பழகினால் இந்த கஷ்டம் வராது
SUPER MARKET
BANK
SUPER MARKET
நேரம் வீணாகிப் போச்சு வேலையும் முடியல
ஐயா டிக்கெட் எடுங்கள்
எங்க என்ட பேர்ஸ்....
ஐயோ என்ட காசு
டிஜிட்டல் மூலமான கொடுக்கல்வாங்கலைப் பழகினால் எல்லா காசையும் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு இருக்கத் தேவையில்லை
இன்றே
உங்களது Smart Phone இலும்
Payment App ஒன்றை
Download செய்யுங்கள்
DIGITAL
பரிவர்த்தனை
எளிதானது | பாதுகாப்பானது | விரைவானது
டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்காக பதிவுசெய்துகொள்வதற்கு
உங்களது வங்கியைத் தொடர்புகொள்ளுங்கள்
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
மேலதிக விபரங்களுக்கு

# இலங்கைக்கு பலமாய் அமையும் IMF உதவி

## நாம் மீண்டும் எழுந்து விட்டோம்

### பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்கா



**தற்போது IMF ன் மூன்றாவது தவணைக்குரிய கடன் தொகை இந்நாட்டிற்கு வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது. இது நாட்டின் எதிர்கால வேலைத்திட்டங்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?**

உலகில் உதவி வழங்கும் நாடுகளுக்கு இது நல்லதொரு செய்தியாகும். உலகின் முதன்மை சந்தை திறக்கப்படும். முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவார்கள். உண்மையிலேயே இது எமக்குப் பெரும் பலமாகும்.

**மக்களை ஒரு பக்கம் வைத்து விட்டு, திருடர்களை இன்னொரு பக்கம் வைப்பதற்கு இன்னும் சில வாரங்கள் தான் உள்ளன என ஜே.வி.பி கூறுகிறதே?**

மக்களையும், திருடர்களை மாத்திரமல்ல, மக்களையும் கொலைகாரர்களையும் பிரிக்கவே இன்னும் சில வாரங்கள் உள்ளது எனக் கூறினால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஜே.வி.பி எப்பொழுதும் கைகால்களை வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும், வீடுகள், ட்ரான்ஸ்போமர்கள் மற்றும் பஸ்களை எரித்துமே தீர்வுகளைத் தேடியது

**12 வீத வாக்குகளே ஜே.வி.பிக்கு உள்ளது என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

கடந்த போராட்ட காலத்தின் போது அவர்களுக்கு சுமார் 25% இருந்து எனக் கூறினாலும், அவ்வாறான வாக்குகள் அவர்களிடம் இல்லை. கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில், நாம் பொதுஜன பெரமுன கட்சியாக பூஜ்ஜியத்திற்குச் சென்றோம். மக்கள் மீண்டும் எங்கள் நோக்கி வந்து கொண்ருகிறார்கள். ஜேவிபிக்கு 10, 12 வீத செல்வாக்கே உள்ளது. அது இன்னும் குறையும்.

**ஆனால் மொட்டுக் கட்சி மண்ணோடு சங்கமித்து விட்டது என்றே ஜே.வி.பி கூறுகிறதே?**

கடந்த காலங்களில் கட்சி என்ற வகையில் நாங்கள் தூசு நிறைந்தவர்களாக இருந்தோம். இப்போது நாங்கள் எழுந்திருக்கிறோம். நாங்கள் இப்போது பூஜ்ஜியத்தில் 30 வீதமளவில் மேலே வந்திருக்கின்றோம். இன்னும் மேலே செல்வோம். இந்த நாட்டின் தேசபக்தர்களுக்கு, இடதுசாரிகளுக்கு நம்பிக்கையான பாதை தேவை. அந்த பாதைக்கு வலுவான கட்சி பொதுஜன பெரமுன என்றே நாங்கள் நினைக்கிறோம்.

## இந்த நாட்டை ஐக்கிய தேசிய கட்சியால் மாத்திரமே கட்டி எழுப்ப முடியும்

### ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தயா கமகே



**ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலத்தில் கடும் பின்னடைவைச் சந்தித்தது. உங்கள் கட்சியை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?**

ஜனாதிபதி நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்றார். நாம் நாட்டைப் பற்றித்தான் சிந்தித்தோம். கட்சி என்ற வகையில் அதிகாரத்தைப் பற்றி சிந்திக்கவில்லை. தற்போது எதிர்மறையான பொருளாதாரத்தை நேர்மறையான பொருளாதாரமாக மாற்றியிருக்கின்றார்.

**ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என சில எதிர்க்கட்சிகள் கூறுகின்றனவே?**

இந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரே கட்சி ஐ.தே.கட்சியாகும். காரணம் ஐ.தே.க.வில் எஞ்சியிருப்பது ஐ.தே.க.வின் கொள்கைகளைப் பாதுகாக்கும் குழுவாகும். அன்று ஐக்கிய மக்கள் சக்தியில் நானும் போட்டியிட்டிருந்தால் இன்று நானும் பாராளுமன்றத்தில் இருந்திருப்பேன். எனினும் அந்த நேரத்தில் எனது தேவையாக இருந்தது ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்திருந்து முன்னாள் பிரதமர் டி. எஸ். சேனாநாயக்கவினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாப்பதேயாகும். ஐ.தே.க தான் என்றாவது இந்த நாட்டை மீண்டும் தூக்கி நிறுத்தும் என்பதை அன்று நான் கண்டேன்.

**ஐக்கிய தேசிய கட்சிக்கு வேறு கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வர உள்ளார்கள் எனக் கூறினாலும் அப்படி யாருமே வரவில்லையே?**

ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையில் நாம் தற்போது நாடு முழுவதும் ஒழுங்கமைத்து வருகின்றோம். முதலில் மக்களுக்குத் தேவைப்படாத நிலையில் நாம் மக்களிடம் சென்று கூறுவதில் பயனில்லையே. இதை யாரால் செய்ய முடியும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது யாரும் ரிஸ்க் எடுக்க வேண்டியில்லையே. தற்போதைய ஜனாதிபதி உலகில் எங்கு சென்றாலும் அங்கு முக்கியத்துவம் பெறுகிறார். இன்னும் ஐந்து வருடங்கள் அவரிடம் கொடுத்தால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

**ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்கள் அரசாங்கத்திடம் இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதே?**

அவ்வாறு எந்தத் தேவையும் எமக்கு இல்லை. ஜனாதிபதி தேர்தல் கண்டிப்பாக நடக்கும் என்றே அரசாங்கம் கூறுகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயத்தமாகுமாறும், ஜனாதிபதி தேர்தலை நாம் நடத்துவோம் என்றும் ஜனாதிபதி அமைச்சரவையிலும் கூறியிருக்கிறார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று ஐ.தே.கட்சியாகப் போட்டியிட்டு உண்மையைக் கூறியவர். அவர் இந்த நாட்டுக்காக அனைத்தையும் செய்துவிட்டு, உண்மையைக் கூறி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்.

## கூட்டிணைந்து செயற்பட வேண்டிய தேவை எமக்கு இல்லை

### ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க



**கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மீண்டும் மீளாய்வு செய்வோம் என தேசிய மக்கள் சக்தி கூறுகிறது. இது தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் கடன் மறுசீரமைப்பை எவ்வாறு மேற்கொள்வது என அவர்கள் இன்னமும் குறிப்பிடவில்லை. நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு, கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு தே.ம.சக்தி முன்வைத்துள்ள முன்மொழிவுகள் நடைமுறைச் சாத்தியமானவை அல்ல. அவர்கள் முன்வைக்கும் முன்மொழிவுகளைச் செயல்படுத்தக் கூடிய திறமையான குழு தே.ம.சக்தியிடம் இல்லை.

மக்களைக் கஷ்டங்களுக்கு உள்ளாக்காமல் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடாகும்.

**அரச வளங்கள் விற்பனை செய்யப்படுவதை தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் அனுமதிக்கிறார்கள் என ஏன் நீங்கள் குற்றம் சுமத்துகிறீர்கள்?**

தேசிய மக்கள் சக்தி இந்திய விஜயத்தின் பின்னர் அவ்வாறான ஒரு விடயத்தை கூறியுள்ளது. முன்னர் அரச சொத்துக்கள் விற்பனை செய்வதற்கு இடமளிக்க மாட்டோம் எனக் கூறியிருந்தார்கள். நாம் அரச நிறுவனங்களை விற்பதற்கு எதிரானவர்கள், உயிரைக் கொடுத்து பாதுகாப்போம் என்று கூறியவர்கள் அந்த நிலையை மாற்றிக் கொண்டுள்ளனர். அரசு வளங்களை விற்பனை செய்வதற்கு முறையான டெண்டர் முறையின் கீழ் அங்கீகாரம் வழங்கப்படும் என தற்போது கூறுகின்றனர். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, இந்திய விஜயத்தின் பின்னர், வெளிப்படைத் தன்மையான டெண்டர் நடைமுறையின் கீழ் அரச வளங்களை விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் வழங்க உத்தேசித்துள்ளார்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு தே.ம.சக்தியின் பொருளாதார குழுவிற்கு சவால் விடப்பட்டுள்ளதுதானே?**

ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றின் பொருளாதார கொள்கைகளைத் தனித் தனியே அறிந்து கொள்ள விரும்புகிறோம். ஜே.வி.பியின் கொள்கையே தான் தே.ம.சக்தியிடமும் உள்ளது. மாற்றங்கள் இல்லை. மக்களுக்கு இவ்விடயங்களை கூற வேண்டும். தே.ம.சக்தியின் பொருளாதார கொள்கை தொடர்பில் நாம் பகிரங்கமாக கூறியுள்ளோம்.

**பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளராக நீங்கள் இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

எமக்கு இது எந்தவித சவாலுமில்லை. இந்த சக்திகளைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கடந்த நாட்களில் பெசில் ராஜபக்ச கூறியிருந்தார்.

## அரசாங்கத்தின் தேவை எந்தத் தேர்தலையும் நடத்தாமல் இருப்பதே

### ஜே.வி.பியின் அரசியல் பீட உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி



**அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தீர்க்கமானது என ஏன் ஜே.வி.பி கூறுகின்றது?**

நாம் தீர்க்கமானது எனக் கூறுவது, நாட்டில் இருக்கின்ற திருட்டுக் கும்பலுக்கு எதிராக மேற்கொள்ளும் போராட்டம் என்பதற்கேயாகும். கும்பல் கட்சிகளாகப் பிரிந்திருந்தாலும் ஒன்று சேர்ந்து கொள்கிறார்கள். அதனால்தான் இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை நாங்கள் செய்வோம் என உறுதியாகக் கூறுகிறோம்.

**அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சிக்கின்றது என ஜே.வி.பி கூறுகிறதே?**

ஆம். அரசாங்கம் எந்தத் தேர்தலையும் நடத்தாமல் இருப்பதையே விரும்புகின்றது என நாம் நினைக்கிறோம். ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தாமல் இருப்பதே அவர்களின் விருப்பமாகும். என்றாலும் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை உரிய தினத்தில் நடத்த வேண்டும். எனவே பாராளுமன்றத் தேர்தலை முன்னரே நடாத்தினாலும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது. நாட்டில் நவம்பர் 17ம் திகதியாகும் போது புதிய ஜனாதிபதி ஒருவர் இருக்க வேண்டும்.

**ஜே.வி.பி சமூக வலைதளங்களில் மாத்திரம்தான் பிரபலம் என்று அனேகமானோர் கூறுகின்றனரே?**

பரவாயில்லை, அப்படியே கூறிக் கொள்ளட்டும். நாம் சமூக வலைத்தளங்களிலும், நாட்டிலும் பிரபலமாகவே இருக்கின்றோம். நாட்டில் நாம் செய்யும் விடயங்களை ஏனையவர்களால் செய்ய முடியாதே. மாவட்ட மட்டத்தில் மகளிர் மாநாடுகளில், இளைஞர் மாநாடுகளில் எங்கு கூட்டம் இருக்கின்றது?

எம். எஸ். முஸப்பிர்
நேர்படப் பேசுவோம்

## இந்திய - இலங்கை மீன்பிடி பிரச்சினைக்கான நிலையான தீர்வு?





மன்னார் வளைகுடா மற்றும் பாக்குநீரணை போன்ற இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் பிரச்சினை முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. சர்வதேச கடல் எல்லையைத் (IMBL) தாண்டியதாகக் கூறி இந்திய மீனவர்களை இலங்கை அதிகாரிகள் கைது செய்யும் போது மீண்டும் பதற்றம் ஏற்படுகின்றது.

இக்கட்டுரையானது பல தசாப்தங்களாக நிலவி வரும் மோதலின் தாக்கத்தை ஆழமாக ஆராயவும், அதனாலேற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக, பொருளாதார பாதிப்புகளை ஆராயவும், வடக்கில் உள்ள இலங்கை மீனவ சமூகங்களின் வாழ்வாதாரம் மற்றும் மரபுகளை மதிக்கும் அவசரத் தீர்மானத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டும் வகையிலும் அமைகின்றது.

### மோதலின் மையக்கரு

சர்ச்சையின் மையத்தில் இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் குறுகிய, பல்லுயிர் நிறைந்த விரிகுடா உள்ளது. நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பிறகு 1970களில் கடல் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டபோதிலும், தமிழக மீனவர்கள் மன்னார் வளைகுடா மற்றும் பாக்கு நீரிணை ஆகிய இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுவது உள்ளூர் மீனவர்களுடனான மோதலுக்கு வழிவகுத்தது. இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற் சூழலை நாசமாக்கும் மற்றும் மீன் வளங்களைக் குறைக்கும் அழிவுகரமான நுட்பமான அடி மடிஇழுவை மீன்பிடி முறையை பயன்படுத்துவதாக இலங்கை மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளின் இருதரப்பு ஒப்பந்தங்கள் இரு நாடுகளினதும் கடல் எல்லையைப் பிரிக்கும் கோட்டைப் பற்றி எடுத்த உறுதியான தீர்மானித்தை புறக்கணித்து, தங்கள் முன்னோர்கள் அனுபவித்த பாரம்பரிய உரிமைகளை தமிழக மீனவர்கள் கோருகின்றனர்.

கன்னியாகுமரிக்கு தெற்கே அமைந்துள்ள வெட்ஜ் கரை மற்றும் பாக் வளைகுடாவில் உள்ள பருத்தித்துறை கரையின் வடக்குப் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளில் இருந்தும் மேற்படி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இலங்கை மீனவர்கள் வெளியேறினர்.

மன்னார் பேசாலை, யாழ்ப்பாணம் குருநகர், சிலாபம், கற்பிட்டி உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் சட்டவிரோதமான, புகாரளிக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற (IUU) மீன்பிடித்தலின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக, பொருளாதார பாதிப்புகள் குறித்து நீண்ட காலமாக தங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்படும் மேம்பட்ட உபகரணங்களும், கீழ் இழுவை மடி போன்ற நடைமுறைகளும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் உள்ளூர் சமூகங்களின் வாழ்வாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ளது.

தற்போது நிலைமை மேலும் மோசமடைகிறது, உள்ளூர் சமூகங்களின் கதைகள் பல சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன: இலங்கை மற்றும் இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தால் மேம்பட்ட உபகரணங்கள் மற்றும் கீழ் இழுவை மடிகள் போன்ற நடைமுறைகள் பவளப்பாறைகள், மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் இடங்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கும்.

### கச்சத்தீவு சர்ச்சை

கச்சத்தீவு தீவு, ராமேஸ்வரம் (இந்தியா) மற்றும் நெடுந்தீவுக்கு இடையே அமைந்துள்ள ஒரு சிறிய நிலம், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சிக்கலான மற்றும் நீடித்த கடல் பிரச்சினையின் அடையாளமாக அது உள்ளது. தீவைச் சுற்றியுள்ள நீர், வரலாற்று ரீதியாக இரு நாட்டு மீனவர்களால் மீன்பிடி மற்றும் வலைகளை உலர்த்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது,

நீண்ட இழுபறியான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இருதரப்பு ஒப்பந்தத்தின் மூலம் தீவின் மீதான இலங்கையின் இறையாண்மையை இந்தியா முறையாக அங்கீகரித்தது. இந்த அங்கீகாரம், வளர்ந்து வரும் தகராறுகளைத் தணிப்பது மற்றும் தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மீன்பிடி உரிமைகளை வரையறுப்பதை நோக்கமாகக் கொண்டது. 1976 ஒப்பந்தம், மீன்பிடி உரிமைப் பிரச்சினைகளை வெளிப்படையாகத் தீர்ப்பதன் மூலம் இந்த ஏற்பாடுகளை உறுதிப்படுத்த முயன்றது, இரு நாட்டு மீனவர்களுக்கும் நிபந்தனையுடன் அணுகலை அனுமதித்தது.

1970களின் இரு இருதரப்பு ஒப்பந்தங்கள் இந்திய, இலங்கை மீன்பிடித் தகராறைத் தணிக்கவில்லை, தமிழக மீனவர்கள் கடற்பரப்பு முழுவதும் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டி இலங்கைப் பக்கத்தில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.



அடுத்த வாரம் தொடரும்

ரசங்கா குமாரிஹாமி
ஆராய்ச்சியாளர்
பாத்ஃபைண்டர் அறக்கட்டளை

## விசித்திர அலங்கார இரதத்தில் ஏறி வீதி வலம் வரும் மானிப்பாய் மருதடி விநாயகர்



யாழ்ப்பாணத்தை தமிழரசர் ஆண்ட காலத்தில் சைவசமயத்தின் மகத்துவங்களை நிலைநாட்டினர். இக்காலத்தில் ஒரு தபசிரேஷ்டரான தமிழரசர் பிற்காலத்திலும் பறங்கியர் யாழ்ப்பாணத்தைத் தம்வயப்படுத்திய சொற்ப காலங்களுக்கு முன்னருமாய் மானிப்பாய் மருதடி விநாயகராலயத்தில் நிஷ்டையில் இருந்து சமாதியாய் விட்டார். மேற்படி மகான் சமாதி அடைந்த காலத்தில் பறங்கியர் மருதடி விநாயகர் ஆலயத்தை இடித்துச் சவக்காலையாக்கி விட்டனர். பறங்கியர் சைவசமய மணம் சற்றேனுமில்லாது பிராமணரையும் தம்முடைய மதத்தை தழுவும்படி செய்து வந்தனர்.

இந் நாட்களில் மக்கள் மகான் சமாதியடைந்த இடமும் இப்பொழுது மூலஸ்தானத்திற்கு கிழக்கில் இருப்பதுமாகிய மருத மரத்தின் கீழ் இராக்காலங்களிலும் பறங்கியர் கண்களுக்கு புலப்படாத நேரங்களிலும் பொங்கலிட்டுக் கற்பூரமெரித்து விநாயகரை வழிபட்டு வந்தார்கள். இவ்வாறாக பல இக்கட்டான நிலைகளைக் கடந்து வரும் காலத்தில் பறங்கியர் அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது.

ஒல்லாந்தர் அரசு காலத்தில் பொங்கல் வணக்கங்கள் மருதடியில் விசேடமாகவும் வெளிப்பொருளாயும் நடந்து வந்தன. இக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்த தியாகராசக் குருக்கள் நவாலி தூக்கிணி வைரவ கோவிலடியில் வந்து தங்கினார். தூக்கினி வைரவ கோவிலில் இருந்து ஒரு வருஷமாக சிவபூசை வணக்கம் செய்து வரும் நாட்களில் அங்கு வேள்வி நடைபெற ஆயத்தமாகியது. பெரியவர் இக்கோவிலில் பெருந்தொகையான ஆடுகள் வெட்டப்படுமென்று அறிந்தார். உடனே அவ்விடத்தை விட்டு மருதஞ் சோலையை அடைந்தார். பெரியவர் சுவாமிநாத முதலியாரின் உதவியை நாடி நிலம் பெற்று சிறு வீடு கட்டியிருந்தார். அந்த நாட்களில் இவ்விடத்தில் அநேக மக்கள் பொங்கல் வணக்கச் செய்து வந்தனர். இதைக கண்டு அவர் ஓர் விநாயகர் சிலை வைத்துப் பூசைக் கிராமங்கள் செய்து வந்தார். பின்னர் சுவாமிநாத முதலியாரின் உதவியுடன் மருத மரத்தின் மேற்குத் திசையை நோக்கிக் கர்ப்பக் கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டி முடித்து எஞ்சிய பாகங்களை மரத்தடிகளால் உருவாக்கிப் பங்குனி மாதத்தில் மகோற்சவம் செய்து சித்திரை முதலாம் திகதியில் புதுவருஷம் ஆரம்பம் ஆகும் வேளையில் இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார். ஆலயம் உருவான காலங்களில் ஒல்லாந்தவரது ஆட்சி முடிந்து ஆங்கிலேயர் காலம் உதயமானது.

ஆங்கிலேயர் காலத்தில் மருதடி ஆலயம் அதி உன்னத நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. கோயில் திருப்பணி வேலைகள் பல பெரியார்களால் செய்யப்பட்டன. இத் திருப்பணி வேலைகளை பெரியவர்கள் ஒவ்வோர் காரணம் பற்றிச் செய்வித்தார்கள். உதாரணமாக இரகுநாத முதலியார் சின்னத்தம்பி ஒருமுறை கொடிய விஷம் தீண்டப்பெற்று, அவ்விஷம் இறங்கினால் அவர் விநாயகருக்கு இரதம் செய்து வைப்பதாக பிரார்த்தனை செய்ததாகவும் அதனால் அக்கொடிய விஷம் நீங்கி அவர் சுகம் பெற்றதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. சைவ சமயத்தை நிலைநிற்கச் செய்த ஆலயங்களில் ஒன்று இம் மருதடி ஆலயமே.

முன்பிருந்த தர்மகர்த்தா சபையினர் பொதுமக்கள் உதவிகளைப் பெற்று பல கோடி ரூபா செலவு செய்து புதிதாக மருதடி ஆலயத்தை மிகவும் அழகான முறையில் விஸ்தரித்துக் கட்டி கும்பாபிஷேகம் செய்தமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது அதி உன்னத நிலைக்கு கோவில் கொண்டுவரப்பட்ட நிலையில் 25 உற்சவங்கள் நடைபெற்று மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு வருஷப் பிறப்பன்று இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. புதுவருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப் பெருமான் அதி உன்ன விசித்திர அலங்காரம் அமைக்கப்பெற்ற இரதத்தில் ஏறி வீதி வலம் வருகின்ற அற்புதக் காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுகின்றனர். தற்போதைய தர்மகர்த்தா சபையினர் கோவில் நிர்வாகத்தை நன்றாக நடத்துகின்றனர்.

சுவாமிநாதன் தர்மசீலன் J.P.

**தேர்தலுக்கான கட்சிகளின் தயார்படுத்தல்கள், அரசியல் காய்நகர்த்தல்கள் என்றெல்லாம் அரசியல் களம் பரபரப்பாகியிருக்கும் தற்போதைய நிலையில், பொருளாதார ரீதியில் நாடு மெதுமெதுவாக சாதாரண நிலைக்குத் திரும்பி வருகின்றது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துவரும் பொருளாதார நடைமுறைகள் நாட்டை மீண்டும் சரியான பாதைக்குக் கொண்டு செல்வதாக அமைந்துள்ளன. இதற்கு சான்றாக சர்வதேச ரீதியில் பாராட்டுகள் கிடைத்து வருகின்றன.

பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்சிபெற்று வருவதற்காக இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் நான்கு வருட நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளும் பாதையைத் தெரிவு செய்திருந்தது.

ஏற்கனவே இரண்டு கடன் தவணைகள் கிடைத்திருந்த நிலையில், இரண்டாவது மதிப்பீட்டை சர்வதேச நாணய நிதியம் மேற்கொண்டிருந்தது. இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் மதிப்பாய்வுகளை மேற்கொள்ள இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவானது, இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை வெகுவாகப் பாராட்டியிருந்தது.

சர்வதேச நாணய நிதியம் என்பது வெறுமனே பொருளாதார சீர்திருத்தங்களை மாத்திரம் வலியுறுத்தாமல், சர்வதேச ரீதியிலான இணைப்புக்கள் மற்றும் முன்னேற்றங்களுக்குமான நலனையும் சார்ந்திருக்கின்றது.

தடையற்ற சந்தைப் பொருளாதாரம் என்பது உலகளாவிய யதார்த்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்பதுடன், இலங்கையின் முன்னேற்றம் தொடர்பில் பல எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றன. இலங்கை அமுல்படுத்தியிருக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்கான வேலைத்திட்டத்தின் பிரதிபலன்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருப்பதாகவும், இலங்கையின் பணவீக்கம் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக குறைந்துள்ளதாகவும், அதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியதெனவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழு பிரதானி பீட்டர் ப்ரூயர் தெரிவித்திருந்தார்.

நிறைவேற்றுக் குழுவின் மீளாய்வு முடிவடைந்த பின்னர், இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி கிடைக்கும். அதன்படி சர்வதேச நாணய நிதியம் இதுவரையில் இலங்கைக்கு வழங்கியிருக்கும் மொத்த தொகை 1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பண வீக்கத்தை விரைவாக மட்டுப்படுத்தல், வெளிநாட்டுக் கையிருப்பு வலுவடைதல், பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகுறிகள் உள்ளிட்ட பாராட்டுக்குரிய பிரதிபலன்களுடன் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிலையான மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

குறிப்பிடத்தக்க நிதி சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இலங்கையின் பொதுநிதி முகாமைத்துவம் வலுவடைந்திருக்கிறது. சமூக செலவினங்களுக்கான குறிகாட்டிகளைத் தவிர ஏனைய அனைத்து செயல்திறன் நியதிகள் மற்றும் குறிகாட்டி இலக்குகள் 2023 டிசம்பர் இறுதிக்குள் எட்டப்பட்டிருப்பதன் மூலம் செயல்திறன் வலுவடைந்திருக்கிறது.

பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக நிலையானதும் அனைத்தும் உள்ளடங்கியதுமான பாதைக்கு கொண்டு செல்வதற்கு மறுசீரமைப்பு வேகத்தை தக்கவைத்துக் கொள்வது அவசியமாகும்.

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. 2025 மற்றும் அதற்குப் பின்னரான வருமான வழிமுறைகளை மேம்படுத்தும் அதேநேரம், சொத்துவரியை அறிமுகப்படுத்துவதும் முன்னேற்றத்தை ஈட்டித்தரும்.

வருமான நிர்வாகம் மற்றும் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை மேம்படுத்துவதும் வரி சேகரிப்பை மேம்படுத்துவதற்கு முக்கியமான காரணியாகும் என இலங்கைக்கு வருகை தந்த மீளாய்வுக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.



அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுக்கு அமைய நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான சட்டதிட்டங்களும் இயற்றப்பட்டு வருகின்றன. இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அண்மையில் கூறியிருந்தார்.

அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பது பற்றிய சரியான விபரங்கள் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் எந்தக் கட்சி நாட்டை ஆட்சி செய்தாலும், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை நாடு முன்னெடுத்துச் செல்வதை உறுதி செய்ய விரும்புவதால், அத்தகைய சட்டவாக்க முயற்சியில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. கடந்த கால அனுபவத்தை வைத்துப் பார்த்தால், கொள்கைத் தொடர்ச்சி அவசியம் என்பது புரிகின்றது.

பல தசாப்தங்களாக இலங்கையின் வளர்ச்சிக்கு தடையாக இருந்த காரணிகளில் கொள்கை நிலைத்தன்மையின்மை முக்கியமானதாகும். சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் ஒரு பகுதியாக தற்போது பரிசீலனையில் உள்ள சீர்திருத்தங்கள் கூட கடந்த காலத்தில் தோல்வியுற்றவையாகவே காணப்படுகின்றன. அவை பலனை அடைந்திருந்தால், இன்றைய நெருக்கடிகள் உருவாகியிருக்காது.

# இலங்கையின் பொருளாதார மீட்சியை உறுதி செய்த சர்வதேச நாணய நிதியம்!




## IMF உதவியினால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவு முன்னேற்றம்; பணவீக்கமும் வாழ்க்கைச் செலவும் குறைந்து செல்கின்றன

**நிறைவேற்றுக் குழுவின் மீளாய்வு முடிவடைந்த பின்னர், இலங்கைக்கு 337 மில்லியன் டொலர் நிதி உதவி கிடைக்கும். அதன்படி IMF இதுவரையில் இலங்கைக்கு வழங்கியிருக்கும் மொத்த தொகை 1 பில்லியன் அமெரிக்க டொலர்**

சர்வதே நாணய நிதியத்தின் மீளாய்வுக் குழுவினர் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே இந்த சாதகமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கின்றமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளின் இந்தக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் படிப்படியாகக் குறைந்து வருவதையும் அவதானிக்க முடிவதுடன், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் பிரதிபலனாகவே இவ்வாறு சாதகமான முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது.

இருந்தபோதும், தாம் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை மாற்றியமைக்கப் போவதாக எதிரணியினர் கூறி வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினால் இலங்கை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றங்களை புரிந்து கொள்ளும் திராணியற்ற நிலையில், அவர்கள் இவ்வாறு கூறி வருகின்றனர்.

இந்த வருடம் தேர்தல் ஆண்டு என்பதால் அரசியல் அரங்கங்களிலும் இந்த சர்வதேச நாணய நிதிய விவகாரம் அதிகம் பேசப்பட்டு வருகின்றது. தேர்தலுக்கு முன்னர் வாக்காளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் இத்தகைய கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வியத்தில் தேவையற்ற குழப்பத்தை இக்கருத்துகள் உருவாக்குகின்றன. இந்த விடயமானது கட்சி பேதங்கள் இன்றி பொதுவாக விவாதிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆதாரமற்ற அரசியல் பேச்சுக்கள் வாக்காளர்களை கவர்ந்திழுக்கலாம், ஆனால் நீண்ட காலத்திற்கு நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தலாம்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் போதெல்லாம், வெளியேறும் அரசாங்கம் செய்ததைச் செயல்படுத்துவதைத் தவிர்ப்பதிலேயே வரவிருக்கும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்வதைக் காண்பது இலங்கையில் சர்வசாதாரணமாக உள்ளது. இவை அனைத்தும் தர்க்கரீதியானவை அல்ல.

பகுத்தறிவுடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்பதற்கு அப்பால் பிரபல்யத் தன்மையை அடைவதற்காக முன்னெடுக்கப்படும் அரசியல் பாசாங்குத்தனம் என்றே அதனைக் கூறலாம்.

பாசாங்குத்தனத்தால் உந்தப்பட்ட இத்தகைய அரசியலை நாடு இனியும் செய்ய முடியாது. கட்சி அரசியலில் மாறுபாடுகள் இருந்தாலும் வெளிப்படைத்தன்மையுடன் கொள்கையானது தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கான நேரம் இப்போது கனிந்துள்ளது.

பி.ஹர்ஷன்...

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் முதல் தடவையாக காஸா மீதான யுத்தநிறுத்த பிரேரணை நிறைவேற்றம்!



**காஸாவில் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் முதன்முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. காஸா மீது இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்து 5 மாதங்கள் கடந்துள்ள நிலையில், ரமழான் நோன்புக்கு மதிப்பளிக்கும் வகையில் இத்தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்றப்பட்டுள்ளது.**




## வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தாத அமெரிக்கா! தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் தொடரும் தாக்குதல்கள்!

அமெரிக்கா உள்ளிட்ட 15 நாடுகள் அங்கம் வகிக்கும் இக்கவுன்ஸிலின் 10 நாடுகளது அனுசரணையில் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்திற்கு 14 நாடுகள் ஆதரவாக வாக்களித்து இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன. இத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் அமெரிக்கா கலந்து கொள்ளாது தவிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

காஸாவில் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி கடந்த ஐந்து மாத காலப்பகுதியில் பாதுகாப்பு கவுன்சிலுக்கு கொண்டு வரப்பட்ட மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருந்த சந்தர்ப்பங்களில், வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றை செல்லுபடியாக்கிய அமெரிக்கா, இம்முறை முதற் தடவையாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது தவிர்ந்து கொண்டது.

உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் இப்பிரேரணை தொடர்பில் அமெரிக்காவிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள அதேநேரம், அமெரிக்காவின் இந்நிலைப்பாட்டுக்கு இஸ்ரேல் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. அத்துடன் அமெரிக்காவுக்கு உயர்மட்டப் பிரதிநிதிகளை அனுப்பி வைக்க திட்டமிட்டிருந்த இஸ்ரேல், அவர்களை அனுப்பி வைப்பதை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் உடனடியாக இடைநிறுத்தியது.

காஸா விவகாரத்தில் அமெரிக்காவிடம் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டுள்ள மாற்றங்களும் இஸ்ரேல் எடுத்துள்ள நிலைப்பாடும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்துவதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் யுத்தத்தை நிறுத்த வலியுறுத்தும் வகையிலும் காஸாவுக்குள் மனிதாபிமான உதவிகளைக் கொண்டு செல்ல இடமளிக்கும் வகையிலும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் உலகின் பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பங்களில், அதற்கு எதிராக வாக்களித்த அமெரிக்கா, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்றப்படவிருந்த காஸா யுத்தநிறுத்தத் தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கியுமுள்ளது.

அதே அமெரிக்கா காஸாவில் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி கடந்த 22 ஆம் திகதி பாதுகாப்பு கவுன்சிலுக்கு தீர்மானமொன்றைக் கொண்டு வந்தது. அத்தீர்மானம் ரபா மீது இஸ்ரேல் யுத்தத்தை முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டு சீனாவும் ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அத்தீர்மானத்தைச் செல்லுபடியற்றதாக்கின.

இந்நிலையில் அல்ஜீரியா, கயானா, ஈக்வடார், ஜப்பான், மால்டா, மொசாம்பிக், சியரா லியோன், ஸ்லோவேனியா, தென்கொரியா, சுவிட்சர்லாந்து ஆகிய 10 நாடுகளின் அனுசரணையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை கடந்த 25 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ரமழானுக்கு மதிப்பளிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள இத்தீர்மானம், இஸ்ரேலும் ஹமாஸும் காஸா பகுதியில் உனடியாக யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

பலஸ்தீனம் உட்பட உலகின் அனைத்து நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியம், அரபு லீக், உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை வரவேற்றுள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ் அடங்கலாக மோல்டா உள்ளிட்ட நாடுகளும் இத்தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்தை இஸ்ரேல் மதித்து செயற்படத் தவறினால் இஸ்ரேலுடனான தூதரக உறவுகளை சர்வதேச சமூகம் துண்டிக்க வேண்டும் என்றுள்ளார்.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இஸ்ரேல் மீதான இராஜதந்திர அழுத்தங்கள் மேலும் அதிகரித்துள்ளன. ஆனால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் காஸா மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டதாக இல்லை. கடந்த திங்கள் முதல் புதன்கிழமை வரையும் காஸாவில் 160 பேர் கொல்லப்பட்டும் 195 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்று ஐ.நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. அப்படியென்றால் காஸா யுத்த நிறுத்தம் தொடர்பில் பாதுகாப்பு கவுன்சில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் செல்லாக்காசாகி விடுமா? என்பதே இங்குள்ள வினா ஆகும்.

இதேவேளை மனிதாபிமான உதவிகளை காஸாவுக்குள் கொண்டுசெல்வதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலை நிலவுவதால் அங்கு உணவுப் பற்றாக்குறை தலைவிரித்தாடுகிறது. அதனால் போஷாக்கின்மையும் நீரிழப்பும் பெரிதும் அதிகரித்துள்ளதோடு, 25 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் போஷாக்கின்மையால் உயிரிழந்துமுள்ளனர். வடக்கு காஸாவில் 2 வயதுக்கு உட்பட்ட 31 வீதமான சிறுவர்கள் கடுமையான போஷாக்கின்மைக்கு உள்ளாகியுள்ளனர் என்று ஐ.நா. மதிப்பிட்டுள்ளது.

காஸா மீதான இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்கள் பாதிக்கப்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்கா ஆரம்பம் முதல் இஸ்ரேலை வலியுறுத்தி வருகிறது. ஆனபோதிலும் பாதுகாப்பு உத்தரவாதமில்லாத நிலை காணப்படுவதால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரக்குகள் மனிதாபிமான உதவிகளுடன் ரபா பகுதியில் எகிப்தில் காத்து நிற்கின்றன. காஸாவுக்குள் மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு இடமளிக்குமாறு உலகின் பல நாடுகளும் இஸ்ரேலை வலியுறுத்தி வருகின்றன.



## இஸ்ரேல் மீது சர்வதேசம் கடுமையான அழுத்தம்!

இருந்தும் கூட யுத்தநிறுத்தம் ஏற்படவில்லை. மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்கு ஏற்ற பாதுகாப்பு சூழல் உருவாகவுமில்லை. மனிதாபிமான உதவிகளை கொண்டு சென்ற ஐ.நா ட்ரக்குகள் மீது மாத்திரமல்லாமல் மனிதாபிமான உதவிகளுக்காக காத்து நின்ற மக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதனால் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேநேரம் காஸாவின் நெருக்கடிகள் குறித்து கவனம் செலுத்தியுள்ள அமெரிக்கா, கடல் வழியாக மனிதாபிமான உதவிகளைக் கொண்டு செல்லவென மத்திய தரைக்கடல் பகுதியில் நீர்தடுப்பணையை அமைக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஏற்பாட்டில் சைப்பிரஸில் இருந்து கப்பல் மூலம் 200 தொன் உணவுப் பொருட்கள் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த சூழலில் கடந்த (23.3.2024) சனியன்று எகிப்தின் அல் அரிஷ் விமானம் நிலையம் ஊடாக ரபா எல்லை வரை சென்று நிலைமைகளை அவதானித்து திரும்பியுள்ள ஐ.நா. செயலாளர் நாயகம், 'தரைவழியாக உணவுப்பொருட்களை அனுப்பி வைப்பதே காஸாவின் மனிதாபிமான நெருக்கடிக்கு சரியான தீர்வாக அமையும்' என்றுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, காஸா மீதான யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள 15 இலட்சம் பேர் ரபாவில் தங்கியுள்ளனர். அது சனநெரிசல் மிக்க பகுதியாக உள்ளது. காஸாவின் இறுதி எல்லையே அது. அப்பகுதி மீதும் தரைவழி இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்க இஸ்ரேல் முயற்சிக்கிறது. அதற்கு உலகளாவிய ரீதியில் கடும் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன. அமெரிக்காவும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஏனெனில் ரபா மீது தரைவழி நடவடிக்கையை மேற்கொண்டால் மனித அழிவுகளும் சேதங்களும் மிக அதிகமாக இருக்கும். அதனைத் தவிர்ப்பதே இந்த எதிர்ப்புக்களுக்கான காரணமாகும்.

இருப்பினும் இந்நடவடிக்கையின் ஊடாகவே ஹமாஸை முழுமையாக அழித்து வெற்றியை அடைய முடியும் என்கிறது இஸ்ரேல். அதனால் ரமழான் நோன்புக்கு முன்னர் காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த அமெரிக்கா, கட்டார், எகிப்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடும் முயற்சிகளை முன்னெடுத்தன. இருப்பினும் நோன்பு ஆரம்பமாகி 15 நாட்கள் கடந்தும் கூட யுத்தநிறுத்தம் ஏற்படவில்லை.

இந்நிலையில் ரபா மீதான யுத்தத்திற்கான முயற்சிகளை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்துள்ளதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதோடு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலிய பிரதமருடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு ரபா மீது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து தவறிழைக்க வேண்டாம் என்று எச்சரித்துள்ளார்.

உபஜனாதிபதி கமலா ஹரிஸ், ரபா மீதான இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் முன்னெடுத்தால் அது பெரிய தவறாக அமையும் என்றும், இஸ்ரேல் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் கூறியுள்ளார்.

இச்சூழலில் கடந்த வாரம் 6 ஆவது தடவையாக மத்திய கிழக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை நிறைவு செய்து கொண்டு இஸ்ரேல் சென்றிருந்த சமயம் இஸ்ரேலிய பிரதமர், ரபா மீது தாக்குதல்களை தொடங்கப் போவதாகவும் அமெரிக்கா ஆதரவளிக்காவிட்டால் தனியாகவாவது ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் பிரேரணைக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை பாவிப்பதை அமெரிக்கா தவிர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.



மர்லின் மரிக்கார்...

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கும் கருத்து அரசியல் அரங்கத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கின்றனர் என்பது தனக்குத் தெரியும் எனக் கூறியிருந்தார்.**

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வெளியிட்ட சர்ச்சைக் கருத்து!

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் நாட்டில் மீண்டும் உருவாகிய பரபரப்பு!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போது நாட்டின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேன, இதற்கு முன்னர் தாக்குதல் பற்றித் தனக்கு முற்கூட்டியே எதுவும் தெரியாது எனக் கூறிவந்த நிலையில், தற்பொழுது பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தனக்குத் தெரியும் எனக் கூறியுள்ளார்.

முன்னுக்குப்பின் முரணான கருத்தாக இக்கூற்றுகள் இருந்தாலும் இது தற்பொழுது பேசுபொருளாகியுள்ளது. அவருடைய இந்தக் கருத்தைத் தொடர்ந்து அதுகுறித்து விசாரணை நடத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்திருந்தார்.

இந்த அறிவுறுத்தலைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருந்தனர். சுமார் ஐந்து மணி நேரம் இந்த வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2024ஆம் ஆண்டு தேர்தலுக்குரிய ஆண்டு என்பது உறுதியாகியுள்ள நிலையில், கடந்த தேர்தலில் முற்று முழுதாக ஆதிக்கம் செலுத்திய இந்த உயிர்த்த ஞாயிறு விவகாரம் மீண்டும் ஒருமுறை தேர்தல் களத்திற்கு இழுத்து வரப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதாவது 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் 39 வெளிநாட்டவர்கள் உள்ளடங்கலாக 253 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருந்தனர்.

மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் 3 நட்சத்திர ஹோட்டல்கள் உள்ளடங்கலாக பல்வேறு இடங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

சஹரான் என்ற அடிப்படைவாத கொள்கை கொண்ட தீவிரவாதி தலைமையிலான குழுவினர் இதனை மேற்கொண்டதாக விசாரணைகளில் தெரியவந்ததுடன், இத்தாக்குதல் குறித்து முற்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் அதனைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் தவறிவிட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் நாட்டின் தேசிய பாதுகாப்புக் குறித்த கேள்வியை எழுப்பியதுடன், இதனை அடிப்படையாகக் கொண்டே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020 தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்தார். தேசிய பாதுகாப்பை முன்னிறுத்தி அரசியல் இலாபம் தேடுவதற்கு சிலர் முயற்சித்ததாகவும் அந்தக் காலத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் குண்டுத் தாக்குதல்கள் குறித்து பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டிருந்ததுடன், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருந்தார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கிறிஸ்தவ மக்களால் முன்வைக்கப்பட்டது.

இதனை அடிப்படையாகக் கொண்டு பிரசாரத்தை முன்னெடுத்திருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவர் பதவிக்கு வந்த பின்னர்



ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்து அதிக பக்கங்களைக் கொண்ட விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் குற்றவாளிகள் யார் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டுக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நஷ்டஈடு வழங்க வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபா நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என்று இந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. போதுமான உளவுத் தகவல்கள் இருந்தும் உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட பலருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகள் தொடர்பான தீர்ப்பிலேயே உச்சநீதிமன்றம் இவ்வாறு அறிவித்திருந்தது.



முன்னாள் ஜனாதிபதி தவிரவும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாவை நட்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாவை நட்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவை நட்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நஷ்டஈடுகளை அறவிட்டு கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பித்த உச்சநீதிமன்ற நீதியரசர்கள் குழாம், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் நட்டஈடு செலுத்த வேண்டுமெனவும் உத்தரவிட்டிருந்தது.

குறித்த மனுக்களை விசாரணை செய்த நீதியரசர்கள் குழாமில் அடங்கியிருந்த பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹார, எல்.டி.பி.தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ, எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன ஆகியோர் இந்தத் தீர்ப்பை வழங்கியிருந்தனர். உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத்தாக்குதலில்தனது இரு பிள்ளைகளை இழந்த தந்தையான நந்தன சிறிமான்ன, சுற்றுலாத் துறை வர்த்தகர் ஜனக விதானகே, இரு கத்தோலிக்க மதகுருமார், ஷங்ரில்லா ஹோட்டல் குண்டுத் தாக்குதலில் சிக்கிய சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க, கத்தோலிக்க மதத் தலைவர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட 12 தரப்பினரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்கில் இதில் பிரதிவாதிகள் தரப்பினராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, தேசிய புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, தேசிய உளவுச் சேவை பிரதானியாக இருந்த சிசிர மெண்டிஸ் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், பிரதிவாதிகளில் ஒருவராகப் பெயரிடப்பட்டிருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்குகளை முன்னெடுத்து செல்ல முடியாது என உச்சநீதிமன்றம் கடந்த 2022 செப்டம்பர் 26 ஆம் திகதி அறிவித்தது. பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு எதிராக அரசமைப்பின் 35 (1) உறுப்புரை பிரகாரம் வழக்கொன்றை முன்னெடுத்துச் செல்ல முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏனையவர்கள் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பானது நாட்டில் நீதியையும் நியாயத்தையும் பாராட்டும் அனைவருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பென பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகவோ அல்லது எத்தகைய உயர்ந்த பதவியை வகித்தாலும் குற்றம் செய்தால் சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாதென்ற செய்தி இந்த தீர்ப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் பேராயர் தெரிவித்திருந்தார். உச்சநீதிமன்றம் முன்னர் வழங்கிய காலக்கெடுவுக்குள் 15 மில்லியன் ரூபாவை மாத்திரம் மைத்திரிபால சிறிசேன செலுத்தியிருந்ததுடன், எஞ்சிய பணத்தைச் செலுத்துவதற்கு காலக்கெடு கோரியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒருமுறை கருத்துத் தெரிவித்திருப்பது அரசியல் அரங்கத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தலுக்கான கூட்டணிகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான இழுபறிகள் ஏற்பட்டிருக்கும் தருணத்தில் இவ்வாறானதொரு கருத்தை முன்வைத்திருப்பது தொடர்பில் அரசியல் அவதானிகள் சந்தேகங்களை முன்வைக்கின்றனர்.

தேர்தல் நெருங்கும் நிலையில் குறிப்பிட்டதொரு கட்சியின் எழுச்சியைத் தடுப்பதற்கான முயற்சியாக இருக்கலாம் என்ற பார்வையிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேநேரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து கிறிஸ்தவ சமூகத்தின் மத்தியில் இன்னமும் கவலை காணப்படுவதுடன், பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தொடர்பில் வெளிப்படுத்தப்படாமை குறித்தும் அவர்கள் தொடர்ந்தும் ஆதங்கங்களை முன்வைத்தே வருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் வெறுமனே அரசியல் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படாமல் உண்மை கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதியுடன் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையில், தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென்பது துரதிர்ஷ்டவசமானதே. எனவே, இவ்விடயத்தில் உண்மையை வெளிக்கொண்டுவருவதற்கு பாரபட்சமன்றி செயற்பட வேண்டும் என்பதுதான் பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

# திசைமாறுகிறதா இந்திய அரசியல் சூழல்?

## இந்தியா ஒரு நோக்கு

## வாராந்த அலசல் 12

நந்தவனம் சந்திரசேகரன்





காற்று திசைமாறி வீசுவதைப் போல இந்திய அரசியல் சூழலிலும் ஆதரவு அலை மாறிக்கொண்டே இருக்கிறது. கடந்த வாரம் வரையில் பா.ஜ.க தலைமையிலான கூட்டணியே அதிக இடங்களை வெல்லும் என்று கருத்துக்கணிப்பு நிலவி வந்த நிலையில் தற்போது இந்தியா கூட்டணி பக்கம் திரும்பியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அரசியல் நிலவரம் மாறிக் கொண்டே இருக்கும் என்பது இயற்கை. எதுவும் இங்கே நிரந்தரமில்லை.

பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயக கூட்டணியின் பின்னடைவுக்கு இரண்டு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று தேர்தல் பத்திரம், இன்னொன்று இந்தியா கூட்டணியில் உள்ள தலைவர்கள் மீது இலஞ்ச, ஊழல் புகார்களை முன்வைத்து அமுலாக்கத்துறை எடுத்துவரும் கைது நடவடிக்கை. இதில் முக்கியமாக இந்தியா கூட்டணியில் முக்கிய அங்கம் வகிக்கும் டெல்லி முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சித் தலைவருமான அரவிந்த் கெஜ்ரிவால் மதுபான கொள்கை ஊழலில் செயல்பட்டவர் என்று குற்றம் சாட்டப்பட்டு அமுலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டது இந்திய அரசியலில் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

அரவிந்த் கெஜ்ரிவால் முதலமைச்சராக இருக்கும் டெல்லி அரசின் கலால் கொள்கை, மதுபான வியாபாரிகளுக்கு உரிமம் வழங்க அனுமதித்ததாகவும் அதற்கு இலஞ்சம் கொடுத்ததாகவும், சில விற்பனையாளர்களுக்கு சாதகமாக இந்த கொள்கை வகுக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இந்த விவகாரத்தில் பல கோடி ரூபாய் அளவில் நடந்த சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தொடர்பாக மத்திய அமுலாக்கத் துறை பணப் பரிவர்த்தனை மோசடி தடுப்புச் சட்டத்தின்படி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்த வழக்கில் ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்களான மணீஷ் சியோடியா, சஞ்சய் சிங், அக்கட்சியின் தகவல் தொடர்பு பொறுப்பாளர் விஜய் நாயர் மற்றும் சில தொழிலதிபர்களை அமுலாக்கத் துறையினர் கைது செய்தனர். கலால் கொள்கை விவகாரத்தில் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் சதி செய்ததாக குற்றப் பத்திரிகையில் அமுலாக்கத்துறை தெரிவித்துள்ளது. இந்த வழக்கில் விசாரணைக்கு ஆஜராகுமாறு இதுவரை 9 முறை கெஜ்ரிவாலுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் அது சட்டவிரோதம் என்று அவர் தொடர்ந்து கூறிவந்தார். இவரது வாதத்தை ஏற்றுக்கொள்ளாத அமுலாக்கத்துறை அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்துள்ளது.

இந்திய மக்களவைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த கைது நடவடிக்கை ஏன்? என்றே கேள்வியை இந்தியா கூட்டணி தலைவர்கள் முன்வைக்கிறார்கள். இந்தியா கூட்டணியின் பலத்தை உடைக்க வேண்டும் என்றும், இவர்களின் ஒற்றுமையால் பா.ஜ.க தோற்றுவிடும் என்ற பயத்தினாலுமே அமுலாக்கத் துறையினரால் அச்சுறுத்தப்படுவதாகவும் இந்தியா கூட்டணித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். இது பழி வாங்கும் நடவடிக்கை என்று போராட்டமும் நடத்தி வருகின்றனர். இந்திய ஊடகங்களில் முதன்மைச் செய்தியாக இது முன்னிறுத்தப்படுவதால் மக்கள் மத்தியிலும் இது பேசுபொருளாகியிருக்கிறது.

சிவசேனா கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகையான சாம்னாவில் இந்த கைது நடவடிக்கையை முன்வைத்து ஒரு தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது முதல்வர் கெஜ்ரிவால் அமுலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை. இவர்கள் எதிர்க்கட்சிகளைக் கண்டு பயந்து அவர்களை சிறையில் அடைத்துவிட்டு தேர்தலை எதிர்கொள்கிறார்கள். தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜ.க 4 வழிகளில் ஊழல் செய்துள்ளதாக காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது. இது குறித்து காங்கிரஸ் ஊடகப்பிரிவு செய்தி தொடர்பாளர் ஜெயராம் ரமேஷ் கூறும் போது. கறுப்புப் பணத்தை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள். தற்போது ஊழலை சட்டபூர்வமாக ஆக்கிவிட்டு அதை மறைக்க முயற்சி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டியுள்ளார். தேர்தல் பத்திரம் மூலம் பா.ஜ.க 4 வழிகளில் ஊழலில் ஈடுபட்டுள்ளது. முதலாவது ப்ரீ பெய்டு இலஞ்சம். அதாவது நன்கொடை தா, வாய்ப்பைப் பெறு. இரண்டாவது போஸ்ட்பெய்டு இலஞ்சம், அதாவது ஒப்பந்தம் வாங்கிக் கொள்ள இலஞ்சமாக நன்கொடை கொடு. மூன்றாவது மிரட்டிப் பணம் பறித்தல், சோதனை செய்த பிறகு இலஞ்சம் வாங்குவது. நான்காவது போலி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கி இலஞ்சமாக நன்கொடை பெறுவது. இந்த நான்கு வழிகளில் பா.ஜ.க மிகப்பெரிய ஊழல் செய்துள்ளதாக அவர் மேலும் குற்றம்சாட்டுகிறார்.

இது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு பா.ஜ.க தரப்பிலிருந்து முறையான பதில் இல்லை. இந்தியாவின் வடகிழக்கில் மூன்று மாநிலங்களில் பா.ஜ.க தேர்தலில் போட்டியிடாமல் விலகியுள்ளது. தோல்விப் பயத்தாலேயே போட்டியிடாமல் விலகியுள்ளதாக எதிர்க்கட்சிகளும் குற்றம் சாட்டுகின்றன.

பா.ஜ.க ஆளும் மணிப்பூர் மாநிலம் இனக் கலவரத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 9 மாதமாக அங்கு மக்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர். வீடு, உடைமைகளை இழந்த மக்கள் பலரும் அரசு முகாம்களிலேயே இதுவரை தஞ்சமடைந்துள்ளனர். நாகலாந்திலும் அம்மாநில மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக கூறிய ஒன்றிய பா.ஜ.க அரசு அதைச் செய்யவில்லை என்று அங்குள்ள மக்கள் அதிருப்தியில் இருக்கிறார்கள். இதனாலேயேதேர்தலில் போட்டியிட்டால் தோற்றுவிடுவோம் என்று பா.ஜ.க விலகுவதாக அறிவித்துள்ளது.

ஆனால், அம்மாநில கட்சிகள் தங்களுக்கு ஆதரவு தருவதாக கூறியுள்ளதால் போட்டியிடவில்லை என்று பா.ஜ.க கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா கூறியுள்ளார், மற்ற மாநிலங்களில் உட்கட்சிகளில் மோதலை உண்டாக்கி கட்சிகளை உடைத்து மாநில ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் பா.ஜ.க இந்த மூன்று மாநில அரசியல் களத்திலிருந்து விலகுவது ஏன்? அங்குள்ள மக்களிடம் இவர்களுக்கு துளிகூட ஆதரவு இல்லை. அங்கே இவர்கள் தேர்தலில் போட்டியிட்டால் ஒரு வாக்கைக் கூட பெற முடியாது என்ற பயமே தேர்தலிலிருந்து விலக வைத்திருப்பதாக எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

இந்தத் தேர்தலில் பா.ஜ.க தோற்கடிக்கப்படும். சி.பி.ஐ. அமுலாக்கத் துறை, வருமான வரித்துறை ஆகியவை தேசிய ஜனநாயக் கூட்டணிக்கு ஆதரவாக இருக்கும் போது இந்தியா கூட்டணிக்கு மக்கள் ஆதரவாக இருக்கிறார்கள். மக்கள் தான் இந்தியா கூட்டணியின் மிகப்பெரிய பலம். இந்தக் கூட்டணி நாட்டின் பல்வேறு பகுதிகளில் வேகம் பெற்று வருகிறது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சமாஜ்வாடி கட்சியின் அகிலேஷ் யாதவ், ஆர்.ஜே.டி யின் தேஸ்வி யாதவ், உட்பட நாடு முழுவதும் உள்ள பல முக்கிய தலைவர்கள் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கின்றனர். தேர்தலுக்குப் பிறகு மற்ற கட்சித் தலைவர்களும் இதில் சேர்ந்து விடுவார்கள். அப்போது இந்தியா கூட்டணி இன்னும் பலம் பெறும் என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் நடிகருமான சத்ருகன்சின்ஹா கூறியுள்ளார்.

இந்தியாவில் தற்போது மீண்டும் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விட யார் வரக்கூடாது என்ற குரலே ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இது தேர்தலில் எதிரொலிக்கும் என்று உறுதியாக சொல்ல முடியாது, ஏனென்றால் தேர்தலுக்கு இன்னும் நாட்கள் இருக்கின்றன. சூழல் மாறலாம். எனினும் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

# இன்னும் எத்தனை காலமோ? கவிதை நூல் நயவுரை

அண்மையில் சமுதாயத்தின்
கரங்களில் மழலையாகத்
தவழ்ந்தது.
இந்நூலில் 82 கவிதைகள்
படைக்கப்பட்டுள்ளன.
“தமிழே நீ வாழியவே”
என்று தொடங்கி, சமூக
அவலங்கள் பலவற்றைத்
தொட்டு, “இன்னும் எத்தனை
காலமோ? என்ற ஏக்கத்தோடு
நிறைவு செய்துள்ளார்.
இந்நூலை நோக்கின்,
சமூகத்தின் மீது கொண்ட
கரிசனை புரியும்.
“வலிகள் சுமந்து வதங்கிய இனத்தில்
வலிமை பெருக்கி வதங்கள் புரிந்திடு
துணிவின் ஒளியால் துயரம் விரட்டு
பணிவு கொண்டே பணிகள்
பரப்பு” என்ற
வரிகளுக்கூடாக, இளையோர்
ஒவ்வொருவரையும் எழுச்சி
கொள்ளச் செய்துள்ளார்.
“தூர நோக்கில்லாத
துயரப் பெற்றோர்கள்
பணங்கறக்க வென்றே
படிப்பை நிறுத்துவிப்பார்...” என்று
‘கட்டாயக் கல்வியும்
கட்டறுத்த மாணவரும்’ என்ற
தலைப்பில்
பெற்றோருக்கு சாட்டையடி
கொடுத்துள்ளார்.
“மஞ்சள் கோட்டில் மிதிப்பானோ?
வைத்தியர் வடிவில் வருவானோ?...
வீதி மீது ஏறுகையில்
விதியே சீறி வருவதுபோல்”
என்று விதியை முடிக்கும்
வீதி விபத்துக்களையும் நாம்
காணும் மரண
அவலங்களையும்
பதிவாக்கியுள்ளார்.
“தேடிப் போகும் காதல்
தேளாய்
கொட்டக் கூடும்
காதலின் பெயரைச்
சொல்லி
கற்பைச் சுவைத்த
பின்னர்
கை கழுவி நழுவுகின்ற
கயவர்கள் கூட்டம்
உண்டு...” என்று காத
லுக்கு ஒரு
கவிதை எழுதியுள்ளார்.
“கோண்டாவில்
பதியினிலே
கோமான் சிவாஜி அடிக்
கல்லிட
செம்மனச் செல்வி
தங்கம்மா
திறந்து வைத்த
பள்ளியிது...
ஆண்டுகள் இருபது
நீண்டு நிலை பெற்ற
சிவபூமி
மனவிருத்திப்பள்ளி
தாங்குக
தங்கமாம்
சிறுவர்களை...”
என்று
சிவபூமிக்கு
நன்றி பகருகிறார்...
நன்றி நிறை
மனத்தோடு!.
இன்றைய சிறுவர்
உலகில் நிறைந்த
வேதனையின்
அவலங்களை
இப்படி
எழுதியுள்ளார்.
“தடைகள் பல
தாண்டி
தடம் பதிக்க
வேண்டாமோ?
நாளைய
தலைவர்களை
நாம் செதுக்க
வேண்டாமோ?
குருத்துகளைக்
கருக்கவென
விரித்த
வலைகள் பல
நச்சுச் சூழலிடை
நம்பிஞ்சுகள்
வளருகிறார்....”
என்று தனது
ஆதங்கத்தைக்
கொட்டியுள்ளார்.
“எரிந்தது நூலக
மல்ல
தமிழர் தம்
ஏணிகளே
தமிழ்ப் பெரு
விருட்சத்தின்
உரிமைக்கு
உயிரூட்டும்
தொன்மை மிகு
வேர்கள்...”
என்று கூறி
“எரிந்தது தமிழர்
நூலகமல்ல
பஞ்ச சீலக்
கொள்கைகளை
பாருக்கே
படைத்தளித்த
போதி மாதவன்
போதனைகளே...”
என்று உணர்வின்
வலிகளை உயிர்மை
யாகப்
படைத்திருக்கிறார்.
இவருடைய
கவிதைகள்
கடந்து போன பல
வற்றை நமக்கு
மீட்டுத் தருகின்றன.
எதிர்பாராத இடப்
பெயர்வு
ஒன்றில் நாம்
சங்கமமான அந்தத்
துயரினை

“இங்கிருந்து
புறப்படுவீர்
கையில்
கிடைத்ததுடன்
கைதடி கடந்திடுவீர்
வலிகாமம்
கடந்தோம்
வலிகள் சுமந்த
படி...”
எப்படி என்றால்,
“பலாலியில்
கிளம்பும்
பராலைற்றுக்கள்
மிரட்ட
கையிலே
கிடைத்திட்ட
காகிதச்
சான்றிதழ்களை
நாய் பூனை
கோழிகளை...
நாம் வளர்த்த
மந்தைகளை...
நலம் காக்க வழியின்றி...”என்றும்,
“தாகத்தால் தவிக்கையில்
தண்ணீர் தந்திடவும்
தயங்கினர் அயலோர்
முடிவற்ற பேரணி கண்டு....”
என வேதனையின்
வலிகளை, மாறாத துயர்களை
தந்திருக்கிறார். இன்னும்,
“வாழப்பிறந்தவர்கள்” என்ற
கவிதையில்,
“உச்சக் கதைகளைப் பேசி
மணிகளை விழுங்குவான்!
பொய்களைப் பொழிந்தே
பொழுதினைப் போக்குவான்!
விழுமிய வாழ்வென்று
தொழுதிடுவர் நால்வர்!
பழுதிலா வார்த்தையென
பணிந்திடுவார் வாழியவே!
என்று நடிக
மனிதர்களைப் படம் பிடித்துக்
காட்டுகிறார்.
இவர் பெரும்பாலும் உதயன்,
வலம்புரி, தினகரன் முதலிய
பத்திரிகைகளில்
படைப்புக்களைப்
படைத்துள்ளார். அதே
நன்றியுடன் “உதயன்”
ஆசிரியர் அமரர் கானமயில்நாதன்
ஐயாவுக்கும்
கவிதைகளால்
நினைவலைகளை இப்படித்
தொகுத்துள்ளார்.
“சமூக ஊனங்கள்
சுமூகமாய் மறையவென
பேனாக் கலப்பையினால்
மனத்தரிசை உழுதவரே!
அச்சமின்றி அறம் காக்க
உச்சப்பணி செய்தவரே!
கானமயில் ஐயா! உம்
கனத்தபணி ஓய்ந்தாலும்
இனத் தீபமாய் என்றும்
இதயத்தில் சுடர்வீரே!...”
என்று நன்றிப்
பெருக்கால் அழகான பதிவு
செய்துள்ளார்.
எம் சமூக அவலங்களை,
“போதைப்பொருள் பெருகி
பாதைகளை மாற்றுதலும்
அரசைத் துறந்த மகான்
அரசடியில் குந்துதலும்...” எனத்
தொடங்கி, இன்று நம்மை வருத்தும்
கொடுமைகளை
“ஊழலும் இலஞ்சமுமே
சட்ட வலை பின்னுதலும்
மரங்களைக் காப்பதாய்
கோடரிக் காம்புகளும்...
இன்னும் இன்னும்
இப்படி எத்தனையோ?” என்று
நிறைவு செய்துள்ளார். ஆம். இன்னும்
இப்படி எத்தனையோ? என்ற
விடையில்லா வினாக்கள் அனைவர்
நெஞ்சங்களிலும் தொடர்ந்து நிற்க,
அழகிய படைப்பொன்றைப் படைத்து,
மகிழ்வு கொள்ளுகிறார்.
சமூகத்தின் இன்றைய யதார்த்தம் தெட்டத்தெளிவாக தற்துணிவோடு படைக்கப்பட்டுள்ளது.

**வாழ்த்துக்களோடு ‘இன்னும் தொடர்க’ என்ற வேண்டுதலையும் முன்வைக்கின்றேன்.**

*– உடுவிலூர் கலா*

## தந்தை செல்வா நினைவு நாள் நிகழ்வுகள்

*தந்தை செல்வாவின் 126 ஆவது நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்படும். இதனை முன்னிட்டு யாழ் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று 30 நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.*


## CAR CARRIER FOR HIRE



Colombo City Limit:
Rs. 7,850.00
Outside City Limit:
Rs 120.00 Per Km

AA CEYLON
The Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha,
Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 210)
Web: www.aaceylon.lk



## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயாளி ஒருவருக்கு 45 வயதுக்குட்பட்ட O positive உடைய சிறுநீரகத்தை தானமாக வழங்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும். தகுதி உடையவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

HLA report இருப்பின் whats App செய்யவும்

**தொடர்புகளுக்கு:**
**Call: 070 663 4050**
**Whats App: 072 223 4050**






**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்**

**தேயிலை ஆராய்ச்சி சபை**

## முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)**
**MANAGEMENT ASSISTANT (NON-TECH)**

**கடமை விபரம்**
நிறுவனத்தின் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், தொழில்நுட்பவியல் சாராத செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி, (தமிழ் / சிங்களம்) மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

க.பொ.த. (உ/த)ப் பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது வினாப்பத்திரம் தவிர) சித்தி பெற்றிருத்தல்

**கவனிக்கவும் :** சிங்களம் மற்றும் தமிழில் கணனிப் பயன்பாடுகளில் அறிவு (உ+ம் : word processing spreadsheet) மேலதிகத் தகைமையாகும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் :**
பின்வரும் தகைமைகளைக் கொண்ட தேர்ச்சி பெற்ற, அரைத் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற ஆரம்ப நிலை வகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெறுவர்.

**கல்வி :** க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி, (தமிழ் / சிங்களம்) மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**ஏனையவை :** மேற்குறிப்பிடப்பட்ட வகுதியில் நிரந்தரப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**கவனிக்கவும் :** ஏதாவது பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதாவது பதவியொன்றின் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாக சேவையாற்றியுள்ள பயிற்சிக் காலம் மேற்படி தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது. ஏதாவது பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன் சேவையாற்றியுள்ள தற்காலிக / சமயாசமய சேவைக் காலம் குறிப்பிடப்பட்ட தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்திற்கான கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

**சம்பள அளவுத் திட்டம் :** MA 2-1 (2016) ரூபா 27,910 – 10x300 – 7x350 – 12x600 – 12x710 - ரூபா 49,080.00 மாதாந்தம்.

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**தெரிவு செய்யும் வழிமுறை :** எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**ஏனைய நன்மைகள்:**

i. அனைத்து வசதிகளையுமுடைய வசிப்பிடங்கள்/ விடுதி அறைகள் இருப்பின் வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

ii. நிலையத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

iii. **சேமலாப நிதி :** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10%ஐ ஊழியர் குழாமிற்கான சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிலையமானது 15% (வீதத்தைச்) செலுத்தும். மேலும் நிலையமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதத்தையும் பங்களிப்புச் செய்யும்.

iv. தேயிலை ஆராய்ச்சி நிலைய ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.

இப்பதவி நிரந்தரமானது. விண்ணப்பதாரி தொடர்பாக மதிப்பீடொன்றை சமர்ப்பிக்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கலாக முழுமையான சுயவிபரங்கள், உரித்தான கல்விசார்ந்த மற்றும் ஏனைய தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகள், பிறப்பத்தாட்சியின் பிரதி, சேவைச் சான்றிதழ்கள், மற்றும் புத்தாக்க திறன்கள் என்பன தொடர்பான முழுமையான விபரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து google படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்யவும். 2024 ஏப்ரல் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் ஆதார ஆவணங்களை கீழே கையொப்பமிட்டவருக்கு தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**



## பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடெட்டிற்கு கணினி உபகரணங்களை வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/43/Com.Equipment–Buffer/2024
தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

**லங்கா சதொச லிமிடட்டிற்கு கணினி** உபகரணங்களை வழங்குவதற்கு உள்நாட்டு வழங்குநர்கள், உள்நாட்டு முகவர்கள், அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளில் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து **லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு : விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது
தேவை :

| # | Item | Quantity |
|---|---|---|
| 01 | POS Machine (Full Set) | 43 |
| 02 | Cash Drawer | 11 |
| 03 | POS Machine | 07 |
| 04 | POS Printer | 20 |
| 05 | Document Printer (Monochrome Laser) | 49 |
| 06 | Desktop PC | 70 |
| 07 | Network Switch (16 Port) | 20 |
| 08 | Wifi Access Point | 53 |
| 09 | Wifi Adapter | 106 |
| 10 | Keyboard | 127 |
| 11 | Network Cable Box | 15 |
| 12 | Laptops | 08 |
| 13 | HDD PC 1TB | 100 |
| 14 | Till HDD 120GB | 100 |
| 15 | RJ45 Clips (Cat 06) | 1000 |
| 16 | Keystone (Cat 06) | 250 |
| 17 | RJ 45 Faceplate (Single) | 200 |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை **ரூபா 3000.00 (மீளளிக்கப்படாத)** கட்டணம் ஒன்றை செலுத்தி **2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2024 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி** வரை கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி மு.ப. 11.00**க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், **2024 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பி.ப. 01.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்குள் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில **“LSL/PRO/05/43/Com.Equipment–Buffer/2024”** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களினாலும் இலங்கைக்குள் இயங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற முன்வைக்கப்படும் பெறுமதியில் 1% பெறுமதியைக் கொண்ட **விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைனுக்களை ஏற்பது **2024 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பி.ப. 01.00**ற்கு முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.
நிர்வாக சிக்கல்களுக்கு (திலினி) - 0701560428
தொழில்நுட்ப சிக்கல்களுக்கு (அனுஷ்க) - 070 3611459

கேள்வி/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு **தலைவர், லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு** வசமானது.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிடட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

# காப்பியக் கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் எழுதிய "ஜின்னாவின் குறும்பாக்கள் 550"; ஒரு பார்வை




மரபுவழி இலக்கியப் புலமையுடையவர் காப்பியக் கோ ஜின்னா ஷரிபுத்தீன். யாப்பிலக்கணப் பரிச்சயமுடையவர். தமிழின் செழுமை மிக்க பாவடிவங்களான வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்பவற்றில் தேர்ச்சி பெற்றுக் கொண்டு ஆறு தசாப்தங்களாக தொடர்ந்து எழுதிவருபவர். காவியங்கள்(11), சிறுவர் இலக்கிய நூல்கள்(5), கவிதை நூல்கள்(6), மொழிமாற்றக் கவிதை நூல்கள்(2), நாவல்கள்(2), சிறு கதை நூல்கள்(2) என்று பல பனுவல்களை தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்து புகழ் பூத்திருப்பவர் காப்பியக்கோ.

அவரின் புதிய முயற்சியாக 214 பக்கங்களில் அண்மையில் வெளிவந்திருக்கின்றது "ஜின்னாவின் 550 குறும்பாக்கள்" Limerik, எட்வயர் லியர் என்பவரை தந்தையாகக் கொண்ட அயர்லாந்து நாட்டுக்குரியதான பாவடிவம். இலங்கைக் கவிஞர் மஹாகவி து. உருத்திர மூர்த்தி 'குறும்பா' என்ற பெயரில் அதனைத் தமிழுக்குக் கொண்டு வந்தார்.

தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த வரவுப் பாவடிவமான குறும்பாவிலும் அக்கறை செலுத்தி அதிக எண்ணிக்கையிலான குறும்பாக்களை (550) ஒரே நூலில் தந்திருக்கின்றார் காப்பியக்கோ.

குறும்பா குறித்து, காப்பியக்கோ ஜின்னாஹ்,

"குறும்பாவுக் கிரண்டு பொருள் உண்டு
குறுகியதாய் இருப்பதில் ஒன்று
குறும்புகலந் திருப்பதுவும்
குதூகலத்தைத் தருவதுவும்
குறும்பாவில் இருப்பினதே நன்று!"

என்று குறிப்பிடுகின்றார்.

ஆயினும், மஹாகவியினுடைய வரைபுச் சட்டகத்திற்குள்
(காய்,காய், தேமா,
காய் காய் தேமா
காய் காய்
காய் காய்
காய் காய் தேமா) நின்று நல்ல கருத்துள்ள குறும் (குறுமையான) பாக்களைத் தருவதிலேயே அவர் அதிக கவனஞ் செலுத்தியிருப்பதை பாக்களை படிக்கின்ற போது தெரிய வருகின்றது.

இதனையே அவர் தனது முன்னுரையிலும் " குறும்பா என்பது குறும்புகளை மையப்படுத்தி வாசகனைச் சிந்திக்கச் செய்வதாக இருத்தல் வேண்டும் என்ற நிலைப் பாட்டில் இருந்து விலகி, நல்ல கருத்துக்களைத் தருவதாகவும் இருத்தல் வேண்டுமெனும் எண்ணத்தை வித்தாக்கி இப்பாக்களை எழுதியுள்ளேன்"

என்று குறிப்பிடுகின்றார்.

அவர் கூறுவது போல, நல்ல கருத்துக்கள் மிளிர்கின்ற குறும் பாக்கள் நூலில் பரந்து காணப்படுகின்றன.

"நல்லவற்றை மட்டிலுமே சொல்லு
நாவடக்கிப் பேசிமனம் வெல்லு
கல்லாதார் முன்னிலையில்
கருத்துரைக்க வேண்டாங்காண்
தொல்லைவரும் உடைபடலாம் பல்லு!"

"காட்டுக்கே அரசனென்ற போதும்
கூடிவர லாகும்பல் தீதும்
மேட்டிமையாய் எண்ணாதீர்
மிக்கபலம் கொண்டவரும்
கோட்டைவிட லாம்நீதி ஓதும்!"

என்னும் பாக்களை எடுத்துக் காட்டுகளாகக் குறிப்பிட முடியும்

இவை தவிர, குறும்பா வடிவத்தைப் பயன்படுத்தி "கொரோனா" வையும் பாடியிருக்கின்றார் அவர். 186 குறும்பாக்களில் "கொரோனா நெடுங்கவிதை" தந்திருக்கின்றார்.

"கண்ணுக்குத் தெரியாத ஜந்து
கண்மூக்கு வாய்வழியே வந்து
எண்ணுமுன்னே பாய்கின்ற
இராமபாணம் போற்சுவாசம்
புண்ணுறவே அழிக்குமதை வெந்து!
சீனாவின் "வூஹானி"ல் பற்றி
தொடர்ந்ததுவே உலகனைத்தும் தொற்றி
ஆனான தேசமெல்லாம்
அச்சத்தால் நடுநடுங்க
தானாகப் பரவியதே முற்றி!"

என்று தொடர்கிறது காவியக் கவிஞனின் கொரோனா நெடுங்கவிதை.

பாராட்டுக்கள் அவருக்கு.

குறும் பாவில் இலங்கும் காப்பியக்கோ, முழுவதும் குறும்புகள் நிறைந்த அங்கதச் சுவை ததும்பும் குறும்பா நூலொன்றையும் தரவேண்டும் என்பதே இலக்கிய நெஞ்சங்களின் வேண்டுதலும் எதிர்பார்ப்புமாகும்.

காப்பியக் கோவின் இலக்கியப் பணி தொடர வாழ்த்துகள்.

நூலின் விலை :ரூபா1000

வெளியீடு:அன்னை வெளியீட்டகம், மருதமுனை.

க.பாலமுனை பாறூக்

**பாவேந்தல் பாலமுனை பாறூக்...**

---

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு

**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெறுமையாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவிகள் தொடர்பாக சிறந்த அனுபவமும் தேவையான தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.**

| | |
|---|---|
| பதவி | : **பணிப்பாளர் (நிர்வாகம்)** |
| வெற்றிடங்களின் எண்ணிக்கை | : 01 |
| சேவை வகுதி | : சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் -(ஏச்எம் 1-1) |
| சம்பள மட்டம் | : மாதாந்தம் 80,295-15x2270 ரூபா, ஏச்எம் 1-1 2016 + அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகள் |
| அடிப்படை சம்பள அளவு | : 80,295 ரூபா |

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

பொது நிர்வாகம்/ வர்த்தக நிர்வாகம்/முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற முதலாவது பட்டம்/ உரித்தான துறையில் சட்டத்துடன் பெற்ற பட்டப்பின் படிப்பு

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பதவிக்குரித்தான முகாமைத்துவ மட்டத்தில் பதினைந்து வருடங்களுக்கு (15) குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம் 1-1) தொடர்புள்ள துறையொன்றில் 05 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் தரத்திற்கான சம்பள மட்டத்திலும் இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 36 வயதிற்கு குறையாமலும் 50 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். அரசாங்க திணைக்கள/ மாகாண அரசாங்க/அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ளவர்களுக்கும் மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

1. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டமூலத்தின் கீழான பணிகொடை.
2. பணியாளர் குழாம் மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதி/தொழிலாளர் இழப்பீடு காப்புறுதி திட்டம் ஆகியவற்றிற்கு உள்வாங்கல்.
3. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் - 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% தொழில் வழங்குநரின் பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய அனுகூலங்கள்.
5. 1/2015 மற்றும் 1/2015(1) ஆகிய பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பதவி | : **பணிப்பாளர் (செயலாக்கல் அபிவிருத்தி)** |
| சேவை வகுதி | : சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் - (ஏச்எம் 1-1) |
| சம்பள மட்டம் | : மாதாந்தம் 80,295-15x2270 ரூபா, ஏச்எம் 1-1 2016 + அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகள் |
| அடிப்படை சம்பள அளவு | : 80,295 ரூபா |

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

1. விஞ்ஞானத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற இளமாணிப் பட்டமொன்று (உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், கமத்தொழில், உணவு விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன்) அல்லது பொறியியல்/தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் பெற்ற முதலாம் இளமாணிப் பட்டம்.

   அத்துடன்

   உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் படிப்பு (முதுமாணி) அல்லது பதவியின் பாட பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகத்தின் கூட்டிணைந்த அங்கத்துவம்.

   மற்றும்

   அரசாங்க, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

   அல்லது

2. பதவிக்கேற்ற தொடர்புள்ள துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவகமொன்றின் முழுமையான அங்கத்துவம்.

   அத்துடன்

   அரசாங்க, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

மேலேயுள்ள வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.

அல்லது

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் தர சம்பள மட்டத்தில், முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம்) தொடர்புடைய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லையானது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தர சேவையிலிருப்பவர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

**தெரிவு செய்யும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக.

**நன்மைகள்:**

1. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டமூலத்தின் கீழான பணிகொடை.
2. பணியாளர் குழாம் மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதி/தொழிலாளர் இழப்பீடு காப்புறுதி திட்டம் ஆகியவற்றிற்கு உள்வாங்கல்.
3. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் - 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% தொழில் வழங்குநரின் பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய அனுகூலங்கள்.
5. 1/2015 மற்றும் 1/2015(1) ஆகிய பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பதவி | : **பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி)** |
| பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | : 01 |
| சேவை வகுதி | : சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் - (ஏச்எம் 1-1) |
| சம்பள மட்டம் | : மாதாந்தம் 80,295-15x2270 ரூபா, ஏச்எம் 1-1 2016 + அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகள் |
| அடிப்படை சம்பள அளவு | : 80,295 ரூபா |

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

பொருளாதாரம், வர்த்தக நிர்வாகம், சந்தைப்படுத்தல், வர்த்தகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற முதலாம் பட்டம் அத்துடன் உரித்தான துறையில் பெற்ற பட்டத்தின் பின் படிப்பு.

அத்துடன்

அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பதவிக்குரித்தான முகாமைத்துவ மட்டத்தில் பதினைந்து (15) வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் தர சம்பள மட்டத்தில், முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம்) தொடர்புடைய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 35 வயதிற்கு குறையாமலும் 50 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். அரசாங்க திணைக்கள/ மாகாண அரசாங்க/அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ளவர்களுக்கும் மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

**தெரிவு செய்யும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக.

**நன்மைகள்:**

1. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டமூலத்தின் கீழான பணிகொடை.
2. பணியாளர் குழாம் மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதி/தொழிலாளர் இழப்பீடு காப்புறுதி திட்டம் ஆகியவற்றிற்கு உள்வாங்கல்.
3. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் - 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% தொழில் வழங்குநரின் பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய அனுகூலங்கள்.
5. 1/2015 மற்றும் 1/2015(1) ஆகிய பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| பதவி | : **உதவிப் பணிப்பாளர் (நிதி)** |
| பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | : 01 |
| சேவை வகுதி | : நடுத்தர முகாமைத்துவ மட்டம் -(எம்எம் 1-1) |
| சம்பள மட்டம் | : மாதாந்தம் 53,175, 10x1,375-15x1910-95,575 ரூபா(எம்எம்1-1 2016) + அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட படிகள் |
| அடிப்படை சம்பள அளவு | : 53,175 ரூபா |

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

i. கணக்கிடல், வர்த்தகம், வர்த்தக நிர்வாகம், பொது நிர்வாகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டமொன்று

அல்லது

ii. இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைநிலை பரீட்சையில் சித்தி/ இங்கிலாந்தின் Cost and Management Accountants நிறுவகத்தின் பாகம் A மற்றும் B and the Professional Part I/Intermediate Examination of the Institute of Certified and Chartered Accountants (England).

மேலேயுள்ள i அல்லது ii இல் தகைமையை பெற்ற பின்னர் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 03 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் II ஆம் தர சம்பள மட்டத்தில், முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம்) தொடர்புடைய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 25 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். அரசாங்க திணைக்கள/ மாகாண அரசாங்க/அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ளவர்களுக்கும் மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

தெரிவு செய்யும் முறை: போட்டிரீதியிலான எழுத்து பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக.

**நன்மைகள்:**

**மேலேயுள்ள பதவிகளுக்கானது:**

1. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டமூலத்தின் கீழான பணிகொடை.
2. பணியாளர் குழாம் மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதி/தொழிலாளர் இழப்பீடு காப்புறுதி திட்டம் ஆகியவற்றிற்கு உள்வாங்கல்.
3. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் - 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% தொழில் வழங்குநரின் பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய அனுகூலங்கள்.

**ஏனையவை:**

**மேலேயுள்ள பதவிகளுக்கானது:**

1. இலங்கை பிரஜையொருவராக இருத்தல்.
2. பதவிக்கு உரித்தான கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்காக உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.
3. சிறந்த குணாதிசயங்களை கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரியின் தற்போதய வேலைவாய்ப்பு, சம்பள விபரங்கள், முன்னைய நிலைகளின் காலம் மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் ஏனைய அனைத்து விபரங்களுடன்

பிறப்புச் சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்கள் ஆகியன பதிவுத் தபாலில் 2024.04.29 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாணஅரசாங்க சேவை / அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அதிகாரசபையின் உரித்தான பிரிவுத் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளில்லாத விண்ணப்பங்கள் அல்லது திணைக்களங்களின்/ நிறுவனங்களின் தலைமைகளூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரத்தை **www.cda.gov.lk** என்ற தெஅச இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 54, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

# தோட்டத் தொழிலாளரின் 1700 ரூபா சம்பள உயர்வு



## ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் நல்ல முடிவு கிடைக்கும் என்கிறார் அமைச்சர் ஜீவன்

**பெருந்தோட்ட கம்பனிகள் இதற்கு இணங்காத பட்சத்தில் சம்பள நிர்ணய சபையை கூட்டி தீர்வை பெற்றுத் தருமாறும் கோரிக்கை**




நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் வாழ்க்கைச் சுமையும் அதிகரித்து சாதாரண வருமானம் பெறும் மக்கள் பரிதவித்து வருகின்றனர். அஸ்வெசும உட்பட சில நலன்புரித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் மக்கள் மீதான பொருளாதாரச் சுமைகள் குறையவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

இந்நிலையில் அரச ஊழியர்களுக்கு இம்மாத சம்பளத்துடன் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. ஆனால் ஈராண்டுகளுக்கு மேலாக சம்பள உயர்வு கிடைக்குமென வழிமீது விழி வைத்து காத்திருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் உயர்வு தொடர்பில் இன்னும் நிச்சயமற்ற நிலையே நீடிக்கின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவரும் நிலையில் தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கேற்ப குறைந்தபட்ச நாட் சம்பளமாக 1 700 ரூபா அவசியம் என்பதை இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார். இந்த கோரிக்கை நியாயமானது என்பதற்கான காரணிகளையும் அவர் முன்வைத்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை நாட்கூலி என்ற வரையறையில் இருந்து வெளியேற்றி அவர்கள் சொந்தக்காலில் நிற்பதற்கு ஏதுவான வகையில் நிலையானதொரு பொறிமுறையை உருவாக்கிக்கொள்வதே அமைச்சர் ஜீவனின் இலக்காகும். அந்த இலக்கை நோக்கி பயணிப்பதற்கான நகர்வுகளையே அவர் முன்னெடுத்துவருகின்றார்.

இந்த இலக்கை ஒரே இரவில் அடைந்துவிடமுடியாது. இலக்கை அடையும்வரை சம்பள உயர்வு அவசியம். அதனை பெற்றுக்கொடுப்பதற்கான தீவிர முயற்சியில் அமைச்சர் தற்போது ஈடுபட்டு வருகின்றார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்க பிரதிநிதிகள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது சம்பள உயர்வு தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவு குறித்து ஆராயப்பட்டுள்ளது. இந்த யோசனையானது கம்பனிகளுக்கு சார்பான வகையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையே சம்பள உயர்வு, அடிப்படைச் சம்பள அதிகரிப்பு இல்லாமல் கொடுப்பனவு ஊடாக சம்பள உயர்வு, பறிக்கப்படும் கொழுந்தின் அளவு என முதலாளித்துவ நோக்கில் மட்டுமே பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக 33 சதவீத சம்பள உயர்வுக்கான விருப்பமே பெருந்தோட்ட கம்பனிகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கம்பனிகளின் இந்த யோசனையை அமைச்சரும், இ.தொ.காவின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான் அடியோடு நிராகரித்துவிட்டார். 1700 ரூபாவுக்கு குறைவான சம்பளத்தை ஏற்க முடியாது எனவும் அறிவித்துள்ளார். பெருந்தோட்ட கம்பனிகள் இதற்கு இணங்காத பட்சத்தில் சம்பள நிர்ணய சபையை கூட்டி தீர்வை பெற்றுத் தருமாறு தொழில் அமைச்சரிடம், ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு தொழில் அமைச்சர் தரப்பில் சாதகமான பதில் வழங்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் நல்ல முடிவு கிடைக்கும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் எதிர்பார்க்கின்றார். சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தொடர் அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றார்.

1 700 ரூபா என்ற யோசனைக்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. இதர பிரதான தொழிற்சங்கங்களும் ஆதரவைத் தெரிவித்துள்ளன.

எனினும், சம்பளப் பிரச்சினை இழுபட வேண்டும் என்ற குறுகிய நோக்கில் மேலும் சில தொழிற்சங்கங்கள் 2,500, 3000 ரூபா என்றெல்லாம் யோசனைகளை முன்வைத்து வருகின்றன.

தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் அரசியலை புகுத்த முற்படக்கூடாது. அவர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஒன்றுபட வேண்டும். இதற்கான அழைப்பை அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த முறையும் இழுத்தடிப்புகளுக்கு மத்தியிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கப்பெற்றது.

பெருந்தோட்டக் கம்பனிகள் இழுத்தடிப்பு செய்ததால் சம்பள நிர்ணயசபை ஊடாக தீர்வு வழங்கப்பட்டது. இம்முறையும் கூட்டு ஒப்பந்தத்துக்கான சாத்தியம் இல்லை என்பதால் சம்பள நிர்ணய சபை ஊடாகவே தீர்வுக்கான சாத்தியம் உள்ளது என தெரியவருகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை, வீட்டுரிமை என்பவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு கச்சிதமான முறையில் அரசியல் இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்துவரும் ஜீவன் தொண்டமான், சம்பள பிரச்சினைக்கும் நிலையானதொரு தீர்வை பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கை தொழிலாளர்கள் மத்தியில் உள்ளது.



க.கிஷாந்தன்
ஊடக செயலாளர்
நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

# அமெரிக்க – இஸ்ரேல் முறுகலும் ஐ.நா.வின் போர்நிறுத்த தீர்மானமும்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் மார்ச் 23ஆம் திகதியன்று குரோக்கஸ் நகர அரங்கில் மேற்கொள்ளப்பட்ட ஆயுததாரிகளின் தாக்குதல் பாரிய துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதலுக்கு ஐ.எஸ் பொறுப்பேற்ற போதும் ரஷ்ய ஜனாதிபதியோ, ரஷ்ய மக்களோ அதனை ஏற்கத் தயாராக இல்லை என்றே தெரிகிறது. தாக்குதல்தாரிகள் உக்ரைனுக்குள் நுழைய முயன்றதும் அமெரிக்கா மட்டுமல்ல மேற்குலகம் தாக்குதலைக் கண்டுகொள்ளாமையும் அதன் தாற்பரியத்தை உணர்த்துகிறது.

இத்தாக்குதலுக்கு அமெரிக்கா காரணமெனவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. ஐ.எஸ் என்ற கோணத்தில் அதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. காரணம் இதேபோன்ற தாக்குதல்களை பயங்கரவாதம் எனக் கூறும் மேற்குலகம் இதனை பெரிதாக கவனத்தில் கொள்ளவில்லை. விளாடிமிர் புட்டின் ஐந்தாவது தடவையாக ஜனாதிபதியானதை ஏற்றுக் கொள்ள முடியாத மேற்குலகம் அதனை அதிகம் விமர்சனம் செய்திருந்தது. அதனால் தாக்குதலுக்கும் மேற்குலகத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்பதை சாதாரணமாக இனங்காண முடியும். உலகம் ஒரே பொருளாதாரத்தில் பயணித்தாலும் இரு அரசியல் போக்குக்குள் இயங்குகின்றன என்பதை புரிந்து கொள்வதன் வாயிலாக அதனை விளங்கிக் கொள்ள முடியும். அத்தகைய ஒரு வடிவத்திற்குள் இஸ்ரேல் – அமெரிக்க முறுகலை புரிந்து கொள்ள இக்கட்டுரை முயலுகிறது.

காஸாவில் உடனடிப் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்பு சபை தீர்மானம் (26.03.2024) நிறைவேற்றியுள்ளது. அதில் அமெரிக்கா தனது வீட்டோவைப் பாவிக்காமை தொடர்பில் இஸ்ரேல் அதிக அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. இத்தீர்மானத்தின் படி பணயக்கைதிகள் அனைவரும் எந்த நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா மட்டுமே வாக்களிக்காது தவிர்த்துக் கொண்டது. ஏனைய நிரந்தர, தற்காலிக நாடுகள் வாக்களித்துள்ளன.

இத்தகைய நடவடிக்கை பற்றி அமெரிக்காவின் ஐ.நா. தூதுவர் லிண்டா தோமஸ் கிரீன்பீல்டா குறிப்பிடும் போது ரஷ்யாவும் சீனாவும் ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் இஸ்ரேலுக்குள் நடத்திய தாக்குதலுக்கு கண்டனத்தை தெரிவிக்காதவையாக இன்னும் உள்ளன. இராஜதந்திர ரீதியில் நீடித்த அமைதியை முன்னெடுப்பதில் ரஷ்யாவும் சீனாவும் உண்மையில் ஆர்வம் காட்டவில்லை. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய தீர்மானம் ஹமாஸ் அமைப்பை கண்டனத்திற்கு உட்படுத்தாதது குறித்து அமெரிக்கா ஏமாற்றம் அடைவதாக குறிப்பிட்டார். தீர்மானத்திலுள்ள அனைத்தையும் அமெரிக்கா ஏற்கவில்லை. அந்தக் காரணத்தினாலேயே அமெரிக்காவால் வாக்களிக்க முடியவில்லை. ஆனால் இந்த கட்டுப்பாடற்ற தீர்மானத்தில் சில முக்கிய நோக்கங்களை முழுமையாக ஆதரிக்கிறோம். அனைத்து பணயக் கைதிகளின் விடுதலையோடு போர் நிறுத்தம் வர வேண்டும் என்பது முக்கியம் என அமெரிக்கா நம்புகிறது எனக்குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்தத் தீர்மானத்தை வீட்டோ செய்ய அமெரிக்கா தவறியிருப்பது அந்த நாட்டின் தெளிவான பின்வாங்கலாகும் என்றார். அது மட்டுமன்றி கடந்தவாரம் இஸ்ரேலியப் பிரதிநிதி வெள்ளை மாளிகைக்கு மேற்கொள்ள இருந்த விஜயம் அதிகாரபூர்வமாக ரத்து செய்யப்படுவதாக நெதன்யாகு தெரிவித்துள்ளார். இதனை பைடன் நிர்வாகம் எதிர்ப்பதாகவும் அமெரிக்கா ஏமாற்றமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை நான்கு தடவைகள் போர் நிறுத்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போதும் அனைத்தும் கைவிடப்பட்டன. தற்போது மட்டுமே அத்தகைய தீர்மானத்தை அமெரிக்கா வீட்டோ செய்யாததனால் நிறைவேறியுள்ளது. ஆனால் போருக்கு ஆதரவும் தூண்டலும் வழங்கியதுடன் ஆயுத தளபாட விநியோகத்தை அதிகளவில் போருக்காக வழங்கிய அமெரிக்கா ஏன் திடீரென பின்வாங்குகிறது. அப்படியாயின் உண்மையாகவே போர்நிறுத்தத்தை அமெரிக்கா விரும்புகிறதா? அப்படியாயின் ஏன் என்ற கோள்வி பிரதானமானது. அதற்கான புரிதல் அவசியமானது.




முதலாவது, தற்போது முன்வைக்கப்பட்ட போர்நிறுத்தத் தீர்மானத்தை அமெரிக்கா முழுமையாக ஆதரிக்கவில்லை என்பதை லிண்டா தோமஸ் குறிப்பிட்டதுடன் இதனை ஒர் இராஜதந்திர நகர்வாகவே கருதுவதாக வெளிப்படுத்தியுள்ளார். போர்க்களத்தில் வெற்றி கொள்ள முடியாததை பேச்சுவார்த்தை மேசையில் அமைதியாக வெற்றி கொள்வதே அமெரிக்காவின் இலக்காகத் தெரிகிறது. போர் பெரும்பாலும் இராஜதந்திரத்தின் முடிவாகக் கருதப்படும். அதேவேளை இராஜதந்திர முயற்சிகள் மோதல்களின் போக்கையும் சமாதான விதிமுறைகளையும் வடிவமைக்க தொடங்குகின்றன. போரைத் தடுப்பதற்கும் மோதல்களை தீர்ப்பதற்கும் நாடுகளுக்கிடையே அமைதியான உறவுகளை ஏற்படுத்துவதற்கும் இராஜதந்திரம் சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. போரைத் தடுக்கும் அல்லது தூண்டலை ஏற்படுத்தும் கூட்டணிகளை இராஜதந்திரம் தயார் செய்கிறது. இது எதிரணியின் கூட்டணியை தகர்க்கிறது. மற்றும் விரோத சக்திகளின் செயலற்ற தன்மைகளை நிலைநிறுத்துகிறது. இந்த வகைக்குள்ளேயே போர் இராஜதந்திரம் காணப்படுகிறது. இதனையே அமெரிக்கா நகர்த்த முயலுகிறதாகத் தெரிகிறது.

இரண்டாவது, அமெரிக்காவின் ஐ.நா. தூதுவர் பைடன் நிர்வாகம் என்றே அதிக இடங்களில் விளிக்க முயலுகிறார். அப்படியாயின் பைடனின் 2024 தேர்தல் தொடர்பில் இஸ்ரேல், ஹமாஸ் போர் நிறுத்தம் உரையாடப்பட வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. அமெரிக்க மக்கள் அதிக தடவை ஜனாதிபதி பைடனிடம் ஹமாஸ் – இஸ்ரேல் போரை முடிவுக்கு கொண்டுவருமாறு கோரிவருகின்றனர். பைடனின் தேர்தல் போட்டியாளரான டொலால் ட்ரம்ப் இஸ்ரேல் – ஹமாஸ் போர் பற்றி அதிக குழப்பமான கருத்துக்களை முன்வைத்து வருகிறார். உக்ரை – ரஷ்யப் போர் அமெரிக்காவுக்கு பாரிய நிதியிழப்பினை தந்துள்ளதாகவே குடியரசுக் கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றனர். அப்படியான நிலையில் ஜனநாயகக் கட்சியின் இஸ்ரேல் – ஹமாஸ் போர்ச் சூழலை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. ஜனநாயகக் கட்சியினர் ஹமாஸ் – இஸ்ரேல் போரை தற்காலிகமாக மாற்றியமைக்க முடியாத நிலையில் தேர்தல் வெற்றியை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய நிலை ஏற்படும் எனக் கருதுகின்றனர்.

மூன்றாவது, ஹமாஸ் – இஸ்ரேல் போர் உலகளாவிய ரீதியில் அமெரிக்கா மீதும் மேற்குலகத்தின் மீதும் அதிக அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போரை நகர்த்துவதில் மேற்குலகமே காரணம் எனவும் மேற்குலகத்தால் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட வரைபுகளும் நியாயாதி செய்முறைகளும் தோல்வி கண்டு விட்டதாகவும் விமர்சனங்கள் உண்டு. நாடுகளும் நாடுகளின் தலைவர்களும் அத்தகைய விமர்சனத்தை அதிகம் முதன்மைப்படுத்துகிறார்கள். மேற்குலகத்தின் மனித உரிமைகளும், மனிதாபிமானச் சட்டவரைபுகளும், சிறுவர் மற்றும் பெண்கள் உரிமைகளும் காஸாவில் காணாமல் செய்யப்படுவதில் மேற்குலகத்திற்கே அதிக பங்குள்ளதாக கணிப்பிடப்படுகிறது. அதனால் அத்தகைய மனிதாபிமான செயல்களை இஸ்ரேல் தடுப்பதாகக் கூறிக் கொள்வதன் வாயிலாக அத்தகைய விமர்சனத்தை மேற்கு தவிர்க்க முயலுகிறது. ஆயுத தளபாடங்களை இஸ்ரேலுக்கு வழங்கிய அதே வழிமுறையூடாகவே மேற்கு, பாலஸ்தீன மக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்க முயற்சித்தது. இத்தகைய இரட்டை நிலைப்பாட்டை உலகம் கண்டு கொள்வதில் அதிக விளிப்படைந்திருப்பதை திசைதிருப்புவதற்கே போர் நிறுத்தத் தீர்மானத்தை மேற்கு கையாண்டது. அதனையே அது இராஜதந்திரம் எனும் ஒற்றைவரியில் குறிப்பிட்டுள்ளது.

நான்காவது, இத்தகைய நகர்வினால் அமெரிக்கா பணயக் கைதிகளை மீட்க முயற்சிக்கிறது. அதனை ஒரு தேர்தல் பிரசாரமாக மாற்றும் உத்தியும் காணப்படுகிறது. காரணம் ஹமாஸ் கைது செய்த அமெரிக்க பிரஜைகளை அமெரிக்கா மீட்க முயற்சிக்கவில்லை என்ற விமர்சனம் பைடன் நிர்வாகத்தின் மீது உள்ளது. ஹமாஸ் அமைப்பும் அவர்களை விடுவிப்பதில் தெளிவான அரசியல் போக்கினைக் கொண்டதாக உள்ளது. யூதர்கள் மட்டுமல்ல அமெரிக்கர்களும் ஹமாஸின் இலக்கில் முக்கியமானவர்களாக உள்ளனர். அதனை ஒரு தேர்தல் பிரசாரமாக எதிரணி வேட்பாளர் கொண்டு செல்ல வாய்ப்பு அதிகமுள்ளது. அதனால் அத்தகைய நகர்வை சாத்தியப்படுத்தும் உத்தியும் அமெரிக்கத் தரப்பிடம் உள்ளதாகவே தெரிகிறது.

ஐந்தாவது, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுடன் இஸ்ரேலிய செல்வந்தர்களுக்கு அதிகமான தொடர்பு உண்டு. பைடன் நிர்வாகமா அல்லது ட்ரம்ப் நிர்வாகமா என்பதை தீர்மானிப்பதில் யூத செல்வந்தர்களுக்கு பங்குள்ளது. அதனால் இத்தகைய நகர்வுகளுக்கு பின்னால் அமெரிக்காவுடன் அத்தகைய செல்வந்தர்களது பங்கு தவிர்க்க முடியாததாகவே அமைந்திருக்கும். அதனால் இது அமெரிக்க – இஸ்ரேலிய கூட்டின் பிரதிபலிப்பாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இஸ்ரேலின் சர்வதேச அரசியல், அமெரிக்கா என்ற ஒற்றை நாட்டின் உறவிலிருந்தே தொடங்குகிறது. அப்படியாயின் அதனை இஸ்ரேல் இலகுவில் இழந்துவிடாது என்பது முக்கியமானதாகும். எப்போதும் உலக அரசியலின் போர்களும் சமாதான நகர்வுகளும் கூட்டுக்களின் பலத்திலேயே தங்கியுள்ளது. அத்தகைய கூட்டுப்பலம் அமெரிக்காவும் அதன் வழியாக எழுந்த நேட்டோவும் ஐரோப்பாவுமே இஸ்ரேலின் பலமாகும். எதிரணியான ரஷ்யா, சீனாவில் ஒருபோதும் இஸ்ரேல் இயங்க முடியாது.

எனவே அமெரிக்கா – இஸ்ரேல் முறுகலோ மோதலோ நிரந்தரமான வடிவம் கிடையாது. இது தற்காலிக ஒத்துழைப்பு இராஜதந்திரத்தின் வடிவமாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இரு நாடுகளும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. அதனை தகர்ப்பதென்பது இஸ்ரேலுக்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கும் அபாயகரமானது.

# பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் முன்னெடுக்கும் திட்டங்கள் எவை?

## விளக்குகிறார் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் 31ஆவது பொதுக்கூட்டம் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தலைமையில் 29.03.2024 அன்று பத்தரமுல்லையில் இடம் பெற்றது.

அனைத்து பெருந்தோட்ட கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர்களும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளும் சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் நிதியத்தின் பணிப்பாளர் சபையினரும் இக் கூட்டத்தில் சமூகமளித்திருந்தனர். இதில் கடந்த வருடத்துக்கான பொதுக் கூட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் கணக்காளர் அறிக்கையும் வரவுசெலவு அறிக்கையும் ஏக மனதாக உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப் பொதுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தூர நோக்கான திட்டங்களுக்கு அமைவாக பெருந்தோட்டத்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். கடந்த காலங்களில் நலன்புரி விடயங்களில் மாத்திரம் அளப்பரிய சேவையாற்றிய பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம், தற்போது எமது மக்களின் உரிமை சார்ந்த மற்றும் அடையாளத்தைப் பேணக்கூடிய மற்றும் அவர்களை சமூக ரீதியில் பொருளாதார ரீதியில் வலுப்படுத்தக்கூடிய கொள்கைகளை அமைக்கும் திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறோம்.

அந்த வகையில், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் கடந்த 1992ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை 3546 குடிநீர்த் திட்டங்கள், 135,015 சுகாதாரத் திட்டங்கள், 1400 கிலோமீட்டர் நீளமான வீதி வசதிகள். லயன் அறைகளை சீர் செய்தல் திட்டத்தினூடாக 116,009 திட்டங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களாக 1419 நிலையங்கள், பல்வேறு காலப்பகுதிகளில் 65469 வீடமைப்பு திட்டங்கள் உள்ளடங்கலாக. 18,300 மில்லியனுக்கும் அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

அதுமாத்திரமன்றி கடந்த அரசாங்கத்தினால் வெவ்வேறு கட்டங்களில் கைவிடப்பட்ட வீட்டுத் திட்டங்கள் அனைத்தையுமே அமைச்சர் ஜீவன் தொண்டமான் அதிகளவான நிதி ஒதுக்கீட்டுடன் பூரணப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளார் அந்த வகையில் 600 க்கும் அதிகமான கைவிடப்பட்ட வீடுகளை நாம் பூர்த்தி செய்து தற்போது மக்கள் பாவனைக்கு வழங்கி வருகிறோம். 2021ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் ஏறக்குறைய 2000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நான் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக பொறுப்பேற்ற பின்னர் வீட்டுத் திட்டங்கள், உட்




கட்டமைப்பு வசதிகள். கூரைகளை சீர்செய்தல். சுகாதாரம், பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல் மற்றும் போசாக்கு மட்டங்களை அதிகரித்தல், சிறுவர் அபிவிருத்தி போன்ற பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தேன்.

465 மில்லியன் ரூபா செலவில் 297 வீடுகளையும் கட்டியுள்ளோம். 12 வீடமைப்புத் திட்டங்களுக்கான குடிநீர்த் திட்டங்களும் 17 மின் இணைப்புத் திட்டங்களும் எமது அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளன. பெருந்தோட்ட கம்பனிகளின் பங்களிப்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் நிதிப் பங்களிப்புடன் பொதுச் சுகாதார வசதி, குடிநீர்த் திட்டங்கள், நீர்வளப் பாதுகாப்பு, மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டங்களையும் நாம் மேற்கொண்டோம். அதுமாத்திரமன்றி 2760 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் இணைப்புகளை வழங்கியுள்ளதுடன் மேலும் 356 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 09 திட்டங்களை கடந்த ஆண்டில் ஆரம்பித்து இவ்வாண்டில் பூரணப்படுத்தவும் உள்ளோம். மேலும், நுவரெலியாவில் மக்கள் இலகுவாக குடிநீரை பரிசோதனை செய்யக்கூடிய ஆய்வகத்தையும் நாம் நிறுவியுள்ளோம். அதுமாத்திரமன்றி சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியோடு நுவரெலியா, கண்டி, பதுளை மாவட்டங்களில் 31.4 மில்லியன் ரூபா பெறுமதியிலான திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமன்றி 2023ஆம் ஆண்டு நாம் சுகாதாரம் மற்றும் போசாக்கு மட்டத்தை முன்னிலைப்படுத்தி பல முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண பொருளாதார சூழ்நிலை காரணமாக சுகாதாரத் துறை மற்றும் மக்களின் போசாக்கு மட்டம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது என்பது நாம் அறிந்ததே. எனவே, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலில். சுகாதாரத்துறையை மேம்படுத்த சுகாதார அமைச்சுடன் இணைந்து 307பரிசோதனைகளை நாம் நான் முன்னெடுத்துள்ளதுடன் இலவச கண்சிகிச்சை, பெண்களுக்கான விசேட பரிசோதனைகள் மற்றும் கிளினிக்குகள், காசநோய் மற்றும் வாய்ச் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான விசேட பரிசோதனைகள் மற்றும் மருத்துவ உதவிகளை போன்றனவும் குறிப்பிடத்தக்கவை.

அதுமாத்திரமன்றி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் சுகாதார பிரிவின் தகவல்களுக்கு அமைவாக 2022ஆம் ஆண்டு 7120 குழந்தை பிறப்புகள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 99 வீதமானவை சுகாதார நிலையங்களிலேயே நிகழ்ந்துள்ளன. 7088 சுகப்பிரசவங்களும், 978 நிறை குறைந்த பிரசவங்களுமாக இவை பதிவு செய்யப்பட்டுள்ளன. இத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 2023ஆம் ஆண்டு கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான விசேட வேலைத்திட்டங்களை நாம் சுகாதார அமைச்சு மற்றும் குழந்தைகள் மற்றும் மகளிர் பாதுகாப்பு அமைச்சு, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு தொண்டு நிறுவனங்களின் உதவியோடு நாம் மேற்கொண்டிருந்தோம்.

அதுமாத்திரமன்றி 931 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் சிறுவர்களின் வளர்ச்சியைக் கண்காணிப்பதற்கான தரவு அறிக்கையும், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறைகளையும் நாம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலில் செய்து வருகிறோம். அதுமாத்திரமன்றி ஜனாதிபதி செயலகத்தின் விசேட அலகின் ஊடாக குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டும் நிலையங்களை உருவாக்குவதிலும் நாம் பங்களிப்புச் செய்து வருகிறோம். அமைச்சரின் வழிகாட்டலில் தற்போது 50 ஓய்வறைகளை தேயிலை தோட்டப் பகுதியில் நாம் அமைத்துள்ளோம். இதன் மூலமாக அவர்களுடைய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதை நாம் உறுதிப்படுத்தியிருக்கிறோம்.

மேலும், உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் வேலை நேரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்ற வேலைத்திட்டத்தின் ஊடாக முதலுதவி மற்றும் அவர்களுக்கு தேவையான வேலை நேரப் பாதுகாப்பு தொடர்பான விசேட வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அதை பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் முன்கொண்டு செல்ல நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, உலக வங்கியின் நிதி உதவியுடன் சிறுவர் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி 2023ஆம் ஆண்டு 19 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை புதிதாக நிறுவி, அமைச்சர் தலைமையில் மக்களின் பாவனைக்காக கையளித்தோம். 347 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தை நாம் வெற்றிகரமாக நிறைவு செய்தோம்.

அதுமாத்திரமன்றி விசேட வேலைத்திட்டமாக நாளொன்றுக்கு 21000க்கும் அதிகமான குழந்தைகளுக்கு, இலவச காலை நேர சத்துணவு திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். 364 தோட்டங்களில் 571 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களினூடாக சிறுவர்களுக்கு நாம் தொடர்ந்து உணவு வழங்கினோம். 40 மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் செய்யப்பட்ட இவ் வேலைத்திட்டம், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, மற்றும் உலக வங்கியின் நிதி ஒதுக்கீடோடு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பிறரில் தங்கி வாழாது சுயமரியாதையோடு நவீன தொழிநுட்ப உதவியோடு தற்சார்பு பொருளாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் தோட்ட வீடமைப்பு கூட்டுறவுகளினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனை 419 கூட்டுறவு சங்கங்களினூடாக முன்னெடுத்து வருகிறோம். இளைஞர்களுக்கான பொருளாதார மற்றும், கல்வி அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி மற்றும் வீடுகளில் பொருளாதார முகாமைத்துவதை மேம்படுத்துதல் மற்றும் கணக்கு வழக்குகளை பேணுதல் வீட்டில் வரவு செலவு திட்டங்களை பேணல் போன்ற அத்தியாவசிய பொருளாதார செயல்பாடுகளை நாம் வீடுதோறும் கொண்டு சேர்த்து வருகிறோம். அதுமாத்திரமன்றி. மக்களின் பாதுகாப்புக்காக அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுடன். ஶ்ரீலங்கா காப்புறுதி கூட்டுத்தாபனத்தோடு கைகோர்த்து ஜீவன் சக்தி என்ற காப்பீட்டு திட்டத்தையும் அறிமுகப்படுத்தினோம். அதோடு தனியார் நிறுவனங்களோடும் கைகோர்த்து சத்தூட்டப்பட்ட கோதுமை மாவினையும் அறிமுகம் செய்தோம்.

தற்போது, இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 10,000 பாரத் லங்கா வீடுகளை அமைக்க 10 பேர்சேஸ் காணியை உறுதி செய்தோம். என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முக்கிய அம்சமாக. பெருந்தோட்ட பகுதிகளில் இருந்து மருத்துவத் துறை, சட்டத் துறை, பொறியியல் துறை, வணிகத்துறை மற்றும் கலைத் துறைகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்வான மாணவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு அதி சக்தி புலமை பரிசில் திட்டத்தின் கீழ் புலமை பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும். பிராந்திய அளவில். சிறப்பாக. செயற்பட்ட பிராந்திய பணிப்பாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டதுடன். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த கணக்கறிக்கைக்கான டாக்ஸ் விருதும் வழங்கப்பட்டது.

# வேட்பாளர் பட்டியல்களில் 25 சதவீதம் பெண்களுக்கு

## ஒதுக்கீடு செய்யுமா மலையகக் கட்சிகள்?





முன்னொரு காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு எனச் சிந்தித்த நமது முன்னோர்கள் தமது பெண் பிள்ளைகளுக்கு உரிய கல்வி வாய்ப்பை வழங்காதிருந்தார்கள். பெண் பிள்ளைகளை அடக்கி ஒடுக்கி வீடுகளில் பூட்டி வைத்த காலம் அன்று இருந்தது.

ஆனால், இன்டர்நெட் யுகம் என வர்ணிக்கப்படும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் ஒருவர், தான் நினைத்த மாத்திரமே உலகின் எந்த மூலையில் வாழ்பவருடனும் தொடர்பு கொள்ளக்கூடிய விதத்தில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ளது.

இன்று பெண்கள் தாம் எந்த விதத்திலும் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்து வருகின்றனர். பெண்களில் ஏற்பட்டு வரும் இந்த மாற்றம் மனமகிழ்வைத் தருவதோடு அவர்களைப் பற்றிப் பெருமை கொள்ளச் செய்துள்ளது என்று குறிப்பிடின் அது தவறான கருத்தாக இருக்க முடியாது. நமது தாய்த் திருநாடான இலங்கை, உலகிலேயே முதல் பெண் பிரதமராக ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கவையும், பெண் ஜனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்கவையும் உருவாக்கி அவர்களை உலகிற்கு அறிமுகம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நமது நாட்டு அரசியலில், தேசிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியிலும், ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலும், தேசிய மக்கள் சக்தியிலும், ஐக்கிய மக்கள் சந்தியிலும் கடந்த பல வருடங்களாக பெண்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களில் தற்போது பவித்ரா வன்னியாரச்சி அமைச்சராகவும் டயனா கமகே இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகிக்கிறார்கள்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக தற்போதைய பாராளுமன்றத்தில் இந்த நாட்டில் செயல்படும் தமிழ், முஸ்லிம் கட்சிகளில் இருந்து எந்த ஒரு பெண்ணும் பாராளுமன்ற அங்கத்தவராக இல்லை.

முன்னைய காலங்களில் தமிழரசுக் கட்சியின் சார்பாக பத்மினி சிதம்பரநாதன் வட மாகாணத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புலேந்திரனின் மறைவின் பின்பு, ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினராக புலேந்திரனின் மனைவி இராஜமனோகரி புலேந்திரன் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கல்வி இராஜாங்க அமைச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, சிறந்த முறையில் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், செயற்பட்டு தனக்கென தனியிடத்தை பெற்றார்.

அதன் பின்பு யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மகேஸ்வரனின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாண மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சராகவும் அதன் பின்பு கல்வி இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார்.

முஸ்லிம்கள் சார்பில் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் அகால மரணத்தின் பின்பு அவரது துணைவியாரான பேரியல் அஷ்ரப் அமைச்சராக பதவி வகித்தார். அவர் தேர்தலில் தோல்வியைத் தழுவ ஒரு வெளிநாட்டின் இலங்கை தூதுவராக பணியாற்றிய பின்பு அரசியலிலிருந்து ஒய்வு பெற்றார். அதன் பின்பு எந்த ஒரு முஸ்லிம் பெண்ணும் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்ததில்லை. மக்கள் விடுதலை முன்னணில் முஸ்லிம் பெண்ணான அஞ்சான் உம்மா ஒரு சில வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தார்.

எந்த ஒரு தேர்தலிலும் ஒவ்வொரு கட்சியும் அதன் வேட்பாளர் பட்டியலில் இருபத்தைந்து சதவீதத்தை பெண்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று காலத்திற்கு காலம் வலியுறுத்தப்பட்டு வருவது வழக்கமாக உள்ளது. ஆனால் எந்த ஒரு கட்சியும் அதை பின்பற்றியதாக தெரியவில்லை.

உண்மையை உள்ளது உள்ளபடி குறிப்பிடின் இந்த நாட்டின் குடிசனத் தொகையில் ஐம்பத்து இரண்டு சதவீதத்தினர் பெண்கள். கட்சி அங்கத்துவத்தைப் பெறும் எந்த ஒருவரும் அந்தக் கட்சியின் கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டியவர் என்பதனால். இந்த நாட்டில் ஒவ்வொரு கட்சியும் பெண்களுக்கென அதன் வேட்பாளர் பட்டியலில் இருபத்தைந்து சதவீதத்தை ஒதுக்குவதனால் எந்த ஒரு கட்சிக்கும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை.

இந்த நாட்டில் இந்திய வம்சாவளி தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக கட்சிகளில் இலங்கை தொழிலாளர்கள் காங்கிரஸின் மேல் மாகாண சபை உறுப்பினராக வேலம்மா செல்லச்சாமியும், அனுஷியா சிவகுமார் மத்திய மாகாண சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அதன் பின்பு சிறிது காலம் அவர் மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சராக பதவி வகித்தார். தொழிலாளர் தேசிய சங்கத்தின் மத்திய மாகாண சபை உறுப்பினராக சரஸ்வதி சிவகுரு தெரிவு செய்யப்பட்டு மத்திய மாகாண சபை கலைக்கப்படும் வரை பதவி வகித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

இவதன்



# கொங்கோடியா தோட்ட மாணவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்படுமா?

## காலம் தாழ்த்தாது முன்வரப்போவது யார்?

மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களின் பரிணாம வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் அது கல்வியில் தான் தங்கியுள்ளது.

இது மலையக தோட்ட தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தி வரும் அரசியல் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் அடிக்கடி வீராவேசத்துடன் உச்சரிக்கும் வசனமாகும். இவர்களுக்கு அப்பால் இந்த வசனத்தை தோட்டத் தொழிலாளர்களின் சமூக மாற்றத்திற்காக கல்வியை ஊக்குவிக்க முன்வரும் அரச மற்றும் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களும் அடிக்கடி இவ்வசனத்தைக் கூறும்.



அதேநேரத்தில் இந்த நாட்டில் பாடசாலைக் கல்வியை ஊக்குவிக்க திட்டங்களை வகுக்கும் அரசாங்கம் மற்றும் கல்வி அமைச்சு என்பன ஆரம்ப கல்வியை கற்கும் மாணவர்கள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என தொடர்ச்சியாக கடந்த காலங்களில் வலியுறுத்தியதோடு நாடளாவிய ரீதியில் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக நிதி உதவிகளும் வழங்கப்பட்டு வந்தமையை மறந்து விடக் கூடாது.

இருப்பினும் இவ்வாறு ஆரம்பக் கல்வி பாடசாலைகளின் கல்வி நடவடிக்கை மற்றும் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளில் அக்கறை காட்டிய அரசாங்கம், கல்வி அமைச்சு, மாகாண மற்றும் மாவட்ட கல்வித் திணைக்களங்கள் என்பன தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் அவ்வப்போது அக்கறை காட்டினாலும் மத்திய மாகாணத்தில் தோட்டப்பகுதிகளில் காணப்படும் ஆரம்ப பிரிவு பாடசாலைகளின் அபிவிருத்தியில் முழுமையாக அக்கறை காட்டப்படுகிறதா என்ற மறைமுக கேள்வி தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றது.



அந்த வகையில் மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில், நுவரெலியா வலய கல்வி திணைக்களத்துக்கு உட்பட்ட கந்தப்பளை பிரதேசத்தில் இயங்கும் நு/ கொங்கோடியா தோட்ட பாடசாலை வித்தியாலயமாக தரம் பெற்று கந்தப்பளை நகரில் இருந்து சுமார் நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கொங்கோடியா மத்திய பிரிவில் இயங்கி வந்தது.

இதில் கொங்கோடியா தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகள் நூற்றுக்கு அதிகமானவர்கள் கடந்த காலங்களில் கல்வி பயின்று வந்தனர். இப்போது இந்த வித்தியாலயத்தில் கொங்கோடியா மத்திய பிரிவு மற்றும் கொங்கோடியா கீழ்ப் பிரிவு தோட்ட மக்களின் பிள்ளைகள் 60 பேர் மாத்திரமே கல்வி கற்று வருகின்றனர்.

இந்த வித்தியாலயத்தின் முறையான கல்வி கற்றல் நடவடிக்கை 1922ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டதாக பாடசாலை தகவல் பதிவேட்டில் காணப்படுகின்ற போதிலும் இவ் வித்தியாலயத்தின் கட்டடம் நூற்று ஐம்பது வருட காலம் பழமை வாய்ந்தது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஆறுமுகம் ரமேஸ்



# இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பும் உயிர்பெற்ற சித்தாந்தங்களும்

இன்று உயிர்ப்புப் பெருவிழா. மாபெரும் வெற்றியின் விழா. நாம் எல்லோரும் இவ் விழாவை அகக் களிப்போடு கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். மூன்று நாட்களுக்கு முன்பு உயிரற்ற இயேசுவின் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது. அதன் பின் மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசு உயிரோடு மீண்டு எழுந்து வருகிறார்.

உயிர்ப்பு என்பதை மீண்டு எழுதல் என்றும் நாம் பொருள் கொள்ளலாம். கல்லறையில் தனியாக அடக்கம் செய்யப்பட்ட இயேசு மீண்டு எழும்போது தனியாக அவர் எழவில்லை. மாறாக பல நூற்றாண்டுகளாக புதைக்கப்பட்டிருந்த மனித நேயம், இறைவனைப் பற்றிய தவறான புரிதல்கள், இறை சட்டங்கள் பற்றிய தவறான சிந்தனைகள் அனைத்தையும் உடைத்து, தன்னோடு மீண்டு எழ வைக்கிறார்.

புதியதொரு சமுதாயத்தை தன்னோடு இயேசு மீட்டுருவாக்கிக் கொண்டு வருகிறார். இயேசுவினுடைய உயிர்ப்பின் ஊடாக புதியதொரு சமுதாயமும் மேலே எழுந்து வருகிறது. இயேசு தன்னோடு உயிர்ப்பித்த, மீட்டுருவாக்கிய அந்த புதிய சமுதாயத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், யூதர்களுடைய வரலாற்றுப் பின்னணியையும் இயேசுவினுடைய சமகாலத்து நிகழ்வுகளையும் நாம் சற்று ஆய்வு செய்ய வேண்டும்.

இயேசுவினுடைய காலத்தில், அந்தச் சமுதாயத்தில் இரண்டு பெரும் பிரிவுகள் இருந்தன. கற்றுத் தெரிந்தவர்கள், பிறப்பால் தங்களை உயர்வாக கருதிக் கொண்டவர்கள், பணம் படைத்தவர்கள். இவர்கள் ஒரு குழுவாகவும், சாதாரண ஏழைகள் இன்னொரு குழுவாகவும் இருந்தார்கள். இந்த ஏழைகள் தங்களுக்காக இறைவனால் படைக்கப்பட்ட பொருட்கள் என்று உயர்குடிமக்கள் கருதினார்கள்.

எந்த ஒரு சூழலிலும் அவர்களை சக மனிதர்களாக, கடவுளால் படைக்கப்பட்டவர்களாக ஏற்றுக்கொள்ள, உயர்குடி மக்களால் முடியவில்லை. இயேசுவின் காலத்தில் ஏழைகள் மூன்று வகைகளாக இருந்தார்கள். முதல் வகையினர் ஆதரவற்ற கைம்பெண்கள், தொழுநோயாளர்கள், ஊனமுற்றோர், பிச்சையெடுப்போர். இவர்கள் பட்டினிக்கும், பாதுகாப்பின்மைக்கும் ஆளாகி பல்வேறு விதங்களிலே துன்புற்றுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது வகையான ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள். தரம் குறைந்தவர்களாக கருதப்பட்டவர்கள். தாழ்வானது என கருதப்பட்ட தொழில்களை செய்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஏழைகளாக இருந்தார்கள். இவர்களது வறுமை மிக மோசமானதுதான் அதைவிட மோசமானது சக மனிதர்களால் இவர்களுக்கு ஏற்பட்ட நிராகரிப்பு. இவர்கள் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

மூன்றாவது வகையான ஏழைகள், எளிய மனத்தோரைக் குறிக்கும். அதாவது ஆதரவற்ற நிலையில் இறைவன் தான் எனக்கு எல்லாமே என்று நம்பி இருந்தவர்கள். பற்றிக்கொள்வதற்கு செல்வமோ, கல்வியோ, பதவியோ இல்லாமல் இறைவன் தான் எனக்கு என்று இறைவனோடு இணைந்து வாழ்ந்தவர்கள். இறைவனுக்காக தங்களை அர்ப்பணித்து வாழ்ந்தவர்களும் இந்த மூன்றாவது வகையை சார்ந்தவர்கள் ஆவார்கள்.

ஏழைகள் மதிக்கப்படாத, ஏழைகள் மனிதர்களாக ஏற்றுக்கொள்ளப்படாத அந்த கால கட்டத்திலே இயேசு ‘ 'ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்' (லூக்கா 6:20) என்று போதித்தார். இது புதுவிதமான புரட்சி சொற்களாக அந்த காலத்திலே ஓங்கி ஒலித்தது. இயேசு ஏழ்மை நிலையை வாழ்த்தவில்லை. வரவேற்கவில்லை. இவ்வாறு அவர் கூறக்காரணம் ஏழைகளின் தாழ்வு நிலையை வறுமையை நீக்க கடவுள் அவர்களோடு இருக்கிறார். அவர்கள் சார்பாக இருக்கிறார். அவர்களுக்காக அவர் வாதாடுகிறார் என்பதே பொருளாகும்.

''செல்வர்கள் இறையாட்சிக்கு உட்படுவது மிகக் கடினம் அவர்கள் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'' (மாற்கு 10:24 25). இந்த வார்த்தைகள் இன்னும் இயேசுவினுடைய சித்தாந்தங்களுக்கு வலுச் சேர்ப்பதாக இருக்கிறது. செல்வர்கள் அந்த செல்வச் செழிப்பினால் செய்யக் கூடிய செயல்களை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுவதாகவும் இருக்கிறது.

அந்த காலத்திலே சமூகத்தை சீர்குலைத்த இன்னொரு முக்கியமான சிந்தனை பழிக்குப் பழிவாங்கும் எண்ணம். மோசேயினுடைய சட்டத்தை கோடிட்டுக் காட்டி பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்தை யூதர்கள் தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்தனர்.

இயேசு "ஏழு முறை அல்ல எழுபது முறை ஒருவரை மன்னிக்க வேண்டும்" (மத்தேயு 5:12) என்று தன்னுடைய புதிய போதனையின் மூலமாக பழிக்குப் பழிவாங்கும் சிந்தனைக்கு எதிராக கண்ணுக்கு கண் பல்லுக்குப் பல் என்னும் கோட்பாட்டுக்கு எதிராக போதிக்கிறார்.

அது அந்த சமுதாயத்திலே அன்புறவு புதிதாக மலர்வதற்கு காரணமாக இருக்கிறது. அது போல பரிசேயர், சதுசேயர், எசேனியர் என்போர் பாமர மக்களைத் தீண்டத்தகாத பாவிகளாக பார்த்தார்கள். அவர்களோடு உறவாடுவதோ, உணவருந்துவதோ பாவம் மிக்க செயல் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் இயேசு இவற்றுக்கு மாறாக சம பந்தி விருந்துகளிலே கலந்து கொண்டார். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருடைய விருந்திலும் கலந்து கொண்டு எல்லோரோடும்இணைந்துவிருந்துண்டுமகிழ்ந்தார்.

இது ஏற்றத் தாழ்வுகளை உடைப்பதற்கு பயன்பட்டது. இதுபோல இயேசுவினுடைய போதனைகள் இயேசுவினுடைய புதுமைகள், இயேசுவினுடைய வாழ்க்கை முறைகள், இயேசுவினுடைய தனிப்பட்ட உரையாடல்கள் இவை அனைத்தும் அந்த சமுதாயத்தை மனிதர்களை இரண்டாகப் பிரித்த சதித்திட்டம் வாய்ந்த சித்தாந்தங்களுக்கு எதிராக இருந்தது. இயேசுவினுடைய மரணம் என்பது, அவருடைய மூன்று வருட பணி வாழ்வோடு மிகுந்த தொடர்புடையதாக இருந்தது.

எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள். இறைவனுடைய பார்வையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பது கிடையாது என்னும் சிந்தனையை மையப்படுத்தித் தான் அவர் போதித்தார். அதை நோக்கிதான் அவர் பணியாற்றினார். யூத சட்டங்களில் பெரும்பான்மையான சட்டங்கள் எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள் என்னும் பார்வைக்கு எதிராக இருந்தது.

அந்த சட்டங்களை யூத பெரியவர்கள் பாமர மக்கள் மீது வலுக்கட்டாயமாக சுமத்தினார்கள். அதை இயேசு அறிவியல் பூர்வமாகவும், சான்று பூர்வமாகவும் நிரூபித்து எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்துக் கொண்டே வந்தார்.

ஏற்றத் தாழ்வு நிறைந்த அன்றைய சமுதாயத்தில் எல்லோரும் இறை தந்தையின் பிள்ளைகளே என்று அவர் முழங்கிக் கொண்டிருந்தார். இயேசுவினுடைய இந்த முழக்கம் ஓங்கி ஒலித்ததா என்றால் நிச்



சயமாக இல்லை. சற்று வலிமை குறைவாகவே ஒலித்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட சூழலிலே இயேசு சிலுவை மரணத்திற்கு உட்படுத்தப்பட்டு கல்லறையிலே அடக்கம் செய்யப்படுகிறார்.

இயேசு உயிர்த்தெழுந்த போது இயேசு மட்டும் மீண்டு எழவில்லை மாறாக இயேசுவினுடைய போதனைகள், அதாவது, எதற்காக இயேசு பணியாற்றினாரோ அந்த சித்தாந்தங்களையும் அவரோடு உயிர்த்தெழுச் செய்கிறார்.

அதாவது, இயேசுவினுடைய காலத்திலே இயேசுவால் மிகப்பெரிய அளவிலே கொண்டுவர முடியாத மாற்றத்தை இயேசுவினுடைய உயிர்ப்பிற்குப் பின்பு சீடர்கள் மூலமாக கடை எல்லை வரை கொண்டு செல்கிறார். இயேசு விரும்பிய அந்த இறையாட்சி சமூகத்தை உலகின் கடை எல்லை வரை இயேசுவினுடைய சீடர்கள் கொண்டு செல்கிறார்கள். அதற்கு அடிப்படையாக இருந்தது இயேசுவினுடைய உயிர்ப்பு.

கால் நடையாக சில கிலோமீட்டர் தூரம் மட்டுமே இயேசுவினுடைய காலத்திலே அவர் இந்த இறையாட்சி சமுதாயம் பற்றிய சிந்தனைகளை எடுத்துரைத்தார். ஆனால் அந்த உயிர்ப்பிற்குப் பின்பு உலகம் முழுவதும் அந்த சிந்தனைகள் பரவத் தொடங்கின. ஆகவே இயேசுவினுடைய அந்த உயிர்ப்பு தான் இயேசுவினுடைய சிந்தனைகள் மீண்டும் உருவாக உலகமெல்லாம் பரவ காரணமாக இருந்தது.

கல்லறையில் இருந்து இயேசு தனி ஒருவராக வெளியே வரவில்லை. மாறாக பல நூற்றாண்டுகளாக அமுக்கப்பட்டிருந்த, மறைக்கப்பட்டிருந்த பல நல்ல வாழ்வியல் சிந்தனைகளை குறிப்பாக எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள் என்னும் சிந்தனைகளை உயிர்த்தெழச் செய்தார்.

இன்றும் அந்த சிந்தனை உலகின் மூலை முடுக்கெல்லாம் பற்றி எரிந்துகொண்டே இருக்கிறது. இன்னும் இந்தக் காலகட்டத்தில் இந்த உலகத்தில் மனிதம் உயிரோடு இருக்கிறது என்றால், எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள் என்ற சிந்தனை ஒரு சில உள்ளங்களிலாவது வாழ்கிறது என்றால் அதற்கு இயேசுவினுடைய உயிர்ப்பும், அதற்கு பின்பு சீடர்களாற்றிய பணியும் மிகப்பெரிய காரணமாக இருக்கிறது என்றால் மிகையாகாது.

இயேசு உயிர்த்தார் என்று கொண்டாடுவதை விட இயேசுவோடு உயிர்த்த பல சித்தாந்தங்களை நாம் கொண்டாட வேண்டும் அவற்றை ஒவ்வொரு நாளும் உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரவச் செய்வதற்கு நாம் காரணமாக இருக்க வேண்டும். எல்லோரும் இறைவனின் பிள்ளைகள், எல்லா மக்களும் உரிமையில், மகிழ்ச்சியைப் பெறுவதில் வளத்தைப் பெறுவதிலே சம உரிமை பெற்றிருக்கிறார்கள் என்னும் செய்தியை நாம் வார்த்தையாலும் வாழ்விலும் பறைசாற்றுவோம். அதற்கான அருளை உயிர்த்த இயேசுவிடம் மன்றாடுவோம்.

**அருட்பணி அருண் ரெக்ஸ்**

# உயிர்ப்பில்தான் நம்பிக்கை பிறக்கின்றது

உயிர்த்தெழுந்த ஆண்டவர் தன் சீடர்களைப் பார்த்து கூறிய முதல் வார்த்தை அமைதி என்பதே.

உலகம் முழுவதும் இன்று அமைதியிழந்து போரினாலும் பொருளாதார நெருக்கடிகளினாலும் தவிக்கின்றது. இதனால் குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

குழந்தைகளை ஆற்றித் தேற்றத்தான் 'சந்தோஷம் பொங்குதே சந்தோஷம் பொங்குதே சந்தோஷம் என்னில் பொங்குதே" என்ற பல்லவியை சொல்லிக் கொடுக்கின்றோம். ஆனால் குழந்தைகளால் கூட இந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடிவதில்லை. காரணம் குழந்தைகள் அத்தனை வன்முறைகளை அனுபவித்து இறுதியில் தம் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அமைதியின்மையே. கல்லறை முதல் கருவறை வரை, ஆரம்பம் தொடக்கம் முடிவு வரை, தாத்தா முதல் பாட்டி வரை எல்லோரும் விரும்புகின்ற ஒன்று மகிழ்ச்சியுடன் கூடிய அமைதியே.

திருமறையின் பார்வையில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் தன் சீடர்களைப் பார்த்து கூறிய முதல் வார்த்தையும் அமைதியே என யோவான் நற்செய்தி நூல் 20: 1926 இல் மும்முறை கூறுவதனைக் காண்கிறோம்.

இயேசுவின் உயிர்ப்பு மதத் தலைவர்களையும், படையினரையும் கல்லறைக்கு காவல் நின்றவர்களையும் மலைப்புக்குள்ளாகியது. அதேநேரம் எல்லா நற்செய்தி நூல்களிலும் உயிர்ப்பு நம்பிக்கையைக் கொடுத்தது. பயத்தோடு பாதை மாறிச் சென்ற எம்மாவூர் சீடர்களை நம்பிக்கையின் பாதையில் எருசலேமுக்கு அழைத்து வந்து (லூக் 24: 1323) கல்லறைக்கருகில் அழுது கொண்டு ஆண்டவரைத் தேடிய மகதலெனா மரியாள் நம்பிக்கையினால் (யோவான் 20 : 11 – 18) ஓடி இயேசுவின்



சீடர்களை கல்லறைக்கு அழைத்து வந்தாள். உயிர்த்த ஆண்டவரைக் கண்டு அவரது விலாவிலும் கரங்களிலும் ஏற்பட்ட காயங்களில் என் விரலை வைத்துப் பார்ப்பேன் என்று விசுவாசத்தில் இருந்த தோமாவை இந்தியா வரை அழைத்து வந்தது உயிர்ப்பின் நம்பிக்கை தான். (யோவான் 20:2429)

நாங்கள் நம்பியிருந்தவர் உரோம ஆட்சி அடக்குமுறையிலிருந்து எம்மையும், எம் இனத்தையும் காப்பார் என்ற கனவு பொய்யாகி விட்டது. இனி நாம் இருந்து பயனில்லை. எம் பழைய தொழிலாகிய கடற்றொழிலுக்குச் செல்வோம், எனக் கூறி சில சீடர்களை அழைத்துக் கொண்டு மீன் பிடிக்கச் சென்ற பேதுருவை இயேசு அழைத்து, தொழிலில் வெற்றியைக் கொடுத்தது உயிர்ப்பின் நம்பிக்கை தான். (யோவான் 21:114)

புதிய ஏற்பாட்டில் உயிர்த்த ஆண்டவர் இயேசு குறைந்த பட்சம் பத்துத் தடவைகளுக்கும் மேல் தன் அடியவர்களுக்கு காட்சி தருகின்றார். கொலை வெறியோடு சென்ற சவுலை தமஸ்குப் பாதையிலே சந்திக்கிறார் (தி.ப 9: 119) சவுலுக்கு உயிர்த்த இயேசு துன்புறும் கிறிஸ்துவாக தன்னைக் காண்பிக்கிறார்.

உயிர்த்த இயேசுவைச் சந்தித்தவர்கள் மனதிலே அமைதியற்றவர்களாகத் தான் காண்கிறோம். அதனால் தான் உயிர்த்த ஆண்டவர் கூறிய வார்த்தை உங்களுக்கு அமைதி உண்டாவதாக என்பதாகும்.

கல்லறை அருகில் கண்ணீர், தொழிலில் ஏமாற்றம், விசுவாசத்தில் உறுதி, பயணத்தில் தடுமாற்றம், உள்ளத்தில் கொலை வெறி. போன்ற உணர்வுகளோடு வந்தவர்களைச் சந்தித்த ஆண்டவர் ஏன் இன்று இவ்வாறான போராட்டங்களோடு வாழும் மக்களுக்கு அமைதியைக் கொடுக்க முடியவில்லை என்பது காலங்காலமாக கேட்கப்படும் கேள்வியாக இருக்கின்றது.

காயீன் ஆபேலில் தொடங்கிய கொலை உலக மீட்பர் இயேசு வரைக்கும் தொடர்ந்த கொலை இன்றுவரைக்கும் ஓயவில்லை. இவ் வன்முறை பல வடிவங்களில் மக்கள் மனங்களில் பயத்தையும் அமைதியின்மையையும் உளவியல் நோய்களையும் ஏற்படுத்தி சமூகத்தை நடமாடும் பிணங்களாக மாற்றியுள்ளது.

இம் மாற்றத்திலிருந்து இருந்து மீட்கப்பட அமைதி தான் பதிவாகின்றது.

நான் கால் நீட்டிப் படுத்துறங்குவதற்குப் போதுமான இடமில்லை என்று சொல்லி ஆஸ்திரியா நாட்டை ஹிட்லர் பிடித்தான். இன்று அமைதியாக இருங்கள் என்று சொல்வதைக் கூட அதட்டித்தான் சொல்கிறோம். அன்றிந்த மக்கள் கூட்டம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தினால் ஏற்பட்ட காயங்களும் வடுக்களும் இன்னும் ஆறவில்லை. பரிசேயர்கள், சதுசேயர்கள் சுட்ட பொறாமைத் தீ, யூதாசின் பணத் தீ, பிலாத்துவின் பதவித் தீ, பாமர மக்களின் அறியாமைத் தீ, போர்வீரர்களின் கோபத் தீ அவரைச் சுட்டுப் பொசுக்கியது.



இந்த தீக் காயங்கள் எல்லாம் மூன்று நாட்கள் வரை தான் கல்லறையில் நீடித்தது. உயிர்த்த ஆண்டவர் இந்த காயங்களை ஏற்படுத்தியவர்களை பழி வாங்கவில்லை. அவர்களுக்கும் அமைதியை அள்ளிக் கொடுத்தார்.

இன்னும் அதே ஆண்டவர் எம்மைப் பார்த்து என் கூட இருந்தே குழி பறித்த யூதாசோடு நான் வாழ வேண்டியிருந்தது. அவனுக்குப் பணம் பதவி இவை மட்டுமே முக்கியமானதாகத் தெரிந்தன. மூன்று முறை மறுதலித்த பேதுருவோடு நான் வாழவேண்டியிருந்தது அவருக்கு அவருடைய உடலும், உயிரும் முக்கியமானதாகத் தெரிந்ததே. என்னை சிலுவையில் அறைந்து தொங்கவிட்டு கேலி செய்தவர்களோடு வாழ வேண்டியிருந்தது. அவர்களுக்கு அதிகாரமும் ஆணவமும்தான் முக்கியம். ஆனால் எனக்கு முக்கியமானதாகத் தெரிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான் அது தான் அன்பும். அமைதியும் என உயிர்த்த ஆண்டவர் பேசுகிறார்.

இந்த உயிர்ப்பின் செய்தி நமக்கு கொடுக்கும் அறைகூவல், இயேசு வாழ்ந்த காலத்தில் பொழிந்த அன்பை பகிர்வதே. இயேசு தமக்குத் தெரிந்தவர்களுக்கு அன்பு செய்தார். (யோவான் 11: 114) லாசருவின் தமக்குத் தெரியாதவர்களையும் அன்பு செய்தார். மாற்கு 5: 2434 இல் 12 வருடங்களாக வியாதியால் துன்புற்ற பெண் ஒருத்திக்கு வாழ்வு கொடுத்தார். தமது எதிரிகளுக்கு அன்பு செய்தார். தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் அன்பு செய்ய அவரால் முடிந்தது.

இப்படி தெரிந்தவர்களையும் தெரியாதவர்களையும் எதிரிகளையும் அன்பு செய்த இயேசுவை ஒரு நாள் அந்த அன்பு உயிர்ப்பித்தது. அன்பே உருவான விண்ணகத் தந்தை அவரை உயிர்ப்பித்தார் 1 யோவான் 4:8 இல் கடவுள் அன்பு மயமானவர். எங்கே அன்பு இருக்கின்றதோ அங்கே உயிர்ப்பு உண்டு. உயிர்ப்பு ஏற்படும் போது அமைதி கிடைக்கும். அமைதிக்காக, உலக அமைதிக்காக, உயிர்த்த ஆண்டவரின் அருளோடு உழைப்போமா?

**அருட்பணி டி.எஸ்.மதியாபரணம்**




# ஏனென்றால்...

அவசர தேனீர்
அவள்தான் தயார் செய்கிறாள்

அடுக்களையில்
அடுக்கடுக்காய் இருக்கும்
வேலையைப் பகிர்ந்து கொள்கிறாள்

காய்கறி கைகளால்
நறுக்கித் தருகிறாள்
மீனறுத்து செதில் கழற்றி
சுத்தமாக வெடுக்ககற்றுகிறாள்

கனமான போர்வை முதல்
அடை சீலை வரை
சலவை செய்கிறாள்

அரிசியைக் கழுவி
சோறு சமைக்கிறாள்
கோதுமை குழைத்து
ரொட்டியும் செய்கிறாள்

பூஞ்சைத் தேகத்தில்
வீட்டின் பிள்ளை இடுக்கியதன்
பசி தீர்ப்பதும் யார்?
அவளேதான்

அடுப்படியில்
கிடந்து வேகும் விறகுக்கும்
அவளுக்கும்
வித்தியாசங்கள் இல்லை

வயிற்றைக் கழுவிக்கொள்ளத்தான்
கரிச்சட்டி, கழிவறை முதற்கொண்டு
கண்கவர் குவளை வரைக்கும்
கழுவித் தொலைக்கிறாள்

ஆனால் அவள் மட்டும்
பயன்படுத்திக்கொள்ள
கொடுக்கப்பட்டது ஒரு
அலுமினியத்தட்டும்
குவளையும்

ஏனென்றால் அவளொரு
வீட்டு வேலைக்காரி

சாப்பிட மட்டும் சாதி பார்க்கும்
நீங்கள் எந்த சாதி?
என்ற கேள்வி
அவள் மனதிற்குள் ஒலிக்காத
நாட்களில்லை.

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



# நினைத்தால் நெஞ்சம் உருகுது

நோன்பு பதினேழு
நினைத்தால் நெஞ்சம்
உருகுது
முன்னூற்றுப் பதின்மூன்று
ஏழை ஸஹாபாக்கள்
இறங்கினர்
பத்ரில்

ஆயிரம் பேர்
அதிகரித்த படையினர்
யுத்த தளபாடம்
மோதினர்
முஸ்லிம்களுடன்
சொற்ப நேரத்தில்
திகைத்தனர். எதிரிகள்

வல்ல அல்லாஹ் உதவிய.
வானவர் படை
கண்களுக்குள்
மண்ணைத்தூவி
உதவியும் நல்கினரே
தீனுக்காய் பட்டதுயர்
இறைவனும். ஏற்றுக்
கொண்டான்
ஆபத்து நேரத்தில்
உதவியும்
நல்கினான்

எதிரிப்படைநின்ற
தளபதிகள்
கழுத்தற்ற முண்டங்களாய்
தொலைந்து போயினர்
சக்தியுள்ள வல்ல அல்லாஹ்
சதிகளை முறித்து விட்டான்

கலிபா சொன்னதற்காய்
காலமெல்லாம் அழுகிறோம்
இறை நெருக்கம்
கிடைக்க
ஈமானை அமலைக்காப்போம்
புனித ரமழான்
பூக்கட்டும். இதற்காய்

தோப்பூர்.எஸ்.சிராஜுதீன்
நற்பிட்டிமுனை



திக்கெட்டும் ஊடுருவியே
செய்திகளைப் பகிர்ந்தாய்
தினமும் அதிகாலை
அனைவரையும் மகிழ்வித்தாய்
திகட்டாதப் படைப்புகளை
தன்னகத்தே சுமந்தாய்
தியாக மனதுடன்
இனம், மதம், மறந்தே இனித்
தாய்

உலகப் போரையும்
முதலில் நீயேசுமந்தாய்
உலக விளையாட்டுகளையும்
அழகாய்த் தந்தாய்
உண்மைச் செய்திகளால்
உலகை வென்றாய்

# தினகரனுக்கு 92 வயது

உனக்குநிகர் நீயென
நிருபித்து நின்றாய்

மலையக மக்களையும்
மறவாமல் எழுதினாய்
மகளிர் பக்கத்தையும்
உன்னில் தரித்தாய்
மழலை செல்வங்களையும்
மகிழ்வூட்டி வென்றாய்
மனங்களை இனிமையாக்கி
புன்னகையுடன் நின்றாய்

தித்திக்கும் உன்மொழியில்
மெய்மறந்து போனோம்
திறமையை வளர்க்க
உன்னை நாடினோம்
திறம்பட அனைத்தையும்
செய்தே வான்தொட்டாய்
தினகரனே உன்பிறந்தநாளை
ஊர்சார்பாய் வாழ்த்துகிறேன்

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்
ஏறாவூர்




# கடலும் பெண்ணும் ஒன்று



கடலுக்கும் இரு முகங்கள்;
பெண்ணுக்கும் இருமுகங்கள் அதில்
அமைதியே அழகு.

கடலின் ஆழமும்
அறிந்தவர்கள் இல்லை;
பெண்ணின் மன ஆழமும்
அறிந்தவர்கள் இல்லை பாரினிலே.

கடலில் உள்ள அற்புதங்கள் விசித்திரமே;
பெண் என்ற உயிரும்
விசித்திரமான அற்புதமே.

கடலும் தன்னுள்ளே பல
உயிர்களை சுமக்கின்றது ;
பெண்ணும் தனக்குள்ளே
உயிரை சுமக்கின்றாள்.

கடல் அலையின் ஓசையில்
உள்ளம் சாந்தமடைகிறது;
பெண்ணின் பேச்சில்
மனது அமைதியடைகின்றது.

கடலை பார்த்தாலே
இனம் புரியாத ஆனந்தம் ஆர்ப்பரிக்கும்
தொலைந்துவிடத் தோன்றும்;
பெண்ணை பார்க்கும் போதும்
இனம் புரியாத பேரின்பம்

கடலின் அமைதி ஒரு சமிஞ்சை ;
பெண்ணின் அமைதியும்
ஒரு சமிக்ஞை (கொந்தளிப்பு)._
கடல் அலை நுரையாவது போல ;
அவளின் ஆசைகளும்
நுரையாகிவிடுகின்றன

இயற்கையின் தாயின் மீது
காதல் அதிசய காதல்;
இறைவன் படைத்த
அதியசம் பெண் மீது அழியாக் காதல்.

கடற்கரை மணலில் எழுதுவதை
அலை மறைப்பது போல
பெண் தனக்கு தோன்றிய
காதலை மறைக்கின்றாள்.

இறைவனின் படைப்பில்
இரண்டும் புதிரே...

தௌபீக் முஹம்மது நவீத்
(புல்மோட்டையூரான்)

# மனிதநேய அரசன்

ஆறறிவு படைத்தவனா மனிதன்,
ஆற்றல் படைத்தவனா மனிதன்,
ஆணவம் கொண்டவனா மனிதன்,
ஆறடியில் உறங்கிடுவான் கடைசி
யில் மனிதன்

அங்கங்கள் வெளி இருக்கும்,
அத்தனையும் வேஷங்கள்,
அடிக்கடி கோபம் வரும்
அதுவும் ஒரு விஷமாகும்

ஆற்றலிலே அவன் இருப்பான்,
ஆடிப்பாடி
ஆர்ப்பரிப்பான்,
ஆதிதனை மறந்திடுவான்
ஆழ் குழியில் அடங்கிடுவான்

பேசுவதே வேதம் என்பான்,
பேச்சுதனிலே பேதம் கொள்வான்,
பேதம் கொண்டு வாழ்வு என்று,
பேதலித்தே தான் இருப்பான்

சிறியதையும் பெரிதாக்கி,
பெரிய சண்டையில் வம்பிழுத்து,
வம்பிழுத்தே நஞ்சை ஊட்டி,
நஞ்சாகவே வாழ்ந்திருப்பான்

கேவலங்கள் தன்னில் இருத்தி,
கேலி செய்தே பிறரை வருத்தி,
வருத்தியதில்
இன்பம் கொள்வான்,
வக்கிர மனிதன் அவன்

நேசம் தன்னை மறந்து விட்டே,
பாசம் அதை அறுத்துக் கொண்டே,
வேஷம் காட்டி தான் வாழ,
வழிகளையும் சமைத்து வைப்பான்

வேண்டாத பேருக்கெல்லாம்,
வெட்டிக்கொண்டே பேசிடுவான்,
வேண்டியவன் வந்திடவே,
பல்லை இழித்திடுவான்

தேவை அற்ற வேலைக்கெல்லாம்,
காசு அதை வீசிடுவான்,
இறைவழியில்
கொடுக்கச் சொன்னால்,
பிசைந்து கொண்டே ஓடிடுவான்

மாசற்ற மனம் கொண்டு,
வேஷமற்று வாழ்ந்திடவே,
இறை வேத வழி நடந்தால்,

மனிதன் அவன் மனிதனாவான்,
மனிதநேய அரசனாவான்
இறைநேசக்கவி

ரமீஸ்...

# முகமூடி மனிதர்கள்



எத்தனையோ மனிதர்கள் கண்டேன்
எல்லோரும் புனிதரெனக் கொண்டேன்
அத்தனையும் பொய்யென புரிந்தேன்
அவர் முகமூடி மனிதரென அறிந்தேன்

உடையி லெல்லோரும் உத்தமர்
உண்மையி லவர் வித்தகர்
சாடையி லெல்லோரும் மனிதர்
சத்தியமா யாருமில்லை புனிதர்

உதட்டிலே உட்கார்ந்திருக்கும் சிரிப்பு
உள்நெஞ்சிலே உறைந்திருக்கும் வெறுப்பு
உதிரத்திலே ஒட்டியிருக்கும் சிறப்பு
உள்ளத்தி லிருப்பதெல்லாம் மறுப்பு

நம்முட னிருக்கையில் நட்பு
நாலடி தள்ளினா லது தப்பு
அன்புட னிருப்பதாய் ஒரு நினைப்பு
அதிலிருப்ப தெல்லாம் வெறும் நடிப்பு

கூட்டுறவி லிருப்பதாய் சொல்வர்
காட்டிக் கொடுத்தே பிறகு கொல்வர்
வீட்டுறவே புனிதமென போதிப்பர்
வேதனைகள் செய்ததை சோதிப்பர்

பெருமைக ளேதுமில்லை யென்பர்
பெரும் பதவிகள் பல வேண்டி நிற்பர்
அரசிய லெல்லாம் அசிங்க மென்பர்
அதற்குப் பின்னால் அசிங்கப்படுவர்

சபைகளில் சார்ந்து பேசுவர்
சந்திகளில் சேர்ந்து ஏசுவர்
கபட மில்லையென உரைப்பர்
கசடை நெஞ்சினுள் புதைப்பர்

முகத்துக்கு முன்னால் புகழ்வர்
முதுகுக்குப் பின்னால் இகழ்வர்
அகத்தினு ளெல்லாம் மறைப்பர்
அப்பாவிகள் போலாவி பிழைப்பர்

வினாடிக்கொரு முகம் காட்டுவர்
வேஷத்தால் வாழ்வுக் குரமூட்டுவர்
கண்ணாடிகள் பல மாட்டுவர்
கலர் கலரா யுலகை மாற்றுவர்

எல்லா மிங்கே வெறும் வேஷம்
இதனா லுலகிலே பெரும் நாசம்
எல்லோருக்கு மிங்கே இரட்டைமுகம்
இதனா லிருளா யாகுது யுகம்

வரக்காமுறையூர் ராசிக்

# வசந்தம் மிகு ரமழானே...

நன்மைகள் குவிக்கும்
அருள்மறை இறங்கிய ரமழானே
ஏழைகளின் பசியை
உணர வைக்கும் ரமழானே

ஸகாத்தையும் பித்ராவையும்
ஏழைகளுக்காக்கும் ரமழானே
வள்ளல்களின் கண்களை
திறக்க வைக்கும் ரமழான

முழு உலகிற்கும் வழிகாட்டியான
புனிதமறை இறங்கிய ரமழானே
இஸ்லாத்திற்கு விடிவைப் பெற்றுக்
கொடுத்த அருள்மிகு ரமழானே

ஆயிரம் பேரால் சூழப்பட்ட
யுத்தகளத்தை 313 பேரால்
வென்றெடுத்த ரமழானே
11 மாதங்கள் உண்டு
கழித்த வயிறுகளுக்கு
ஒருமாத ஓய்வு கொடுக்கும் ரமழானே
பாவத்திலிருந்து மீட்சிபெற வைக்கும்
கண்ணியமான ரமழானே

ஆயிரம் மாதங்களுக்கு சமனான
ஓரிரவைக் கொண்ட ரமழானே
இறை கட்டளைகளுக்கும்
நபி வழிக்கும் ஒளி சேர்க்கும் ரமழானே
தராவீக்கும் வித்ரும் தஸ்பீஹ்க்கும்
ஒன்றாகி நன்மை
தரும் ரமழானே
பசியோடும் தாகத்தோடும் இருப்பவர்க்கு
நன்மைகளை வழங்கும் ரமழானே

உன்வருகை மகிழ்ச்சியான
போதும் உன் நிறைவு நாள்
கவலையாகுதே ரமழானே
மீண்டும் உன் வருகைக்காக
பிறை காண
காத்திருக்கிறோமே ரமழானே

சத்தார் எம் ஜாவித்

# கைக்குட்டையின் கதறல்

துக்கத்தின் கண்ணீரைத்
துடைத்துத் துடைத்தே
தன்னைத் துக்கவாளியாக்கிய
மனிதர்கள் மீதான ஆத்திரத்தில்
துடிக்கிறது கைக்குட்டையின் மனசு

எவனுக்கு என்ன நேர்ந்தாலும்
அவனது கண்ணீர்
அவனுக்கே ஆற்றாமை
அவனது ஆற்றாமைக் கழிவுகளை
சேகரிக்க நானென்ன
கண்ணீர் வங்கியா என்கிறது
கைக்குட்டை

உங்கள் கண்ணீரை
நீங்கள் துடைக்க நான்.
என் கண்ணீரைத் துடைக்க
உங்கள் விரலில்லையே ஏன்?
கேட்கிறது கைக்குட்டை

நீங்கள் விசும்பும்
கண்ணீரின்போதே அருவியாகும்
நாசி நதிவெள்ளம் துடைத்தெமை
நாசமாக்கும் அநாகரிகம்
பிழையென்று தீர்ப்புச் சொல்ல
எங்கே உங்கள் நாட்டாமை?

நாகரிகம் வளர்த்தவர்கள் என்று
சொல்லிச்சொல்லியே
எங்களில் நாசி துடைத்து
சட்டைப் பைகளில்
மறைத்து வைக்கும் அநாகரிகங்களே..
இதுவா நாகரீகம்?

துண்டுத் துணி என்பதற்காகத்
துணிந்து துவம்சம் செய்யும்
துரியோதனன்களே நாங்கள்
உங்கள் மானம் மறைக்கும்
காவல்தெய்வங்களின்
கைக்குழந்தையல்லாவா

குழந்தையும் தெய்வமும்
ஒன்றெனக்கூறும் நீங்கள்
உங்கள் தெய்வத்திற்கு
கோயிலில் பாலாபிஷேகமும்
எங்களுக்கு கழிவாபிஷேகமும்
தானா
உங்கள் சனாதனம்?

திடீர் காயங்களுக்கு முதலுதவி
திடீர் தூறலுக்கு பாதுகாப்பு கவசம்
காதலின் அடையாளமாய்
நினைவு பரிசு ஆத்திர அவசரத்துக்கு
அவ்வப்போது கையுதவியாய்
இருந்துமென்ன
காரியம் முடிந்தவுடன்
கைகழுவிப் போகும் உங்கள் முன்
களங்கப்பட்டுமல்லவா நிற்கிறோம்



கள்ளனை நம்பினாலும்
குள்ளனை நம்பக்கூடாதென
சொல்லும் நீங்களே
கைக் 'குட்டை' எம்மை
நம்பிக்கையோடு வைத்து
முரண்படுகிறீர்கள்.

உங்கள் வியர்வையில் நனைந்து
மூச்சுத்திணறும்
எம்மைக் காற்றோட்டமில்லாக்
கைப்பைகளிலும்
காற்சட்டைப் பைகளிலும் அடைத்துக்
கைதியை விடவும் மோசமாய்
நடத்தி அவமானம் செய்கிறீர்கள்.

ஒட்டுத் துணியென எம்மை
ஒட்டி நடனமாடும்
கவர்ச்சி நடிகைகளின்
மானத்தைத் தாங்கிப்
பிடிக்கப் போராடும் போராளிகள் நாம்

வறுமைக்குப் பிறந்த
வாரிசுகளின் இடைத் தோள்களில்
போர்த்தப்படும்
பொன்னாடை நாங்கள்

பட்டுச் சேலைகளில்
உங்கள் மனைவியர் ஜொலிக்க
வெட்டுத் துணிபோலிருக்கும்
எம்மால்தான்
ஒரு கிரீடம் அணிவிக்கப்படுகிறது

இனியும் எம்மைக்
குட்டையெனக் கேவலப்படுத்தாதீர்கள்
நாங்கள் உங்கள்
குட்டையைக் குழப்பினால்
நாங்கள் கந்தலாவதற்குள்
உங்கள் கதை கந்தலாகுமென்பதை
கவனத்தில் கொள்ளுங்கள்

சின்னச் சின்ன எங்களைச்
நினைவுச்சின்னமாக
உங்கள் சின்ன வீடுகளில்
சிதறவிட்டு விட்டுவருகையில்
உங்கள் அந்தரங்கம் அறிந்து
அவமானம் கொள்கிறோம்

ஒலிவாங்கி முன்
பழைய பொய்களை மூடிப்
புதிய பொய்களை பேச
எத்தனிக்கையில் வழியும் அசடு துடைத்து
ஆசுவாசம் கொடுத்தும்
எம்மைப்பற்றி ஓரிரு
வார்த்தைகள் கூடப்
பேசாக் கசடர் நீங்கள்.

மான அவமானங்கள் மறைக்க உதவிச்
சன்மானம் கேட்கவில்லை
தன்மானத்தையாவது
அவமானப்படுத்தாதீர்கள் மனிதர்களே
உங்கள் சமுதாயம் ஏற்படுத்தும்
வேதனைகளில் நீங்கள் விடும்
கண்ணீர் துடைக்க அன்பாய் ஒரு விரல்
கிடைக்காத போதும்
விரலாய் நாங்களிருப்போம்

மெய்யன் நடராஜ்

# இயங்கியல் வாதம்

இயங்க வேண்டும்
இயங்கிக் கொண்டே
இருக்க வேண்டும்
இயங்காமை
இல்லையேல்

எதுவுமே இயங்காது
இயற்கையும்...
ஏதோ ஒழுங்கில்

இயங்கிக் கொண்டுதான்
இருக்கின்றது
இறைவன் படைப்பும்
இதுவே...

சி.மௌநேஷ்
மட்டக்களப்பு



# பேராசை

தேனாற்றில்
கனி பறிப்போர்.

தோட்டங்களை
அறுவடை செய்வோர்.

உலகின் மொத்த தங்கத்தையும்
வாங்கும் தகுதி கொண்டோர்.
மரணத்தின் பின்பு
படைத்தோன்

சுவர்க்கம் கொடுத்தாலும்
அங்கேயும்
சில்லறை கடை வைக்க
ஆசைப் படுவார்கள்.

மூதூர் றிஸ்வின்

# இப்தாருக்கான பங்களிப்பில் முன்னிலையில் சவூதி அரேபியா





இஸ்லாமிய 12 மாதங்களில் ஒன்பதாவது மாதமே ரமழான் மாதமாகும். ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் அதிகாலையில் நோன்பு நோற்று மாலை சூரியன் மறைந்ததன் பின்னர் நோன்பு திறப்பதையே இப்தார் எனப்படுகிறது.

இவ்வ இப்தார் நிகழ்வுக்காக சவூதி அரேபியா மேற்கொள்ளும் முயற்சிகளும், பங்களிப்புகளும் எண்ணிலடங்காதவை எனலாம்.

ரமழான் மாதம் என்பது அல்குர்ஆன் இறக்கப்பட்ட மாதமாகும், எம்முடைய வணக்க வழிபாடுகளுக்கான கூலிகள் பன்மடங்காக வழங்கப்படும் மாதமாகும். பாவமன்னிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு மாதமாகும்.

இப்தாருடைய நிகழ்வு என்பது ஒரு வணக்க வழிபாடாகும். இவ் வணக்க வழிபாட்டிற்கு உதவி செய்வதும், பங்களிப்புச் செய்வதும் இந்த ரமழான் மாதத்தில் நன்மைகளை பன்மடங்காக பெற்றுத் தரும் சிறப்புக்குரிய ஒரு வணக்க வழிபாடாகும்.

"யார் ஒரு நோன்பாளியை நோன்பு திறப்பிக்கச் செய்கிறாரோ அவருக்கு அந்த நோன்பாளியின் நன்மையைப் போன்றதொரு நன்மை கிடைக்கிறது. இருந்த போதிலும் அந்த நோன்பாளியின் நன்மையிலிருந்து எதுவும் குறைவடையாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

மேற்கூறப்பட்ட நபிமொழிக்கேற்ப சவூதி அரேபியா இப்தார் நிகழ்வுகளை வழங்குவதில் அரபு நாடுகளுக்கு மத்தியில் முன்னிலை வகிக்கிறது.

சவுதி அரேபியாவில் காணப்படும் மக்கா, மதீனா இரு ஹரமங்களிலும் ரமழான் மாதத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இப்தார் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழக்கமான ஒரு விடயமாக காணப்படுகிறது.

ரமழான் மாதத்தில் மாத்திரமல்லாமல் ஏனைய மாதங்களிலும் விசேடமாக திங்கள், வியாழன் போன்ற நாட்களில் இரண்டு ஹரம்களிலும் ஆயிரக்கணக்கான நோன்பாளிகளுக்கான இப்தார் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதற்கான நிதியினை சவூதி அரேபியா அரசு ஒதுக்கீடு செய்வதோடு, பொது நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் என பலரும் தங்களது பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர்.

"நன்மையான காரியங்களுக்கு உதவி செய்யுங்கள்" எனும் இறைவசனத்திற்கேற்ப இரு ஹரம்களிலும் ஏற்பாடு செய்யப்படும் இப்தார் நிகழ்வுகளை உரியவர்களுக்கு கொண்டு செல்லும் பணியில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், ஹரம்களில் பணிபுரியும் வேலையாட்கள் என பலரும் தங்களது உதவி, ஒத்தாசைகளை வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக ரமழான் மாதத்தில் இரண்டு ஹரங்களில் மாத்திரமில்லாமல் சவுதி அரேபியாவின் பல்கலைக்கழகங்கள் மற்றும் பெரும்பான்மையான பள்ளிவாசல்களில் இப்படியான இப்தார் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது அந்நாட்டின் சிறப்பம்சமாகும்.

பொதுவாக சவூதி அரேபியா தனது சகோதர, நட்பு நாடுகளுக்கும் தனது சேவையை வழங்கி வருவது யாவரும் அறிந்த விடயமே.

எமது நாடான இலங்கைத் திருநாட்டிலும் வழமை போன்று இவ்வருட ரமழான் மாதத்தில் பல இப்தார்கள் ஏற்பாடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்தவகையில் அண்மையில் பல பிரமுகர்களை ஒன்றுகூட்டி சவூதி அரேபிய தூதரகத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்னும் இலங்கைக்கு மாத்திரமன்றி முஸ்லிம்கள் வாழும் அனைத்து சகோதர நாடுகளுக்கும் சவூதி அரேபியா ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதத்தில் ஈச்சம் பழங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறது.

இம் மாபெரும் பங்களிப்பினை சவூதி அரேபியா தொடர்ச்சியாக ஒவ்வொரு நாடுகளுக்கும் செய்து வருவது அதன் சிறப்பம்சமாகும்.

**ஏ.சீ. தஸ்தீக் (ஹாமி )**
**அதிபர்**
**அல் ஹாமியா அரபுக் கல்லூரி**

## ருஹுணு பல்கலைக்கழகம் – மாத்தறை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**ருஹுணு பல்கலைக்கழகம், விவசாய பீடம், FOUNTAIN செயற்றிட்டத்திற்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், கட்புல செவிப்புல ஸ்டுடியோவை நிறுவுதல் மற்றும் வலையமைப்பு மற்றும் மின்சார கேபிள்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல்**

1. ருஹுணு பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருட்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ருஹுணு பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

விலைக்கோரல் இலக்கம்: **RUH/AGRI/NCB/2024/01 (Goods should be delivered to the Faculty of Agriculture)**

| உருப்படி இல. | பொருட்கள்/விளக்கங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | விலைமனுப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| **Package No.: 01 - IT Equipment** | | | | |
| 1.1 | Server Computer | 01 | 2,000.00 | 9,500.00 |
| 1.2 | 3KVA Online UPS | 01 | | 1,500.00 |
| 1.3 | Laptop Computers | 08 | | 3,500.00 |
| 1.4 | Wi-Fi Access Point | 03 | | 600.00 |
| **Package No. 02 - Establishment of Audio Visual Studio** | | | | |
| 2.1 | Video cameras | 02 | 5,000.00 | 176,928.00 |
| 2.2 | Tripod (video) | 02 | | |
| 2.3 | Video mixer (4 inputs) | 01 | | |
| 2.4 | Lights (LED) | 04 | | |
| 2.5 | Smart Boards | 01 | | |
| 2.6 | Wireless handheld Microphone | 02 | | |
| 2.7 | Wireless Clip on Microphone | 02 | | |
| 2.8 | Dynamic Wired Microphone | 02 | | |
| 2.9 | Audio mixer (8 channel) | 01 | | |
| 2.10 | Headphone | 02 | | |
| 2.11 | Studio monitors (audio) | 01 | | |
| 2.12 | Studio monitors (video) | 01 | | |
| 2.13 | Full HD TV (40) | 01 | | |
| 2.14 | Recorder | 01 | | |
| 2.15 | Chroma key screen (green screen) | 01 | | |
| 2.16 | Studio equipment accessories and racks | 01 | | |
| 2.17 | Audio/video cables | 01 | | |
| 2.18 | Processing workstation | 01 | | |
| 2.19 | Processing workstation (mobile) | 01 | | |
| 2.20 | Processing software | 01 | | |
| 2.21 | Drone | 01 | | |
| 2.22 | Portable sound system type 1 (entry, battery powered, wireless, mic, column speaker, carrying case) | 01 | | |
| 2.23 | Integrated video conferencing system (unit, display, stand, wireless content share) | 01 | | |
| 2.24 | Zoom room license (Zoom pro + room add-on / one year) | 01 | | |
| 2.25 | Video streaming software | 01 | | |
| 2.26 | Sound bar (battery/USB powered) | 01 | | |
| 2.27 | Outdoor camera (battery/USB powered) | 01 | | |
| 2.28 | Mobile broadband internet connectivity (battery powered) | 01 | | |
| 2.29 | Stand | 01 | | |
| 2.30 | Portable sound system type 2 (battery powered, wireless, mic, column speaker, carrying case) | 01 | | |
| 2.31 | Planning, designing, implementation, testing, training and launch the studio | 01 | | |
| 2.32 | Pre Qualification Check List | 01 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **Package No. 03 - Network and Power Cabling** | | | | |
| 3.1 | Supplying, Laying and Fixing of Data Network CAT6 UTP cable (UTP CAT6 Cable-Four pairs with original copper cables) using necessary fittings such as PVC Single Accessory Boxes (size 87x87x25mm), face plates with information outlet, necessary PVC casings. Rate to be included making identification codes. All socket outlets should be properly labelled according to the standard followed by the university. Fluke test report certified by standard testing authority acceptable to the University should be submitted. When testing carried out, University representative will be participate and as-built drawing of network wiring should be submitted with proper numbering for all network points and cabinets according to the instructions given by the university. | 10 | 2,000.00 | 14,661.50 |
| 3.2 | Supply, installation and testing of factory fitted CAT6 24 AWG 0.5m patch cords | 10 | | |
| 3.3 | Supply installation, and testing of lm factory fitted CAT6 24 AWG 2m fly leads | 10 | | |
| 3.4 | 12U Network Rack | 01 | | |
| 3.5 | 24 Ports UTP Patch Panel | 01 | | |
| 3.6 | 1U Network Cable Manager | 01 | | |
| 3.7 | 24 Ports Network Switch | 02 | | |
| 3.8 | Supply and installing 1.2 KVA UPS | 01 | | |
| 3.9 | Wiring for 13A Socket outlets - Wiring of socket outlets shall include supply of 2.5mm2 CU/PVC/PVC cables, 2.5mm2 CU/PVC earth cables, PVC casing and switched socket outlet and all other materials required with approved type and quality. Wiring shall be ring circuit for every 10 plug bases. All socket outlets should be properly numbered. Suitable **"I"** ducts should be used when necessary. A separate power distribution panel must be established with appropriate breakers and get power from the nearest and suitable power distribution panel. | 12 | | |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்தி அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் ருஹுணு பல்கலைக்கழகத்தின் (மக்கள் வங்கி, கம்புறுப்பிட்டிய) 133100160000029 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்த பின் ஸ்கேன் செய்யப்பட்ட வரவுத் துண்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2024-04-21ஆம் திகதி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை (ஆங்கில மொழியில்) கம்புறுப்பிட்டிய, மாபலான, விவசாயப் பீடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் 2024-07-23ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
5. 01ஆம் இலக்க பொதிக்கு உருப்படிகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். ஒற்றை வேலைக்காக மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் 02 மற்றும் 03ஆம் இலக்கப் பொதிகளுக்கு ஒற்றை விலைமனுமவாக மதிப்பீடு செய்யப்படும்.
6. விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஏற்புடையதான விலைமனுக்கோரல் உருப்படிகளுக்கு உரித்தான (நிபந்தனையற்ற) விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் பிணை முறி 2024-08-22ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது ''துணை வேந்தர், ருஹுணு பல்கலைக்கழகம்'' என முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-04-22ஆம் திகதி மு.ப. 10.00 மணியாகும்.
9. 2024-04-17ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் நிகழ்நிலையின் ஊடாக இடம்பெறும். (Zoom Meeting)
10. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாய பீடம், ருஹுணு பல்கலைக்கழகம், மாப்பலான, கம்புறுப்பிட்டிய எனும் முகவரியில் கிடைக்கும் வகையில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது மாத்தறை, கம்புறுப்பிட்டிய, மாபலான, விவசாயப் பீட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
11. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கம்புறுப்பிட்டிய, மாபலான, ருஹுணு பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 041-2292200/2292380 மின்னஞ்சல்: sab@agri.ruh.ac.lk.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ருஹுணு பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**

2024 மார்ச் 31ஆம் திகதி.

## 25 சதவீதம் பெண்களுக்கு (12 ஆம் பக்க தொடர்ச்சி)

இன்று மலையக பெண்கள் இயந்திர வல்லுநர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அதிபர்கள் என பல துறைகளிலும் கோலோச்சி தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஏற்கனவே செங்கொடிச் சங்கத்தின் தலைவியாக மேனகா கந்தசாமியும் உழைக்கும் தொழிலாளர் முன்னணியின் தலைவியாக யோகேஸ்வரி கிருஷ்ணனும் தெரிவாகி தாம் எந்தவிதத்திலும் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை பறை சாற்றினார்கள். எனவே, இந்த நாட்டில் செயற்படும் ஒவ்வொரு மலையக கட்சியும் எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என சகல தேர்தல்களிலும் அதனது தேர்தல் வேட்பாளர்கள் பட்டியல்களில் பெண்களுக்கு தவறாது இருபத்தைந்து சதவீதத்தை ஒதுக்குவதோடு அவர்களுக்காக பரந்த மனப்பான்மையுடன் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு அவர்களின் வெற்றிக்கு ஒத்துழைக்க வேண்டும். இங்கு இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டியுள்ளது. அது என்னவெனில் இந்த நாட்டில் மலையக தமிழர் ஒருவர் ஒரு மாகாணத்தின் ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட வரலாறு இல்லை. ஆனால், சில மாதங்களுக்கு முன்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டு இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்கள் பெருமைப்படக் கூடிய விதத்தில் சிறப்பாக சேவையாற்றிக் கொண்டிருக்கிறார். வட மாகாண சபையின் ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் சிறந்த முறையில் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார். எனவே மலையக கட்சிகள் இனிவரும் காலங்களில் அவற்றின் வேட்பாளர் பட்டியலில் இருபத்தைந்து சதவீதத்தை ஒதுக்கி, மலையக தமிழ் பெண்களில் கல்வியில் சிறந்து விளங்குபவர்களை பாராளுமன்ற அங்கத்தவர்களாக உருவாக வழி வகுக்க வேண்டும். மலையக பெண்களும் அரசியலில் ஈடுபட்டு ஏனைய இனத்தவர்களைப் போன்று சாதனை படைக்க வேண்டும்.


## ஒப்பந்தம் (டெண்டர்) ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
Company No. PB 917 PQ

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் |
|---|---|---|
| **விசேட நோக்க வாகனம்** | | |
| WP ZA-65xx | MITSUBISHI CONCRETE PUMP | 21200cc, DIESEL, JAPAN, RED, 2012 |
| WP ZA-67xx | MITSUBISHI CONCRETE PUMP | 21200cc, DIESEL, JAPAN, RED, 2003 |
| WP ZA-81xx | NISSAN CONCRETE PUMP | 13070cc, DIESEL, JAPAN, WHITE, 2010 |
| WP LF-20xx | ISUZU CONCRETE PUMP | 16600cc, DIESEL, JAPAN, BLUE SILVER, 1991 |

மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரிசீலிக்கும் இடம்:
இல. 344, சிறிமங்கலவத்த, மம்பே, பிலியந்தல.
ஸ்ரீலால் - 076 5731397 | அஜித் - 076 890 5692

2024 ஏப்ரல் 01 (திங்கள்) முதல் ஏப்ரல் 03ம் திகதி (புதன்) வரை
மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)

2024 ஏப்ரல் 03ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டெண்டர் மூடப்படும்

விசாரணைகள்: தலைமையகம் - மீள்பெறுகை,
**சியபத பினான்ஸ் பீஎல்சீ,**
இல. 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
தொலைபேசி: 011 7 605 605 நீட்சி. 1804



## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
## தேயிலை ஆராய்ச்சி சபை

### மேலதிகப் பணிப்பாளர் (ADDITIONAL DIRECTOR) - (01 பதவி)

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**மேலதிகப் பணிப்பாளர்**
**ADDITIONAL DIRECTOR**

**கடமை விபரம்**
ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளர்களுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு / அலகு, விரிவாக்கல் பிரிவுகளின் ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் ஏனைய பணியாளர்களின் மனித வள அபிவிருத்தியை திட்டமிடுதல், கண்காணித்தல் மற்றும் பணிப்பாளரினால் ஒப்படைக்கப்பட்ட ஏனைய பணிகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்பு கூறல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
முதலாம் வகுப்பு சகிதம் நான்கு (04) வருட சிறப்புப் பட்டமொன்று அல்லது விஞ்ஞானம் / விவசாயத்தில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பொறியியல் அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு கலாநிதிப் (PhD) பட்டம்.

**மற்றும்**

முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது பதினெட்டு (18) வருட காலம் ஆராய்ச்சி அனுபவம் அல்லது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பத்து (10) வருட காலம் விரிவாக்க அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் இதில் மூன்று (3) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு.

**மற்றும்**

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் / விரிவாக்கலாளர்களின் பல்துறை குழுக்களுக்கு தலைமை தாங்குதல் மற்றும் வழிநடாத்துவதற்கு நிரூபிக்கப்பட்ட ஆற்றல் இருத்தல் வேண்டும். மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடனான முகாமைத்துவம் தொடர்பான அனுபவம் மேலதிகத் தகைமையாகும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
விஞ்ஞானம் / விவசாயத்தில் நான்கு (04) வருட சிறப்புப் பட்டமொன்று அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் இரண்டாம் வகுப்புப் பிரிவு சகிதம் பொறியியல் மற்றும் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் பிரதி ஆராய்ச்சி / விரிவாக்கல் பணிப்பாளராக மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவை அல்லது தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பிரிவுத் தலைவர் / முதன்மை ஆராய்ச்சி அலுவலர் / முதன்மை ஆலோசனை அதிகாரியாக ஆறு (06) வருட காலம் திருப்திகரமான சேவையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

விஞ்ஞானம் / விவசாயத்தில் பட்டமொன்று அல்லது பொறியியல் சகிதம் இரண்டு (02) வருட கால பட்டப் பின்படிப்பு ஆராய்ச்சிப் பட்டம் அத்துடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் பிரதி ஆராய்ச்சி / விரிவாக்கல் பணிப்பாளராக மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவை அல்லது தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பிரிவுத் தலைவர் / முதன்மை ஆராய்ச்சி அலுவலர் / முதன்மை ஆலோசனை அதிகாரியாக ஆறு (06) வருட காலம் திருப்திகரமான சேவையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் பல்வகை ஒழுக்கக் குழுக்களுக்கு தலைமை தாங்குதல் மற்றும் வழிநடாத்துவதற்கு நிரூபிக்கப்பட்ட இயலுமை இருத்தல் வேண்டும். மனிதர்கள் மற்றும் ஏனைய வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடனான முகாமைத்துவம் தொடர்பான அனுபவம் மேலதிகத் தகைமையாகும்.

**சம்பள அளவுத் திட்டம் :** HM 2-1 (2016) (1) ரூபா 91, 645 – 12x 2,700 – ரூபா 124,045.00 மாதாந்தம்.

**வயது :** 40 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**தெரிவு செய்யும் வழிமுறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

**ஏனைய நன்மைகள்:**

i. இருப்பிட வசதி (முழுமையாக தளபாடமிடப்பட்ட விடுதி) வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

ii. நிலையத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

iii. சேமலாப நிதி: தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10%ஐ ஊழியர் குழாமிற்கான சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிலையமானது 15% (வீதத்தைச்) செலுத்தும். மேலும் நிலையமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதத்தையும் பங்களிப்புச் செய்யும்.

iv. வீட்டுத் தொழிலாளர்கள்

v. தேயிலை ஆராய்ச்சி நிலைய ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.

இப்பதவி நிரந்தரமானது. விண்ணப்பதாரி தொடர்பாக மதிப்பீடொன்றை சமர்ப்பிக்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கலாக முழுமையான சுயவிபரங்கள், உரித்தான கல்விசார்ந்த மற்றும் ஏனைய தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகள், பிறப்பத்தாட்சியின் பிரதி, சேவைச் சான்றிதழ்கள், விஞ்ஞானபூர்வ இதழ்களின் வெளியீடுகள் மற்றும் புத்தாக்க திறன்கள் என்பன தொடர்பான முழுமையான விபரங்களை விணணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவருடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணைய தளத்திற்குப் பிரவேசித்து google படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்யவும். 2024 ஏப்ரல் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் ஆதார ஆவணங்களை கீழே கையொப்பமிட்டவருக்கு தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**



## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
## தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்
## வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், அக்ரகார மருத்துவ காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதி, சாதாரண காப்புறுதி போன்ற காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு உள்நாட்டு காப்புறுதியாளர்களின் மீள்நிதியப்பாளராக செயற்படும் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள ஒரே நிறுவனமாகும். காப்புறுதித் துறையில் தனியார் காப்புறுதியாளர்களின் மீள்நிதியளிப்பு அமர்வு, 17 வருடங்களுக்கு மேலாக அதன் இருப்பில் அடைந்த பெறுமை மிக்க சாதனை கண்டுபிடிப்பு, வளர்ச்சி மற்றும் இலாபம் ஆகியவற்றுடன் உள்நாட்டு காப்புறுதி தொழிலில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **உதவிப் பொது முகாமையாளர் - நிதி**
**Assistant General Manager - Finance**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
**அத்துடன்**
முகாமைத்துவத் துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத் தகைமை
**அல்லது**
ICASL, ACCA அல்லது CIMA வின் சக அங்கத்துவம்.
**அத்துடன்**
கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்திவாய்ந்த வர்த்தக அமைப்பில் முகாமைத்துவ நிலையில் ஆகக் குறைந்தது 10 வருடகால அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**மேற்கூறப்பட்ட தகைமைகள்**

**அல்லது**

ICASL, ACCA அல்லது CIMA வின் சக அங்கத்துவம் மற்றும் பதவிக்குரித்தான விடயப்பரப்பில் முகாமைத்துவ வகுதி 1ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவம்

**சம்பள அளவு** : HM 1-3 -2016: ரூபா 86,865 - 15 x 2,270 – 120,915

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

2. **முகாமையாளர் - உரிமைகோரல்**
**Manager – Claims**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் காப்புறுதி / வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / நிதி / வர்த்தகம் / பொருளாதாரத்தில் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது துறைக்கு இயைபான வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புத் (Masters) தகைமை

   **அல்லது**

   அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

   **அத்துடன்**

   கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்திவாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ நிலையில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்

   **அத்துடன்**

   கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு கீர்த்திவாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ நிலையில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 15 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

   **அல்லது**

2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் 1ஆம் வகுப்பு முகாமைத்துவ வகுதியில் (MM) குறைந்தபட்சம் ஐந்து (5) வருடங்கள் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : HM 1-2 - 2016: ரூபா [81,670 - 15 x 2,270 – 115,720.00]

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

3. **உதவி முகாமையாளர் - மீள்காப்புறுதி**
**Assistant Manager – Reinsurance**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் காப்புறுதி மற்றும் இடர் முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், காப்புறுதியின் வியாபார முகாமைத்துவம், வர்த்தகம், நிதி, முகாமைத்துவம் அல்லது நிதி அல்லது காப்புறுதி துறையில் வேறு ஏதாவது பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தகைமைக்குப் பிந்திய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
2. பதவிக்குரித்தான விடயத்துறை தொடர்பில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் கனிஷ்ட முகாமைத்துவ வகுதி (JM) மட்டத்தின் திருப்திகரமான சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு** : MM 1-2 – 2016 : ரூபா [54,550- 10 x 1,375 - 15 x 1,910 – 96,950.00]

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**நியமனத்தின் தன்மை**

இந்த நியமனம் நிரந்தர நியமனமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் உண்டு.

**சகல விண்ணப்பதாரர்களும்**

- இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமையைச் செய்வதற்கான உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை தன்மையுடையவராகவிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள்**

- உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர் மற்றும் முகவரி சகிதம் தயாரித்துக்கொண்ட சுய தரவு விபரங்கள் சகிதமான விண்ணப்பப் படிவத்தை, சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதி செய்யும் பிரதிகள் சகிதம் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபனம் / நியதிக் சட்டச் சபைகளில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது நிறுவத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- சகல விண்ணப்பங்களையும் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு 2024.04.15ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**


## கொங்கோடியா.....
(12 ஆம் பக்க தொடர்ச்சி)

அதேநேரத்தில் கொங்கோடியா தோட்டத்தின் நிர்வாக பகுதியில் இயங்கி வருகின்ற இந்த தோட்ட வித்தியாலயத்தில் ஆரம்ப பாடசாலையாக கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் காலப்போக்கில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளை கொண்ட ஆரம்ப பிரிவு வித்தியாலயமாகவும் இது செயற்பட்டிருக்கிறது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத நடுப்பகுதி முதல் நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்ததோடு கந்தப்பளையிலும் இடைவிடாது பெய்த கடும் மழையினால் பல இடங்களில் மண்சரிவுகள், வெள்ள அனர்த்தங்களும் ஏற்பட்டன.

இந்த இயற்கை அனர்த்தத்தினால் கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்தில் பாரிய மண் சரிவுகள் ஏற்பட்டு வீதிப் போக்குவரத்தும் குடியிருப்புகளும் பாதிக்கப்பட்டன. மக்கள் பலரும் இடம்பெயர்வு வாழ்க்கைக்கு முகம் கொடுத்திருந்தனர்.

இந்தக் காலப்பகுதியில் கொங்கோடியா மத்திய பிரிவில் நு/கொங்கோடியா தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ள பகுதியிலும் மண் சரிவுகள் ஏற்பட்டன. இது தொடர்பாக தோட்ட மக்கள் கொங்கோடியா தோட்ட நிர்வாகம், நுவரெலியா வலயக் கல்விக் காரியாலயம், நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் என்பனவற்றுக்கு அறிவித்தனர்.

நுவரெலியா மாவட்ட தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினர் கொங்கோடியா தமிழ் வித்தியாலயத்திற்கு வருகை தந்து, நிலைமைகளை ஆராய்ந்து இந்த வித்தியாலயம் அமைந்துள்ள பகுதி மண்சரிவு எச்சரிக்கைக்கு உட்பட்ட பகுதி என எச்சரிக்கை கடிதம் வழங்கினர்.

அதேநேரத்தில் இவ்விடத்தில் அமைந்துள்ள இந்த பழைமையான கட்டடத்தில் கல்வி நடவடிக்கையை முன்னெடுப்பது உசிதமல்ல எனவும் எச்சரிக்கை விடுத்துள்ள அவர்கள் எச்சரிக்கையை மீறி பாடசாலை கட்டடத்தில் கல்வி நடவடிக்கையை தொடரும் பட்சத்தில் ஆபத்துக்கள் ஏற்பட்டால் பாடசாலை நிர்வாகமே பொறுப்பு கூற வேண்டும் எனவும் எச்சரித்தனர்.

இந்த அச்சம் காரணமாக அந்தக் கட்டடத்தில் கல்வி நடவடிக்கைக்கு முற்றுபுள்ளி வைக்க நேரிட்டது. மாணவர்களின் கல்வி நடவடிக்கையை எங்கே முன்னெடுப்பது என்ற கேள்வி பாடசாலை நிர்வாகத்திடமும் பெற்றோரிடமும் ஏற்பட்டது.

அதேநேரத்தில் கொங்கோடியா தோட்ட நிர்வாகத்துக்கு உரித்தான உத்தியோகத்தர் விடுதிகள் எவரும் வசிக்காமல் மூடப்பட்ட நிலையிலேயே இருந்தன. அதில் ஒரு கட்டடத்தைப் பெற்று கல்வி நடவடிக்கையை முன்னெடுக்க முடிவு செய்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் கொங்கோடியா தோட்டத்தில் வீதிப் போக்குவரத்து வசதியுடன் கூடிய இடத்தில் 1932ஆம் ஆண்டு கட்டப்பட்ட தோட்ட வைத்தியசாலை கட்டடம் ஒன்றும் மிக நீண்ட காலமாக இயங்காமல் வெறுமனே மூடப்பட்டிருந்தது. இந்த வைத்தியசாலைக் கட்டடத்தைப் பெற்று அதில் பாடசாலை கல்வி நடவடிக்கையை முன்னெடுக்க பெற்றோர்கள் முடிவு செய்தனர்.

அதற்காக மாணவர்களின் பெற்றோர் தங்களது முயற்சியால் பணம் சேர்த்து வைத்தியசாலை கட்டடத்தின் புனர் நிர்மாண பணி மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அதேநேரத்தில் நுவரெலியா வலய கல்விப் பணிமனையும் இவ் வைத்தியசாலை கட்டடத்தை பாடசாலையாக்கி அங்கு அபிவிருத்திப் பணிகளை செய்யவென நிதியும் ஒதுக்கி தந்து ஒத்துழைப்பையும் தருவதாகவும் தெரிவித்தது.

ஆனால் இவ் வைத்தியசாலை கட்டடத்தை பாடசாலைக்காக நிரந்தரமாகக் கொடுக்க முடியாதென தெரிவித்துள்ள தோட்ட நிர்வாகம், இது தொடர்பில் தோட்ட முகாமைத்துவக் கம்பனிக்கு தெரியப்படுத்துமாறு அறிவித்துள்ளது. இந்நிலையில் பெற்றோர் முன்னெடுத்ததோட்ட வைத்தியசாலை கட்டட புனர் நிர்மாண பணியும் முடக்கப்பட்டுள்ளது.இம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு தோட்ட நிர்வாகம் கரம் நீட்டத் தவறிய நிலையில் கொங்கோடியா கீழ்ப் பிரிவு தோட்டத்தில் காமன் கூத்து நடத்தும் இடத்துக்கு அருகில் அமைந்துள்ள முதியோர் சங்க கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக பாடசாலை கல்வி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் கல்வி நடவடிக்கைக்கு ஏற்ற வசதி இல்லாத இந்த கட்டடத்தில் ஒரு அதிபர் ஆறு ஆசிரியர்களுடன் இட நெருக்கடிக்கு மத்தியில் 60 மாணவர்களின் கல்வி நடவடிக்கையை முன்னெடுக்கும் அவல நிலையை அங்கு சென்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதேநேரத்தில் தற்காலிக கல்வி நடவடிக்கை தொடரப்பட்டு வரும் தோட்ட முதியோர் சங்க கட்டடம் அமைந்துள்ள பகுதி வலப்பனை பிரதேச கல்வி வலையத்திற்கு உட்பட்டது எனவும் சொல்லப்படுகிறது. இருப்பினும் இந்த கட்டடம் பல இடங்களில் வெடிப்படைந்து காணப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் ஆசிரியைகளுக்கான மலசல கூட வசதிகளும் இல்லை, குடிக்க சுத்தமான தண்ணீர் போன்ற அடிப்படை சுகாதார வசதிகளும் இல்லை என்பதும் பாடசாலை ஆவணங்களை பாதுகாக்க, வசதிகளும் இல்லாத நிலையில் சொல்லொணா துயரங்களுக்கு மத்தியில் கல்வி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்றை அமைக்க கொங்கோடியா தோட்டத்தில் பாதுகாப்பான இடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பெற்றோர், நுவரெலியா கல்வி திணைக்களத்துக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வழங்கிய கடிதத்துக்கும் தோட்ட நிர்வாகம் இதுவரை உரிய பதில் வழங்கவில்லை.

அதேநேரத்தில் நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கல் நிலையில் புதிய பாடசாலைக் கட்டடம் ஒன்றை அமைப்பதும் சாத்தியமற்றது ஆகையால் தோட்டத்தில் மூடிக்கிடக்கும் தோட்ட வைத்தியசாலை கட்டடத்தின் ஒரு பகுதியையேனும் பாடசாலைக்கெனத் தந்துவிட்டு மீதிப் பகுதியில் வைத்தியசாலையை நடத்திச் செல்லலாம் என பெற்றோர், பழைய மாணவர்கள், தோட்ட தலைவர்கள் என பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன் மாணவர்களின் இந்த அவல நிலை தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வேலு யோகராஜ் கொண்டு சென்றதோடு மட்டுமல்லாது தோட்ட நிர்வாக அதிகாரியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். கொங்கோடியா தோட்டத்தில் ஆரம்பக் கல்வியைத் தொடரும் 60 மாணவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு நிம்மதியாக கல்வி கற்க பாதுகாப்பான கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும். இந்த நிலையில் காலம் தாழ்த்தாது முன்வரப்போவது யார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினவிழா



சர்வதேச மகளிர் தினவிழா கடந்த வாரம் கொட்டாஞ்சேனையில் நடைபெற்றது.

கலை, ஊடகம், அரசியல் உள்ளிட்ட பல்வேறு தொழில்சார்துறைகளிலும் சிறப்பாக பணியாற்றிய பெண் சாதனையாளர்கள் பாராட்டும் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அதிதிகளாக கலந்துகொண்ட மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ் சிவலிங்கம், ஐ.டி.எம் கல்வி நிறுவன தலைவர் ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோரிடமிருந்து தனியார் வங்கித்துறையில் கடந்த வருடம் சாதனையாளராக தெரிவாகியிருந்த சுபாஷிணி கனகரட்ணம், நுவரெலியா துணை மேயராகவிருந்த யதர்ஷனா புத்திரசிகாமணி ஆகியோர் விருதுகளை பெற்றுக்கொண்டனர், இலங்கை வானொலி அறிவிப்பாளர் நாகபூஷணி கருப்பையா, ஐக்கிய மக்கள் சக்தி செயற்பாட்டாளர் உமா சந்திரபிரகாஷ், அழகுக்கலை விரிவுரையாளர் பிரதீபா சூரியமூர்த்தி, மலையக மகளிர் அமைப்பாளர் ஜோதி கனகரட்ணம், எஸ் லோஷினி உள்ளிட்டோரையும் படங்களில் காணலாம்.





# 'ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு' நூல் அறிமுக விழா




'ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு' எனும் நூல் அறிமுக விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் விநோதன் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு கலை, இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் 'சமூக சிற்பி' வி.எஸ்.துரைராஜாவின் (சத்தியப் பிரமாண ஆணையாளர், தலைவர் தமிழ்க் கல்லூரி – கனடா) நூல் அறிமுக விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமை தாங்குவதுடன், சிறப்பு அதிதியாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். கௌரவ அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர், முனைவர் சிவலிங்கம் சதீஷ்குமார் கலந்து கொள்வார் .

இதன்போது தமிழ் வாழ்த்தை கொ/சைவ மங்கையர் வித்தியாலய மாணவி சக்திகா சிறிகுமரன் இசைக்கவுள்ளார். வரவேற்புரையை லீலாவதி மோகனசுந்தரமும், வாழ்த்துரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் த.அரியரத்தினம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும், நூலாசிரியர் அறிமுகத்தை ஆரோக்கியம் பிரான்சிஸும், நூல் அறிமுகத்தை சிரேஷ்ட ஊடகவியலாளர் உமாசந்திரா பிரகாஷும், நன்றியுரையை ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரையும், ஏற்புரையை நூலாசிரியர் 'சமூக சிற்பி' வி.எஸ்.துரைராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

# செஞ்சோலையில் பரதநாட்டிய அரங்கேற்றம்



கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் மூன்று மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் 29.03.2024 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

செஞ்சோலை, அன்பு, பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் நிறுவுநர் செல்வராசா பத்மநாதனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிவலிங்கம் தாட்சாயினி, உதயகுமார் பிரதீபா, குமார் இசையரசி ஆகியோர் அரங்கப்பிரவேசம் மேற்கொண்டனர்.

செஞ்சோலை வளாக நடன ஆசிரியை நுண்கலைமாணி சுகன்யா புவிராஜ் நட்டுவாங்கம் மேற்கொண்டதுடன் செல்விகளை அரங்கேற்றம் காணப் பயிற்றுவித்து அரங்கிற்கு அழைத்துவந்தார். விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை அரங்கேற்றத்திற்கான நுட்பப் பயிற்சிகளை வழங்கியிருந்தார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராகவும் கிளிநொச்சி பிரதேச செயலர் தவச்செல்வம் முகுந்தன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், யாழ். பல்கலைக்கழக நடனத்துறை முன்னாள் தலைவர் முனைவர் கிருஷாந்தி ரவீந்திரா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடனபாட சிரேஷ்ட விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.



நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக பாட்டு – யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கமலகாந்தன் வர்ஜிகன், வயலின் ஆசிரியர் கார்த்திகேசு குகபரன், மிருதங்கம் கலாவித்தகர் கந்தசாமி நந்தகுமார், புல்லாங்குழல் இராமகிருஷ்ணராஜா சேதுமாதவன் ஆகியோர் பங்குகொண்டனர்.

சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட பிள்ளைகளும் கலை ஆர்வலர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.







கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில், பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் கடந்த புதன்கிழமை இரவு இஃப்தார் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது, மௌலவி இனாம் இன்ஷாப் இஸ்லாமிய மத அனுஷ்டானங்களை மேற்கொண்டார். நிகழ்வில் விஷேட அதிதியாக சமூக சேவையாளர் கே.எம்.ஜே.பஷீர் கலந்துகொண்டார். சாயி நிலையத்தின் சார்பில் அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்: எஸ்.ராமதாஸ்)

## 'குயின் விக்டோரியா' அதிசொகுசு கப்பல் கொழும்புக்கு வருகை

சிங்கப்பூரிலிருந்து 'குயின் விக்டோரியா' எனும் சொகுசு பயணிகள் கப்பல், 1,812 சுற்றுலா பயணிகளுடன் நேற்று (30) அதிகாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் 964 பணியாளர்களும் வருகை தந்துள்ளதுடன், பிரித்தானியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே வருகை தந்துள்ளனர்.

காலி, கண்டி, பின்னவல ஆகிய இடங்களுக்கு இச்சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

VIVEKANS NETBALL LEAGUE

## கொழும்பு விவேகானந்தாவின் மகளிர் தின நிகழ்வுகளும் வலைப்பந்தாட்டப் போட்டியும்

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் பழைய மாணவிகளுக்கிடையில் நடத்தும் வலைப்பந்தாட்ட போட்டிகள் இன்று காலை 8.30 முதல் மாலை 5 மணிவரை கல்லூரியில் நடைபெறவுள்ளன. .

பழைய மாணவர் சங்கத்தின் மகளிர் பிரிவு நடத்தும் இப்போட்டிகளில் ஐந்து அணிகள் தம்முடன் மோதும் வகையில் போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு இடங்களை பெறும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

எதிர்வரும் ஏப்ரல் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 வரை மகளிர் தினத்தையொட்டிய பல கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம், மாலையில் வலைப்பந்தாட்ட இறுதி போட்டியும் மூன்றாம் இடத்துக்கான போட்டியும் நடைபெறவுள்ளன.

மகளிரை கௌரவிக்கும் இந்நிகழ்வுகளுக்கு விவேகானந்தா பழைய மாணவ, மாணவிகள் வருகைதருமாறு பழைய மாணவர் சங்கம் கோருகின்றது.

92 ஆவது அகவையில் தினகரன்:

## என் இளமைக்கால எழுத்துக்களுக்கு உயிர் கொடுத்த பெருமைக்குரிய பத்திரிகை " தினகரன்"



நினைத்துப் பார்க்கிறேன்.....
மாளிகாவத்தை தாருஸ்ஸலாம்
மகா வித்தியாலயம்.
ஏழாம் ஆண்டுவரை
சிங்கள மொழியில்.
எட்டாம் ஆண்டில் தமிழ் மொழி
என்னை அரவணைத்துக்
கொண்டது.
ஆர். சிவகுரு நாதன் (தினகரன்
பிரதம ஆசிரியர்)
அன்புக்கும், பண்புக்கும்,
புன்னகை பூத்த முகத்துக்கும்
சொந்தக்காரர்.
சிறுவனாயிருந்த என்னைப்
போன்றோருக்கு
எல்லா நேரமும் தினகரன்
ஆசிரிய பீடத்தில் சந்தித்து,
உற்சாகமளித்தவர். வளைகுடா
யுத்தம் இடம் பெற்றுக்கொண்
டிருந்த கால கட்டத்தில், ஓர்
அரசாங்கப் பத்திரிகையில்
என்னுடைய "சதாம் போடும்
செஞ்சரிகள்" என்ற கவிதையை
தைரியமாகப்
பிரசுரித்தவர்.
இதன் வாயிலாக, நாடளாவிய
ரீதியில் என் எழுத்துக்களுக்கு அங்
கீகாரம் கிடைக்கவழி செய்தவர்.
திருமதி ஆனந்தி பாலசிங்கம் :
“சிறுவர் உலகம்” பகுதிப்
பொறுப்பாளர்
என்னுடைய உணர்வுகளும்,
சிந்தனைகளும் எழுத்துக்களாக
உருமாறி, நர்த்தனமாடிக் கொண்
டிருந்தபொழுது,களம் அமைத்துக்
கொடுத்த பெருமைக்குரியவர்.
நான் எப்பொழுதும் அவரை
"அக்கா' என்றே அழைப்பதுண்டு.
என்றென்றும் என் அன்புக்கும் நன்
றிக்கும் உரியவர் ஆனந்தி அக்கா.
இவர்களுடன்
"கவிதைச்சோலை" பகு
திக்குப்பொறுப்பான
சித்தீக் காரியப்பர்




“கல்வி அரங்கு” பகுதிக்குப்பொ
றுப்பான எம்.எஸ்.முஹம்மத்
“இதய கோலங்கள்” பகுதிக்குப்
பொறுப்பான எஸ்.அருளானந்தம்
அனைவரும் என் எழுத்துக்களின்
உயிரோட்டத்திற்கு நீர் பாய்ச்சிய
வர்கள்.

"இளநெஞ்சன்"முர்ஷிதீன்
மாளிகாவத்தை







அம்பாறை கல்வாரிச் சபைனால் நடத்தப்படும் பாடசாலையில் கல்வி கற்கும் 30 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் 2000/= பெறுமதியான டீ.எஸ்.ஐ வவுச்சர்களும், 306 பி 2 கொழும்பு லயன்ஸ் கழக வட்டத்தின், லயன் ஜெயச்சந்திரன், லயன் தவநிதி யினால் கழகத்தலைவர் லயன் இராசகுலசிங்கத்தின் தலைமையில் வழங்கப்பட்டது.

# லக்ஸ் சரசவிய விருது விழா



விழாவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் முகமாக அரங்கேற்றப்பட்ட கலைமகள் அபிநந்தன நடனத்தைப் படத்தில் காணலாம்.






லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், இந்திகா காரியவசம், பிரபல சினிமா நடிகை மாலினி பொன்சேகா, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் தமாரா குணவர்தன ஆகியோர் விழா மண்டபத்தில் அமர்ந்திருக்கும் காட்சி.



2019ஆம் ஆண்டின் சிறந்த ஒப்பனைக்கான விருதை, நாரத தொட்டகமுவவின் சார்பாக தனுஷ்க குணதிலக அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் தினித் சிந்தக கருணாரத்னவிடமிருந்து பெற்ற போது



2019ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமான "தெகலா புருது கெனெக்" திரைப்படத்திற்குரிய விருதினை லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்திடமிருந்து மலித் ஹேகொட பெற்றுக் கொண்ட போது



ரணபால போதினாகொட நினைவு இலக்கிய விருதை ஸ்ரீகஹவலவுக்கு, துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிரிபால டி. சில்வா வழங்கிய போது



2019ஆம் ஆண்டின் சிறந்த நடிகர் பிமல் ஜயகொடி (தெகலா புருது கெனெக்)



2020ஆம் ஆண்டின் ரணபால போதினாகொட ஞாபகார்த்த இலக்கிய விருதை திலகரத்ன குருவிட்ட பண்டாரவுக்கு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ வழங்கிய போது



2019ஆம் ஆண்டின் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதை "சங்சாரே தடயக்காரயா" என்ற திரைப்படத்தில் இசை அமைத்த சுமுது குருகே, லேக்ஹவுஸ் நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்னவிடமிருந்து பெறும்போது



2020ஆம் ஆண்டின் சிறந்த எடிட்டிங்கிற்காக விருதை "பாங்சு" திரைப்படத்திற்காக சித்தும் சமரஜீவ, லேக்ஹவுஸின் சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்கவிடமிருந்து பெறும்போது



2020ஆம் ஆண்டிற்காக சிறந்த இசையமைப்பாளருக்காக விருதை "பாங்சு" திரைப்படத்தின் இசையமைப்பாளர் சிந்தக லக்மால் ஜயகொடி லேக்ஹவுஸ் செயற்பாடுகள் பணிப்பாளர் சட்டத்தரணி மஞ்சுள மாகும்புரவிடமிருந்து பெறும் போது



2019ஆம் ஆண்டின் சிறந்த இயக்குநருக்கான விருதை "தெகலா புருது கெனெக்" திரைப்படத்தை இயக்கிய மலித் ஹேகொட பெற்ற போது



2020ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமான "த நியூஸ் பேப்பர்" திரைப்படத்திற்காக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன முன்னணி நடிகை மாலினி பொன்சேகாவிடமிருந்து விருதினைப் பெற்றுக் கொண்ட போது



2019ஆம் ஆண்டின் சிறந்த நடிகை சமாதி லக்சிரி (தெகலா புருது கெனெக்)



2019ஆம் ஆண்டின் துணை நடிகைக்கான விருதை "விஜயபா கொல்லய" திரைப்படத்திற்காக சுலக்சி ரணதுங்கவுக்கு லேக்ஹவுஸ் ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரியினால் வழங்கப்பட்ட போது



2020ம் ஆண்டின் சிறந்த நடிகை நீட்டா பெர்னாண்டோ (பாங்சு)



திறமைக்கான விருது இசுறு லொகுஹெட்டியாராச்சி (ஹுஸ்ம)



கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் நினைவு விருது சதிஸ்சந்திர எதிரிசிங்கவுக்கு



2019ஆம் ஆண்டிற்கான சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருதை "விஜயபா கொல்லய" திரைப்படத்திற்காக பேராசிரியர் சுனில் ஆரியரத்ன மற்றும் எச். டி. பிரேமசிரி ஆகியோர் பெறும்போது



ஜெக்சன் அந்தோனிக்காக வழங்கப்பட்ட கௌரவம்



2019ஆம் ஆண்டின் பிரபலமிக்க நடிகர் உத்திக பிரேமரத்ன, நடிகை செனாலி பொன்சேகா



2020ஆம் ஆண்டின் சிறந்த நடிகருக்கான விருது குமார திரிமெதுர (த நிவ்ஸ் பேப்பர்)



2020ஆம் ஆண்டிற்காக சிறந்த பாடலாசிரியர் விருதை கலாநிதி சுனில் ஆரியரத்ன (த நியூஸ் பேப்பர்) லேக்ஹவுஸ் நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்னவிடமிருந்து பெறும்போது



2019ம் ஆண்டுக்கான சிறந்த பாடலாசிரியர் லலித் ரத்நாயக்கா (விசம பாக)



2020ம் ஆண்டின் பிரபலம் மிக்க திரைப்படத்திற்கான விருதினை "சுனாமி" திரைப்படத்தின் இயக்குநர் சோமரத்ன திசாநாயக்க மற்றும் தயாரிப்பாளர் ரேணுகா பாலசூரிய ஆகியோர் முன்னணி சினிமா நடிகை சபீதா பெரேராவிடமிருந்து விருதினைப் பெறும் போது



2020ஆம் ஆண்டின் சிறந்த ஜனரஞ்சக நடிகை தினக்ஷி பிரியசாத்



2020ஆம் ஆண்டின் பிரபலமிக்க நடிகர் களன குணசேகர முன்னணி சினிமா நடிகை தில்ஹானி ஏகநாயக்காவிடமிருந்து விருதினைப் பெறும்போது



2019ஆம் ஆண்டின் சிறந்த படப்பிடிப்பாளருக்கான விருதினை தனுஸ்க குணதில, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுச பெல்பிட்டிவிடமிருந்து பெறும்போது



லக்ஸ் பிரபல நடிகர் ஹேமால் ரணசிங்க முன்னணி சினிமா நடிகை சபீதா பெரோராவிடமிருந்து விருதினைப் பெறும்போது



2020ஆம் ஆண்டின் சிறந்த பாடகர் ஹர்சன திசாநாயக்கா (சுனாமி)



லக்ஸ் பிரபல நடிகை சுனுத்ரி பிரியசாத் யுனிலீவர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் சமாரா சில்வாவிடமிருந்து விருதினைப் பெறும்போது

இந்நாட்டுச் சினிமாவின் பிரமாண்ட விருது வழங்கும் விழாவான லக்ஸ் சரசவிய விருது விழா 35ஆவது தடவையாக மிகப் பிரமாண்டமான முறையில் கடந்த 28ஆம் திகதி சினிமா ராணி மாலினி பொன்சேகா தலைமையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் திரையிடப்பட்ட திரைப்படங்கள் இங்கு விருது வழங்குவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டதோடு, ஐந்து வருட மௌனத்திற்குப் பின்னர் சரசவிய விருது வழங்கும் விழா மீண்டும் ஆரம்பமாகியது, சினிமாத் துறையில் ஆர்வமுள்ள அனைவருக்கும் ஒரு வகையான நம்பிக்கையை ஏற்படுத்தியது.

நட்சத்திர திரைப்பட விருது வழங்கும் நிகழ்வை மிகவும் கோலாகலமாக நடாத்துவதற்கு லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, செயற்பாட்டுப் பணிப்பாளர் சட்டத்தரணி மஞ்சுள மாகும்புர, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, ஆசிரியர் பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி உள்ளிட்ட லேக்ஹவுஸ் நிர்வாகமும் சரசவிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி நுவன் நயனஜித் குமார மற்றும் விருது வழங்கும் நிகழ்வின் பிரதான அனுசரணை நிறுவனமான யுனிலீவர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷமாரா சில்வா உள்ளிட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். சரசவிய விருது வழங்கும் விழாவின் ஆரம்பத்தினை நினைவு கூர்ந்தால் , 1964ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சரசவிய விருது வழங்கும் விழாவின் சிறப்பம்சம் என்னவென்றால், 1960, 1961, 1962, 1963 ஆகிய நான்கு வருடங்களில் தி ரையிடப்பட்ட அனைத்து திரைப்படங்களும் விருதுக்காக உள்வாங்கப்பட்டதாகும்.

இதன்போது சரசவிய விருது வழங்கும் விழா இரண்டு கட்டங்களாக இடம்பெற்றதுடன், முதற்கட்டமாக ரசிகர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து சிறந்த திரைப்படங்கள் மீள் திரையிடப்பட்டன. இதன்போது ஒவ்வொரு படத்தின் தயாரிப்பிலும் பங்களித்தவர்கள் கலந்து கொண்டதோடு, திரைப்படம் திரையிடுவதற்கு முன்னர் தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர், நடிகைகள், ஒளிப்பதிவாளர்கள் என அனைத்து கலைஞர்களும் ரசிகர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.

அந்தக் காலத்தில் திரையரங்குகளின் முன்னால் திரைப்பட ரசிகர்கள் திரைப்படத் திரையிடலுக்கு வரும் நடிகர், நடிகைகளைப் பார்க்கும் ஆவலுடன் வரிசையில் நின்றதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு காத்திருந்த சினிமா ரசிகர்களுக்குத் தேவையாக இருந்தது தமது மனதில் இடம்பிடித்திருந்த பிரபல நடிகர், நடிகைகள், கலைஞர்களைப் பாரத்துவிட வேண்டும் என்பதுதான்.

அதிர்ஷ்டம் இருந்தால், அவர்களுடன் ஒரிரு வார்த்தைகள் பேசி, கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். சிலர் தமது ஆடைகளில் அல்லது தோலில் அவ்வாறான கையொப்பங்களைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் சினிமாத் துறையின் பிரபலங்களுடனான நேர்காணலின் போது கேட்டக்கூடியதாக இருந்தது. விருது வழங்கும் விழாவின் இரண்டாம் கட்டமாக சரசவிய விருதுகள் வழங்கும் விழா வெகு விமரிசையாக நடைபெற்றதோடு, சில நாட்களிலேயே சினிமா விருது வழங்கும் விழா நடந்து முடிந்தாலும், அதற்கான ஏற்பாடுகள் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டதாக அது தொடர்பான நினைவுகளை மீட்கும் பிரபலங்கள் கூறுகின்றனர்.

சுயாதீனமான மற்றும் நடுநிலையான நடுவர் குழுவினால் இறுதி முடிவு வழங்கப்பட்டதோடு, நடுவர் குழுவினர் அந்தந்த திரைப்படங்களைப் பார்த்து இறுதி தீர்ப்புகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பான இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுவதும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சரசவிய விருது வழங்கும் விழா கோலாகலமாக ஆரம்பமானது. அதிதிகள் மேளம் மற்றும் நடனங்களுடன் அழைத்து வரப்பட்டனர். ஸ்ரீ சந்திரரத்ன மானவசிங்கவின் பக்திப் பாடல் வரிகளும், பண்டிட் அமரதேவாவின் இனிய மெல்லிசை இசையும் எப்பொழுதும் அவர்களைப் பற்றிய நினைவுகளை மனதில் எழுப்பும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த இனிமையுடன் நட்சத்திர விருதுகள் வழங்கும் விழா ஆரம்பமானது. இதன்போது 56 விருதுகள் வழங்கப்பட்டதோடு, 2019ஆம் ஆண்டின் சிறந்த நடிகையாக "தெகலா புருது கெனெக்" என்ற திரைப்படத்தில் நடித்தமைக்காக சமாதி லக்சிரியும், 2020ஆம் ஆண்டின் சிறந்த நடிகையாக 'பாங்சு' திரைப்படத்திற்காக நீட்டா பெர்னாண்டோவும், 2019ஆம் ஆண்டின் சிறந்த நடிகராக "தெகலா புருது கெனெக்" திரைப்படத்தின் நடிப்புக்காக பிமல் ஜயகொடியும், 2020ஆம் ஆண்டின் சிறந்த நடிகராக "த நியூஸ் பேப்பர்" திரைப்படத்தில் நடித்ததற்காக குமார திரிமாதுரவும், 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படமாக "தெகலா புருது கெனெக்" திரைப்படத்திற்காக அதன் தயாரிப்பாளரான முஹம்மது ஆதமலி மற்றும் 2020ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமாக "த நியூஸ் பேப்பர்" என்ற திரைப்படத்திற்காக அதன் தயாரிப்பாளரான போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவும் சரசவிய சினிமா விருதை வென்றமை விசேட அம்சமாகும். சிங்களத் சினிமாத்துறை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் இவ்வாறான காலத்தில் அஸோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் நிறுவனம் சரசவிய விருது வழங்கும் நிகழ்வை 35ஆவது தடவையாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்திருப்பது கலை ஆர்வம் கொண்ட அனைவரினதும் பாராட்டையும், வரவேற்பையும் பெற்ற ஒரு நிகழ்வாகும். இதன்போது எம்மோடு தொடர்ந்தும் இணைந்திருக்கும் லக்ஸ் உற்பத்தி நிறுவனமான யுனிலீவர்ஸ் நிறுவனத்தினையும், கொமர்சல் வங்கியையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

ரசிக கொட்டுதுரகே
தமிழில் – எம். எஸ் முஸப்பிர்

# குரோதி வருடப்பிறப்பு சுப நேரங்கள்

**"கோரக் குரோதிதனிற் கொள்ளைமிகுங் கள்ளரினாற்
பாரிற் சனங்கள் பயனடைவார் கார்மிக்க
அற்ப மழைபெய்யு மஃகங் குறையுமே
சொற்பவிளை வுண்டெனவே சொல்"**

குரோதி வருடத்தில் எல்லா உலகிலும் மக்கள் எப்பொழுதும் கோபம், போலி எண்ணத்தில் சிந்திப்பவர்களாகவும் அற்ப குணமுடையவர்களாகவும் விளங்குவர். நெல் விளைச்சல் மத்திமமாகவும் வருட மழை வீழ்ச்சி அரைவாசியாகவும் இருக்குமாம். மேலும் குரோதி வருஷ ஜாதகத்தின்படி முன்மழை மிகுதி பின்மழை சமம், உணவுப்பொருள் விருத்தி, கமத்தொழில் விருத்தி, கைத்தொழில் விருத்தி, அரச சேவை நிறைவு, கல்வி விருத்தி, சமய முன்னேற்றம், பொருட்கள் விலையேற்றம் உண்டாகலாம்.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புது வருடம் பிறக்கும் நேரம்**

மங்களகரமாக குரோதி வருஷம் வாக்கிய பஞ்சாங்கப்படி பங்குனி 31ஆம் திகதி (13/04/2024) சனிக்கிழமை இரவு 8.15 மணியளவில் குரோதி வருஷம் பிறக்கின்றது. அன்றைய தினம் மாலை 4 மணி15 நிமிடம் முதல் நள்ளிரவு 12.15 வரையிலான காலம் விஷு புண்ணிய காலமாகும்.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புது வருடம் பிறக்கும் நேரம்**

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி பங்குனி 31ஆம் திகதி (13/04/2024) சனிக்கிழமை இரவு 9.04 மணியளவில் குரோதி வருடம் ஆரம்பமாகின்றது. மேலும் அன்றைய தினம் விஷு புண்ணிய காலமாக பங்குனி 31ஆம் திகதி(13/04/2024) மாலை 5.04 மணி முதல் நள்ளிரவு 1.04 வரை திருக்கணிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கத்தின் படி குரோதி வருஷத்தில் தோஷ நட்சத்திரங்களாக மிருகசீரிடம், திருவாதிரை புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம் சித்திரை, விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை, அவிட்டம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து நல்ல கருமங்களை செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி விஷு புண்ணிய காலத்தில் அதாவது பங்குனி 31ஆம் திகதி (13/04/2024) மாலை 4.15 இல் இருந்து நள்ளிரவு 12.15 வரையான காலத்தில் மருத்து நீர் தேய்த்து சிரசில் புன்னை இலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானம் செய்து தோஷ நிவர்த்தி பெறுவது நன்மையானதாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி பங்குனி 31ஆம் திகதி (13/04/2024) மாலை 5.04 முதல் பின் இரவு 1.04 வரையிலான காலம் விஷு புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில் மருத்துநீர் வைத்து தலையில் ஆலிலையும் காலில் இலவம் இலையும் வைத்து ஸ்நானம் செய்வது மிகவும் சிறப்பானதாகும்.

குரோதி வருஷப் பிறப்பு அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை துயில் எழுந்து ஸ்நானம் செய்து நித்திய கருமங்களை முடித்து கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலான மங்கல பொருட்களை தரிசித்து சூரியனுக்கு பொங்கல் பூஜை வழிபாடுகள் மேற்கொண்டு விருந்தினர்களை உபசரித்து சிரார்த்தம், தர்ப்பணம் செய்ய இருப்போர் அதனையும் நிறைவேற்றி, உறவினர் நண்பர்களுடன் முன்போல் போஜனம் மேற்கொண்டு சுகந்த, சந்தன, புஷ்பாதிகளை அணிந்து புது வருடத்தில் செயற்படுத்தக்கூடிய நற்கருமங்களை சிந்தித்து, மங்களகரமாக வாழ்வோமாக. அத்துடன் ஸ்நானம் செய்ததன் பின்னர் இஷ்ட தெய்வங்களை வழிபட்டு முதியோர் பெரியோர்களிடம் ஆசி பெற்று எள்ளு அன்னம், நெல்லிக்காய் துவையல் முதலியவற்றுடன் அறுசுவை பதார்த்தங்களையும் போஜனம் செய்வது சிறப்பானதாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி குரோதி வருடப்பிறப்பின் புத்தாடை நிறமாக கபிலம், பட்டு போன்ற வெண்மையான பட்டாடை அல்லது வெள்ளைக் கரை கொண்ட புதிய பட்டாடை அணிவது சிறப்பானதாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி குரோதி வருஷ பிறப்பு புத்தாடையாக கரு நீல நிற பட்டு அல்லது நீலக் கரை வைத்த புது வஸ்திரம் அணிவது சிறப்பானதாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி புத்தாடை ஆபரணமாக நீலக் கல் அல்லது வைரம் போன்ற ஆபரணம் அணிந்து கொள்வது சிறப்பானதாகும். அதே வேளையில் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புதிய ஆபரணமாக இந்திர நீலம் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிவது சிறப்பானதாகும்.

**புதுவருஷ கைவிஷேட நேரங்கள்**

குரோதி வருஷ கைவிஷேட நேரங்களாக வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை முதல் நாள் (14/04/2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 7.57 இல் இருந்து 9.56 வரையிலும் அதே நாள் 9.59 இல் இருந்து 12.01 வரையிலான நேரமும் அதே நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் மாலை 6.17 இல் இருந்து 8.17 வரையிலான காலமும், மறுநாள் சித்திரை இரண்டாம் நாள் திங்கட்கிழமை பகல் 9.08 இல் இருந்து 9.51 வரையிலான நேரமும் அதே நாள் திங்கட்கிழமை பகல் 9.55ல் இருந்து 10.30 வரையிலான காலமும் கை விஷேடத்திற்குரிய சுப நேரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குரோதி வருஷம் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட நேரங்களாக சித்திரை 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியில் இருந்து 11.15 வரையிலான நேரமும் அதே நாள் மாலை 6.30 ல் இருந்து 7.45 வரையிலான நேரமும் சித்திரை 2ஆம் திகதி திங்கட்கிழமை அதாவது (15/04/2024 )காலை 6.00 ல் இருந்து 7.25 வரையிலான நேரமும் அதே நாள் திங்கட்கிழமை பகல் 9.35 ல் இருந்து 10.35 வரையிலான நேரம் கைவிஷேட நேரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குரோதி வருஷம் வியாபாரம் செய்தல், புதுக்கணக்கு பதிதல், வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2ஆம் நாள் (15/04/2024) திங்கட்கிழமை பகல் 9.08 இல் இருந்து 9.51 வரையிலான நேரமும் அதே நாள் திங்கட்கிழமை பகல் 9.55 இல் இருந்து 10.30 வரையிலான நேரமும் சித்திரை 05 அதாவது (18/04/2024) வியாழக்கிழமை பகல் 10.49 இல் இருந்து 11.50 வரையிலான நேரம் வியாபாரம் செய்வதற்கும் புதுக்கணக்கு பதிவதற்கும் சிறப்பானதாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி குரோதி வருஷப் பிறப்பின் வியாபாரம் புது கணக்குப்பதிவதற்கு சித்திரை 2ஆம் நாள் (15/04/2024) திங்கட்கிழமை பகல் 10.00 ல் இருந்து 11.30 வரையிலான காலமும் சித்திரை 20ம் நாள் (03/05/2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 ல் இருந்து 10.15 வரையிலான காலமும் சித்திரை 23 (05/05/2024) திங்கட்கிழமை காலை 9.30 இல் இருந்து 10. 40 வரையிலான காலமுமம் சுப நேரங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாக்கிய பஞ்சாங்கத்தின் படி கிரக சஞ்சாரம்**

குருசார பலன் குரு வருஷதியாக சித்திரை மாதம் 17ஆம் திகதி (30/04/2024) வரை மேஷ ராசியில் சஞ்சாரம் செய்யும். மழையும் விளையும் அகமலிவும் ஜனங்களுக்கு சுகமும் பயிர்கள் சிரமப்பட்டு விருத்தி ஆதலும் ஏற்படும். சித்திரை 18 (01/05/2024) முதல் வருடாந்தம் வரை அதாவது வருடம் முழுவதும் ரிஷப ராசியில் குரு பகவான் சஞ்சாரம் செய்வதால் பசுக்கள், சிசுக்கள், கர்ப்பஸ்தரிகளுக்கு பாதிப்பும் ஏற்படலாம். சனிசார பலன் சனி வருடம் முழுவதும் கும்ப ராசியில் சஞ்சரிப்பதால் அற்ப மழை, பயிர்க்கேடு, விலை ஏற்றம் அரசர் புலவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படலாம். மீன ராசியில் வருடம் முழுவதும் ராகுவும் கன்னி ராசியில் கேதுவும் நிற்பதால் நன்மழையும் பயிர் செழிப்பும் ஏற்படும்.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி முகூர்த்த விஞ்ஞாபனம்.**

முகூர்த்த விஞ்ஞாபனம் சித்திரை 23ஆம் திகதி (06/05/2024) முதல் ஆனி 22ஆம் திகதி(06/07/2024) வரையும் பங்குனி 08ஆம் திகதி முதல் பங்குனி 19 வரையிலான காலத்தில் சுக்கிரன் அஸ்தமனமாக இருப்பதால் அக்காலத்தில் குறித்த சுப முகூர்த்தங்களுக்கு பிரிதி செய்வது நல்லதாகும்.



டாக்டர் ஜோதிட கலாமணி
*சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா.*
ஸ்ரீவித்யா ஜோதிடம், கொழும்பு.


## சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வர்த்தகம்**

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

கொழும்பு 10, பஞ்சிகாவத்த வீடொன்று விற்பனைக்கு. வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை களஞ்சியத்திற்கு பொருத்தமானது. தொடர்பு 075 6555272, 077 511 7299. 020201

**வேலைவாய்ப்பு**

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

10 ஓட்டுநர்களுக்கான வெற்றிடங்கள்போக்குவரத்து விதிகள் பற்றிய நல்ல அறிவு50 வயதுக்கு கீழ்பட்டவர்கள்.வாடிக்கையாளர் சேவை திறன்கள்ஆங்கிலம் பேசும் எழுதும் திறன்.மாற்றிக் கொள்ளக் கூடிய பணிநேரங்கள்.கூடுதல் நேரம், உணவு மற்றும் காப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கு உரிமை உண்டு.இந்த விளம்பரம் கிடைத்த 10 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பத்தை info@eptt.lk அல்லது தபால் மூலம் அனுப்பவும். HR Department, Executive Premium Transport & Travels (Pvt) Ltd6th Floor, Marino Mall Tower, 590, Galle Road, Colombo 03தொடர்புக்கு 0765565504 021746

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 17 முதல் 40 சிறந்த சம்பளம் மற்றும் தங்குமிடம் வழங்கப்படும். அழையுங்கள் : 2891169, 0777452447, 0755091379 021652

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பில் அமைந்துள்ள உணவக வலையமைப்பிற்கு கோக்கிமார், Demi Chef, முகாமையாளர்கள், கையுதவியாட்கள், Steward/ waiter இற்காக 45 வயதிற்கு குறைந்தவர்கள் விண்ணப்பியுங்கள். சகல வெற்றிடங்களுக்கும் ஒருவருட அனுபவம் தேவை. கவர்ச்சியான சம்பளம், உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும். 0712684087, 0782834121 022065

**காணி/தோட்டம்**

**601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு**

பன்னிப்பிட்டியவிற்கு அருகில் 10.8 பேர்ச் 6000 ச.அடி தளபாடமுடனான ஆடம்பர வீடு 5 படுக்கையறைகள், 2 குளியலறைகள், நவீன சமையலறை மற்றும் CCTV, சூரிய சக்தி, BIO GAS, வெப்ப நீர், A/C அறைகள், மினி பார், 2 வாகன நிறுத்துமிடங்கள். 071 8008019, 071 2529564. 019988

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கடுவலை ரனால, யானை மார்க் குளிர்பானம் கம்பனி மற்றும் மஞ்சி நிறுவனம் அருகில் 6.4 பேர்ச் வீடு விற்பனைக்கு உண்டு. 45 இலட்சம். 0727002525 022142

கொள்ளுப்பிட்டியவில் முகாந்திரம் வீதியில் இரு மாடி வீடு, 3 படுக்கை அறைகள், 2 குளியலறைகள் உள்ள வீடு விற்பனைக்கு.07 75262362. 018999

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

வத்தளை நகரில் 6.55 பேர்ச் 8 பிரிவுகள் கொண்ட இருமாடி வீட்டிற்கு திட்டமிடப்பட்ட முழுமையான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகள் T.P - 0112945098, 0779670475, 072-9292268. 021273

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling
Contact Us:-
- 011 2 429 369
- 077 7 270 067
- 077 7 270 845
- adzsuo@lakehouse.lk


Tennyson &Vinitha Rodrigo Trust போட்டியில்

## சான்றிதழ், பணப்பரிசு வென்ற ஓட்டமாவடி யஸீர் அறபாத்

எதிர்கால இலங்கை என்பதை இலக்காகக் கொண்டு "நாளை வெல்லும் இலங்கை" எனும் கருப்பொருளில் டென்னிசன் & வினிதா ரோட்றிகோ அறக்கட்டளை (Tennyson & Vinitha Rodrigo Trust) யினால் தேசிய ரீதியாக மும்மொழிகளிலும் நடாத்தப்பட்ட போட்டியின் வெற்றியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப லோட்டஸ் அரங்கில் நடைபெற்றது.

நிகழ்வில், தமிழ்மொழி மூல ஒளிப்பதிவு, கட்டுரைப்போட்டியில் "சமூகத்தின் மத்தியில் நேர்மை, கண்ணியம் மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல்" எனும் தலைப்பில் கட்டுரையை எழுதி ஓட்டமாவடியைச்சேந்த இளங்கலைமாணி பட்டதாரி எம்.என்.முஹம்மது யஸீர் அறபாத் முன்றாமிடத்தைப்பிடித்து, சான்றிதழ் மற்றும் 75,000 ரூபா பணப்பரிசையும் பெற்றுக் கொண்டார்.

தமிழ்மொழி போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்களின் ஆக்கங்களைப் பரிசீலிக்க ஆரம்பகட்ட நடுவர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டி.அஜந்த குமார், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைபீட விரிவுரையாளர் சாமிநாதன் விமல், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வை.எல்.யாகூப், வீரகேசரி பத்திரிகையின் உதவி செய்தி ஆசிரியர் லியோ நிரோசா தர்சன் போன்றவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டவர்களை Google Meet செயலியூடாகப் பரீட்சித்து வெற்றியாளர்களை தெரிவு செய்வதில் இறுதிக்கட்ட நடுவர்களாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் கே.அமிர்தலிங்கம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை பேராசிரியர் முஹம்மட் மாஹீஸ் ஆகியோர் கடமையாற்றினர்.




தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067













வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Nissan Dayz Roox (Highest Spec) 2018/2020 , Mileage - 42000 km, Engine Capacity 650CC, Automatic , Fuel Consumption 20-25 , Power Doors, Remote Doors, Dual AC, Soft Closing Doors, Original UV Tint, 360 Camera, Cam Recorder, Inbuilt Twitters ,TV DVD, Multifution Steering wheel ,Auto Break, IdelStop and many more options 69.50/= (Slightly Negotiable after Inspection ) Emmision Reports Available,Company Reports Available,Valuation Reports Available,කරුණාකර දැන්වීම හොඳින් කියවා අමතන්න Toyota Tank / Roomy රථය හා සමානයි
Inquiries - 0779109614

kun - 1

## மக்கள் வங்கி

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கல்முனையில் மக்கள் வங்கிக்காக கிளை அலுவலக கட்டிட நிருமாணம்

**விலைமனு இல.: 010/2024**

01. கீழே விபரிக்கப்பட்டதும் பெசேவ நீங்கலாக 95 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கல்முனையில் மக்கள் வங்கிக்கான கிளை அலுவலக கட்டிட நிருமாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் பொறியியல் சேவைகள் திணைக்கள, கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர் அழைக்கின்றார்.

    இக்கட்டிடமானது தனியொரு மாடி கட்டிடம் என்பதுடன் மொத்த தரைப்பரப்பானது அண்ணளவாக 483m² என்பதும் வலுவூட்டப்பட்ட கொன்கிறீட் கட்டமைப்பு, செங்கல் கட்டுமான சுவர்கள், மெருகூட்டல் மற்றும் MEP சேவைகள் அத்துடன் நிலவடிவமைப்பு மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றை அடக்குகின்றது.

    இத்தளமானது 125 பிரதான வீதி, கொழும்பு-மட்டக்களப்பு வீதி கல்முனையில் அமைந்துள்ளது.

    நிர்மாணக் காலப்பகுதியானது 300 நாட்காட்டி நாட்களாகும்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

    கட்டிட நிர்மாணத்தில் தரம் சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்த பெறுகைக்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு :

    அ) கடந்த 5 வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிருமாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 170 மில்லியன் ரூபாவாக இருந்திருத்தல் வேண்டும்.

    ஆ) கடந்த ஐந்து வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரராக நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் ஒரு செயற்றிட்ட பெறுமதியாக ஆகக் குறைந்தது 95 மில்லியன் ரூபாவில் ஒரு நிருமாண செயற்றிட்டத்தை பத்து (10) மாதங்களில் திருப்திகரமாக பூர்த்தி செய்த அனுபவம் அல்லது விகிதாசார நேர காலத்தில் இதற்கு மேற்பட்ட பெறுமதியான செயற்றிட்டமொன்றை பூர்த்தி செய்திருத்தல்.

    இ) ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒதுக்கிய பின்னர் திரவச் சொத்துக்களின் மற்றும்/அல்லது செயற்றிட்ட கடன் வசதிகளின் வரிசை மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலான ஆகக் குறைந்த தொகையானது 28 மில்லியன் ரூபாவிற்கு குறையாததாகவிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் பொறியியல் சேவைகள் திணைக்கள, கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011 2473206. தொலைநகல்: 011 2341591) 2024 ஏப்ரல் 02ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 25ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் சாதாரண வேலை நேரங்களில் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

6. 2024 ஏப்ரல் 02ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 25ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 10,000 ரூபாவை மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், மேலேயுள்ள முகவரியின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. 2024 ஏப்ரல் 26ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Construction of branch Office building for Peoples Bank at Kalmunai" என முகவரியிடப்பட்டு கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கி தலைமையலுவலக 6ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர், பொறியியல் சேவைகள் திணைக்களம் என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 23ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. மக்கள் வங்கி நீங்கலாக, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான புகழ்பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து மாத்திரம் ஒன்பது இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிலமைந்த (950,000.00 ரூபா) பெறுமதியுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024 செப்டம்பர் 20ஆம் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. கொழும்பு - 02, தலைமையலுவலகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி,பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் 2024 ஏப்ரல் 08ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6 ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையலுவலக கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation

www.adz.lk
it's what you want

## வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# தொழில் வாய்ப்புகள்

வ/ப லங்கா மின்சார தனியார் கம்பனியானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான கடலோர வழியில் அதனது ஏழு கிளைகளினூடாக 600,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற அமைப்பாகும். 1400 ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கு தகுதிவாய்ந்த நபர்களைத் தேடுகின்றனர்.

### 1. பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) AC CLASS 1

| | |
|---|---|
| கல்வி/தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் | (1.1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / B.com / வியாபார நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்<br>**மற்றும்**<br>(1.2) அ. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA) இணை அங்கத்துவம் **அல்லது**<br>ஆ. முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவனத்தின் (CIMA [UK]) அங்கத்துவம் அல்லது<br>இ. சான்றுபடுத்திய பட்டய கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA [UK]) அங்கத்துவம் |
| அனுபவம் | 100 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தில் கணக்கியல் துறையில் கணக்காளர் அல்லது கணக்காய்வாளராக 15 வருடகால அனுபவம் |
| வயது | 45 வயதிற்குட்பட்டவர்கள் (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல) |

### 2. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - AC CLASS 1

| | |
|---|---|
| கல்வி/தொழில்சார் தகைமைகள் | (1.1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / B.com / வியாபார நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்<br>**மற்றும்**<br>(1.2) அ. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA) இணை அங்கத்துவம் **அல்லது**<br>ஆ. முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவனத்தின் (CIMA [UK]) அங்கத்துவம் அல்லது<br>இ. சான்றுபடுத்திய பட்டய கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA [UK]) அங்கத்துவம் |
| அனுபவம் | 100 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தில் கணக்கியல் துறையில் கணக்காளர் அல்லது கணக்காய்வாளராக 15 வருடகால அனுபவம் |
| வயது | 45 வயதிற்குட்பட்டவர்கள் (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல) |

### 3. கணக்காய்வு உதவியாளர் - AC CLASS IV GRADE I

| | |
|---|---|
| கல்வி/தொழில்சார் தகைமைகள்: | க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி<br>**மற்றும்**<br>பின்வரும் தகைமைகளில் ஏதாவதொன்று<br>2.1 CIMA இயக்க நிலை (Operational Level)<br>2.2 HND (கணக்கியல்) 2ஆம் வருடம்<br>2.3 பிரயோக நிலை - ACCA<br>2.4 வியாபார நிலை (1ஆம்) பரீட்சை - CA இலங்கை<br>2.5 Book Keepers (UK) நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை<br>2.6 AAT இறுதிப் பரீட்சை<br>2.7 CIMA Sri Lanka இறுதிப் பரீட்சை |
| அனுபவம் | 100 ஊழியர்களுக்கு மேற்பட்ட நிறுவனத்தில் நிறைவேற்றுத் தரத்தில் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் தகைமைக்குப் பின்னரான ஐந்து (05) வருடகால அனுபவம். |
| வயது | 35 வயதிற்குட்பட்டவர்கள் (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல) |

தெரிவு செய்யப்படும் அபேட்சர்களுக்கு ஒரு பரந்த அளவிலான சலுகைகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உங்கள் சுயதரவு, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பிலக்கங்களை 2024 ஏப்ரல் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிட்டவருக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து அனுப்பவும்.

கடித உறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

LECO

**மேலதிக பொது முகாமையாளர்**
**(மனித வளம் மற்றும் நிர்வாகம்)**
**வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனம்,**
**1 ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்.**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

## கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

# பதவி வெற்றிடங்கள் – புல்மோட்டை பொறித்தொகுதி

முழுமையாக அரசுக்குரித்தான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. அகழ்தல் மற்றும் செயலாக்க பொறியியலாளர் - (Mining & Processing Engineer)

**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - (02 வெற்றிடங்கள்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கல்வி / தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (அகழ்தல் மற்றும் செயலாக்கம்) பட்டத்தைப் பெற்றிருத்தல்
**அத்துடன்**
பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

(2) அகழ்தல் மற்றும் செயலாக்க வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறனில் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.
**அத்துடன்**
தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

உள்வாரி விண்ணப்பதாரிகள்

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை**: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

### 02. இயந்திரவியல் பொறியியலாளர் - (Mechanical Engineer)

**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கல்வி / தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (இயந்திரவியல்) பட்டத்தைப் பெற்றிருத்தல்
**அத்துடன்**
பட்டத்தைப் பெற்றுக்கொண்தன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

(2) இயந்திரவியல் வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறனில் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தோச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.
**அத்துடன்**
தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

### 03. பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அதிகாரி - (Training and Skills Development Officer)

**கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (JM 1-2)**

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி (01 வெற்றிடம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கல்வி தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் வகுப்பிற்கு இயைபான துறை பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

JM-1-2 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - JM-1-2, ரூபா 43,355/-=755X10, 1,135X18 = 71,335/-

ரூபா 43,355/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்க உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**கொடுப்பனவுகள் மற்றும் அனுகூலங்கள்**

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 12,800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. 15,000.00 ரூபா பொறியியலாளர்களை தடுத்து வைத்துக்கொள்ளும் கொடுப்பனவு (பொறியியலாளர் பதவிக்கு மட்டும்)
08. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள்
09. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும். (HM 1-1, MM 1-1 வகுதி பதவிகளுக்கு மட்டும்)

**அனுகூலங்கள்**

01. வருடாந்த போனஸ்
02. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி பாதுகாப்பு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி பாதுகாப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)

03. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு
    ii. உள்ளக மருத்துவத் திட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு ஒரு முறை வெளிவாரி சிகிச்சைக்காக 5000.00 ரூபா வழங்கப்படும்.
    iii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா வழங்கப்படும்.

04. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.

05. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Pay Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது உங்களின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் சகல சான்றிதழ்களினதும் புகைப்படப் பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். (முறையாக சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நீங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு இராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21ல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் தலைவருக்குக் கிடைக்கும் வகையில் 2024 ஏப்ரல் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தவைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

SPC

# இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

## பெறுகை அறிவித்தல்

### 2024/2025 ஆம் ஆண்டுகளுக்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக கேள்விகளின் அழைப்பு

2024/2025 ஆம் ஆண்டுகளுக்கான பாதுகாப்பு சேவைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை நாராஹேன்பிட்ட, அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். அத்துடன், வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் நாராஹேன்பிட்ட, கிருள வீதி, 41 ஆம் இலக்கத்திலுள்ள 16 ஆம் மாடியின் “மெஹெவர பியச”, அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன வரவேற்பு கருமபீடத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்து அவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | அம்சம் / விளக்கம் | கேள்வி இல. | மூடும் திகதி | மூடும் நேரம் | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | கேள்வி ஆவணம் வழங்கும் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|---|
| 01. | 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கான கேள்விகளின் அழைப்பு | AD/1/ SS/33//2024 | 2024.04.24 ஆம் திகதியன்று | மு.ப. 11.30 மணிக்கு | 20,000 + பெசேவ | 2024.04.01 ஆம் திகதியிலிருந்து 2024.04.22 ஆம் திகதியன்று வரையும். |

உங்களின் விலைமனுக்கோரலானது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம், ‘‘மெஹெவர பியச’’, 16 ஆம் மாடி, இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்ட என முகவரியிடப்பட்டு மேலே வழங்கப்பட்டுள்ள கேள்வியின் திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள அமைவிடத்திலுள்ள நிருவாக திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களை பெறுவதற்காக “1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள்” சட்டமூலத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட மூலப்பிரதியுடன் பிசிஏ-3 சான்றிதழின் பிரதியொன்றையும் விலைமனுதாரர் வழங்கல் வேண்டுமென்பதுடன் சான்றிதழின் மூலப்பிரதியானது விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறான சான்றிதழ் இல்லாத முன்வைப்புக்கள் நிராகரிக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,**
**‘‘மெஹெவர பியச”, 16 ஆம் மாடி, இல. 41,**
**கிருள வீதி, நாராஹேன்பிட்ட.**
**தொலைபேசி: 2320356 – 9**

Daily News Classifieds, the Housewives’ companion

# கேள்வி அறிவித்தல்

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்றல்

## மீரிகம பிரதேச சபை

மீரிகம பிரதேச சபையினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழ்க்காணும் பெகோலொடர் மற்றும் டிரக்டரை விற்பனை செய்வதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. கேள்விப்பத்திரங்களை விநியோகித்தல் - 2024.04.01 முதல் 2024.04.22 வரை (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை)
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2024.04.22 பி.ப.3.00 வரை
கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2024.04.24 மு.ப.10.30 இற்கு

03. மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத்தொகையான ரூபா.25,000.00 மற்றும் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமான ரூ.1000.00 தொகையை அலுவலக நேரங்களில் மீரிகம பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி விண்ணப்பத்தை கடித உறையொன்றில் இட்டு பொறியிட்டு அவ் உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு, “செயலாளர், பிரதேச சபை, மீரிகம” என்ற முகவரிக்கு, 2024.04.22 பி.ப.3.00 இற்கு முன்பு மீரிகம பிரதேச சபை தலைமையகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்களை திறத்தல் 2024.04.24ஆம் திகதி மு.ப.10.30 இற்கு இடம்பெறுவதுடன், அவ் வேளையில் நீங்கள் அல்லது உங்களது எழுத்துமூல அனுமதி பெற்ற பிரதிநி யொருவர் சமுகமளிக்கலாம்.

06. மீரிகம பிரதேச சபை தலைமையக வளாகத்தில் அலுவலக நேரங்களில் குறித்த வாகனத்தைப் பரீட்சித்து பார்க்கலாம்.

07. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வி ஆவணம் ஏற்கப்பட்டதாக அறிவித்த பின்னர் 14 நாட்களுக்குள் சகல கொடுப்பனவுகளையும் மேற்கொண்டு வாகனத்தைக் கொண்டு செல்ல வேண்டும்.

08. மேலதிக விபரங்களை தெரிந்து கொள்ளத் தேவையாயின் மீரிகம பிரதேச சபையின் கீழ்க்காணும் தொ.பே. இலக்கங்களில் விசாரித்து அறியலாம்.

தொலைபேசி இலக்கம் - 0332273209, 0332273282

| உருப்படி | வாகன வகை | பதிவு இலக்கம் | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | பெக்கோலோடர் | HA-2207 | 01 |
| 02 | செமி டிரக்டர் | RA-9139 | 01 |

**பி.ஜி.எஸ்.பி.ஜஸிந்தா**
**மீரிகம பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**2024.03.31**

விவசாய நவீனமயமாக்கல் திட்டம் Agriculture Modernization Project — THE WORLD BANK IBRD • IDA | WORLD BANK GROUP

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -
## கமத்தொழில் அமைச்சு –- IDA Credit No.: 5873 LK

### Supply, Delivery & Commissioning of Processing Machineries for Seed Potato, Soursop, Vegetable Seeds, Jumbo Peanut and Banana Clusters in Northern, Eastern, Uva and Central Provinces

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஜடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **Supply, Delivery & Commissioning of Processing Machineries for Seed Potato, Soursop Vegetable Seeds, Jumbo Peanut and Banana Clusters in Northern, Eastern, Uva and Central Provinces** என்பதற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. **Supply, Delivery & Commissioning of Processing Machineries for Seed Potato, Soursop Vegetable Seeds, Jumbo Peanut and Banana Clusters in Northern, Eastern, Uva and Central Provinces** என்ற பணிக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தில் விதைக் கிழங்கு செயற்படுத்தல் நிலையத்திற்காக செயற்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-365189-GO-RFB | 240,000.00 | 5,000.00 |
| அம்பாறை மாவட்டத்தில் Soursop செயற்படுத்தல் நிலையத்திற்காக செயற்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-365196-GO-RFB | 480,000.00 | 7,500.00 |
| கண்டி மாவட்டத்தில் மரக்கறி விதைகளை செயற்படுத்தல் நிலையத்திற்காக செயற்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-365204-GO-RFB | 180,000.00 | 5,000.00 |
| கண்டி மாவட்டத்தில் வாழை மர செயற்படுத்தல் நிலையத்திற்காக செயற்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-365206-GO-RFB | 250,000.00 | 5,000.00 |
| கிளிநொச்சி மாவட்டத்தில் ஜம்போ நிலக்கடலை பயிர்ச்செய்கைக்காக குளிர் அறையை (cool room) வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | LK-MOA-PMU-353268-GO-RFB | 240,000.00 | 5,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2024.04.02 ஆம் திகதியிலிருந்து 2024.04.22 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.

6. 2024.04.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2024.04.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **“Supply, Delivery & Commissioning of Processing Machineries for Seed Potato, Soursop Vegetable Seeds, Jumbo Peanut and Banana Clusters in Northern, Eastern, Uva and Central Provinces”** என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
**திகதி: 31.03.2024.**

## சுகாதார அமைச்சு

SPMC

# இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்

### Tender Ref. (SPMC/P&P/SCRA.MAIN/01/2024)

இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, கந்தவலவத்த, இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் (SPMC) இல் இருந்து பாவனையில் இருந்து அகற்றப்பட்ட பல்வேறு வகையான கீழ்க்காணும் உருப்படிகளை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**Group 01**

| No. | Description of Items | LOT No. |
|---|---|---|
| 01 | Photo copier, Wall Fan, Spectrophotometer, Water Pumps, Heat Sealer, Yamato Weighing Balance, ISHIDA Laboratory Balance, Hitachi CV-W1600 Vacuum Cleaner, Computer Parts & Other Scraps | LOT 101 |
| 02 | Telephones, Humidity Recorders, Metal Scraps | LOT 102 |
| 03 | Caster wheels, Fire Hydrant Hose, Bearings, Vibrator Coils | LOT 103 |
| 04 | Lighting Fixtures and parts, Wire Scraps, Bearings, Used Vehicle Parts | LOT 104 |
| 05 | Washing Machine, Tea Warmer, Water Geyser, Cloth Dryer | LOT 105 |
| 06 | Metal Sheets (Steel), Aluminum Sheets, Aluminum Frames, Metal Box, Corrugated Metal Sheet Parts, Plywood Sheet Parts, Metal Pieces | LOT 106 |
| 07 | Box Bars, Angle Irons, Metal Parts, C Channel Bars | LOT 107 |
| 08 | Folding Beds, Computer Table, Aluminum Rack | LOT 108 |
| 09 | Lot of Chairs | LOT 109 |
| 10 | Heavy Weighing Balance Bases Without Cover Plates | LOT 110 |
| 11 | A/C Compressors, Copper Tubes and Empty Nitrogen Cylinders | LOT 111 |
| 12 | Steel Changing Locker, Steel File Cupboard, Steel File Rack | LOT 112 |
| 13 | S/S Lorry Floor Board, Unusable S/S Sheet, Name Boards, Whole Sale Outlet Name Board, Unusable Wheelbarrows | LOT 113 |

**Group 02**

| No. | Description of Items | Lot No. |
|---|---|---|
| 01 | Computer UPS Batteries and Folk Lift Battery | LOT 201 |
| 02 | A/C Condensers, Folk Lift Battery Containers, Cooling Coils, Evaporators, Blower Units , Exhaust Fans, A/C Covers & Body Parts, A/C Indoor Units, A/C Outdoor Units, AHU Cooling Coils, AHU Heating Units | LOT 202 |
| 03 | Aluminum Doors and Door Frames Removed from G Zone | LOT 203 |
| 04 | Removed Zinc Coated Roofing Sheets | LOT 204 |
| 05 | Parts of Removed DI Water Plant | LOT 205 |
| 06 | Metal Table & Table Frames, Steel Office Table, Aluminum Doors, Wooden Door, Aluminum Window Frame | LOT 206 |
| 07 | Walking Disinfection Chamber | LOT 207 |
| 08 | ¼ “ Rall of Iron String, QT Bars, 5mm H & C Iron Pieces (20mm&12mm width), 10mm * 8’*4’ GI Sheet, 10mm * 4’*4’ GI Sheet | LOT 208 |

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் திட்டமிடல் மற்றும் பெறுகை இடம் எழுத்து மூல வேண்டுதலைச் சமர்ப்பித்த பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 500/- (ரூபா ஐந்நூறு) தொகையை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் (SPMC) கணக்குப் பிரிவிற்கு செலுத்தி கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

கேள்விப் பிணை முறியாக மீளளிக்கப்படும் ரூ. 10,000/- (ரூபா பத்தாயிரம்) தொகையை அ.மா.கூ. (SPMC) இன் கணக்குப் பிரிவிற்கு செலுத்த வேண்டியதுடன் அதனை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விற்பனைக்கு உரிய பொருட்களை பரீட்சித்தல் வார நாட்களில் மு.ப. 9.00 இற்கும் பி.ப. 4.00 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, கந்தவலவத்த, இரத்மலானை என்ற இடத்தில் மேற்கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விகள் 2024 ஏப்ரல் 18 பி.ப. 2.00 இற்கு முன் இரத்மலானை, கந்தவலவத்த, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல. 11, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் கேள்விச் சபையின் தலைவருக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி மாதிரிப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் கேள்வி இலக்கம் (SPMC/P&P/SCRA.MAIN/01/2024) என குறிப்பிடுதல் வேண்டும்.

இது பற்றிய விசாரணைகளுக்கு தொ. பே. இல. 011-2637574 அல்லது 011 2630234 மூலம் பிரதிப் பொது முகாமையாளர் திட்டமிடல் மற்றும் பெறுகையை அழைக்கலாம்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த,**
**கந்தவலவத்த, இரத்மலானை.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 108

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| | 14 | | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | | 21 | |
| | 22 | | 23 | 24 | |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) தாமரை போன்று இதுவும் நன்னீர் நிலைகளில் வளருகின்ற தாவரம். நீலநிலத்திலும், வெண்ணிறத்திலும் பூக்கள் பூக்கும் இருவகையான தாவரங்கள் உள்ளன. இத்தாவரத்தின் பூவானது இலங்கையின் தேசிய மலர் ஆகும்.
(4) எமது பார்வைப் புலனங்கம் இது.
(7) சிறு உருவம் கொண்ட தானியம் இது. இத்தானியத்தில் இருந்தே நல்லெண்ணெய் பெறப்படுகின்றது.
(10) நெல்லின் கவசம் இது. இதனை நீக்கியதும் உள்ளீடு அரிசி ஆகும். (தலைகீழான சொல்)
(12) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற நிலையம்.
(15) தனயன், புதல்வன், புத்திரன் என்றெல்லாம் ஒத்தபொருள் சொற்கள் கொண்ட சொல் இது.
(18) நீண்ட கழுத்து, நீண்ட கால்கள் கொண்ட வெண்ணிறப் பறவை. நீர்நிலைகளின் கரைகளில் நின்றவாறு சிறுமீன்களைப் பிடித்துண்ணும் பறவை.
(23) கதவின் பூட்டைத் திறப்பதற்குத் தேவையானது இது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) அக்காலத்தில் சமையலறையில் பயன்படுத்தப்பட்ட கருங்கல் சாதனம். உணவுப் பொருட்களை அரைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டது.
(3) வீடுகளுக்குள் புகுந்து இரவு நேரத்தில் தொந்தரவு கொடுக்கும் உயிரினம் இது. சமையலறையில் உள்ள உணவுப் பொருட்கள் மற்றும் தானியங்களைத் தின்று தீர்க்கும் பாலூட்டி உயிரினம். (தலைகீழான சொல்)
(5) புவியின் மேற்பரப்பில் சுமார் முக்காற்பங்கு பகுதி இதுதான். ஆழமானது என்பதால் வந்துள்ள காரணப்பெயர் இது. (தலைகீழான சொல்)
(8) புதல்வி, புத்திரி என்றும் இச்சொல்லைக் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(11) அக்காலத்தில் நெல்லை அரிசியாக்கவும், தானியங்களை மாவாக மாற்றுவதற்கும், மிளகாயைத் தூளாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்ட மரத்தாலான உபகரணம் உரல் ஆகும். உரலுக்குள் தானியங்களை இட்டு குத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட மரத்தாலான நீண்ட உபகரணம் இது.
(13) வீதியோரம் கழிவுநீர் வடிந்தோடும் இடம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 107

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தினகரன் 08. வாழை 10. கருத்து
15. வாத்து 18. களி 22. அவனி 25. ஏழை

**மேலிருந்து கீழ்**

01. கத்தி 03. கழுத்து 05. வான் 09. கோழை
13. வித்து 18. கனி 19. வளி 21. ஏணி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 106

### பாராட்டு பெறுவோர்

**1. திஹாமா**
தரம் 06, முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம்,
இல. 397/3, தூலமல, திஹாரிய.

**2. எச்.எப் ஹம்னா**
தரம் 06T, முஸ்லிம் ம.கல்லூரி காலி,
இல. 206/17A மஹமோதர, காலி.

**3. ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹ^ரிமலுவ, ரம்புக்கண.

**4. எம்.ஆ. முஹம்மது இஸ்ஹாக்**
தரம் 04C, ரோயல் கல்லூரி,
இல. 44/40, இந்திர ஜோதி பாதை, இரத்மலானை.

**5. த. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
உடையார் வீதி, காரைதீவு 02.

**6. அமாவ் ஜின்னா**
தரம் 10, எகட்டுமல்ல மு.வித்தியாலயம்,
இல. 325, எகட்டுமுல்ல, நாகொல்லாகொட.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 108
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புதல்வரைப் பெறுதல் : எழுபிறப்பும் தீயவை தீண்டா
பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்**

***தெளிவுரை :***
பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவனுக்கு ஏழு பிறவியிலும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.

## தந்தைக்கு நேர்மையை எடுத்துக் காட்டிய நேரு



செல்வந்தராக வாழ்ந்த நேருவின் தந்தை மோதிலால், சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்ற போது, சிறைச்சாலை உணவு பிடிக்கவில்லை என தம் வீட்டு உணவைக் கொண்டு வந்து சாப்பிட அனுமதிப் பெற்றுக் கொண்டார். வீட்டுச் சாப்பாட்டை அவர் மட்டும் சாப்பிட முடியுமா? தன் நண்பர்களுக்கும் சேர்த்து சாப்பாடு கொண்டு வருமாறு வீட்டுக்கு சொல்லியனுப்பினார். தந்தையாரின் இச் செயலை நேரு விரும்பவில்லை. தன் கருத்தைப் பலர் முன்னிலையில் தெரியப்படுத்தினார்.

'சிறைச்சாலையைச் சிறைச்சாலையாகவே மதித்து, அதை வீடாக நினைப்பது விரோதமானது'. நாடெங்கிலும் சிறைப்பட்ட சத்தியாக்கிரகிகள் உண்ணும் உணவையே நாமும் உண்ண வேண்டும் என்று கூறினார். அன்று முதல் மோதிலால் தமக்கென வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவைத் தவிர்த்துக் கொண்டார்.

சாரணா கையூம்...

## இவ்வார மழலை



கமல் – மேனகா

## ஆடுகள் கண்டுபிடித்த கோப்பி

கோப்பியை கண்டுபிடித்தது எத்தியோப்பியாவில் இருந்த ஆடுகள் என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

14 ஆம் நூற்றாண்டளவில், எத்தியோப்பியாவில் ஆட்டு இடையன் ஒருவன், தனது ஆடுகள் ஒரு குறித்த பழத்தை சாப்பிட்டவுடன் புதுத்தெம்புடன் துள்ளிக்குதிப்பதை அவதானித்தான். பின்னர் அவன் அந்த பழக்கொட்டைகளை சூடாக்கி அருந்திப் பார்த்தான்.

அவனுக்குள்ளும் புத்தெழுச்சி ஏற்படுவதை உணர்ந்தான். அவன் அருந்தியதுதான் உலகின் முதலாவது கோப்பி (Coffee). இது எதியோப்பியா முழுவதும் பரவியது. பால்/சர்க்கரை எதுவும் சேர்க்காமல் பருகும் கோப்பியில் கலோரிகள் எதுவும் இல்லை. Black கோப்பிக்கு நம் பசியைப் போக்கும் தன்மை இருக்கிறதாம்.

ஜப்பான், அயர்லாந்து போன்ற நாடுகளில் ஜூலை 4ஆம் திகதி கோப்பி தினமாக கொண்டாடப்படுகிறது.

ஜார்ஜ் கான்ஸ்டன்ட் வாஷிங்டன் என்ற ஆங்கிலேய வேதியியல் வல்லுனர் 1909ஆம் ஆண்டு இன்ஸ்டன்ட் கோப்பியைக் கண்டுபிடித்தார்.

அதற்கு அவர் வைத்த பெயர் Red e Coffee.






எஸ்.எஸ். சஹ்லா சிஹார்
தரம் - 06D, அல் முபாரக் தேசிய பாடசாலை, மல்வானை.

## உலகில் மிகப் பெரியவைகள்

உலகில் மிகப்பெரியவைகளாக கண்டுப்பிடிக்கப்பட்டவைகளில் சிலதை இங்கு அறித்தருகிறோம்...

★ உலகில் மிகப்பெரிய விலங்கு? **திமிங்கிலம்**
★ உயரமான விலங்கு? **ஒட்டகச்சிவிங்கி**
★ உயரமான மலை? **இமயமலை**
★ பெரிய கண்டம் எது? **ஆசியாக்கண்டம்**
★ மிக நீளமான நதி? **நைல் நதி**
★ ஆழமான ஆழி? **மரியானா ஆழி**
★ மிகப்பெரிய நகரம்? **லண்டன்**
★ பெரிய பாலைவனம்? **சஹாராப் பாலைவனம்**
★ உலகிலேயே பெரிய சமுத்திரம்? **பசுபிக் சமுத்திரம்**

## NEWS எவ்வாறு உருவாக்கப்பட்டது?

*14ஆம் நூற்றாண்டில் தான் NEWS என்ற வார்த்தை ஆங்கிலத்தில் முதன்முதலாக பழக்கத்தில் வரத்தொடங்கியது. NEW என்பதன் பன்மை வடிவமான NEWS ஐ செய்திகளுக்காக உபயோகப்படுத்தத் துவங்கினார்கள்.*

*ஆனால் நாம் North, East, West and South நான்கு திசைகளின் முதல் எழுத்தைச் சேர்த்து NEWS என்ற வார்த்தை உருவான கதையை கேட்டிருப்போம். உண்மையில் NEWS என்ற வார்த்தையின் ஆதி, திசைகளின் முதலெழுத்தெல்லாம் கிடையாது.*

*ஆங்கிலத்தில் tidings என்ற வார்த்தை தான் NEWS என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டது. Tidings என்றால் Event, occurrence, or a piece of news என்று அர்த்தம். திசைகளிலிருந்து வரவில்லை என்றால் வேறு எங்கிருந்து வந்தது இந்த வார்த்தை? Nouveau என்ற (பழங் கால) பிரென்ச் வார்த்தையிலிருந்து NEW என்ற ஆங்கில வார்த்தை உருவாகியிருக்கிறது. பிரென்ச்சிலும் Nouveau வார்த்தையின் பன்மை வடிவமான Nouvelles வார்த்தை "செய்திகள்" என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகிறது.*

## வலைந்திருக்கும் பைன் மரங்கள்



1930ஆம் ஆண்டு அப்போதைய ஜெர்மனியின் (தற்போதைய போலந்து) எல்லைக்குள் இருந்த Pomeraniaவின் ஒரு பகுதியில் 400 பைன் மரங்கள் செங்குத்தாக வளராமல் அடிப்பகுதியில் ஒரே மாதிரி வளைந்து வளர்ந்திருக்கின்றன.

ஏதோ ஒரு இயற்கையின் பாதிப்பால் இம்மரங்கள் தானாகவே இப்படி வளர்ந்தனவா அல்லது யாராவது வேண்டுமென்றே வளைத்து வளர்த்து வைத்திருக்கிறார்களா என்பது இன்று வரை புரியாத புதிர்.

## கொடூர ஆட்சி நடத்திய அரசிகள்

**இலஸ் கோச்**



புஞ்சன்வால்டின் சூனியக்காரி என்ற பெயர் பெற்றவர் இந்த இலஸ் கோச். சிறைவாசிகளை மிகவும் சித்திரவதை செய்து வந்தவர்.

இவர் நாசி படையில் வேலை செய்து வந்த அதிகாரியின் மனைவி. இவரது சைக்கோத்தனமான குணம் மிக கொடூரமான தண்டனைகள் தர வைத்தது. சிறைவாசிகளை கொடூரமாக தாக்குவது இவருக்கு பிடித்த செயல். மேலும், அவர்களை பாலியல் செயல்களில் ஈடுபடுத்தி இன்பம் கண்டுள்ளார். மேலும், பச்சை குத்தியிருந்தால், அவர்களது தோலை உரித்து எடுப்பது போன்ற செயல்களிலும் இவர் ஈடுபட்டு வந்துள்ளார்.

**மைரா ஹிண்ட்லி**



ஒரு காலத்தில் பிரிட்டனில் மிகவும் வெறுக்கப்பட்ட பெண்ணாக இருந்த பெண், மைரா ஹிண்ட்லி. இவரும், இவரது காதலரும் சேர்ந்து 1960களில் பல குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்தனர். 'தி மூன் மர்டர்ஸ்' என்ற வழக்கில் இந்த தம்பதி கற்பழிப்பு, சித்திரவதை, குழந்தை கொலைகள் மற்றும் பல குற்ற சம்பவங்களில் ஈடுபட்டனர். அதனால் இவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

2002ஆம் ஆண்டு நவம்பரில் மைரா ஹிண்ட்லி சிறையிலேயே மாரடைப்பு மற்றும் சுவாச கோளாறு காரணத்தால் இறந்து போனார்.

## கோடை



சுள்ளெனவே சூரியனும்
சுட்டெரிக்கும் கோடை
சோலையிலும் பாலையனல்
சூழ வைக்கும் கோடை!

கள்ளிகளும் வாடி முளை
கருக வைக்கும் கோடை
கானருவி ஆறுகளைக்
காய வைக்கும் கோடை!

'வெள்ளமெனத் தேகமதை
வியர்க்க வைக்கும் கோடை
விசிறிகளை ஓய்வில்லாமல்
வேலை வாங்கும் கோடை!

அங்கமெல்லாம் வேர்க்குருவை
அள்ளித்தரும் கோடை
அரிப்பெடுத்து இராப்பகலாய்
அவதி தரும் கோடை!

உள்ளமதில் தாகமதை
ஓங்க வைக்கும் கோடை
உதடுலர்த்தி, நாவறட்சி
உண்டு பண்ணும் கோடை!

குளிர்ப்பானம், செவ்விளநீர்
விற்க வரும் கோடை
விருப்பமூட்டி, காசுபணம்
விரயமாக்கும் கோடை!

அஸ்மா பாரிஸ் - மள்வானை

## விடுகதைகள்

1. எண்ணெய் இல்லை, திரியும் இல்லை, ஏற்றிவைக்க ஆளும் இல்லை. அது என்ன? **சந்திரன்**

2. வரும் போதும் வெண் சிவப்பு, வளர வளர தகதகப்பு, போகும் போது பெருஞ்சிவப்பு. அது என்ன? **சூரியன்**

3. தவழ்ந்து வந்தால் தாலாட்டும், இளமை கொண்டால் இதமாகும், முதுமை கொண்டால் அழிந்துவிடும். அது என்ன? **தென்றல், காற்று, புயல்**

4. நினைக்கும் போதே வாயினிக்கும், நீரில் விட்டால் மிதக்கும், வேண்டி வேண்டிச் சாப்பிடுவேன், விருப்பம் தினமும் அதிகரிக்கும். அது என்ன? **தேன்**

5. இரட்டைப் பிறவி, ஒருவன் மேலே ஏறினால், மற்றொருவன் கீழே இறங்குவான். அது என்ன? **தராசு**

6. ஓரிடத்தில் பிறந்த பலர், ஒரு வீட்டில் இருப்பார்கள். ஒருவன் வெளிச் சுவரில் உராய்ந்து விட்டால் தான் எரிவான். அது என்ன? **தீப்பெட்டியும் குச்சியும்**

எஸ்.எஸ். சஹ்லா சிஹார்

# மஞ்சரி விளையாட்டு



# இலங்கை கால்பந்தின் புதிய ஆரம்பம்

பிஃபா தொடர் என்பது சர்வதேச கால்பந்து அரங்கில் அதிகம் அவதானம் செலுத்தப்படாத தொடராக இருந்தபோதும் இலங்கைக்கு அதி முக்கியமானது. அதாவது சர்வதேச அளவில் அதிக போட்டி வாய்ப்புகள் இல்லாத அடிமட்ட அணிகளுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலேயே சர்வதேச கால்பந்து சம்மேளனம் இந்த தொடரை உலகெங்கும் அறிமுகம் செய்தது.

ஆனால் இலங்கையை பொறுத்தவரை சர்வதேச போட்டித் தடை, அதனால் இலங்கை கால்பந்து அணியில் ஏற்பட்டிருக்கும் குழப்பம், பலவீனம், சர்வதேச அளவில் போட்டிகளுக்கு இருக்கும் பஞ்சம் எல்லாவற்றையும் சேர்த்து இது ஒரு பொன்னான வாய்ப்பாக இருந்தது.

கொழும்பு குதிரை பந்தய திடல் மைதானத்தில் கடந்த வாரம் நடந்த நான்கு அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டிகள் சர்வதேச அளவில் பெரிதாக பரபரப்பை ஏற்படுத்தாதபோதும் இலங்கை கால்பந்துக்கு நீண்ட காலத்திற்கு பின் வெற்றிக் கொண்டாட்டம் ஒன்றுக்கு காரணமானது. முதலில் கடந்த மார்ச் 22 ஆம் திகதி நடந்த பப்புவா நியூகினியாவுக்கு எதிரான போட்டி இலங்கைக்கு பெரும் போராட்டமாக இருந்தது. எவ்வாறாயினும் அந்தப் போட்டியை இலங்கை அணியால் கோல் இன்றி சமநிலை செய்வதற்கு முடிந்தது.

என்றாலும் கடந்த மார்ச் 25 ஆம் திகதி நடந்த பூட்டானுக்கு எதிரான போட்டி இலங்கைக்கு வெற்றியை தேடித்தந்த ஆட்டமாக மாறியது. அந்தப் போட்டியில் இலங்கை அணி 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. கிட்டத்தட்ட கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை சர்வதேச அரங்கில் பெற்ற முதல் வெற்றியாகவும், கடந்த பத்து ஆண்டுகளில் தனது தெற்காசிய போட்டியாளரான பூட்டானை தோற்கடித்த முதல் சந்தர்ப்பமாகவும் இருந்தது.

அதாவது 2021 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான நான்கு நாடுகள் கால்பந்து தொடரின்போதும் இலங்கை அணி வசீம் ராசிக்கின் இரட்டை கோல் மூலம் 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதன் பின்னர் இலங்கை பெறும் முதல் வெற்றி இது தான். அதன் பின்னர் இலங்கை ஏழு சர்வதேச போட்டிகளில் ஆடி நான்கு போட்டிகளில் தோற்று மூன்று ஆட்டங்களை சமநிலை செய்திருக்கிறது.

இந்நிலையில் பூட்டானுக்கு எதிரான போட்டியில் மத்திய கள வீரர் டிலான் பெரேரா நேர்த்தியாக பந்தை எடுத்துச் சென்று அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தெரிவானதோடு அணித் தலைவர் சுஜான் பெரேராவுக்கு கிடைத்த மகுடமாகவும் இது இருந்தது.

முதல் பாதி ஆட்டம் கோல் இன்றி முடிந்தபோதும் இரண்டாவது பாதியில் 10 நிமிடங்களுக்குள்ளேயே கோல் புகுத்தி இலங்கையால் வெற்றியை உறுதி செய்ய முடிந்தது. டி சில்வா மற்றும் பின்கள வீரர் ஒலிவர் கெலார்ட் இருவருக்கும் பந்தை வலைக்குள் செலுத்த முடிந்தது.

'எமது திட்டமிடல், ஒழுக்கம் மற்றும் கட்டமைப்பு எதிரணியை வீழ்த்த உதவியது. எமது வீரர்கள் பற்றி நான் பெருமைப்படுகிறேன்' என்கிறார் இலங்கை அணி பயிற்சியாளர் அன்ட்ரூ மொரிஸன். அணியின் தயார்படுத்த மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு வெற்றிக்குக் காரணம் என்றும் அவர் கூறுகிறார்.

உண்மையில் பிஃபா அறிமுகப்படுத்திய இந்தத் தொடரில் உலகெங்கும் மொத்தம் 24 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் உலகக் கால்பந்து தரவரிசையில் மிகவும் அடிமட்டத்தில் இருக்கும் அணியாக இலங்கை இருக்கிறது. அதாவது பிஃபா தரவரிசையில் இலங்கை 204 ஆவது இடத்திலேயே உள்ளது. அதுவே இலங்கை தோற்கடித்த பூட்டான் அணி 184 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

அந்தவகையில் இலங்கை அணியின் வெற்றி முக்கியமானது தான். ஆனால், இலங்கை பயணிக்க வேண்டிய தூரமோ மிக நீண்டது. ஒன்றிரண்டு தசாப்தத்திற்கு முன்னர் இலங்கை கால்பந்து அணியின் தராதரத்தில் இருந்த இந்தியா, பங்களாதேஷ் ஏன் மாலைதீவு அணிகள் கூட இன்று ஒருபடி மேலே இருக்கிறது. அதிலும் இந்தியா நாளுக்கு நாள் பலம்பெற்று வருகிறது.

ஆனால், இலங்கை இன்றும் எழுந்து நிற்கவே போராடும் அளவுக்கே இருக்கிறது. இலங்கை அணியிலும் உண்மையான உள்நாட்டு வீரர்களுக்கு அப்பால் வெளிநாடுகளில் ஆடும் வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது குறுகிய கால வெற்றிகளைத் தேடித் தந்தபோதும் நீண்ட கால திட்டமிடலுக்கு ஆரோக்கியமானதாக இருக்காது.

பிஃபா அறிமுகம் செய்திருக்கும் இந்த தொடரும் முழுமையான ஒரு போட்டி ரீதியான ஆட்டங்களாக குறிப்பிட முடியாது. வெறுமனே நட்பு ரீதியான போட்டிகளாகவே நடைபெறுகின்றன. சம்பியன் அணி எதுவும் தேர்வு செய்யப்படுவதில்லை.

இலங்கை நடத்திய பிஃபா தொடரில் பங்கேற்ற மற்றொரு அணியான மத்திய ஆபிரிக்க குடியரசு தான் எதிர்கொண்ட பூட்டான் மற்றும் பப்புவா நியூகினிய அணிகளுக்கு எதிரான போட்டிகளை முறையே 6–0 மற்றும் 4–0 என இலகுவாக வென்றது. குறைந்தது இந்தத் தொடரை ஒரு முழுமையான கால்பந்து தொடராக நடத்தி இருந்தால் இலங்கை அணிக்கு இன்னும் சவாலான மத்திய ஆபிரிக்க குடியரசையும் எதிர்கொள்ள வாய்ப்பு கடைத்திருக்கும்.

இலங்கையில் பாடசாலை மற்றும் கழக மட்ட கால்பந்து போட்டிகள் வழக்கம்போல நடைபெற்று வந்தபோதும் அது தேசிய மட்டத்தில் வீரர்களை உருவாக்குவதில் இன்னும் குறைபாடுகள் இருப்பதாகவே தெரிகிறது.

இத்தனைக்கும் இலங்கை கால்பந்துக்கு என்று பிரத்தியேக ரசிகர்கள் இருக்கிறார்கள். ஏன் பூட்டானுக்கு எதிரான போட்டியில் குதிரைப் பந்தய திடல் நிரம்பி வழிந்தது. டிக்கெட் கிடைக்காமல் வெளியே காத்திருந்தவர்கள் ஏராளம். இது இலங்கை கால்பந்துக்கான சர்வதேச தரம் வாய்ந்த மைதானங்கள் இல்லாத குறையையே காட்டுகிறது.

'குதிரைப்பந்தய திடல் அரங்கின் மட்டுப்படுத்தப்பட்ட இருக்கை அளவு காரணமாக டிக்கெட் பெற முடியாமல்போன இலங்கை ரசிகர்களுக்கான நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக பிரத்தியேக கால்பந்து அரங்கொன்றை நிர்மாணிப்பதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்' என்று இலங்கை கால்பந்து சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் குறிப்பிட்டார்.

எனவே இலங்கை கால்பந்து மைதானத்தில் மாத்திரமல்ல, அதன் உட்கட்டமைப்பிலும் மாற்றங்கள் செய்ய வேண்டிய நீண்ட பயணத்தில் ஆரம்பப் புள்ளியாக இந்த பிஃபா தொடரை எடுத்துக்கொள்ளலாம்.

**எஸ்.பிர்தௌஸ்...**

## விடைபெற்றார் மொஹமட் பஸால்

'2001 இதே மைதானத்தில் (குதிரைப்பந்தய திடல்) பாதணி கூட இல்லாமல் ஆடினேன். அப்போது எமது சாஹிரா கல்லூரி சம்பியனானது. 2024 இல் அதே மைதானத்தில் பெரும் மகிழ்ச்சியுடன் ஓய்வு பெறுகிறேன்' என்று மொஹமட் பஸால் கூறும்போது அவரது குரல் தளதளத்தது.

சர்வதேச அரங்கில் ஓய்வு பெறுவதென்பது எப்போதும் கவலையாகவே இருக்கும் அதுவும் மொஹமட் பஸால் போன்ற ஒருவர் ஓய்வு பெறுவதென்பது இன்னும் கடினமானது. ஏனென்றால் கடந்த 16 ஆண்டுகளாக அவர் இலங்கை தேசிய கால்பந்து அணியில் இன்றியமையாத வீரர் ஒருவராக இருந்து வந்தார்.

கொழும்பு, குதிரைபந்தய திடல் மைதானத்தில் கடந்த வாரம் நடந்த பூட்டானுக்கு எதிரான போட்டியே அவரது கடைசி சர்வதேச கால்பந்து போட்டியாக இருந்தது. ஆரம்பத்தில் களமிறக்கப்படாத அவர் 86 ஆவது நிமிடத்தில் களமிறங்கியது சர்வதேச அரங்கில் இலங்கைக்காக ஆடும் கடைசி தடவையாகவாகும்.

பின்னர் இலங்கை அணி சர்வதேச கால்பந்தில் இரண்டு ஆண்டுகளில் முதல் வெற்றியை பெற்ற மகிழ்ச்சியுடனேயே பஸால் ஓய்வு பெற்றார்.

போட்டிக்கு பின்னர் அவருக்கு அணி வீரர்கள் மற்றும் கால்பந்து நிர்வாகம் முழு மரியாதையையும் செலுத்தியே அவரை விடைகொடுத்து அனுப்பியது. அவரும், 'தற்போது இலங்கை அணி பலம்பொருந்தியதாக உள்ளது' என்ற திருப்தியுடனேயே விடைபெற்றார்.

'பஸால் ஒரு விதிவிலக்கான வீரர். 53 சர்வதேச போட்டிகளில் ஆடுவதென்பது சாதாரணமானதல்ல. அவர் அபரிமிதமான திறமை பெற்றவர் என்பதோடு இளம் வீரர்களுக்கு முன்மாதிரியாகவும் இருக்கிறார். அவர் எம்முடன் தொடர்ந்து பணியாற்றுவார் என்று நான் எதிர்பார்க்கிறேன், ஒருவேளை அது பயிற்சியாளராகக் கூட இருக்கலாம்' என்று இலங்கை கால்பந்து சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர் குறிப்பிட்டார்.

கோல்கள் புகுத்துவதில் பிரத்தியேக திறமை பெற்ற முன்கள வீரரான 33 வயது மொஹமட் பஸால் 2008 ஆம் ஆண்டு இலங்கை தேசிய அணியில் அறிமுகம் பெற்றார். அது தொடக்கம் இன்று வரை அவர் அணியில் தமது இடத்தை தக்கவைத்திருக்கிறார். குறிப்பாக 2018 மற்றும் 2019 இல் இலங்கை தேசிய கால்பந்து அணியின் தலைவராகவும் அவர் இருந்துள்ளார்.

கொழும்பு, சாஹிரா கல்லூரியில் தனது கால்பந்தை ஆரம்பித்த அவர் இலங்கைக்கான 53 சர்வதேச போட்டிகளில் ஆடியிருப்பது சாதாரணமான ஒன்றல்ல.

கழக மட்டத்தில் அவர் ஏகப்பட்ட சாதனைகள் புரிந்திருக்கிறார். அவர் ரினோன், கொழும்பு எப்.சி. மற்றும் மிக அண்மையில் புளூ ஸ்டார் அணிக்காக ஆடி இருக்கிறார். கொழும்பு எப்.சி. பல பிரதான கிண்ணங்களையும் வெல்வதில் பஸால் பின்னணியில் இருந்திருக்கிறார். பின்னர் 2021 சுப்பர் லீக் தொடருக்கு முன்னர் புளூ ஸ்டார் கழகத்தில் களமிறங்கிய அவர் அந்தப் பருவத்தில் அந்த அணி கிண்ணத்தை வெல்லவும் உதவினார்.

இலங்கை மாத்திரமன்றி எம்.டீ.சி.சி. மற்றும் டென்ட் எஸ்.சி. போன்ற மாலைதீவு கால்பந்து லீக் கழகங்களிலும் ஆடி இருக்கிறார்.

இலங்கையின் மிக பிரபலமான கால்பந்து வீரர்களில் ஒருவரான பஸாலின் தாக்கம் அணியில் எப்போதும் இருக்கும்.



# குறிப்புகள்

### தனஞ்சய–கமிந்து சாகசம்



சில்ஹட்டில் பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தனஞ்சய டி சில்வா மற்றும் கமிந்து மெண்டிஸ் இருவரும் முதல் இன்னிங்ஸில் தலா 102 ஓட்டங்களை பெற்றனர். ஆனால் இலங்கை அணி மொத்தமான 280 ஓட்டங்களையே பெற்றது.

அதாவது இந்த வீரர்களின் ஓட்டங்களை தவிர்த்துப் பார்த்தால் இலங்கை அணி 76 ஓட்டங்களையே பெற்றிருந்தது. என்றாலும் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இரு வீரர்கள் இரண்டைச் சதம் பெற்று அணி ஒன்று இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற மிகக் குறைவான ஓட்டத்தை பெற்ற வரிசையில் இது இரண்டாவது இடத்தையே பெற்றது.

2009 மார்ச்சில் ஹமில்டனில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 279 ஓட்டங்களை பெற்றபோதும் ஜெஸ்ஸி ரைடர் மற்றும் டானியல் விட்டோரி இருவரும் சதம் பெற்றிருந்தனர்.

2014 இல் போர்ட் எலிசமத்தில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் 9 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை பெற்றபோதும் மர்லன் சாமுவேல்ஸ் மற்றும் கிரேக் பிரத்வெயிட் சதம் பெற்றிருந்தனர். அணி ஒன்று தனது இன்னிங்ஸ் ஒன்றை முழுமையாக ஆடாத பட்சத்திலும் மிகக் குறைந்த ஓட்டங்களில் இருவர் சதம் பெற்ற போட்டி 1984 இல் நடைபெற்றது. ஹைதராபத்தில் நடைபெற்ற அந்தப் போட்டியில் நியூசிலாந்து அணியை பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 230 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தோற்கடித்தது. அப்போது முதாசர் நாசர் மற்றும் ஜாவிட் மியன்டாட்ட சதம் பெற்றிருந்தனர்.

எனினும் சில்ஹட் டெஸ்டில் கமிந்து மற்றும் தனஞ்சய 200 ஓட்ட இணைப்பாட்டத்தை பதிவு செய்திருந்த நிலையில் அந்த அணி பெற்ற 280



ஓட்டங்களும் டெஸ்ட் இன்னிங்ஸில் குறைவாக இருந்தது. இதற்கு முன்னர் 1985 இல் கிங்ஸ்டனில் நடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 283 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஜெப் ஹோவார்த் மற்றும் ஜெப் கிரூ இரண்டாவது விக்கெட்டுக்காக 210 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

இதில் தனஞ்சய மற்றும் கமிந்து இருவரும் இரு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இது டெஸ்ட் வரலாற்றில் ஒரே அணியில் இரு வீரர் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்ற மூன்றாவது சந்தர்ப்பமாக பதிவானது. இதற்கு முன் 1974 ஆம் ஆண்டு வெளிங்டனில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவின் இயன் மற்றும் ஜோர்ஜ் சப்பல் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் பெற்றதோடு 2014 ஆம் ஆண்டு அபூதாபியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பகிஸ்தானின் மிஸ்பா உல் ஹக் மற்றும் அஸார் அலி இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் குவித்தனர்.

### வேகப்பந்தில் அரிய சாதனை

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டுவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி மூன்று வேகப்பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியது. கசுன் ராஜித்த, விஷ்வ பெர்னாண்டோவுடன் லஹிரு குமாரவும் இடம்பெற்றிருந்தனர். சில்ஹட் மைதானம் வேகப்பந்துக்கு சாதகமாக இருந்ததை இந்த மூவரும் உச்சபட்சமாக பயன்படுத்தினர். அதாவது இந்த டெஸ்டில் பங்களாதேஷ் அணியின் 20 விக்கெட்டுகளையும் இந்த மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுமே வீழ்த்தினர்.

இலங்கை டெஸ்ட் வரலாற்றில் 38 ஆண்டுகளின் பின்னரே மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள் டெஸ்ட் போட்டி ஒன்றில் எதிரணியின் 20 விக்கெட்டுகளையும் வீழ்த்தி இருக்கிறார்கள். இதற்கு முன்னர் இவ்வாறு நிகழ்ந்தது. 1986 இல் கொழும்பில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியிலாகும். அந்தப் போட்டியில் அஷந்த டி மேல், ரவி ரத்னாயக்க மற்றும் கோசல குருப்புவாரச்சி ஆகிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும் இரண்டு இன்னிங்ஸ்களிலும் எதிரணியின் அனைத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

### அதிர்ஷ்டமா? துரதிருஷ்டமா?

ஒருநாள் சர்வேதச கிரிக்கெட் வாழ்வில் தனது அதிகூடிய ஓட்டங்களை தனது கடைசி டெஸ்ட் போட்டியில் பெற்றால் எப்படி இருக்கும். அதனை துரதிருஷ்டமா? அதிர்ஷ்டமா? என்று கூறுவது சிரமம். ஏனென்றால் கடைசி போட்டியில் சிறப்பாக ஆடியிருக்கிறோமே என்று மகிழ்ச்சி அடையவும் முடியும், நன்றாக ஆடுகிறோமே இன்னும் ஆடியிருக்கலாமே என்று ஆதங்கப்படவும் கூடும்.

இப்படி ஒரு சாதனைக்கு சொந்தக்காரராக நியூசிலாந்தின் ஜேம்ஸ் மார்ஷை குறிப்பிடலாம். 2008 ஜுலையில் அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் அவர் 161 ஓட்டங்களை பெற்றார். இதன்போது அவர் பிரன்டன் மக்கலமுடன் சேர்ந்து ஆரம்ப விக்கெட்டுக்கு 274 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். மக்கலம் 166 ஓட்டங்களை பெற்று முதல் வீரராக ஆட்டமிழந்து சென்றார்.

இதுதான் மார்ஷின் கடைசி ஒருநாள் இன்னிங்ஸ் இதற்கு முன்னர் அவர் ஆடிய ஒன்பது இன்னிங்ஸ்களில் எட்டில் 0 மற்றும் 14 ஓட்டங்களுக்கு இடையிலேயே பெற்றதோடு 2006 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான போட்டியில் 50 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

தவிர, தனது கடைசி ஒருநாள் போட்டியில் தனது அதிகூடிய ஓட்டமாக அரைச்சதம் பெற்ற ஒரே வீரராக ஐக்கிய அரபு இராச்சியத்தின் அத்னன் முப்தி உள்ளார். அவர் 2018 ஓகஸ்டில் கோலாலம்பூரில் நடந்த நேபாளத்திற்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களை பெற்றார்.

இவர்கள் தவிர 13 வீரர்கள் தனது கடைசி ஒருநாள் போட்டியிலேயே அதிகூடிய ஓட்டங்களை பெற்றிருக்கிறார்கள். இதில் ஸ்கொட்லாந்தின் ஜோன் பிளைன் (41) மற்றும் இங்கிலாந்தின் டெர்மொட் ரீவ் ஆகியோரும் அடங்குவர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி சிறுகதை

# நோன்புப் பெருநாள் கொண்டாட்டம்



"றிங்..றிங்..." பரீனாவின் தொலைபேசி சிணுங்கியது "அஸ்ஸலாமு அலைக்கும் "

"வஅலைக்குமுஸ்ஸலாம் " இண்டைக்கி இப்தாருக்கு வாறதானே அன்ரீ?" என்று பரீனாவின் தங்கையின் மகள் ஷம்லா கேட்க

" இன்ஷா அல்லாஹ் பாப்பம்" "என்ன அன்ரீ நீங்க பாப்பம் என்டு செல்ற. வரோணும் இண்டைக்கி பெருநாள் சம்பந்தமான நம்மட பெமிலி மீட்டிங் தெரியும் தானே அன்ரீ" " ஓம் மகள் தெரியும்" என்று இழுத்தாள் பரீனா.

"அப்ப என்ன? நாநா, தாத்தா, தம்பியையும் கூட்டிக்கி வாங்க அன்ரீ ஞாபகப்படுத்தத் தான் நான் கோல் பண்ணினன்" என்று ஷம்லா தொலைபேசியை வைத்தாள்.

பரீனா கொஞ்சநாளாவே ஏதோ சிந்தனையிலும் கவலையிலும் சந்தோசமற்றும் காணப்பட்டாள். பரீனா மிகவும் சமூகப்பற்று நிறைந்தவள். இறையச்சம் நிறைந்தவள். எல்லா விடயங்களிலும் பக்குவமாய் நடப்பவள். கணவன், பிள்ளைகள் விடயத்தில் மிகவும் பொறுப்புடையவள். சமூக அமைப்பு ஒன்றில் உறுப்பினராக செயற்பட்டுக்கொண்டிருப்பவள். ரமழான் வந்ததிலிருந்து அடிக்கடி நல்ல விடயங்களில் ஈடுபாடும் கவனமும் செலுத்திக்கொண்டிருந்தாள். பெருநாள் ஆடை, உணவுப் பழக்கவழக்கங்களில் மிகவும் பக்குவமாக நடந்துகொள்கின்றாள். ஆடம்பரம் பரீனாவிடம் துளியும் இல்லை. பிள்ளைகளையும் அவ்வாறே வளர்க்கின்றாள்.

இப்தாருடன் குடும்ப ஒன்றுகூடலுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காக குடும்பத்தோடு சென்றாள்.

"அஸ்ஸலாமு அலைக்கும் தாத்தா வாங்க" என்று வரவேற்றாள் பரீனாவின் மூத்த சகோதரி. குடும்பமும் "வஅலைக்குமுஸ்ஸலாம் " என பதில் கூறி இப்தார் ஏற்பாடுகள் நடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள் பரீனாவை. மும்முரமாக வேலைகளில் ஈடுபட்டார்கள் பரீனாவின் சகோதரிகளும் சகோதரர்களின் மனைவிமார்களும். வீடு முழுக்க பிள்ளைகளின் சத்தத்தினால் கலகலவெனக் காணப்பட்டது.

திருமண வீடும் தோற்றுப்போகும் அளவிற்கு இருந்தது பரீனாவின் தாய்வீடு. பரீனா வீட்டில் இரண்டாவது பிள்ளை என்றாலும், பரீனா மட்டுமே சமூக அக்கறையும் பொறுப்புமுடையவள். சகன் சாப்பாடுகளும், பழங்களும், இனிப்புகளும், குடிபானங்களும் இப்தாருக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற விருந்துகளைப் பார்த்ததும் பரீனாவின் மனதில் தாங்கமுடியாத ஒரு பரிதவிப்பு,குறுகுறுப்பு, உளக்குமுறல் ஏதோ ஒரு குற்ற உணர்வுபோல உணரலானாள். இந்த வீணான ஆடம்பர ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள அவள் மனம் மறுத்துக்கொண்டேயிருந்தது.

"எல்லாரும் வாங்க மீட்டிங் ஸ்டாட் பண்ணுவம், நேரமாகுது." என்று பரீனாவின் இரண்டாவது தம்பி ஒரு குரல் கொடுக்க அனைவரும் விரைந்து வந்தார்கள்.

"அஸ்ஸலாமு அலைக்கும். நம்மட பெமிலி மிச்சநாளைக்கி பொறகு கூடி இருக்கம். சந்தோசமா இரிக்கி, இன்ஷாஅல்லாஹ். பெருநாளைக்கு இன்னம் மூணு நாள்தான் இரிக்கி. அதனால அதப் பத்தி சில ப்ளான் பண்ண வேண்டி இரிக்கி அதான் இந்த மீட்டிங். இது சம்பந்தமான ஐடியாக்களை ஒவ்வொருத்தரா தெரிவிக்கலாம்" என்று பரீனாவின் தம்பி முடிக்க.

"மாமா நம்ம எல்லாரும் சேர்ந்து 3 நாள் ட்றிப் ஒண்டு போவம்..." என்று பரீனாவின் தாத்தாவின் மகன் மிஹாஸ் கூற...

"3 நாளா அது என்னத்துக்கு காணும் 5 நாள் போவம்" என்று பரீனாவின் தம்பியின் மகன் கூற..

" நாலு நாள் காணும். கொழும்பு, கண்டி, நுவரேலியா பாத்துட்டு வரலாம்" என்று பரீனாவின் தங்கையின் கணவர் கூற..."இது நல்ல ஐடியா இதையே நம்ம முடிவாக எடுப்பம்."

பரீனாவின் தம்பி கூற...

"எல்லாரும் பெருநாளைக்கு உடுப்பு எடுத்தாச்சா?" என்ற கேள்வியை பரீனாவின் தம்பி கேட்க..."எனக்கி நாலு உடுப்பு..எனக்கி ஆறு..எனக்கி அஞ்சி...எனக்கி மூணு" என்று ஒவ்வொரு பிள்ளைகளும் தன் பெருநாள் ஆடைகளின் எண்ணிக்கைகளை கூற..

"எல்லாரும் உடுப்புகள செல்றாங்க நீங்களும் ஒங்கட உடுப்புகள செல்லுங்களன் " என்றான் பரீனாவின் தம்பி..,வீடே கலகலத்துபோய் இருக்க பரீனாவும் பிள்ளைகளும் அமைதியாக இருந்தார்கள். அவர்களின் அமைதி பக்குவமானதே தவிர வேறேதுமில்லை. சபை ஒழுக்கம் தெரிந்தவர்கள். மரியாதையாய் பேசிப் பழகுபவர்கள். பரீனாவின் வளர்ப்பு அது. பரீனாவின் கணவரும் அப்படியேதான்.

"எங்களுக்கு மூணு பேருக்கும் ஒவ்வொரு உடுப்பு எடுத்த." என்று முடிக்க "என்ன தாத்தா பிள்ளையளுக்கு ஒண்டுதானா எடுத்த " என்று பரீனாவின் தம்பி கேட்க ஏனையவர்களும் ஆச்சரியத்துடன் நோக்க..."ஓ..தம்பி அது போதும்தானே பெருநாள் ஒருநாள்தானே தொழப் போறத்துக்கு புது உடுப்பு உடுத்தி போனா செரிதானே. அது என்னத்துக்கு மிச்சமா?" என்று சாந்தமாக கூறி முடித்தாள் பரீனா. எல்லோரும் அமைதியானார்கள்.

"வருசத்துல நமக்கு வாறதே ரெண்டு பெருநாள்தான். அத ஒரு உடுப்போட கொண்டாடுற எப்புடி. நாலஞ்ச எடுத்தா மாறி மாறி போடலாம்தானே." என்றாள் பரீனாவின் மூத்த சகோதரி.

பரீனாவின் மெல்லிய புன்னகையே அதற்குப் பதிலாக இருந்தது.

"செரி செரி அத உடுங்க உடுப்பு எடுக்கது அவரவர் விருப்பம்தானே ..பெருநாள் அன்டைக்கு காலையில் ஒரு பங்சன் ஏற்பாடு செய்றம் ஒராளுக்கு ஐநூறு ரூபா போட்டு செய்றதாக இரிக்கம்" என்று பரீனாவின் மூத்த சகோதரி முடிப்பதற்கிடையில் "ம்மா... ம்மா...இரிங்க அந்த பங்சன பத்தி நான் செல்லப்போறன்" என்றாள் ஷம்லா.

"பெருநாள் பங்சனா?? அதென்ன பெருநாள் பங்சன் இதுவேற செய்யப்போறயளா??" என்று உள் மனதில் கேள்விகளை எழுப்பினாள் பரீனா. அவளால் இந்த ஆடம்பர பேச்சுக்களை தாங்கவே முடியாமல் இருந்தது.

" பெருநாளைக்கு முதல் நாள் இரவைக்கு எல்லாரும் வாங்க நிறைய வேலைகள் இரிக்கி...டெகரேசன் பண்ணனும்..அதுக்கு நிறைய நேரம் தேவப்படும்..திங்ஸ் வாங்கணும்..எங்கட ஊட்டதான் செய்ற ..சுவர்ல ஈத் முபாறக் எண்டு பெரிசா அடிச்சி ...பலூன் நிறைய வாங்கி அதையும் பிறை வடிவத்துல டபள் கலர்ல செஞ்சா சூப்பரா இரிக்கிம்... இன்னம் இன்னம்..எவ்வளவு அழகா க்ரேண்டா டெகெரேஷன் பண்ண ஏலுமோ பண்ணலாம் நீங்களும் ஐடியா தரலாம்...அடுத்தது ஸ்வீட் ஐட்டம்ஸ் நிறைய தேவைப்படுது... அதுக்கு ஆளுக்கு ரெண்டு ஸ்வீட் செஞ்சுட்டு வந்தா சரி..ஐசிங்க கேக் கூகுள்ள மொடல் பாத்து பெரிசா ஒண்டு ஓடர் பண்ணிரிக்கி..வேற... வேறென்ன...ஹ்ம்.."

"பட்டாசுகள், சக்கரவானம் ?.." ஷம்லாவின் தம்பி ஞாபகப்படுத்தினான்.

"இதெல்லாம் செஞ்சி பங்சனும் முடிஞ்சா பெருநாள் சாப்பாடு சமைக்க நேரமே இரிக்காது போல..." என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் பரீனாவின் தம்பியின் மனைவி.

"சமையலா?...பெருநாள் உடுப்ப போட்டுக்கு சமைக்கிற எப்டி...இது செரிவரா...ஒவ்வொரு நாளும் கிச்சன்லதானே நிக்கம் இன்டைக்காவது எங்களுக்கு ஓய்வு வேணும். நாங்க கடையில சகன் சாப்பாடு ஓடர் பண்ணப்போறம்." என்று பரீனாவின் மூத்த சகோதரி பேசி முடித்தாள்.

"அப்ப செரி ...இதோட மீட்டிங்க முடிச்சுக்குவம். இந்த மீட்டிங்ல எடுத்த முடிவுகள செல்றன் கேளுங்க.. ஒருவருக்கு ஐநூறு ரூபா வீதம் சேர்த்து பெருநாள் தினத்தன்று பெருநாள் பங்சன்..

அடுத்தது பெருநாள் அடுத்த நாளைக்கி காலையில வெளியூர் நாலு நாள் பயணம் போற இப்பவே அதுக்கு எல்லாரும் ரெடியாகுங்க. செரிதானே ரெண்டு முடிவுகளும்தான் இப்ப எடுத்திரிக்கி.

பெருநாள் டெகரேசன் செய்றதுக்கு முதல் நாள் இரவைக்கி எல்லாரும் இஞ்ச அதாவது மூத்த தாத்தாட வீட்ட வந்தா செரி." என்று பரீனாவின் தம்பி முடிப்பதற்கிடையில்

"பலூன் ஊதுற வேலையெல்லாம் இரிக்கி எல்லாரும் வரணும் இதையும் செல்லுங்க மாமா " என்றாள் ஷம்லா.

"எல்லாரும் பேசின பரீனா தாத்தாதான் ஒன்டுமே பேசல.. தாத்தா ஒங்கட ஐடியாக்கள் ஏதும் இருந்தா செல்லுங்களேன்.."என்றான் பரீனாவின் தம்பி.

பரீனாவுக்கு வாய்ப்பு கிடைத்தது போலிருந்தது...

"எல்லாருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும்.

நம்ம குடும்பமா கூடினது சந்தோசம் அல்ஹம்துலில்லாஹ்.

நீங்க எல்லாரும் பெருநாளை செலிப்றேட் பண்றதும் அத க்றேன்டா கொண்டாடுறது சம்பந்தமாவும் முடிவுகள் எடுத்தியள். ஆனா எத்தனை ஊடுகளுக்கு நோன்பு பிடிக்க,நோன்பு திறக்க வசதியில்லாம இரிக்கி... அதோட பெருநாள் கேள்விக்குறியில் இரிக்கிது அவங்களுக்கு. ஒரு வேள சாப்பாட்டுக்கே கஷ்டப்படுற ஏழைகள் எத்தனையோ பேர். உடுத்த உடுப்புக்கு மறு உடுப்பு இல்லாம இரிக்க ஆக்கள் எவ்வளவோ பேர். ஊடே இல்லாம....,தகர கொட்டிலுக்குள்ள.....,இந்த கொடூர வெயில் வெப்பத்துக்குள்ள ஒரு பேன் கூட இல்லாம எத்தனையோ குடும்பங்கள்.. கை நீட்டி கேக்க வெக்கத்துல பசியோட பட்டினியோட காலத்த கடத்துற வறும குடும்பங்கள்...,பிள்ளையளுக்கு அரசாங்கம் குடுக்கற பால்மா அட்டைய வித்து அரிசி வாங்கி சோறு மட்டும் ஆக்கி அத தண்ணி ஊத்தி சாப்பிடுற குடும்பங்கள்" ...குரல் தடுமாற, தொய்ந்த குரலில், நீர் நிரம்பிய கண்களுடன் பரீனா.. ஏழைகளை விபரித்துக்கொண்டிருக்க எல்லோரும் அசையாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

கண்களைத் துடைத்து விட்டு " இது மட்டுமா காஸாவுல நாளுக்கு நாள் அங்குள்ள மக்கள் படுறபாடு...இதெல்லாம் நான் புதுசா செல்லத்தேவலதான்...ஆனா இந்த விசயங்கள நம்மட சமூகத்துல ஞாபகப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இரிக்கி.

இண்டைக்கி இஞ்ச இப்தாருக்கு செய்ற விருந்துகள் இப்தார் முடிஞ்சா விளங்கும் எவ்வளவு வீண்விரயம் ஆகப்போகுது எண்டு.

இதில இரிக்கிற ஈச்சப்பழம் கூட இல்லாம நோன்பு திறக்குற மக்கள் எவ்வளவு பேர் இரிக்காங்க எண்டு ஆருக்காவது தெரியுமா?

இது போக பெருநாள் பங்சனுக்கு ப்ளான் பண்றயள். அதுவும் ஆடம்பரமா கொண்டாட..

அடுக்குமா இது ஒங்களுக்கு? ஒராளுக்கு ஐநூறு போட்டு இறைவனுக்கு பொருத்தமில்லாத வீண்விரயத்த செய்யப் பாக்கயளே, அந்தக் காச சேத்து யாராவது ஒரு குடும்பத்துக்கு பெருநாள் சாப்பாட்ட சமச்சி குடுத்து, அந்த சாப்பாட்ட வயிராற சாப்பிட்டு, மனம் குளிரும் வேலைய செஞ்சா இது ஒங்களுக்கு மறுமைவரையும் கொண்டுபோய் நன்மையாய் பெருகுமே." பணிவான குரலில் சொன்னாள் பரீனா.

" புது உடுப்ப போட்டுக்கு சமைக்க ஏலாதாம் நம்மட தாத்தாக்கு." சிறு புன்னகைத்தபடியே சொன்னாள் பரீனா.

"குளிச்சா போட புதுசுக்கு கேள்விக்குறி...., அடுப்ப பத்தவைக்க கேள்விக்குறி..இப்பிடி வறுமையோட வாழுறவங்களோட ஒப்பிட்டு பாருங்க. சமைக்கிறதுல கொஞ்சம் சேத்து சமச்சி ஒரு பார்சல குடுத்து பாத்தா அதுல வாற மனநிறைவு எதிலயும் இல்ல தாத்தா" மிகவும் தாழ்மையுடன் சகோதரியை பார்த்து சொன்னாள் பரீனா.

"வறுமை ஒழிக்கணும்...ஏழைகள் வாழணும் என்டு குரல் குடுத்தா மட்டும் காணுமா? மாற்றங்கள் வெளியில இருந்து தொடங்க தேவல நம்மட ஊட்ல இருந்து தொடங்கணும். நம்மட பிள்ளைகளுக்கு கஷ்டத்தையும் சொல்லி வளக்கணும். பிள்ளைகள் தானே நாளைக்கு தலைவர்களாக வரப்போறவங்க, அதுகளே சமூக அக்கறையில்லாம பொறுப்பில்லாம நடந்தா அதுக்கு பேரன்ஸ் நாமதானே பொறுப்பு. நம்ம பொறுப்பு பத்தி மறுமையில இறைவன் கேட்டா செல்றதுக்கு என்ன செஞ்சிரிக்கம்?" என்று தன் உளக்குமுறல்களை, ஆதங்கத்தை, சமூக பற்றை தன் குடும்பத்தின் முன் கொட்டித் தீர்த்தாள் பரீனா.

இவ்வாறிருக்க இப்தாருக்கு நேரமாகி அதானும் ஒலித்தது (பள்ளியில் சொல்லப்படும் பாங்கு)

இப்தாரும் அமைதியாக முடிந்தது.

ஆண்களெல்லாம் பள்ளிக்குச் சென்று தொழுது வந்தார்கள்.பெண்களும் வீட்டில் தொழுது கொண்டார்கள். பிள்ளைகள் குர்ஆனை எடுத்து ஓத ஆரம்பித்தார்கள்.

பின்னர் எல்லோரும் உணவை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார்கள்.

அடுத்தநாள் பகல் 2.00 மணிக்கு குடும்பத்தின் வாட்ஸ்அப் குழுமத்தில் குறுந்தகவலொன்று வருகிறது...

பரீனா அந்த குறுந்தகவலை பார்க்கிறாள்.." நாம் நேற்று எடுத்த பெருநாள் தீர்மானங்களில் சுற்றுலாவைத் தவிர வேறெதுவும் நடக்காது. அத்தோடு சுற்றுலா இரண்டு நாள் மட்டுமே செல்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஒருவருக்கு ஐநூறு ரூபா வீதம் (விரும்பியவர்கள் விரும்பிய தொகையை தரலாம்) சேர்த்து பரீனா தாத்தா சொன்னது போல் எமது ஊரில் உள்ள ஏதாவது ஒருசில குடும்பங்களுக்கு பெருநாள் சாப்பாடு சமைத்து கொடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியாத்தருகிறேன்

இப்படிக்கு எமது குடும்ப நிருவாக தலைவர்." (பரீனாவின் தம்பி)

இந்த குறுந்தகவலை பார்த்துக்கொண்டிருக்கும் போதே நான் ஆமோதிக்கிறேன் நான் ஆமோதிக்கிறேன் என எல்லோரும் தத்தமது சம்மதத்தை தெரிவித்தார்கள்.

பரீனாவுக்கு சந்தோசம் மேலெழுந்து ஆனந்தக்கண்ணீர் வடிய உடனே இறைவனுக்கு நன்றி சொல்ல ஸுஜூதில் (சிரம் பணிதல்) விழுகிறாள்.

நிஸா இஸ்மாயில்

## உயிர் தந்து உலகை காண வைத்துப் போனாள்

கலை பாடும்போது
அந்தக் காலை விடிகிறது
சேவல் கூவி நம்மை
எழுப்பி விடுகிறது

புன்னகை சிந்தி
புதுப் பொலிவோடு
பூச்சூடிய கூந்தல்
அசைந்தாடிட வருவாள்

கையில் ஏந்திய
கற்பூரத் தட்டோடு
அம்மா
அன்று வெள்ளிக்கிழமை
நினைவுக்கு வந்தது

இன்றும் வெள்ளிக்கிழமை
நல்ல நாள் என்று
பாட்டி சொன்னார்
பாசம் பொங்கி வந்திட

வயல் விளைந்த
நெல்லோடு சர்க்கரை
பசுஈந்த பாலோடு கலந்து
அமுது செய்து படைத்தாள்

இன்று பிறந்த நாள்
என்னுடைய அம்மாவுக்கு
நானும் தான் இன்று
பிறந்தேன் அம்மா இறந்திட

நிசப்தம் கூடிய இரவு
அப்படித் தான்
அம்மம்மா
கலங்கிய விழியோடு
அன்னம் ஊட்டிச் சொல்வாள்

அவளுக்கும் மகள் தான்
பிரிந்துவிட்ட சோகத்தில்
கலங்கிய நாட்களோடு
கதை பேசிய படி நகர்வாள்

இயற்கையில் வந்த
நோயொன்று
கொண்டு போக
எனையீன்று
விடை தந்தாளாம்
அப்பாவும் சொல்வார்

அன்னையும்
தந்தையுமாகி
இறைவனாக
நின்றபடி
புன்னகை
செய்து போவார்
பள்ளிக்கு என்னை வி
ட்டு விட்டு

வகுப்பில் இருந்து
பாடம் பக்கம்
புரட்டி தொடர்ந்தால்
அம்மா நினைவு
வந்து போகும்
பாடம் சொல்லித்
தந்ததால்

விதியை நொந்து
நடந்தேன்
தீரா நோய்க்கும்
மருந்து காண
வைத்தியர் ஆகி
ஆவேன் ஞானி.
தாயினைக் காத்து
மகிழ்ந்திட இனி

உயிர் தந்து
உலகை காண
வைத்து போனாள்.
விழியில் நீர்
கசிந்து அவளை
தினம் நினைந்து உருகிட

அன்புடன் நதுநசி

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 115

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | ■ | 04 | 05 | 06 |
| 07 | | | ■ | 08 | | | |
| | ■ | 09 | | | ■ | | ■ |
| 10 | 11 | ■ | ■ | ■ | 12 | ■ | 13 |
| 14 | | 15 | 16 | ■ | 17 | 18 | |
| ■ | 19 | | | ■ | ■ | 20 | |
| 21 | ■ | 22 | | | ■ | 23 | |
| 24 | | | ■ | ■ | | 25 | |

திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................
..........................................
..........................................

.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 115
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 115

### இடமிருந்து வலம்

1. வயலும் வயல் சார்ந்த இடமும்
4. அறிமுகமில்லாத நபரைக் குறிப்பிடுவது
7, மயானம் (குழம்பியுள்ளது)
8. பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வினோதமாக இருப்பது
9. இதுவும் ஒரு மலர் (குழம்பியுள்ளது)
10. பொருள் விற்பனை நிலையம்
14, ஆபரணங்கள் செய்யப் பயன்படும் உலோகம் (திரும்பியுள்ளது)
17. நாட்காட்டியுடன் இணைந்தது
19. தலை
20. கணிதத்தில் வரும் பெருக்கல் குறியீடு
22. தவறு என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
23. காற்று (திரும்பியுள்ளது)
24. இதுவும் ஒரு பறவை (திரும்பியுள்ளது)
25. புதல்வன்

### மேலிருந்து கீழ்

1. இலங்கையின் மத்திய பகுதியை இப்படியும் சொல்வர்.
2. ஆதாரம் அல்லது அத்தாட்சி
3. பலாப்பழத்தின் வெளிப்பகுதி
4. ஒரு தமிழ் மாதம்
5. நெல் போன்ற தானியங்களை மூடையாக கட்டுவதற்கு இதனைப் பயன்படுத்துவர்.
7. உண்மையில் இருப்பதைக் காட்டிலும் அதிகப்படுத்தப்பட்டது.
8. எல்லைப் பாதுகாப்புக்காக அமைக்கப்படுவது.
11. இறுதி (குழம்பியுள்ளது)
12. சந்திரன்
13. சூரியன்
15. வானரம் (குழம்பியுள்ளது)
16. இளைய சகோதரன்
18. இதுவும் ஒருவகை நடனம்(குழம்பியுள்ளது)
21. அம்பு எய்வதற்கு இது தேவை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 114

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. சிரஞ்சீவி
5. சாவி
7. வாவி
8. தைலம்
10. ஜில்லா
12. தங்கை
13. பங்குனி
16. பார்
18. புதன்
20. தசரதன்
23. இலை
24. கடம்
25. பாவனை
27. கமம்
28. ஆர்வம்

**மேலிருந்து கீழ்**

1, சிவாஜி
2. விரல்
3. சீதை
4. விலங்கு
6. விலை
9. புனிதம்
11. பலா
14. சங்கு
15. இன்று
16. பாதகம்
17. தர்மம்
19. தலைவர்
21. கடன்
22. பாரம்
26. ஆனை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 114

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எஸ். ஜனஹாசினி** 91/1 பிரதான வீதி, கொழும்பு 11 | **ஏ.ஏச்.எம். ஈஹ்லாஷ்.** 108, ஹிஜ்ராபுர, திகன, ரஜவெல்ல | **எஸ். சத்தியசீலன்,** மே/பா ஏ. அந்தனி 20/1 போமாறுவா வீதி மாத்தளை |

### பாராட்டு பெறுவோர்

**1. பதீஸ் சஹாரி**
பாலமுனை

**2. எம். கோகிலாதேவி**
பரகாதுவை

**3, ஆ.எம். அஸ்லீம்,**
கிண்ணியா

**4. பி. குணசேகரன்**
களுவாஞ்சிக்குடி

**5. பரீனா மொஹம்மட்,**
நாரம்மல

**6. மாயன் சுப்பிரமணியம்,**
மட்டக்களப்பு

**7. எம்.எச்.சி.என். ஹம்தா**
வெலிகம

**8. ஏ.டபிள்யூ.எம். நியாஸ்.**
மாவனல்லை

**9. எஸ்.எச்.எம். ஜிப்ரி**
கொழும்பு 10

**10. கே.எம்.எம். பாரூக்**
மாத்தளை



# வாரபலன்

31.03.2024 - 06.04.2024 வரை

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

கொடுத்த வாக்குறுதியை நீங்கள் காப்பாற்றுவீர்கள். மற்றவர்களுக்கு உங்கள் மீது இருந்த கோபம் குறையும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாக பணிகளை கவனிப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் அகலும். பிள்ளைகள் முன்னேற்றத்தில் இருந்த தடை தாமதம் நீங்கும். பெண்களுக்கு கோபத்தை குறைப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு இடைத்தரகர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பை எதிர்பாராமல் நீங்கள் நேரடியாகவே முயற்சி செய்து வருவதன் மூலம் புதிய வாய்ப்புகளை பெற்று மகிழ இடமுண்டு. அரசியல்வாதிகள் தலைமையின் பேரன்பையும், நன்மதிப்பையும் பெறுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமடைய கவனமாகப் படிப்பது நல்லது. எதிலும் நிதானம் தேவை.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

பலவித நன்மைகள் ஏற்படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிலும் அவசரம் காண்பிப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும். பெண்களுக்கு எதிலும் நிதானம் தேவை. கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் நீங்கள் பெரும் முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லாமலேயே உங்களைத் தேடி வரும். அரசியல்வாதிகள் தலைமையின் பாராட்டுகளையும், நன்மதிப்பையும் பெறுவார்கள். உங்களுக்கு பொறுப்பான பதவிகள் கிடைக்கும். மாணவர்கள் திட்டமிட்டு பாடங்களை படிப்பது கல்வியில் வெற்றிக்கு உதவும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மனக்கவலைகள் அகலும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பரச் செலவுகள் ஏற்படும். எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறையான எண்ணங்கள் உருவாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். வியாபாரச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி எல்லோரும் உங்களது வார்த்தைக்கு மதிப்புத் தருவார்கள். கணவன், மனைவிக்கிடையே சகஜநிலை நீடிக்கும். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். பெண்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். கலைத்துறையினர் முயற்சிகளைத் தொடர்வது அவசியம். அரசியல்வாதிகள் எதிலும் எப்போதும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டிய காலகட்டம். மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றிய கவலை நீங்கும். ஆனால் கல்வியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாட்டு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்ற மடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும், கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். சுப காரியங்கள் நடக்கலாம். சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிக்கும் திறமை உண்டாகும். கலைத்துறையினர் சக கலைஞர்களைப் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது அவசியம். அரசியல்வாதிகள் தரப்பட்டுள்ள பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றி தலைமையின் பாராட்டுகளை பெறுவர். மாணவர்களுக்கு திறமை வெளிப்படும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

திட்டமிட்டு காரியங்களை செய்வது நன்மை தரும். எதிலும் தலையிடாமல் ஒதுங்கிச் சென்றாலும் மற்றவர்கள் வலிய வந்து உங்களை வம்புக்கு இழுப்பார்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பெண்கள் மற்றவர்களின் பேச்சை கேட்டு எதிலும் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு பல முன்னணி நிறுவனங்கள் தாமே உங்களைத் தேடி வந்து வாய்ப்புக் கொடுக்கும். அரசியல்வாதிகளின் தன்னலமற்ற தொண்டுக்குப் பாரட்டுகள் குவியும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயத்தை விலக்கி விட்டு ஆர்வமாக படிப்பது வெற்றிக்கு உதவும்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

பொருள்வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மற்றவர்களால் கைவிடப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்துக்கு தேவையான பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்பமில்லாத இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். திருமணம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் கைகூடும். பெண்களுக்கு எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு பல முயற்சிகளுக்குப் பிறகு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு தேவையற்ற வீண் சோதனைகள் வரலாம். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த மந்தநிலை மாறும். சுறுசுறுப்பாக பாடங்களை படிப்பர்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எடுத்த காரியங்களில் இருந்த தடை, தாமதம் நீங்கும். எந்த ஒரு வேலையைச் செய்யும் போதும் மனமகிழ்ச்சியுடன் செய்வீர்கள். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். சுக்கிரன் சஞ்சாரம், புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு சுபச்செலவு அதிகரிக்கும். கலைத்துறையினர் கிடைக்கும் சிறு வாய்ப்புகளைக் கூட வீணாக்காமல் பயன்படுத்துவது நல்லது. அரசியல்வாதிகள் மீது தலைமை அதிகமான நம்பிக்கை கொள்ளும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்டபடி பாடங்களை படிப்பதில் கவனம் செலுத்துவர்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எந்தக் காரியத்தை செய்தாலும் லாபம் ஏற்படும். உடற் சோர்வு நீங்கும். வீண் பிரச்சினைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் மனவருத்தம் நீங்கி சுப உறவு உண்டாகலாம். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப்பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு உறவினர்களிடம் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது. கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சேமிப்புகளில் கவனம் செலுத்துவர். அரசியல்வாதிகள் பொறுப்பான பணிகளுக்காக தலைமையின் பாராட்டுகளைப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது. பெரியோர் சொற்படி நடப்பது வெற்றிக்கு உதவும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

எல்லா காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்சினை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு குறையும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். திருமண காரியங்கள் கைகூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்களுக்கு எதிர்ப்புகள் விலகும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கொட்டும். அதன் மூலம் உங்களது பொருளாதார நிலை உயரும். அரசியல்வாதிகளுக்கு விரும்பிய உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் குறையும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

மன உறுதி அதிகரிக்கும். வாக்குவன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் அமைதி ஏற்படும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பெண்களுக்கு புதிதாக செய்யும் காரியங்களில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு புதிய புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு நாளுக்குநாள் பெருகி வரும். மாணவர்கள் ஆசிரியர் சொற்படி பாடங்களை படிப்பது கூடுதல் மதிப்பெண் பெற்று வெற்றி பெற உதவும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

அனுபவ அறிவும், செயல்திறனும் அதிகரிக்கும். சுபச்செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவரை நம்பிப் பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பால் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையில் இருந்த மனவருத்தம் நீங்கும். பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. கலைத்துறையினர் முயற்சி செய்தால் பல புதிய வாய்ப்புகளைப் பெறலாம். அரசியல்வாதிகள் பணிகளில் கவனம் செலுத்துவது நன்மை தரும். மாணவர்கள் மிகுந்த கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். எதிர்ப்புகள் விலகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும். பெண்களுக்கு மனோ தைரியம் கூடும். கலைத்துறையினருக்கு பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படும். அரசியல்வாதிகள் பலரும் பொறாமைப் படும் அளவுக்கு வளர்வார்கள். மாணவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

---

தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 30

# இரண்டு மாநிலங்களின் தூதுவராக செயற்பட்டவர் நக்கீரன் கோபாலன்

இந்திய ஊடகத்துறையின் அபரீத வளர்ச்சிக்குரிய நாமமாக "நக்கீரன்" இதழ் விளங்குகிறது. அவ் இதழின் நிறுவுனர் கோபாலன் ஊடக உலகில் "நக்கீரன் கோபாலன்" என்றே அடையாளப்படுத்தப்படுவதை அறிகிறோம். இம் மாநாட்டில் இவரது வருகையும் பங்கேற்பும் மிகுந்த வரவேற்பை பெற்றதாக விளங்கியது. ஊடகத்துறையில் மிகுந்த சர்ச்சைக்குரிய நாமமாக விளங்கும் இவரது உழைப்பு மிகுந்த முன்மாதிரியானதே! பல சோதனைகளை கடந்த நிலையிலேயே தன்னை இத்துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர். தமிழகத்தின் ஊடகத்துறையில் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர். எம்.ஜி.ஆரின் ஆட்சிக் காலத்தில் நிலவிய பல சர்ச்சையான விடயங்களை ஊடகத்தின் வாயிலாக வெளிக்கொண்டு வந்ததில் நக்கீரனுக்கு நிறையவே பங்குள்ளது. அதன் தொடர்ச்சி நிலையில் இன்று வரை அப் பணியை மிக நிதானத்துடன் கையாளும் போக்கு இவரின் சிறப்பம்சமாகும். "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று மொழிந்த நக்கீரனின் அடிச்சுவட்டை பின்பற்றும் போக்கு அவதானத்திற்குரியதாகும்.

"நக்கீரன் கோபாலன்" என்ற நாமத்தோடு பார்க்கின்ற போது "வீரப்பன்", "மலையூர் மம்பட்டியான்" ஆகிய நாமங்கள் பற்றிய அவதானமும் அவதானத்திற்குரியனவாகும். எண்பதுகளுக்கு பின்னர் தமிழ்த் திரையுலகில் "மலையூர் மம்பட்டியான்" என்ற திரைப்படம் மிகுந்த கவனத்தை பெற்று விளங்கியது. அப் படத்தில் நடிகர் தியாகராஜன் நடித்திருந்தார். அப் படத்தில் இடம்பெற்ற "காட்டு வழி போற பெண்ணே கவலை படாத, காட்டுப் புலி வழி மறைக்கும் கலங்கி நிற்காத, மம்பட்டியான் பேர சொன்னா புலி ஒதுங்கும் பாரு." என்ற மம்பட்டியானின் சிறப்பை வெளிப்படுத்தும் பாடல் குறிப்பிடத்தக்கது. பின்னாளில் இதே படத்தில் தியாகராஜனின் மகன் பிரசாந்த் நடித்து தமிழ் திரையுலகில் செல்வாக்கைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அய்யாத்துரை என்ற இயற் பெயர் கொண்டவருக்கு "மலையூர் மம்பட்டியான்" எனப் பெயர் வந்தமைக்குரிய காரணம் அவதானத்திற்குரியதாகும். நெடுஞ்சாலைத்துறையின் கூலித் தொழிலாளியான அய்யாத்துரை எப்போதும் தன்னுடைய தோளில் மண்வெட்டியை சுமந்தவாறே காணப்படுவதனாலும், அவனுடைய முகத்தில் கீழ்த்தாடைப் பகுதி மண்வெட்டியைப் போல குவிந்திருப்பதனாலும் மலையூர் மம்பட்டியான் என சித்தரிக்கப்பட்டுள்ளான். இப் பாத்திரம் இரு வேறுபட்ட அம்சங்களில் நோக்கப்படுகின்றன. சாதக அம்சங்கள் குறித்த பார்வையை "மலையூர் மம்பட்டியான்" திரைப்படம் பதிவு செய்கிறது. கொலை, கடத்தல் வழக்குகளை பொலிஸ் இவனது பாதக அம்சத்திற்கான தடயங்களாக முன் வைக்கிறது. எது எவ்வாறாயினும் தமிழர்களில் முக்கிய அவதானிப்பிற்குரிய நாமமாக அடையாளப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து வருடங்களுக்கு மேலாக காட்டில் ஆளுமை செலுத்திய மம்பட்டியானை முன்மாதிரியாகக் கொண்ட நிலையிலேயே வீரப்பனின் விஸ்வரூபம் எழுச்சி பெறுகிறது. கூ.சு. முனிசாமி வீரப்பக் கவுண்டர் பின்னாளில் "சந்தனக் கடத்தல் வீரப்பன்" என எழுச்சி பெறுவது தொடக்கம் வீரப்பனின் வாழ்க்கை மிகவும் சுவாரஷ்யமானது. மம்பட்டியானை கொன்றவரின் சகோதரனை கொன்றதே வீரப்பனின் முதல் கொலையாக அமைகிறது. வீரப்பனின் கொலைப் பட்டியலும், கடத்தல் சம்பவங்களும் மிகுந்த சர்ச்சைக்குரியனவாகும். தமிழக, கர்நாடக, கேரள அரசுகளுக்கு மிகுந்த சவாலாக விளங்கியதாக வீரப்பன் என்ற நாமம் வலுப்பெறுகிறது. இம் மாநிலங்களின் அரசியலிலும் மிகுந்த அவதானத்திற்குரியதாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது. வீரப்பனின் ஆயுள் உள்ளவரை இம் மாநிலங்களின் வனத்துறையே மிகுந்த அவதானிப்பையும், சர்ச்சைக்குரியதாகவும் விளங்கியமை கவனிக்கத்தக்கது. வீரப்பன் பற்றிய ஆவணப்படங்களும் திரைப்படங்களும் அவனது சமூகம் சார்ந்த நிலைப்பாடுகளையும் போதிப்பனவாக அமையப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நடிகர் விஜயகாந்திற்கு அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்திய படங்களில் "கேப்டன் பிரபாகரன்" திரைப்படம் கவனத்தை பெறுகிறது. அப் படம் வீரப்பனின் சமூகம்சார் நியாயப் போராட்ட குணாம்சத்தையும் பதிவு செய்கின்றது.

வீரப்பனின் வரலாற்றில் முக்கிய தடமாக அமைந்த ஆளுமையாகவே "நக்கீரன் கோபாலன்'' விளங்குகிறார். அரசியல், திரைத்துறை உட்பட பல படைப்புகளுக்கு சொந்தக்காரர். வீரப்பனின் துணிச்சல் மிகு செயற்பாடுகளை பதிவு செய்ததிலும் பகிரங்கப்படுத்தியதிலும் இவருக்கு தனியிடமுள்ளது. வீரப்பன் வாழ்ந்த காட்டுப்பகுதியில் வீரப்பனால் அனுமதிக்கப்பட்ட ஊடகராக இவருக்கு மாத்திரமே சிறப்பிடமுள்ளது. வீரப்பனை தொடர் நேர் காணல் மூலமாக அவனது வாழ்வில் அறியப்படாத பக்கங்களையும் வெளிப்படுத்தியதில் முக்கிய கவனத்தை வென்றவராக விளங்குகிறார். வீரப்பன் வாழும் இடத்தை மறைத்தார் என்ற குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். இன்று வரையில் தமிழக அரசுக்கு சர்ச்சையானவராகவே திகழ்கிறார். மாநில அரசுகளுக்கும் வீரப்பனுக்கும் இடையிலான தூதுவர் நிலை என்பது இவரது வாழ்வில் முக்கியமானதாகும். ஊடகத்துறையிலும், உலக அரங்கிலும் "நக்கீரன்" எனும் நாமத்தை நிலைபெற செய்ததில் இவரது ஆளுமை தனித்துவமானதாகவே நோக்கப்படுகிறது. இம் மாநாட்டில் பங்கேற்றவர்களுடன் மிக நெருக்கமாகவும் எளிமையாகவும் பழகிய விதம் அனைவரின் கவனத்தையும் வென்றதாக அமைந்தது.

"தமிழ் ஊடகம்" தொடர்பிலான விசேட உரை நிகழ்வதற்காகவே கோபாலன் அழைக்கப்பட்டிருந்தார். இவரது பங்கேற்பும் உரையும் மாநாட்டின் காத்திரத்தில் முக்கிய அங்கமாகியது. போராட்ட வீரன், செயல் வீரன் என்றவாறே கோபாலன் அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்டார். இவரது உரை, 19ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் அச்சு ஊடகம் தோன்றியது. படித்தவர்கள் மத்தியில் சுதேச மித்திரன், இந்தியா ஆகிய இதழ்கள் புழக்கத்திற்கு வருகிறது. விடுதலை போருக்கான அகலூக்கங்கள் இதழ்கள் ஊடாகவும் தருவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பெரியாரின் வருகையைத் தொடர்ந்து "விடுதலை" வந்தது. தொடர்ந்து புரட்சிகரமான பத்திரிக்கைகள் நிறையவே வெளிவந்தன. அண்ணாவின் வரவு, தொடர்ந்து ஆசிரியர் வீரமணி அவர்களது வரவு என்பதெல்லாம் தமிழ் ஊடகத்திற்கு வலிமையான அங்கங்களாகின. நீதிக் கட்சியின் உருவாக்கம் "ஜஸ்டிஸ்" பத்திரிக்கையின் தாக்கத்தில் பெரிதும் செல்வாக்கைப் பெற்றது. இடதுசாரிகளின் எழுச்சியோடு தாமரை, ஜனசக்தி போன்ற இதழ்கள் உருப்பெறுகின்றன. ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், கல்கி போன்ற பொதுவான பத்திரிகைகளின் வரவும் இத் துறையில் முக்கிய அங்கமாகிறது. விடுதலைக்கு பின்னர் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுகிறது.



திராவிட இயக்க கழகத்தின் தலைவர்கள் பலரும் பத்திரிகை நடத்தினார்கள். திராவிட முன்னேற்ற கழகம் ஆரம்பித்ததன் பின்னரே வெகுஜன செயற்பாடுகள் வலுப்பெறுகின்றன. பத்திரிகைகள் மூலமாக இயக்க கருத்துகள் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படுகிறது. ஊர்கள் தோறும் படிப்பகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அப் படிப்பகங்களில் தந்தி, தினமணி, ஆனந்த விகடன், குமுதம் போன்ற பத்திரிகைகளை வாசிக்க ஆரம்பிக்கிறார்கள். படித்தவர்களின் தொகையில் அதிகரிப்பு ஏற்படுகிறது. வாசிக்கும் திறன் மேலாங்கியது. தமிழ் நாட்டில் ஓர் அறிவுப் புரட்சி ஏற்படுகிறது. இடதுசாரி இயக்கங்கள், காங்கிரஸ் கட்சியின் படிப்பகங்கள மேலும் அதிகமாகின்றன. ஐம்பதுகள், அறுபதுகள் படிப்பிலும் வாசிப்பிலும் ஆர்வத்தை அதிகமாக்குகிறது. அறுபதுகளின் மத்தியில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுப்பெறுகிறது. உயிர் கொடுத்து தமிழை காக்கும் துணிவு முக்கிய அங்கமாகிறது. தீக்குளிக்கும் போராட்டம் வலுப்பெறுகிறது. தேசிய பாதுகாப்பு சட்டத்தில் தலைவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

அவர்களில் கலைஞர் கருணாநிதிமற்றும் மாறனின் கைது முக்கியத்துவம் பெறுகிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கில் அரசியல் பத்திரிகைகள் தோற்றம் பெறுகின்றன. செய்தி மாத்திரம் இல்லாமல் செய்தியின் பின்னணியில் இருக்கும் உண்மைகளை எடுத்துரைக்கும் கடப்பாட்டுடன் பத்திரிகைகள் பரினமித்தன. 'துக்ளக்' போன்ற பத்திரிகைகள் ஆசிரியரின் எண்ணத்தை மாத்திரம் அரசியலாக்கிய பணியில் முக்கியம் பெறுகிறது.

எண்பதுகளில் விசிட்டர், ஜூனியர் விகடன், தராசு போன்ற பத்திரிகைகள் வெளிவருகின்றன. புலனாய்வுத்துறைக்கு வித்திட்டதில் விசிட்டர் அனந்து முக்கியத்துவம் பெறுகிறார். தராசுக்கு பின்னர் 1988 ஏப்ரல் 20 இல் நக்கீரன் வெளிவருகிறது.

சிறு தொகை முதலீட்டுடன் தொடங்கப் பெற்ற நக்கீரன் முப்பத்தைந்து வருடங்களை கடந்து உண்மை, துணிவு, உறுதி என்ற தார்மீக உந்துதலோடு வெற்றி நடை போடுவதை மிக மகிழ்வோடு உணரமுடிகிறது. பல சர்ச்சைகள், சோதனைகளை கடந்தே நாலாயிரம் முதலுடன் தொடங்கப்பெற்ற நக்கீரனால் இன்று வீறுநடை போட முடிகிறது. எம்.ஜி.ஆர் ஆட்சியின் போது மீனவர் போராட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பிலான சர்ச்சையே நக்கீரன் மீதான கவனத்தை வென்றதாக அமைகிறது. அவ்வாறே ஜெயலலிதாவின் வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை என முழுவதையும் நக்கீரனைப் புரட்டி பார்க்கும் போது அறிய முடியும். நக்கீரன் பல விடயங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. புலனாய்வு விடயங்களில் அதீத கவனத்தை செலுத்தியுள்ளது. ஊடகம் என்பது பரந்துப்பட்ட பார்வையை செலுத்த வேண்டியிருப்பினும் நக்கீரனுடன் தொடர்புபட்ட உழைப்பை பற்றிய கவனத்தை பதிவு செய்ய வேண்டியதான அவசியமும் உள்ளது. புலனாய்வு செய்திகள் பல அவதானத்தை ஏற்படுத்தின. பல பரிசுகள் வழக்கு வடிவிலும் கிடைத்தன. இதுவரையில் அச்சில் வெளிவந்த செய்திகளில் வீரப்பன் தொடர்பான பதிவுகள் முக்கியத்துவத்திற்குரியதாகும். வீரப்பனின் சர்ச்சையைத் தொடர்ந்து இரு மாநில அரசுகளும் என்னை தூதுவராக பணியாற்ற அழைப்பு விடுத்தார்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ் பத்திரிகை ஒன்று தூதுவராக பங்கேற்கும் வாய்ப்பு "நக்கீரன்" இதழுக்கே கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இப் பணியில் இரு மாநிலங்களின் அமைதிக்கான தூதாக செயற்பட்டதில் திருப்தியாக அமைகிறது. கொவிட்டு 19க்கு பின்னர் அச்சு ஊடகங்களில் சரிவு ஏற்பட்டு காட்சி ஊடகங்கள் கவனத்தை பெறுகின்றன. சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் விரிவு பெறுகிறது. அக் கால மாற்றத்தையும் கவனத்தில் கொண்ட நிலையில் நக்கீரனின் அவதானமும் அமையப் பெற்றது. அதனூடே சமூக வலைத்தளங்களின் கவனத்தையும் வென்று வருகிறோம். தமிழர்களை ஒன்றிணைக்கும் பணியில் நக்கீரனின் பணி தொடரும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

மாநாட்டு ஆரம்ப நாளில் நுழைவாயிலில் வைத்து என்னை அறிமுகப்படுத்தி தொடர்ந்து உரையாடினோம். நிகர் இதழ் பற்றியும் எடுத்துரைத்தேன். அந்த அறிமுகத்தின் பின்னர் காணும் இடங்களிலும் தொடரும் தொலைபேசி தொடர்புகளின் போதும் "நிகர் லெட்சுமணன்" உங்களுக்கு நிகர் யாரும் இல்லை சார் என கலாய்ப்பதுமாக அமையப்பெறும்.

தமிழ் இதழ்கள் தொடர்பிலான பார்வையில் இலங்கையின் தனித்துவம் தொடர்பிலும் மலையக இதழியல் நோக்கு தொடர்பிலான கவனத்தை ஏற்படுத்தியதாக அவருடனான உரையாடல்கள் அமையப்பெற்றன.

பயணம் தொடரும்.....

# இலங்கையின் தேசிய பாடவிதானத்தில் AI; கல்வி அமைச்சுடன் இணையும் Microsoft

இலங்கையின் கல்வி அமைச்சு (MOE) மற்றும் Microsoft ஆகியன, இலங்கையின் தேசிய பாடசாலை கல்வித் திட்டத்தில் Artificial Intelligence (AI) மற்றும் Machine Learning (ML) ஆகியவற்றை ஒன்றிணைப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த கைகோர்ப்பு, நாட்டில் கல்வியில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், தரம் எட்டு மற்றும் அதிலிருந்தான உயர்மட்ட வகுப்புகளுக்காக ஆரம்ப கட்ட பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து இடம்பெற்ற அறிமுகத்தில் Microsoft 365 கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாதுகாப்பான தொடர்பாடல் மற்றும் கைகோர்ப்பு மையமாக அமைந்திருக்கும்.



அனைவருக்கும் AI அணுகலை ஏற்படுத்திக் கொடுக்கும் இலக்குடன், சர்வதேச Microsoft கல்விச் செயலணிகள் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி (NIE) ஆகியன இணைந்து, கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட இருபது பாடசாலைகளில் ஆரம்பகட்டமாக இந்தப் பாடவிதானம் அறிமுகம் செய்யப்படும். ஒன்பது மாகாணங்களிலிருந்தும் ஆகக்குறைந்தது ஒரு பாடசாலையேனும் இந்தத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான முன்னோடி அளவீட்டுத் திட்டமாக இந்த பாடசாலைகள் அமைந்திருக்கும். இந்த ஆரம்ப கட்டத்திட்டத்தினூடாக, பயிற்றுவிப்பாளரை பயிற்றுவிப்பது எனும் மாதிரியினூடாக, பயிலுநர்களுக்கும் கல்வி கற்பிப்போருக்கும் வலுவூட்டப்படுவதுடன், AI யுகத்தில் அவர்கள் இயங்குவதற்கு அவர்களை நன்கு தயார்படுத்துவதாக அமைந்திருக்கும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் 2024 மார்ச் 19ஆம் திகதி நடைபெற்றது. இதில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம், கல்வி அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு மற்றும் Microsoft ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேம ஜயந்த, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மற்றும் Microsoft இந்தியா மற்றும் தெற்காசியா தலைவர் புனீத் சந்தோக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



மெக்டயில் நிறுவனத்தின் கென்யாவுக்கான புதிய காட்சியறை கென்யாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் கே.வீ.கனநாதன் பங்கேற்புடன் நைரோபியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. மெக்ஸன்ஸ் கென்யா பணிப்பாளர் அஷ்தாப்ஹரீஸ், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் அப்ஹாம் சஹீல் உள்ளிட்ட கென்ய அரச மற்றும் வர்த்தக பிரமுகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.




# T Brand Shirtகள் இலங்கையில் அறிமுகம்

T Brand Shirt களை இலங்கையர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதியன்று பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் வளாகத்தில் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. மிகக்குறைந்த விலையில் மிக உயர்ந்த தரம், நீடித்து நிலைக்கும் தன்மை மற்றும் அதிக கவர்ச்சியுடன் கூடிய சட்டை களை வாடிக்கையாளரின் கைகளில் சேர்க்கும் நோக்கத்துடன் இவை தயாரிக்கப்படுகின்றன, மற்றும் டி பிராண்ட் சட்டை யானது "எப்போதும் இல்லாத வகையில் மிகவும் மலிவான பிராண்டட் சட்டை". அல்லது "எப்போதும் குறைந்த விலையில் தயாரிக்கப்பட்ட உயர்தரமான சட்டைகள்", என்றும் அழைக்கப்படும். மிகக் குறைந்த விலையில் உயர்தர சட்டைகளை நுகர்வோருக்கு வழங்குவதே தமது நோக்கமாகும் என முகாமைத்துவப் பணிப்பாளர் Tiroshan Upendra தெரிவித்தார். மேலும், ஐரோப்பிய தரங்களின் படி தயாரிக்கப்படும் துணி மட்டுமே நிபந்தனை சரிபார்ப்புக்குப் பிறகு இந்த டி பிராண்ட் சட்டையின் உற்பத்தி செயல்முறைக்கு பயன்படுத்தப்படும் என்றும், அடுத்த மாதத்திற்குள் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் குறைந்த விலையில் டி பிராண்டட் சட்டைகளை வாங்க முடியும் என்றும் அவர் கூறினார்.



செயற்பாடு முகாமையாளர் Chathushika Lakmini கருத்து தெரிவிக்கையில், நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Tபிராண்டட் சட்டையிலிருந்தும் பத்து ரூபாயானது தொலை தூர பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகளை வழங்குவதற்காக நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகிறது என அவர் அவர் மேலும் தெரிவித்தார். T Brand Shirt 11

# முதற்கட்ட கண் பரிசோதனை தொகுதியினை வழங்கிய விஷன் கெயார்

உலக கண் பரிசோதனை வாரத்தை முன்னிட்டு விஷன் கெயார் நிறுவனம் "விசன் கொயர் கண் பரிசோதனை மற்றும் அறிவூட்டல் உபகரணத் தொகுதியை நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்துள்ளது. இந்த செயற்பாடானது பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறை அமைப்புகள் மத்தியில் கண் சுகாதார விழிப்புணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

உலக கண் பரிசோதனை வாரத்தின் கருப்பொருளான "உலகளாவிய கண் பராமரிப்புக்கான கண் பரிசோதனைத் துறையின் ஈடுபாட்டை மேம்படுத்தல் என்பதற்கு சமாந்தரமாக இந்த வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக சமூகங்களின் அமைவிடம் அல்லது சமூகப் பொருளாதார நிலையை பொருட்படுத்தாமல் விரிவான கண் பராமரிப்பு சேவைகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. அனைவரும் அணுகக் கூடிய, நியாயமான கண் பராமரிப்பு என்ற விஷன் கெயாரின் அர்ப்பணிப்புக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக மேற்படி திட்டம் அமைந்துள்ளது.

மேற்படி நிகழ்வு கொழும்பு 2, விஷன் கொயர் நிறுவனத்தில் நடைபெற்றதுடன் ஆரம்ப நிகழ்வில் 100இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கென வடிவமைக்கப்பட்ட "விஷன் கெயார் அறிவூட்டல் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த உபகரணத் தொகுதியில் முழுமையான கண் பரிசோதனைக் கருவிகள், அறிவூட்டல் சாதனங்கள் மற்றும் பாடசாலை மட்டத்தில் செயற்திறன் மிக்க கண் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் உட்பட அத்தியாவசியமான அங்கங்ளைக் கொண்ட விசேட கட்டளைத் தொகுதி வழங்கப்பட்டது.

# STEM புலமைப் பரிசில்களுக்காக பெண்களை அறிமுகப்படுத்தும் பிரிட்டிஷ் கவுன்சில்

UK இன் கல்வி வாய்ப்புகள் மற்றும் கலாசார உறவுகளுக்கான சர்வதேச அமைப்பான பிரிட்டிஷ் கவுன்சில், UK பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, STEM திட்டத்தில் பெண்களுக்கான புலமைப்பரிசிலை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த மதிப்புமிக்க புலமைப்பரிசில் பெண் STEM பட்டதாரிகள் இங்கிலாந்தில் தங்கள் முதுநிலைப் படிப்பைத் தொடர வடிவமைக்கப்பட்டுள்ளது.

பன்முகத்தன்மையை ஊக்குவிப்பதற்கும், பலவிதமான முன்னோக்குகளை உறுதி செய்வதற்கும், புதுமைகளை இயக்குவதற்கும் STEM துறைகளில் பெண்களின் இருப்பு அவசியமாகும். அவர்களின் இருப்பு பாலின ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வது மட்டுமல்லாமல், தனிப்பட்ட திறன்களைக் கொண்டு தொழிலாளர்களை வளப்படுத்துகிறது,




இறுதியில் சமூகத்தின் நலனுக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை அது மேம்படுத்துகிறது. உலகப் பொருளாதார மன்றத்தின் உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை 2023 இன் படி, இந்த பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து 146 நாடுகளுக்கும் 2023ஆம் ஆண்டில் உலகளாவிய பாலின இடைவெளி மதிப்பெண் 68.4% ஆக உள்ளது, இது கடந்த ஆண்டு பதிப்பை விட 0.3% முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

25 புலமைப்பரிசில்கள் இலங்கை மற்றும் பிற தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த பெண் STEM புலமையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஐந்து UK உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாவர்.

# பஜாஜ் ஜெனுவின் புதையல் மார்ச் 31 வரை

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தினால் பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட புத்தம் புதிய பரிசுப் போட்டியான பஜாஜ் ஜெனுவின் புதையல் அகழ்வதற்கு அல்ல சுரண்டுவதற்கு தற்பொழுது நடைமுறையில் உள்ளது.

DPMC உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் டீலர்களிடம் பஜாஜ் ஜெனுவின் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் பஜாஜ் ஜெனுவின் உதிரிப்பாகங்களில் காணப்படும் யானைக் குட்டி சின்னம் பொறிக்கப்பட்ட ஹொலோகிராம் ஸ்டிக்கரைச் சுரண்டி அதில் காணப்படும் இலக்கத்தை 0777665577 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ் செய்தியாக அனுப்புவதன் ஊடாக இந்தப் போட்டியில் இணைவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.



பஜாஜ் ஜெனுவின் புதையல் போட்டியின் பாரிய சீட்டிழுப்பின் முதலாவது பரிசாக புத்தம் புதிய பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிள் வழங்கப்படவுள்ளது. இரண்டாவது பரிசாக 55 அங்குல சென்யோய் தொலைக் காட்சியும், மூன்றாவது பரிசாக 50,000 ரூபா ரொக்கம் பணம் வீதம் 05வருக்கு வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அட்லஸ், DPMC MRF மற்றும் ஓராயன் டயர் கொள்வனவு செய்வதற்கான 25,000 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் மற்றும் பேர்பே இற்கான குடும்பப் பொதியும் 15 பேருக்கு வழங்கப்படும். மேலும் வாராந்தம் தெரிவுசெய்யப்படும் வெற்றியாளர்களில் 20 பேருக்கு பஜாஜ் ஜெனுவின் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக 10,000 ரூபா வவுச்சர்கள் வழங்கப்படும்.

# புதிய வர்த்தக இலச்சினையை அறிமுகம் செய்த யூனியன் வங்கி




சர்வதேச பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமான CG Corp Global உடன் கைகோர்த்துள்ள யூனியன் வங்கி, தனது புதிய மூலோபாய நோக்கம் மற்றும் மாற்றங்களை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட புதிய வர்த்தக இலச்சினையை அறிமுகம் செய்திருந்தது. இலங்கையின் நம்பிக்கையை வென்ற நிதிச் சேவைகளை வழங்கும் வர்த்தக நாமமாக தனது 29 வருட கால உறுதியான வரலாற்றுப் பயணத்தில் மற்றுமொரு அங்கமாக, வங்கியின் உறுதியான அடையாளத்தை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் அடையாளம், குறியீடு மற்றும் வர்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டு புதிய இலச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது. முன்னர் காணப்பட்ட வர்த்தக இலச்சினையை தழுவியதாக வாடிக்கையாளர்களுக்கு பரீட்சியமான வகையில் இந்த புதிய இலச்சினை அமைந்துள்ளது.

புதிய இலச்சினை வெளியிடும் பிரத்தியேகமான வாடிக்கையாளர் தொடர்பாடல் நிகழ்வில் CG Corp Global தவிசாளர் கலாநிதி. பினோத் சௌத்ரி பங்கேற்று, இந்த புதிய இலச்சினையை வெளியிட்டிருந்தார். இந்நிகழ்வில் யூனியன் வங்கி தவிசாளர் நிர்வாணா சௌத்ரி, பிரதி தவிசாளர் ட்ரெவின் பெர்னான்டோபுள்ளே, பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி இந்திரஜித் விக்ரமசிங்க பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி தில்ஷான் ரொட்ரிகோ ஆகியோருடன், இதர முக்கிய விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மகளிர் தினத்தை பெருமையுடன் கொண்டாடிய HNB FINANCE




இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC, 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத்தை தனது சக பெண் பணியாளர்களை மதித்து பாராட்டும் வகையிலான ஒரு நிகழ்வாக "பெண்களின் வளர்ச்சியில் முதலீடு செய்து முன்னேற்றத்தை விரைவுபடுத்துங்கள்" (Invest in Women. Accelerate Progress) என்ற தொனிப்பொருளில் HNB ஏற்பாடு செய்தது.

இந் நிகழ்வானது நிறுவனத்தின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் ஏனைய கிளைகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஏராளமான பெண் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இவ் நிகழ்வினை மேலும் சிறப்பிக்கும் வகையில், இலங்கை மற்றும் லெபனானில் உள்ள தொலைக்காட்சி தொகுப்பாளினியும், முன்னணி பேஷன் மொடலும், சர்வதேச அழகுப் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதிபடுத்தியவருமான திருமதி ஸ்டெபானி சிறிவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். திருமதி ஸ்டெபானி சிறிவர்தனவின், வாடிக்கையாளர்களை கையாளும் ஆளுமை, பொதுத் தொடர்புகளைப் பேணுதல் தொடர்பான கருத்துரை அங்கிருந்த அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததுடன், இவ்வமர்வு 5 முக்கிய விடயங்களான நல்ல மன ஆரோக்கியம், தன்னம்பிக்கையை வளர்ப்பது, நேர்மறை மற்றும் உணர்திறன் நுண்ணறிவு, தகவல் தொடர்பு திறன் அதன் நெறிமுறைகள் மற்றும் சமூக நடத்தை ஆகியவற்றை வளர்க்கும் வகையில் நடத்தப்பட்டது.

# NDB வங்கியின் "சல்லி ரட்டின் – தேகி அபென் – பணம் அனுப்பல் புத்தாண்டு சலுகை"




NDB வங்கியானது, வெஸ்டர்ன் யூனியன் ஊடாக வெளிநாட்டுப் பணம் அனுப்பலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு, "சல்லி ரட்டின் தேகி அபென் பணம் அனுப்பல் புத்தாண்டு" என்ற அதன் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. மார்ச் 5 முதல் ஏப்ரல் 10 வரை நடைபெறும் இந்த பிரசாரம், வெஸ்டர்ன் யூனியன் பரிவர்த்தனைகளில் பணத்தினை பெறுவதற்காக அல்லது செலுத்துவதற்காக NDB வங்கியைத் தேர்ந்தெடுக்கும் வாடிக்கையாளர்களுக்கு வெகுமதி அளிக்கத் தீர்மானித்துள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டங்களுடன், இந்த ஊக்குவிப்பு காலத்தின் முடிவில் குலுக்கல் சீட்டிழுப்பின் மூலம் தகுதியான பங்கேற்பாளர்களுக்கு கவர்ச்சிகரமான வெகுமதிகளை NDB வழங்குகிறது.

அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் 100,000 ரூபாய், 50,000 ரூபாய் மற்றும் 25,000 ரூபாய் எனும் தாராளமான பணப்பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறுகின்றனர். மேலும், 20 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 2,500 ரூபாய் மதிப்புள்ள Cargills பரிசு வவுச்சர்களை வெல்லும் வாய்ப்பையும் பெறவுள்ளனர்.

வெஸ்டர்ன் யூனியனுடனான NDB செயலி அல்லது எளிய தொலைபேசி அழைப்பு மூலம் விரைவாகவும் பாதுகாப்பாகவும் பணத்தைப் பெறுவதற்கான இணையற்ற வசதியை வாடிக்கையாளர்களுக்கு உறுதி செய்கிறது. வெஸ்டர்ன் யூனியனின் விரிவான உலகளாவிய வலையமைப்பைப் பயன்படுத்துவதன் மூலம் பணம் அனுப்பலை எளிதாக அணுக NDB உதவுகிறது.



# படித்ததும் பகர்வதும் 185



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சிங்கப்பூரின் முன்மாதிரி



பல மதங்களை பின்பற்றுகின்ற, பல மொழிகளை பேசுகின்ற, பல இன மக்கள் வாழுகின்ற நாட்டில் அவர்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, சகவாழ்வு என்பன நிலைக்கும் வகையில் செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பு அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் மீது இருக்கின்றது. தம் நாட்டு மக்களிடையே கருத்து வேறுபாடுகள், சந்தேகங்கள், தவறான கருத்துகள், ஏற்படாதவாறு அவ் அரசாங்கங்கள் செயற்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலமே அந்நாட்டில் எல்லா நல்ல விடயங்களிலும் அபிவிருத்தி ஏற்பட முடியும்.

இந்த விடயத்தின் அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஒரு முக்கிய விடயம் உலகுக்கே சிறந்த முன்மாதிரியாக இருப்பதைக் காண முடிகிறது.

சிங்கப்பூரில் உள்ள இஸ்ரேல் தூதரகம், சர்ச்சைகளை ஏற்படுத்தும் வகையிலான முகநூல் பதிவு (Face Book Post) ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த முகநூல் பதிவில் பலஸ்தீனத்துக்கு பாதகமான வகையிலும், இஸ்ரேலிய யூதர்களுக்கு சார்பான விதத்திலும் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையிலான கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.



'சகல மதத்தவர்களும் அமைதியாக ஒற்றுமையாக வாழும் நம் நாட்டில் இவ்வாறு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான முகநூல் பதிவு எதுவும் இருக்க முடியாது' எனவும் 'அதனை உடனடியாக நீக்க வேண்டும்' எனவும் சிங்கப்பூர் அரசாங்கம் உடனடியாகத் தெரிவித்தது. இதற்கிணங்க சிங்கப்பூரில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் குறித்த முகநூல் பதிவை நீக்கியுள்ளது.

இது தொடர்பான தகவலை சிங்கப்பூர் சட்டம் மற்றும் உள் விவகார அமைச்சர் ஷண்முகம் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நாங்கள் இப்படியான ஒரு பதிவை எதிர்பார்க்கவில்லை. இதனால் எங்கள் நாட்டு மக்கள் கவலையடைந்துள்ளனர். எனது அமைச்சின் மூலம் உடனடியாக இந்த பதிவை நீக்க வேண்டும் என அறிவித்தேன். அதன் பின்னர் அவர்கள் அதனை நீக்கியுள்ளனர். அந்தப் பதிவு எப்படிப் பார்த்தாலும் பிழையாகவே உள்ளது. எங்கள் நாட்டு மக்களின் ஒற்றுமையை குலைக்கும் வகையில் அந்த பதிவு அமைந்துள்ளது. சிறுபான்மை பெரும்பான்மை என எங்கள் நாட்டின் அனைவரது பாதுகாப்பையும் கருதி நாங்கள் இந்த பதிவை நீக்க உத்தரவிட்டோம்".

சிங்கப்பூர் அரசாங்கத்தின் இந்த செயற்பாடு, பல்வேறுபட்ட மக்கள் வாழுகின்ற இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு மிக சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றது எனலாம். இவ்வாறு பல மதங்களை பின்பற்றுகின்ற, பல மொழிகளை பேசுகின்ற பல்லின மக்கள் வாழுகின்ற நாடுகளிலும் நன்னோக்கத்துடன் அந்நாட்டு அரசாங்கங்கள் செயற்படுமாயின், சகவாழ்வு சிறப்படைந்து அந்நாடுகள் எல்லா விடயங்களிலும் முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்கா உட்பட வல்லரசுகள் பலவற்றின் ஆதரவைப் பெற்ற நாடாக இஸ்ரேல் இருந்த போதும், தமது நாட்டின் பல்லினத் தன்மைக்கு பாதகமாக அது செயல்பட இடமளிக்க முடியாது என்ற சிங்கப்பூரின் உடனடி செயற்பாடானது பாராட்டுக்குரியது.

## புது வரவு

### எரியும் நட்சத்திரம்
### (ஊமையானது ஓர் ஊதாப்பூ)




தனது வாழ்நாளில் ஒரு நூலையேனும் வெளியிட வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டவர்களாக அல்லது குறைந்த பட்சம் அது பற்றி கனவு காண்பவர்களாகவே எழுத்தாளர்கள் அனைவரும் இருக்கின்றார்கள் என்றால் மிகையல்ல. ஆனால் பலருக்கு இக்கனவு கனவாகவே போய் விடுவதையும் காண்கிறோம்.

ஆனால், அதிசயமாக! தன் வாழ்நாள் முடிந்து இவ்வுலகைப் பிரிந்த பின்னர் நூலொன்றை வெளியிடும் வாய்ப்பை பெற்ற ஒருவராக திகழ்கிறார் காலஞ்சென்ற கவிதாயினி ஷஹ்னா ஸப்வான். இவரது கவிதைகளைத் தொகுத்து 'எரியும் நட்சத்திரம்' (ஊமையானது ஓர் ஊதாப்பூ) என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்கள் அவரது நண்பர்கள்.

இந்நூலின் அணிந்துரையை வழங்கியுள்ள வலம்புரி கவிதா வட்டத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் இது பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

"ஷஹ்னா ஸப்வான் என்ற இந்தப் பெண் ஆளுமை எம்மை விட்டும் மறைந்து விட்டார். இனி எமக்கென்ன என்று இவர் எழுதிவிட்டுச் சென்ற கவிதை முத்துக்களைக் குப்பையில் போட்டு விடாமல் இதனை நூலாக்க வேண்டும் என்று முனைப்புக் காட்டி எங்கெங்கோ இருந்த கவிதைகளைத் தேடி எடுத்து ஒரு சிறப்பான கவிதை நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கவிதைகள் எங்கெங்கோ இருந்ததைப் போலவே இதனைத் தொகுத்தவர்களும் எங்கெங்கோ இருப்பவர்கள் என்பதும் வியக்கத்தக்க விடயம்.

மறைந்த இக் கவிஞரின்பால் மிகுந்த பாசம் காட்டிய "இளம் தாரகையின் தூரிகை" குழும உறுப்பினர்களான பர்ஹானா அப்துல்லாஹ் (மக்கொனை), ஆஷிக் ஹுசைன் (ஹெம்மாதகமை), றஜா முஹம்மத் (அட்டாளைச்சேனை), ஹாஸ்மியா தாஹா (கெக்கிராவை), ஆகிப் நசூர் (கண்டி), பா ரம்லா ஹிஷாம் (தர்கா நகர்), ஸல்மான் பின் பாரிஸ் (களுத்துறை), முஸ்னி முர்ஷிட் (எஹலியகொடை), ஹஷ்மத் ஹப்னாஸ் (அக்குரணை), இஷ்ரா பர்வின் (தர்கா நகர்), ஹஸனியா இர்பான் (தர்கா நகர்), திக்ரா ஹனீபா (கண்டி), ரிஸ்லா ஹம்ஸா (மன்னார்), நூர் ஷாஹிதா (பதுளை), அதீகா மஷூர் (ஹெம்மாதகம) ஆகிய அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

இவ்வாறான ஒரு செயலை செயற்கரிய செயல் என்றே குறிப்பிடலாம். இந்த நண்பர் குழாமின் இக் கைங்கரியத்திற்கு உறுதுணையாக இருந்த கவிஞர் ஷஹ்னா ஸப்வானின் தந்தை களுத்துறை ஸாஹிரா கல்லூரி பிரதி அதிபர் ஏ. எச். எம். ஸப்வானும் போற்றுதற்குரியவர்."

'ஸ்கை (sky) தமிழ் ஊடக வலையமைப்பு' வெளியிட்டுள்ள இந்நூலில், வாழ்த்துரைகள் வாழ்த்துக் கவிதைகள் என சுமார் 15 பக்கங்களில் கவிதாயினி ஷஹ்னா ஸப்வான் பற்றிய விடயங்கள் இடம் பெற்றுள்ளன. இதன் 113 பக்கங்களில், எழுத்துலகம், மனதோடு கொஞ்சம், நேசம், இஸ்லாம், விருப்பம், குடும்பம் எனும் ஏழு பிரிவுகளில் ஷஹ்னா ஸப்வான் தான் வாழும் காலத்தில் எழுதி, அவர் இறந்த பின், அவரது நண்பர்களால் தொகுக்கப்பட்ட 64 கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

நூல்: எரியும் நட்சத்திரம் (ஊமையானது ஓர் ஊதாப்பூ), ஆசிரியர்: தர்கா நகர் ஷஹ்னா ஸப்வான், முதற்பதிப்பு: 2024, பக்கங்கள்: xxviii + 113, விலை: ரூபா. 500.00, வெளியீடு: ஸ்கை (sky) தமிழ் ஊடக வலையமைப்பு,

### கவிக் 'கடி'கள்

பட்ட மரத்தில்
கறுப்பு இலைகள்
காகங்கள்.

நிறைமாதம் வரை
வயிற்றில்
தங்குவதேயில்லை
குழந்தை.
இளநீர்.

நான்கு வருடங்களாக
கருவறையில்
காத்திருந்த குழந்தை
இன்று பிறந்தது.
பெப்ரவரி 29

ரோஜா
அழகு என்பதனால் தானோ
இத்தனை பாதுகாப்புப்
படையினர்
முட்கள்..

இரவில்
புற்கள் தரித்த கர்ப்பத்தை
காலைச் சூரியன்
கலைத்து விடுகிறது.
பனித்துளி.

நிழலுக்கு
இருட்டில் கண்
தெரிவதில்லை
அதனால் தான்
வெளியே வருவதில்லை!

எம். வஸீர், வாழைத்தோட்டம்

## தகவல் களஞ்சியம்

### கைபேசிப் பாவனை – கவனம்!



கைபேசி (Mobile phone) வெடித்து சிதறியதால் தீப்பிடித்த விபத்தில், வீட்டில் இருந்த நான்கு குழந்தைகள் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர். இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தின் மீரட் நகருக்கு அருகே உள்ள பல்லவபுரம் பகுதியில் ஜானி என்ற கூலித்தொழிலாளி தனது வீட்டில் கைபேசியை சார்ஜ் செய்ய போட்டுள்ளார். அப்போது வீட்டில் சரிகா (10), நிகரிகா (8), சன்ஸ்கர் (6), களு (4) ஆகிய நான்கு குழந்தைகளும் மனைவி பபிதாவும் உறங்கிக் கொண்டிருந்த நிலையில் திடீரென அலைபேசி வெடித்து சிதறியதாக கூறப்படுகிறது.

இந்த தீ பரவலினால், படுகாயமடைந்த மனைவி உட்பட குழந்தைகள் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் குழந்தைகள் நால்வரும் உயிரிழந்துள்ளனர். இது இப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கைபேசிகளை சார்ஜ் செய்வதற்கு அவற்றின் தயாரிப்பு நிறுவனங்கள் பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளன. இருப்பினும் சில நேரங்களில் இவற்றை சார்ஜ் செய்யும் போது ஏற்படும் 'ஷார்ட் சர்க்யூட்' (short circuit) காரணமாக அடிக்கடி கைபேசிகள் வெடித்து சிதறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

எனவே, இவ்விடயத்தை கருத்தில் கொண்டு, கைபேசி பாவிக்கும் ஒவ்வொரு நபரும் அவற்றை சார்ஜ் செய்யும் விடயத்தில், அதி கூடிய முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## அனுபவம் பேசுகிறது!

### எச்சரிக்கை அவசியம்!

சில சந்தர்ப்பங்களில் நாம் எந்தவிதத்திலும் எதிர்பாராத விடயங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய நிகழ்வுகளின்போது நாம் கூடிய கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலை இருப்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். கொழும்பில் ஒரு அன்பருக்கு அண்மையில் ஏற்பட்ட விபரீதம் இது. அவரது. இந்த அனுபவத்தை அனைவரும் படிப்பினையாகக் கொள்வது அவரவர்க்கு நிச்சயம் நன்மை பயக்கும்.



ஒருநாள் இரவு நான் வீட்டிற்கு செல்லும் போது ஒரு பொலிஸ்காரர் என் காரை நிறுத்துமாறு சைகை செய்தார். நான் நிறுத்தியதும் காரின் டிக்கியை திறக்கச் சொன்னார். உள்ளே இருந்தவாறே டிக்கியை திறந்தேன், டிக்கியை பார்த்துவிட்டு "சரி, நீங்கள் போகலாம்" என்றார் பொலிஸ்காரர்.

நான் எனது காரை ஸ்டார்ட் செய்து ஓட்ட ஆரம்பித்தேன், அப்போது, பொலிஸ்காரர்களில் ஒருவர் யாரையோ தொலைபேசியில் அழைப்பதை எனது ரியர் வியூ கண்ணாடியில் கண்டேன். அது என் மனதை உறுத்தியது. சிறிது தூரம் சென்று காரை நிறுத்தி டிக்கியை திறந்து பார்த்தேன்.

வெள்ளைப் படிகங்கள் போன்ற, இரண்டு மிகச் சிறிய ஜிப் பூட்டுப் போட்ட பைகள் உள்ளே இருப்பதைப் பார்த்து அதிர்ந்தேன். எனது பொருட்களல்லாத அவை ஐஸ், ஹெரோயின் அல்லது கோகெயின் போன்ற ஏதாவதொரு போதைப் பொருளாக இருக்கலாம் என உணர்ந்தேன்.

உடனே அதை நான் தூக்கி எறிந்தேன். போதைப் பொருள் தொடர்பான வழக்கில் என்னை சிக்கவைக்க யாரோ செய்த சதியிலிருந்து என்னைக் காப்பாற்றியதற்காக இறைவனுக்கு நன்றி தெரிவித்தேன். எனது காரின் இலக்கத்தை அடுத்த சோதனைச் சாவடியில் நிற்கும் பொலிஸ்காரர்களிடம் தெரிவித்திருக்கலாம் என்ற எனது யூகம் சரியாக இருந்தது. அடுத்த சோதனைச் சாவடியில் மற்றொரு பொலிஸ்காரர் என் காரை நிறுத்தினார். இந்த முறையும் என் டிக்கியை திறக்கச் சொன்னான். இப்போது நான் இறங்கி பின்பக்கம் சென்று டிக்கியை சாவியால் திறந்தேன். அவர்களால் உள்ளே எதையும் கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் சில வேளை ஆச்சரியப்பட்டு ஏமாந்து போயிருக்கலாம்.

அங்காடிகள் உட்பட எந்தவொரு இடத்திலும், யாருக்காகவும் உங்கள் காரின் டிக்கியை காரின் உள்ளேயே இருந்து கொண்டு திறக்க வேண்டாம். எப்பொழுதும் இறங்கி, நீங்களே உங்கள் சொந்த மேற்பார்வையில் திறந்து தேட அனுமதிக்கவும். இதன் மூலம் வீண் பிரச்சினைகளிலிருந்து நீங்கள் தப்பிக்க முடியும். இதுபற்றி உங்கள் நண்பர்களையும், அன்பர்களையும் எச்சரிக்கையாக இருக்கச் சொல்லுங்கள்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**




18

ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# சிரஞ்சீவி விரிக்கிறார் கொலைகாரனுக்கு வலை அதில் இருந்து தப்பிச் செல்வது அவனுக்கு ஒரு கலை

சிரஞ்சீவி விழுந்திருந்த அதே வியப்பினுள் தான் அவர்களும் விழுந்திருந்தார்கள்.

"துப்பாக்கி முனை" யைப் பற்றி,

தங்களுக்கும் தெரியாது என்பதைப் போல்,

நிபுணர் குழுவினரும் சிந்துஜனும்,

தோள்களைக் குலுக்கினார்கள்.

"ம். சிந்துஜா, இந்த சாவியைப் பற்றி கொஞ்சம் ஆராய வேண்டியுள்ளதால் துர்காவிடம் இதைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்!"

ரெஸ்ட் ஹவுசுக்குப் போகும் வழியில்,

சிந்துஜனிடம் சொன்னார் சிரஞ்சீவி

"ம்.. இதைவிட முக்கியமான விஷயங்கள் எல்லாமே நிறையவே இருக்கிறது எங்களுக்கு பேசுவதற்கு!"

அவரை ஓரக்கண்களால் அலட்சியமாகப் பார்த்தபடியே சொன்னான் சிந்துஜன்.

தீ விபத்தைப் பற்றிய விசாரணைகள் முடிந்து,

அவர்கள் ரெஸ்ட் ஹவுசுக்கு வந்தபோது,

அங்கே வந்திருந்த சொலமன்,

துர்காவுடன் பேசிக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

அவர்களின் வதனங்களில்,

சோகத்தின் சாயல் குடிகொண்டிருந்தது!

"நீங்கள் சரியான ஆள்தான் துர்கா, ஏன் நேற்றிரவு ரெஸ்ட் ஹவுசுக்கு வரவில்லை. ம்? உங்களுக்கு ஏதாவது நடந்திருந்தால்? யாரிடம் போய் சொல்வதாம்?"

இரு கைகளையும் பக்க வாட்டில் உயர்த்தி,

தனது அச்சத்தை வெளியிட்டார் சொலமன்.

அவர் சொன்னதைக் கேட்டு விட்டு,

துர்கா சிரித்தாள்.

"ஆமாம், உண்மையிலேயே அது ஒரு பயங்கரமான அனுபவம் தான். ஆனால் அப்படி நடந்திருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன்!"

"சரி, தீ பற்றிய வீட்டில் இருந்து என்னத்தைக் காப்பாற்றினீர்கள்?"

"ஒன்றும் இல்லை. பூந்தோட்டத்தில் இருந்த ஓய்வறையைத் தவிர எதுவுமே இல்லை. அப்பா மிகவும் நேசித்து பல மணித்தியாலங்கள் தங்கியிருந்து ஓய்வெடுக்கும் அந்த அறையைத் தவிர வேறு எதுவுமே மீதமிருக்கவில்லை!"

"சரி, எப்படி இந்தத் தீ பிடித்திருக்கிறது?"

"அங்கே இருந்து பெற்றோலின் மீதுதான் முதலில் தீ பற்றியிருக்கிறது!" என்று சொல்லியபடியே,

அவர்களின் அருகில் வந்த சிரஞ்சீவி,

அங்கே இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார்.

"அப்போ யாரோ வீட்டுக்கு தீ வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறீர்களா?" வியப்பை விழிகளில் கட்டிக் கொண்டே கேட்டான் சொலமன்.

"ஆமாம்!" என்பதைப் போல் தலையை ஆட்டினார் சிரஞ்சீவி.

"யார் வைத்திருக்கிறார்கள்?"

"வேறு யார் செல்வராகவனைக் கொலை செய்தவர்கள் தான். பொதுவாகவே திட்டம் போட்டுக் கொலை செய்கிற ஒருவன், தனக்கு எதிராக உள்ள சாட்சியங்களையும் தன்னை அடையாளம் காட்டக் கூடிய நபர்களையும் அழிப்பதற்கு முயற்சி செய்வான் என்பது சகஜம் தானே!"

துர்கா அறையை விட்டு வெளியேறும் வரை அமைதியாக இருந்த சொலமன்,

அவள் போன பிறகு,

"இதற்குப் பிறகாவது தோமஸை நீங்கள் கைது செய்ய மாட்டீர்களா?" என்று கேட்டார்.

"இந்தக் கொலையை அவர்தான் செய்திருப்பார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?"

"ம்.. சந்தேகமே இல்லாமல்" என்று படாரென்று சொன்ன சொலமன்,

"நாங்கள் செல்வராகவனின் டைரியைப் பற்றிப் பேசிய போது அவர் கதவின் அருகில் மறைந்து நின்று கேட்டதை மறந்து விட்டீர்களா? அதுவுமில்லாமல் செல்வராகவனை அவர் பழி வாங்குவதற்கான காரணங்களும் நிறையவே இருக்கின்றன. அவரைச் சிறைக்கு அனுப்பிவிட்டு மனைவியை விவாகரத்து பெறவைத்து பிள்ளையையும் சொந்தமில்லாமல் ஆக்கி மனைவியையும் பிள்ளையையும் இவர் பாரமெடுத்துக் கொண்டார். அவரை கொலை செய்வதற்கு இந்த காரணங்கள் போதாதா?"

"அது அப்படியும் இருக்கலாம். ஆனாலும் இப்போதே நான் அவரைக் கைது செய்ய மாட்டேன்!" என்றார் சிரஞ்சீவி சிந்தித்தபடியே!

"ம்.. இன்னுமொரு முக்கியமான விஷயம்."

"என்ன, சொல்லுங்கள் சொலமன்?"

"நேற்றிரவு வீட்டில் இருந்து துர்காவை வெளியேற்றுவதில் அவர் குறியாக இருந்ததை நீங்கள் கவனித்தீர்களா?"

"ஏன் அப்படி அவர் செய்ய வேண்டும்?"

"ஏன் அப்படி செய்ய வேண்டுமா? நேற்றிரவு இந்த வீடு தீக்கிரையாகப் போகிறது என்பது அவருக்கு தெரிந்திருக்கிறது. அதனால் இங்கிருந்து அவளை வெளியேற்றுவதில் அவர் குறியாக இருந்தார். துர்கா, தோமஸின் மகள் என்பதை மறந்து விடாதீர்கள்!"



அவர் இப்படிச் சொன்னதும்,

சிறிது நேரம்வரையில் சிந்தனையில் மூழ்கி இருந்த சிரஞ்சீவி,

"தீப்பிடித்து எரிந்த சாம்பலான அந்த வீட்டைப் பார்ப்பதற்கு அவர் இன்னமும் போகவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை.. ஆனால் துர்காவை சந்தித்துப் பேசியிருக்கிறார். நேற்றிரவு ரெஸ்ட் ஹவுசுக்குப் போகாமல் வீட்டில் தங்கியதற்காக அவளைத் திட்டியிருக்கிறார். நேற்று இரவு இந்த ஊர் மக்கள் எல்லோருமே தீப்பற்றி எரிந்த வீட்டை நோக்கி ஓடி வந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆள் மட்டும் ஏன் அங்கே போகவில்லை?"

"அப்படியானால் நீங்களும் அங்கே இருக்கவில்லை அல்லவா?" சிரித்துக் கொண்டே சொன்னார் சிரஞ்சீவி.

"ஏனில்லாமல்? ஆனால் நான் அங்கே வந்தபோது நீங்கள் போய் விட்டீர்கள் மாதுவும் மற்றைய வேலைக்காரர்களும்தான் இருந்தார்கள். என்னதான் இருந்தாலும் என்னுடைய முழுச் சந்தேகமும் தோமஸின் மீதுதான் இருக்கிறது!"

ஆனாலும்,

அவருடைய இந்த சந்தேகத்திற்கு சிரஞ்சீவி எந்த விதமான பதிலையும் சொல்லாமல்,

சிந்தித்தபடியே தனது கன்னங்களைத் தடவி விட்டுக் கொண்டார்.

"இன்று மாலை சவ அடக்கம் இடம்பெறுகிறது. பல முக்கியஸ்தர்களும் வருகிறார்களாம். என்ன இருந்தாலும் என்னுடைய நல்ல நண்பன்தான் செல்வராகவன்,

ம்.. சொலமன், செல்வராகவனுக்கு வேறு எங்காவது வீடுகள் இருந்தனவா?"

"இல்லை எனக்கு தெரிந்த வரையில் அப்படி எங்கும் இல்லை. அது சரி, திடீரென்று ஏன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்?"

"இல்லை.. துர்காவின் எதிர்காலத்திற்காக சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

"ம்.. உங்கள் எண்ணம் எனக்குப் புரிகிறது சிரஞ்சீவி" என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் சிந்தித்த சொலமன்,

"நான் ஒன்று சொல்லவா?" என்று கேட்டார்,

"ம்.. சொல்லுங்களேன்!"

"எனது எண்ணத்தைப் பூர்த்தி செய்தால் துர்காவின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும்!" என்று கொஞ்சம் தடுமாறியபடியே சொன்னார் சொலமன்.

"ஓ.. அப்படியானால் நீங்கள் அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறீர்களா சொலமன்?" அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தபடியே கேட்டார் சிரஞ்சீவி.

"ஆமாம் சிரஞ்சீவி முழுமனதுடன் நான் அவளைக் காதலிக்கிறேன்!" கரகரத்த குரலில் சொன்னார் சொலமன்.

"இதில் அவளுக்கு சம்மதம் உண்டா?"

அவர் இப்படிக் கேட்டதும்,

நீண்ட பெருமூச்சொன்றை விட்டபடியே,

"ம்.. இல்லை சிரஞ்சீவி. இதில் அவளுக்கு விருப்பமே இல்லை.!" என்றார்.

அவர் கூறியது எல்லாமே உண்மைதான் என்று,

துர்கா அங்கே வந்து நடந்து கொண்ட விதத்தில் இருந்து சிரஞ்சீவி புரிந்து கொண்டார்.

மரணச் சடங்கில் கலந்து கொள்ள வந்த பொலிஸ் அதிகாரிகளுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார் சிரஞ்சீவி.

"ம்.. புதுமையான தீ விபத்துதான். ஒரு பொருள் கூட இல்லாமல் எல்லாமே தீக்கிரையாகிவிட்டது இல்லையா? பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கேட்டார்.

"ஒன்றைத் தவிர எல்லா பொருள்களுமே தீக்கிரையாகி விட்டன!" என்று,

துர்காவைப் பார்த்தபடியே சொன்னார் சிரஞ்சீவி,

"ஒன்றைத் தவிர வா?" கேட்டபடியே,

எல்லோரும் வியப்புடன் சிரஞ்சீவியைப் பார்த்தார்கள்!

"ஆமாம். துர்காவின் தினக்குறிப்பெழுதும் டைரி. அது மட்டும்தான் தப்பியிருக்கிறது. அதை துர்கா தனது தலையணைக்கடியில் வைத்துக் கொண்டிருந்திருப்பாள் என்று நினைக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு,

மெல்லச் சிரித்தார் சிரஞ்சீவி!

அதைக் கேட்டு விட்டு

எல்லோரும் சிரித்தார்கள்.

"ம்... கன்னிப் பெண்கள் எழுதும் டைரிகளில் நிறையவே சுவாரஷ்யமான சம்பவங்கள் இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!"என்று,

நாணத்துடன் தரையைப் பார்த்துக் கொண்டிருந்த துர்காவைப் பார்த்துச் சொன்னார் பொலிஸ் உயர் அதிகாரி.

அடுத்து,

சிரஞ்சீவி சொன்னதைக் கேட்டு,

எல்லோரும்,

குலுங்கிச் சிரித்தார்கள்.

(தொடரும்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்
2024 மார்ச் 31 ஞாயிற்றுக்கிழமை



இளம் ஒலி, ஒளிபரப்பாளர்
நிவேதா ஜெகநாதன்

நீரிழிவு நோயை வெல்லக்கூடிய
ஜின்சோமின்
ஒரிஜினல் கொரிய பனாக்ஸ் ஜின்ஸெங்
தேவையான விட்டமின்கள் மற்றும்
தாதுக்களுடன் உற்சாகம், ஆளுமை, பலம்,
மகிழ்ச்சிமிக்க வாழ்க்கைக்கு
MEGA We care
www.megawecare.com
Ginsomin Sri Lanka
Mega Lifesciences Pty Ltd
0114 366 609
0757 711 975 0759 011 967
நாடு முழுவதிலும் உள்ள சுப்பர் மார்கட்டுகள் மற்றும்
மருந்தகங்களில் கிடைக்கும்.
இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A. Baur & Company (Pvt.) Limited


01 மாத்திரை ரூபா 97.50/=



# பண்டைய பூனையின் குறும்பு

படத்தில் இருக்கும் கூரையோடு 1969 இல் இங்கிலாந்தின் கிலோசஸ்டரில் அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இது ரோமானிய காலத்தின் கூரையோடு. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இன்றை போலவே 2000 ஆண்டுகளுக்கு முன்னரும் பூனைகளின் குறும்புத்தனம் அப்படியே இருந்திருக்கிறது. கி.பி. 100 வாக்கில் களிமண்ணினால் இந்த ஓடு தயாரிக்கப்பட்டு அதன் ஈரம் காய்வதற்குள் பூனை ஒன்று அதன் மீது நடந்து சென்றிருக்கிறது. 'நாயின் காலடி அச்சுகள், மனிதர்களின் பாதணி அச்சுகள், பன்றிக்குட்டியின் காலடி அச்சுகள் கூட ரோமர் காலத்து தொல்பொருட்களில் காணமுடிந்தபோதும் பூனையின் காலடி அச்சு என்பது மிக அரிதானது' என்று இந்த ஓட்டை காட்சிக்கு வைத்திருக்கும் அருங்காட்சிகம் கூறுகிறது.

# ஒரு மில்லியனை எண்ணி சாதனை



உலகில் ஒன்று தொடக்கம் ஒரு மில்லியன் எண்களை வாயால் உறக்கக் கூறி எண்ண முடியுமா? நினைப்பதற்கு இலகுவானது போல் தோன்றும். ஆனால், எண்ணுவது எத்தனை கடினம் என்பதை அமெரிக்காவின் ஜெரமி ஹார்பரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் எப்படி எண்ணி கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தவர் தான் ஹார்பர். இதற்கு அவருக்கு எடுத்துக் கொண்ட காலம் கிட்டத்தட்ட 90 நாட்கள். அலபாமாவின் பிர்மிங்ஹாமில் உள்ள தனது வீட்டில் இருந்து விலகி தனியாக ஓர் அறையில் இணைய தளத்தில் நேரடி ஒளிபரப்புச் செய்து தனது எண்ணும் பணியை அவர் ஆரம்பித்தார். 2007 ஜூன் 18 ஆம் திகதி ஒன்று தொடக்கம் எண்ண ஆரம்பித்த ஹார்பர் செப்டெம்பர் 14 ஆம் திகதியே ஒரு மில்லியனை எண்ணி முடித்தார். அதாவது அவர் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் எண்ணினார். எண்ண ஆரம்பிக்கும்போது அவர் முகத்தை முழுமையாக சவரம் செய்திருந்தார். எண்ணி முடிக்கும்போதும் அவருக்கு 2 அங்குலம் அளவுக்கு தாடி வளர்ந்திருந்தது. கிட்டத்தட்ட பத்து கிலோ எடை குறைந்திருந்தது.

# சட்ட பிரச்சினையை விசித்திரமாக தீர்த்த நிறுவனங்கள்



'புத்திசாலித்தனமான விமானம்' என்ற வாசகம் தமிழ் மொழியில் உப்புச்சப்பில்லாமல் இருந்தாலும், அதன் ஆங்கில அர்த்தம் வர்த்தக ரீதியில் கவர்ச்சிகரமானது. அமெரிக்காவின் சௌத் வெஸ்ட் ஏர்லைன்ஸ் மற்றும் ஸ்டீவன்ஸ் ஏவியேசன் ஆகிய இரு விமான சேவைகள் இந்த ஒரே வாசகத்தை பயன்படுத்தின. அதுவே இரு நிறுவனங்களுக்கும் இடையே சட்ட மோதலுக்கு காரணமானது

ஆனால் இரு விமான சேவைகளும் பிரச்சினையை வேறு வகையில் தீர்ப்பதற்கு தீர்மானித்தன. வழக்குத் தொடுத்து காலத்தையும் பணத்தையும் வீணாக்குவான் ஏன், பேசாமல் கை மல்யுத்தப் போட்டியில் சந்திப்போம் என்று இரு நிறுவனங்களும் தீர்மானித்தன.

அதிலும் இரு நிறுவனங்களினதும் தலைவர்களே கை மல்யுத்தத்தில் போட்டியிட்டனர். 1992 ஜனவரி 2 ஆம் திகதி சௌத் வெஸ்ட் ஏர்லைன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஹேர்ப் கெல்ஹர் மற்றும் ஸ்டீவன்ஸ் ஏவியேசன் தலைமை நிர்வாக அதிகாரி கர்ட் ஹெர்வல்ட் போட்டியிட்டார்கள்.

அந்தப் போட்டி தொழில்முறை கை மல்யுத்தப் போட்டி போன்று பரபரப்பாக இருந்தது. இரு நிறுவனங்களினதும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கூடி கோசம் எழுப்ப போட்டி நடந்தது. அதாவது மூன்று சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் ஒவ்வொரு சுற்றிலும் தோற்பவர் 5,000 டொலர் நன்கொடை வழங்க வேண்டும். கடைசியில் வெற்றி பெறுபவருக்கே 'புத்திசாலித்தனமான விமானம்' என்ற வாசகம் உரித்தாகும்.

சௌத் வெஸ்ட் ஏர்லைன்ஸ் போட்டியில் தோற்றாலும் அந்த வாசகத்தை தொடர்ந்து பயன்படுத்த ஸ்டீவன்ஸ் ஏவியேசன் அனுமதி அளித்தது.

**பூகோள சஞ்சாரம்**

பிர்தௌஸ்



# ருடொல்ப் ஹெஸின் கதி



நாஜி ஜெர்மனியில் ஹிட்லருக்கு அடுத்து இரண்டாவது தலைவர் ருடொல்ப் ஹெஸ். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அவர் 20 ஆண்டுகள் சிறை அனுபவித்தார்.அதுவும் தனிமைச் சிறை. ஜெர்மனியின் ஸ்பன்டோவில் 600 கைதிகள் வரை தடுத்து வைக்க முடியுமான சிறையில் அவர் மாத்திரம் அடைக்கப்பட்டார். கடைசியில் 93 வயதில் அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரின் மரணத்திற்கு பின்னர் அந்த சிறைச்சாலையும் தரைமட்டமாக்கப்பட்டது. எதிர்காலத்தில் நவ நாஜிக்களின் புனித இடமாக மாற்றப்படுவதை தடுக்கவே சிறைச்சாலையே தரைமட்டமாக்கப்பட்டது.

# உயிரை காத்த மன்னரின் சமயோசிதம்



மொரோக்கோ மன்னர் இரண்டாவது ஹசனை படுகொலை செய்து ஆட்சியை கைப்பற்றுவதற்கான சதிப்புரட்சி 1972 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இராணுத்தில் ஒரு தரப்பினரே இந்த சதியில் ஈடுபட்டனர். மன்னர் செல்லும் விமானத்தை சுட்டுவீழ்த்துவதற்கு சதிகாரர்கள் முயன்றார்கள்.

பிரான்ஸில் இருந்து திரும்பிய மன்னரின் விமானத்தை துரத்திய கிளர்ச்சியாளர்களின் ஜெட் விமானம் அந்த போயிங் விமானத்தை நோக்கி சுட ஆரம்பித்தது. அப்போது விமானி அறைக்குச் சென்ற மன்னர், விமானியிடம் இருந்து ரேயோடிகோ கருவியை பறித்து துரத்திய ஜெட் விமானத்தின் விமானிக்கு பேசினார். 'சுடுவதை நிறுத்துங்கள் கொடுங்கோலன் செத்துவிட்டான்' என்றார். அந்த கிளர்ச்சியாளர்களும் அதனை நம்பி சுடுவதை நிறுத்திவிட்டார்கள். விமானம் மொரோக்கோவில் தரை இறங்கியது, ஆட்சி கவிழ்ப்பு சதிப் புரட்சியும் தோல்வி அடைந்தது. ஆனால் குண்டடிபட்ட மன்னரின் விமானத்தில் இருந்த எட்டுப் பேர் கொல்லப்பட்டனர்.

"உங்க வீட்டுக்காரர் ஆபீஸ்லேர்ந்து ரிட்டயர்டு ஆகிட்டாருன்னு சொன்னே! ஆனால், படுக்கை அறை எல்லாம் பைலும், ரிஜிஸ்டருமா இருக்கே!"

"இந்த 'செட்டப்' லே இருந்தால்தான் அவருக்கு தூக்கமே வருதாம்!"





"தாஜ்மஹாலைக் கட்டி முடிக்க ஏறக்குறைய இருபத்திரெண்டு வருஷமாச்சு... இதுல இருந்து என்ன தெரியுது?"

"கொத்தனார் ஒழுங்கா வேலைக்கு வரலைன்னு தெரியுது சார்!"

"கோழி திருடும் போது மாட்டாத கபாலி, ஆடு திருடும்போது சிக்காத கபாலி, இப்ப எப்படிச் சிக்கினான்?"

"இப்ப கோயில் யானையைத் திருடினானாம்."






"டேய் நூறு ரூபாய் பணம் இருந்தா கொடுடா!"

"அட போடா, என் ATM ஊர்ல இல்லை!"

"என்னது?"

"எங்க அப்பா ஊர்ல இல்லைன்னு சொல்றேன்டா!"



இந்த ஆள் யாரு தெரியுதா நமக்கு எஜிகேஷன் லோன் தரமாட்டேன்னு சொன்ன அதே பேங்க் மானேஜர் தான்

சார்...சார் என் பொண்டாட்டிய காணோம்...

யோ...இது போஸ்ட் ஆபிஸ்...



அய்யோ... சந்தோஷத்துல எங்க போறதுன்னே தெரியல..!

"என்னப்பா பால் இவ்வளவு திக்கா இருக்கு?"

"எங்க ஏரியாவுல தண்ணீர் கஷ்டம், அதான்."



"உன் கணவர்கிட்ட பிடிச்சது என்ன?"

"எவ்வளவு சண்டை போட்டாலும் கோபத்தை, சமையல்ல காட்ட மாட்டார்."





"அவர் பக்கத்துல ஏன் ஒருத்தரும் போக மாட்டேங்கிறாங்க?"

"உலக சாதனை செய்யறேன்னு ஒரு வருஷமா குளிக்கவே இல்லையாம்!"

"டாக்டர்.... இந்த ஏரியாவுல நான் பெரிய அரசியல்வாதி தெரிஞ்சுக்குங்க!"

"அதுக்காக கூட்டம் கலையாம இருக்க மருந்து கொடுங்கன்னு கேட்டா எப்படி சார்?"



"போருக்கு போற மன்னர் பொற்காசுகளை மூட்டையா கொண்டு போறாரே... எதுக்கு?"

"போர்க்களத்துல அதை வீசி எதிரி படைவீரர்களை திசை திருப்பத்தான்!"





"ஏங்க மழையினால் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்பட்டதுன்னு டி.வி.யில் சொன்னாங்க. உங்க 'மாமூல்' ஒன்னும் பாதிக்கலையே?"

"..........!"

"ரெண்டு வாரமா [illegible] இந்த சீரியலைப் பார்க்க முடியலே, கடைசியா பார்த்தது 'அனுபமா' மணமேடையில வந்து உட்கார்ந்ததைத் தான்...!"

"கவலைப்படாதே இன்னும் புரோகிதர் மந்திரந்தான் சொல்லிகிட்டு இருக்கார்; தாலி கட்டலே!"



# தலைநகரில் உலக சாதனை படைத்த யாழ். தென்மராட்சி 60 வயது திருச்செல்வம்!

## உலக சாதனை படைக்க உடனிருந்து உற்சாகமளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!

யாழ்ப்பாணம் தென்மராட்சியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம் தனது தாடியாலும் தலை முடியினாலும் ஏஷ் பட்டா ரக வாகனத்தை 1000 மீற்றர் தூரம் வரை இழுத்து சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு காலிமுகத்திடலில் இந்நிகழ்வு நடைபெற்றது.

1000 மீற்றர் தூரத்திற்கு வாகனத்தை தனது தாடியாலும் தலைமுடியாலும் இழுத்து உலக சாதனையின் மூலம் உலகறியச் செய்யும் திருச்செல்வத்தின் நோக்கம் வெற்றியடைய இவருக்கு உறுதுணையாக இருந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டல் முன்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உலக சாதனைப் புத்தக நிறுவனப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பாதுகாப்பு உயரதிகாரிகள் முன்னிலையில் நிகழ்வு ஆரம்பமானது.

1550 கிலோ கிராம் எடையுடைய ஏஷ் பட்டா ரக வாகனத்தை முதலில் 500 மீற்றர் தூரம் வரையில் தாடியாலும், பின்னர் 500 மீற்றர் தலை முடியாலும் இழுத்து திருச்செல்வம் அந்த உலக சாதனையை நிகழ்த்தினார்.

மனந்தளராமல் உறுதியுடன் வாகனத்தை இழுத்துவந்த திருச்செல்வத்தை ஆரம்பம் முதல் சாதனை நிலைநாட்டும் வரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைதட்டி ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்திக் கொண்டே வந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த நிகழ்வை Cholan Book of World Record (CBWR) நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வத்தின் சாதனையை அங்கீகரித்து பதக்கத்தையும், விருதையும், கேடயத்தையும் வழங்கி அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களால் வழங்கி வைத்தனர்.

உலக சாதனை நாயகனான செல்லையா திருச்செல்வம் (60) கடந்த பத்தாண்டுகளாக தனது தலைமுடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, தனது உடலின்மீது வாகனத்தை ஓடவிடுவது போன்ற சாதனைகளைச் செய்து வருகிறார்.

அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையமருகில் 1550 கிலோ எடையுள்ள வாகனத்தை 1500 மீற்றர் தூரத்தை 45 நிமிடங்களில் இழுத்து சாதனை படைத்துள்ளார். இந்நிகழ்வு வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது. இச்சாதனை மூலம் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் செல்லையா திருச்செல்வம் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கந்தையா தொண்டமானுக்கு பிரியாவிடை நிகழ்வு







**(உடப்பு குறூப் நிருபர்)**

உடப்பு, ஆண்டிமுனை, ஊற்றடி பகுதியில் அமைந்துள்ள "ஸ்ரீ கிருஷ்ணா "ஆரம்ப பாடசாலையை ஆரம்பித்தவரும், அதிபருமான கந்தையா தொண்டமான் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து , அவருக்கு பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மற்றும், பெற்றார் சமூகத்தினால் பிரியாவிடை நிகழ்வு ஒன்று (26) அதிபர் எஸ்.கோகிலகாந்தன் தலைமையில் இடம்பெற்றது. பாடசாலை சிறார்களினால் பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு அவர், பாரியார் சகிதம் அழைத்துச் செல்லப்பட்டார். இதன் போது, அவருக்கான பெயர் சொல்லக்கூடிய மார்பளவு சிலை ஒன்று அதிபர் காரியாலய முன்றலில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதனை புத்தளம் வலயக் கல்விப் பணிமனை பணிப்பாளர் ஏ.எச். எம்.அர்ஜுன திறந்து வைத்தார். பல கல்விப் புலத்தில் உள்ள அதிபர், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், நலன்விரும்பிகள், தொழிலதிபர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நினைவுச்சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

"தொண்டமாநாதம்" என்னும் சேவை நலன் பாராட்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இதன் முதல் பிரதியை வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.எம்.அர்ஜுன பெற்றுக்கொண்டார். மேடையில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுஜிவீகா சந்திரசேகர, ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் சற். ஏ.சன்ஹீர் , பாட இணைப்பாளர் வி.அருணாகரன் இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் இ.கலைச்செல்வன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கிரிஷிகா, ஆர்த்திகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம்








கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி முன்னாள் கணித ஆசிரியர் வீ.இராஜரத்தினம் தம்பதியரின் புதல்விகள் செல்விகள் கிரிஷிகா, ஆர்த்திகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றபோது அவர்களின் தோற்றங்களையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தமிழருவி சிவகுமாரன், சிறப்பு விருந்தினர் பாலசுந்தரி பிராதலிங்கம், நடன ஆசிரியை சிவானந்தி ஹரிதர்ஷன் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் காண்கிறீர்கள்.

# 89 வது வருடாந்த காமன் கூத்து பெருவிழா






நாவலப்பிட்டி , கலபொட தோட்டம், மேல்பிரிவில் 89வது ஆண்டு காமன் கூத்து பெருவிழா மிக சிறப்பாக தோட்ட இளைஞர் சங்க உறுப்பினர்கள், பொது மக்களின் முழு ஆதவுடன் அண்மையில் நடைபெற்றது.

அன்றைய தினம் அங்கு இருக்கும் காமன் கூத்து பிரபல வாத்தியார்கள் பறை அடிக்கும் கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், காமன் கூத்து நடிப்பு கலைஞர்கள் ஆகியோர் எமது புதிய மலையக அபிவிருத்தி அமைப்பினால் விருதுகளும் சிறப்பு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள், 67 வருட கால கலைப்பயணத்திற்காக கலா பூசணம் மாரிமுத்து கோபாலன் (பிரபல காமன் கூத்து வாத்தியார்), 15 வருட கால கலைப்பயணத்திற்காக ஆறுமுகம் விஸ்வநாதன், செல்லையா மகேந்திர ன் ராஜூ 10 வருட கால கலைப்பயணத்திற்காக விஸ்வநாதன் தனுசன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள்.

2 வருட கால கலைப்பயணத்திற்காக பறை கலைஞர்கள் மூவர் சிறப்பு நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

ஒப்பனையாளர்கள் மூவரும் இங்கு சிறப்பு நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இங்கு சிறப்பாக வழிநடத்திய 20 ஏற்பாட்டு குழுவினர்கள் சிறப்பு நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இங்கு காமன் கூத்து கலைஞர்கள் 85 பேர்கள் சிறப்பு நற்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இப் பெருவிழாவில், எஸ். மகேந்திரன் ( அகில இலங்கை, ஸ்தாபகத் தலைவர், புதிய மலையக அபிவிருத்தி அமைப்பு), றொபின்சன் (அதிபர் கலபொட தமிழ் வித்தியாலயம்) ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

கே.சுகுமாரன் (செயலாளர் புதிய மலையக அபிவிருத்தி அமைப்பு), பாலகுரு (தேசிகர் கலபொட மேல்பிரிவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்), தயன்ராஜ் (உப செயலாளர் புதிய மலையக அபிவிருத்தி அமைப்பு), செல்லையா மகேந்திரன் ராஜூ (காமன் கூத்து ஒருங்கிணைப்பாளர் புதிய மலையக அபிவிருத்தி அமைப்பு) லெட்சுமணன் (ஆலோசகர், சமூக செயற்பாட்டாளர்), நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுசாந்தன் (செயலாளர் பாடசாலை அபிவிருத்தி சங்கம் கலபொட தமிழ் வித்தியாலயம்) ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டார்கள். கலபொட மேல்பிரிவு காமன் கூத்து ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் தோட்ட இளைஞர் அமைப்பினர் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

# 'பழனத்தில் விளைந்த பவளங்கள்' சிறுகதை நூல் அறிமுக விழா



கிண்ணியா ஜெனீரா தௌபீக் ஹைருல் அமானின் பழனத்தில் விளைந்த பவளங்கள் என்ற நூல் அறிமுக விழா கடந்த சனிக்கிழமை கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் S.A அப்துல் அஸீஸின் (நளீமி) (சவூதி தூதரகம்) தலைமையில் இடம் பெற்றது. வரவேற்புரையை கலாபூசணம் P.T.அஸீஸ் வழங்கினார். ஓய்வு நிலை அதிபர் திருமலை நவம் நூல் ஆய்வுரை நிகழ்த்தினார். பிரதேச செயலாளர் M.H.M.கனி, கவிஞர் ஷெல்லிதாசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சிகளை ஊடகவியலாளர் A.W.ஆஷிக் தொகுத்தளித்தார். லனீஹா, மதீஹா தனித் தனியாக இஸ்லாமியக் கீதம் இசைத்தனர். மாணவிகள் கானா பாட்டுக்கு அபிநயம் செய்தனர். இறுதியாக நூலாசிரியரால் ஏற்புரைவழங்கப்பட்டது. இலக்கியவாதிகள், ஆசிரியர்கள், அதிபர்கள், உறவினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# காற்றோடு கலந்த ஓசை நயத்துடன் கூவி இசைக்கும் ஓர் இளம் குயில்

ஹட்டனை வசிப்பிடமாக கொண்ட தனுஜா சிவரூபன் ஆகிய நான் ஒரு கட்டிட பொறியியலாளர் ஆவேன். சிறு வயது முதல் இசையில் ஆர்வம் இருந்தது. ஆனால் அதற்கான சூழல் அமையவில்லை. கல்வியின் பின்தொழில் நோக்கிய பயணமாக வாழ்கை இயந்திரத்தன்மையுடன் ஓடியது. எனது இரண்டாவது மகள் பிறந்தபின் குடும்ப சூழல் காரணமாக ஹட்டனில் வசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இசையின் மீது கொண்ட ஈர்ப்பினால் என்ற T&D Tunes Channel ஐ 2022 July இல் தொடக்கி, பல தடைகள் , சிரமங்கள் மற்றும் வளப் பற்றாக்குறைகளுடன் நடத்தி செல்கின்றேன்.




வெகு விரைவில் காற்றே காற்றே என்ற பாடலை வெளியிட இருக்கின்றேன் , இதற்கான உங்கள் முழு ஆதரவையும் நீங்கள் தர வேண்டுகின்றேன். அத்துடன் பாடலை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல உள்ளூர் சர்வதேச மட்டத்தில் ஊடகங்களின் ஆதரவை மிகவும் எதிர்பார்க்கிறேன். வானொலிகளில் தொலைக்காட்சிகளில் நம்நாட்டு படைப்புகளுக்கு ஒரு நேரம் ஒதுக்கி ஆதரவு தரவேண்டும். குறிப்பாக என்னுடைய பாடல்களுக்கு தளம் அமைப்பது , மிகவும் சிரமமாக உள்ளது.

இயற்றிய வரிகள் மெட்டுடன் கானமாகி நடனமாட, இனிமையாய் பிறக்கிறது. காற்றே காற்றே பாடல், இசை கேட்டு இவ்வுலகில் மயங்காதோர் யாருமில்லை நல்ல இசை கேட்க மறுப்போருக்கு வாழ்வில் இனிமையில்லை, வசையும் இசையால் வசமாக வேண்டும், இசையே இயற்கையின் குரலோசை ஆகும்.

அந்த காற்றின் குரலோசையுடன் காத்திருக்கும் இவனும் (காற்றே காற்றே) கற்பனையில் ஒர் காதல் பாடல் இந்த பாடலை கொட்டகலையைச் சேர்ந்த A. Aldon Roshan என்பவர் பாடியுள்ளார். இவர் A.R.International (India) மற்றும் சலீம் & சரசுதீன் இணைந்து ஹட்டனில் நடாத்திய பாடுவோர் பாடலாம். இறுதிச்சுற்று போட்டியில் பங்குபற்றிய ஒரு சிறந்த பாடகர்களில் ஒருவராவார்.

நடன அசைவுகளை வன்னியைச் சேர்ந்த தமிழ் நிலவன் என்பவர் வழங்கவுள்ளார். இவர் "இது கனவோ நிஜமோ " என்ற என்னுடைய பாடலில் ஏற்கனவே நடன அசைவுகளை வழங்கியிருந்தார். இதைத்தவிர இந்த பாடலை பார்க்கும் அல்லது கேட்கும் நமது சமூகமட்ட பிரஜைகளும், You tube Link ஐ Share செய்யவேண்டும் என்பது தாழ்மையான விண்ணப்பம். இந்த துறையில் முன் அனுபவம் இல்லாமல் சாதிக்க துடிக்கும் நேரத்தில் சமூகமும், ஒத்துழைப்பு தரவேண்டும், வெறுமனே விமர்சனங்களை மட்டும் வழங்காமல், என்னுடைய You tube Link ஐ எல்லோரிடத்திலும் கொண்டு சேர்க்க உதவவேண்டும். இந்த எண்ணம் கொஞ்ச பேரைத் தவிர நம்மில் நிறையபேருக்கு குறைவாகவே உள்ளது. வாழ்த்த மனமில்லாத சமூகத்திலேயே நாமும் வாழ்கின்றோம் என்பது சற்று மன வருத்தமாக உள்ளது. இந்த இறுகிய மனநிலை மக்களிடையே மாறவேண்டும்.



ஒருமனிதனுக்கு கல்வி அல்லது , கல்வி சார்ந்த தொழில் மட்டும் போதுமானது இல்லை , அவனிடம் ஏதாவது விசேட திறமைகள் இருப்பின் அதை வளர்ப்பதற்கு குடும்பமும் சமூகமும் துணை நிற்க வேண்டும். நானும் இந்த சிக்கல் நிறையவே அனுபவிக்கிறேன். இதைபோல் எத்தனையோ பெண்கள் திறமை இருந்தும் பயன்'படுத்த முடியாமல் குடும்ப சூழலில் சிக்கி உழல்கின்றார்கள். திறமைக்கான ஊக்குவிப்புகளை குடும்பமும் சமூகமும் வானொலி ஊடகங்களும், தொலைக்காட்சி ஊடகங்களும் வழங்கவேண்டும் என்பதே எனது அவா.

இதுவரை கிடைத்த விருதுகள் பட்டியல் கீழே வருமாறு கலரத்ன விபூஷண் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வத்தளை இசை ஜோதி (ஆன்மீகம் இசை நாடக முப்பெரும் விழா) The AR Productions Awards, Auras of Achievement 2023 சில பாடல்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. தொடுவானம் தூரம் இல்லை, இசை மாயாவள், கல்லூரி காலங்கள், மல்லிகை பூவே கலைஞர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், கலைஞர்கள் ஆரோக்கியமாக இருந்தால் தான் கலைகளின் வெளிப்படுத்தல்கள் நல்ல முறையில் இருக்கும். கலைகள் என்று பார்க்கும் போது நாம் பிறந்ததிலிருந்து இறுதிவரை கலைகளோடு பயணிக்கின்றோம். பிறந்த போது பாடும் தாலாட்டோ, இறந்த போது வைக்கும் ஒப்பாரியாக இருக்கட்டும் அதே போல் வாழ்வியலோடு கலை பின்னிப் பிணைந்துள்ளது.

இன்றுவரை பல நூறு கலைஞர்கள் வாழ்ந்து மடிந்துவிட்டனர். ஆனால் அவர்களில் ஒரு சிலரின் படைப்புகளும், ஆற்றல்களும் சேவைகளுமே வரலாற்றில் இடம்பிடித்துள்ளதுடன் மக்கள் மத்தியில் வெளிக்கொணரப்பட்டு கௌரவிக்கப்பட்டும் உள்ளது. பலரது ஆற்றல்கள் வெளியில் கொண்டுவரப்படாமலேயே இன்றுவரை உறங்கிக் கிடக்கின்றன.

ஹட்டனை பொறுத்தவரையில் கலைஞர்களையும்.படைப்பாளிகளையும் சமூக செயற்பாட்டாளர்களையும் இனங்கண்டு அவர்களை ஒன்றிணைத்து அவர்களின் ஆற்றல்களையும் படைப்புகளையும் சேவைகளையும் அங்கீகாரத்தை கொடுப்பதற்கான தேடல்களும் பொறிமுறையும் குறைவாகவே உளளது என்பது எனது ஆதங்கம். இனி வரும் கலங்களிலில் இது சம்பந்தமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருபவர்கள் எங்களுடன் இணைந்து பயணிக்கலாம் கடைசியாக மீண்டும் ஒருமுறை எனது வெளிவர இருக்கும் காற்றே காற்றே பாடலுக்கான ஆதரவை உங்கள் அனைவரிடமும் முன்வைத்து முடிக்கின்றேன்.



# எழுதுவதும், வாசிப்பதும் மனிதனை எப்போதும் புத்துணர்ச்சியாகவே வைத்திருக்கும்

## இளம் ஒலி, ஒளிபரப்பாளர் நிவேதா ஜெகநாதன்

கடுகு சிறிதானதாலும் காரம் பெரிதென்பார்கள். அவ்வாறு தோற்றத்தில் சிறியவராக இருந்தாலும் எழுத்துத்துறையிலும் ஊடகத்துறையிலும் சிறந்தவராக விளங்குபவர் இவர். பாடசாலையில் கல்விப் பயில்கின்ற காலத்திலேயே கட்டுரைகள், ஆக்கங்கள், கவிதைகள் எழுதி எழுத்துத் துறைக்குள் பிரவேசித்தவர் நிவேதா ஜெகநாதன். பாடசாலைக் கல்வியோடு ஊடகத்துறைக்குள் பிரவேசித்தவர். சிறுகதைகள், நாவல்கள் எழுதியது மாத்திரமன்றி ஆறு நூல்களை அச்சிட்டு வெளியிட்டதன் மூலம் இலக்கியத் துறைக்குள் சிறந்ததொரு இடத்தை தக்க வைத்து விட்டார் இவர்.

இலக்கியத் துறைக்குள் பிரவேசித்த நிறைய பெண்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதிலேயே கூடிய கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் இவரைப் பொருத்தவரையில் சிறுகதைகள் மட்டுமன்றி நாவல்கள் எழுதுவதிலும் அதி சிறந்த இடத்தை பிடித்துள்ளார் எனலாம்.



சிறுகதைகள், நாவல்கள் எழுதி இலக்கியத் துறைக்குள் பிரவேசித்த இவர் U T V in முன்னாள் செய்தி வாசிப்பாளராகவும் செய்தி தயாரிப்பாளராகவும் கடமையாற்றி ஊடகத்துறைக்குள் நுழைந்தார். அடுத்தடுத்து ஆறு நூல்களை வெளியிட்டதன் மூலம் எழுத்துத் துறையில் எப்படி மிகக் குறுகிய காலத்தில் பிரபல்யமானாரோ, அதேபோல் ஊடகத்துறைக்குள் பிரவேசித்து மிகக் குறுகிய காலத்தில் பிரபல்யமானார். இவர், தற்போது சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இலக்கியம், ஊடகம் என இரு துறைக்குள் தன் தனித்திறனை வெளிகாட்டி வந்த இவர், அத்துடன் நின்று விடவில்லை. மென்மேலும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இவர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டார். அதற்கமைய இன்று இளம் பட்டதாரியாகவும் இவர் திகழ்கிறார். இவர், அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியலில் முதுமாணி பட்டத்தை பெற்றார். இந்த பட்டம் யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்ட கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக வழங்கப்பட்டது.

இவர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்த பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு முன், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் BA பட்டப்படிப்பினை மேற்கொண்டு BA பட்டதாரியானார்.

இதுவரை இவர் கிட்டத்தட்ட எட்டு வருட கால ஊடக அனுபவத்தை கொண்டவராக இவர் திகழ்கிறார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் வரையிலும் மலையகத்தின் இயற்கை எழில் கொஞ்சும் ஹப்புத்தளை தொட்டுலாகளை தமிழ் கனிஷ்ட வித்தியாலயத்திலும் உயர்தர கல்வியை கொழும்பு விவேகானந்தா கல்லூரியிலும் கற்றுள்ள இவர், இதுவரை ஐந்து நாவல்களை எழுதியுள்ளார். ஒரு சிறுகதை தொகுப்பு உட்பட ஆறு நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.



பாலை நில ரோஜா, அன்னக்கிளிக்கு அஞ்சு வயசு, முதலில் பூத்த முல்லை, காம்பராவின் கடனாளிகள், வாழ்க்கை பயணத்தில் தடம் மாறலும் தடுமாறலும், சிறையில் ஒரு சிற்றோவியம் என ஆறு நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவருக்கு நாவல்கள் எழுதுவதற்கும் தொலைக்காட்சித் துறையில் ஈடுபடுவதற்கும் உறுதுணையாக இருந்தவர்கள்

இவரது குடும்பத்தினரும் ஆசிரியர்களும் நண்பர்களும் என அடிக்கடி நன்றியுணர்வோடு கூறி வரும் இவர், இவருக்கு இன்னும் பலரும் உறுதுணையாக இருந்தார்கள் என்று கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு ஊடகத் துறையில் தடம் பதிக்க Utv இன் முன்னாள் அலைவரிசை பிரதானி A L Irfan மற்றும் Program Producer VJ Misbah ஆகியோரின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிடும் இவர், அதே போல நூல் எழுத்து துறைக்குள் மிக ஆழமாக கால் பதிக்க இவர், எடுத்த முயற்சிக்கு இவருடைய அம்மா மற்றும் ஆசிரியர் கலாநிதி சசாங்கன் சர்மா, ஆசிரியை செல்வி சந்திரகுமாரி ஆகியோரின் பங்களிப்பு இன்றி அமையாதது என்றும் குறிப்பிடுகிறார். இவ்வாறாக பெயர் குறிப்பிடாத இன்னும் பலர் இவருடைய வளர்ச்சி பாதைக்கு வழிகாட்டியவர்கள் இவர் நன்றியுணர்வோடு நினைவூட்டி வருகிறார்.

முதலாவது நூலை எழுதி வெளியிட்டபோது இவரது மன நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்று அறிய முற்பட்டபோது,

முதலாவது நூலை வெளியிடுவது மிக சவாலாக இருந்ததாகவும், முதலாவது நாவல் "பாலை நில ரோஜா " அவர் வாழ்வில் பாரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் புதிய பல கசப்பான இனிப்பான அனுபவங்களை ஏற்படுத்தி தந்தது என்று கூறினார்.

"எழுத்தாளர் என்ற அங்கீகாரம் வெறுமனே வார்த்தைகளின் வர்ணிப்பு அல்ல, அது உணர்வோடு கலந்தது. அதனை முதல் நூலாக்கமும், முதல் வெளியீடும் கற்றுத் தந்தது. வாழ்க்கையில் மனிதன் புதிதாக பிறந்த உணர்வை ஏதாவது ஒரு இடத்தில் அனுபவிப்பான், அந்த மனநிலை இந்த நூல் வெளியீட்டில் கிடைக்கப் பெற்றது என்று பெருமிதத்துடன் இன்று கூறுகிறார்.

அவர் தற்போது சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றுவதாக அறிவித்து இருந்தார். அது பற்றி கேட்டபோது...

தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிவதாகவும் அதுவும் ஊடகம் சார்ந்ததே என்றும் குறிப்பிட்டார்.

எழுதுவதும், வாசிப்பதுவும் மனிதனை எப்போதும் புத்துணர்ச்சியாகவே வைத்திருக்கும், அதிக தேடல்களும் எம்மை அறிவு முதிர்ச்சியுடைய மனிதனாக்கும்.

தொடர்ச்சியாக எழுத்து துறைக்குள் இயங்கி கொண்டிருப்பதுவும் ஒரு வரப்பிரசாதம் தான் என்று புன்னகை ததும்ப கூறினார்.





# ஹைபர் லூப் த்ரில்லர் கதையில் பரத்

பரத், ஷான், ராஜாஜி , அபிராமி, அஞ்சலி நாயர், பவித்ரா லட்சுமி உட்பட பலர் நடித்துள்ள படம், 'ஒன்ஸ் அபான் எ டைம் இன் மெட்ராஸ்'. ஃப்ரைடே பிலிம் பேக்டரி சார்பில் கேப்டன் எம்.பி. ஆனந்த் தயாரிக்கிறார். பாலா, ட்ரீம் ஹவுஸ் ஹாரூண், பிஜிஎஸ் புரொடக் ஷன்ஸ் பிஜிஎஸ் இணை தயாரிப்பு செய்கின்றனர். பிரசாத் முருகன் இயக்குகிறார். ஜோஸ் ப்ராங்க்ளின் இசை அமைத்துள்ளார். வசனம், பாடல்களை ஜெகன்கவிராஜ் எழுதியுள்ளார்.

படம்பற்றி பிரசாத் முருகன் கூறும்போது, "ஹைபர் லூப் வகையிலான த்ரில்லர் படம் இது. மனித வாழ்வில் சந்தர்ப்பம் தான் ஹீரோவும் வில்லனும். ஒரு பொருள் ஒரு மனிதன் கையில்எந்த சந்தர்ப்பத்தில் கிடைக்கிறது என்பதைப் பொறுத்து தான்அவன் அப்பொருளை நன்மைக்கோ, தீமைக்கோ பயன்படுத்துவான்.அப்படி நான்கு பேர் கைகளில் எதிர்பாராத விதமாகத் துப்பாக்கி கிடைக்கிறது. அது அவர்கள் வாழ்க்கையை எப்படி மாற்றுகிறது என்பது கதை. இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது" என்றார்.



# கஜானா' படத்துக்காக கிராபிக்ஸ் யாளி

யோகி பாபு, வேதிகா, இனிகோ பிரபாகர் முதன்மை வேடங்களில் நடித்துள்ள படம், 'கஜானா'. சாந்தினி, வேலு பிரபாகரன், மொட்டை ராஜேந்திரன் உட்பட பலர் நடித்துள்ளனர். ஃபோர் ஸ்கொயர் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் கதை, திரைக்கதையை எழுதி பிரபாதிஸ் சாம்ஸ் இயக்கியுள்ளார்.

படம்பற்றி படக்குழு கூறும்போது "இது, இண்டியானா ஜோன்ஸ், நேஷனல் டிரஷர் போன்ற ஹாலிவுட் படங்களைப் போல மாய மந்திரம் மற்றும் மிருகங்களின் சாகசக் காட்சிகளோடு உருவாகியுள்ள படம். அழிந்துப்போன ஆதி உயிரினமான யாளியை இந்தப் படத்துக்காக கிராபிக்ஸில் வடிவமைத்துள்ளோம். இந்தப் படத்துக்கு பிறகு யாளி விலங்கை ரசிகர்கள் கொண்டாடுவார்கள். விஎப்எக்ஸ் காட்சிகள் பேசப்படும்.

யோகி பாபு, அனிமேஷன் கதாபாத்திரங்களுடன் நடித்துள்ள காட்சிகளும் அனைவருக்கும் பிடிக்கும் விதமாக இருக்கும். மே முதல் வாரம் படம் வெளியாகும்" என்றனர்.



# லோகேஷ் கனகராஜ், ஸ்ருதிஹாசனின் 'இனிமேல்' ஆல்பம் டீசர்

இயக்குநர் லோகேஷ் கனகராஜ் மற்றும் ஸ்ருதிஹாசன் இணைந்து நடித்துள்ள 'இனிமேல்' ஆல்பம் பாடலின் வீடியோ வெளியாகி உள்ளது. இதில் இணக்கமான ரொமான்ஸில் இருவரும் நடித்துள்ளனர்.

கமல்ஹாசன் வரிகளில், ஸ்ருதிஹாசன் இசையமைப்பில், லோகேஷ் கனகராஜ் நடித்துள்ள 'இனிமேல்' ஆல்பம் பாடலின் அறிவிப்பை அண்மையில் ராஜ்கமல் நிறுவனம் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் வெளியிட்டது.

இந்நிலையில், இதன் டீசர் தற்போது வெளியாகி உள்ளது. வரும் 25ம் தேதி இந்தப் பாடல் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவான 'விக்ரம்' படத்தில் கமல் நடித்திருந்தார். 2022ல் வெளியான இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றது.

தற்போது நடிகர் ரஜினிகாந்த் நடிக்கவுள்ள தனது அடுத்த படத்துக்கான பணிகளை லோகேஷ் கனகராஜ் கவனித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# 'திருட்டு பாடம்' படத்தில் வங்கி கொள்ளை

இந்திரா ராம், பாயல் ராதாகிருஷ்ணா, ராஜீவ் கனகலா உட்பட பலர் நடித்துள்ள தெலுங்கு படம், 'சவுரிய பாடம்'. இது தமிழில் 'திருட்டு பாடம்' என்ற பெயரில் வெளியாகிறது. அறிமுக இயக்குநர் நிகில் கொள்ளமாரி இயக்கியுள்ள இந்தப் படத்தைதிரிநாதா ராவ் மற்றும் ஒளிப்பதிவாளர் கார்த்திக் கட்டமனேனி இணைந்து தயாரித்துள்ளனர். நான்கு சிறு திருடர்கள் இணைந்து அவர்களது கிராமத்தில் உள்ள வங்கியை கொள்ளையடிக்கத் திட்டமிடுகின்றனர். இந்தக் குழுவை நாயகன் இந்திரா ராம் வழிநடத்துகிறார். இதற்காக இவர்கள் எதிர்கொள்ளும் சம்பவங்கள்தான் கதை. இந்தப் படத்தின் தமிழ் டீசரை விஜய் சேதுபதி சமீபத்தில் வெளியிட்டார்.

# சூர்யா, சுதா கொங்கரா இணையும் 'புறநானூறு'

நடிகர் சூர்யா மற்றும் இயக்குநர் சுதா கொங்கரா இணையும் புதிய படமான 'புறநானூறு' படப்பிடிப்பு குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. இந்தப் படத்தை தயாரிக்கும் சூர்யாவின் 2டி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது. சூர்யா மற்றும் சுதா கொங்கரா என இருவரும் இணைந்து இதனை அறிவித்துள்ளனர்.

சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த 2020 ம் ஆண்டு வெளியான 'சூரரைப்போற்று' திரைப்படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. தேசிய விருதுகளையும் வென்றிருந்தது. இந்நிலையில், இந்தக் கூட்டணி மீண்டும் புதிய படம் ஒன்றில் இணைந்து பணியாற்ற உள்ளதாக கடந்த ஆண்டு அக்டோபரில் அறிவிக்கப்பட்டது. 'புறநானூறு' என இந்த படத்துக்கு தலைப்பு வைக்கப்பட்டது. இதில் சூர்யாவுடன் துல்கர் சல்மான், நஸ்ரியா, விஜய் வர்மா ஆகியோர் நடிக்கின்றனர். ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.

இந்நிலையில், இந்தப் படம் குறித்த அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. 'புறநானூறு படத்துக்கு கூடுதல் நேரம் தேவைப்படுகிறது. இந்தப் படத்தில் நாங்கள் இணைந்து பணியாற்றுவது சிறப்பு வாய்ந்தது. இது எங்கள் நெஞ்சத்துக்கு நெருக்கமானது. சிறந்த படைப்பை உங்களுக்கு வழங்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். விரைவில் அடுத்தக்கட்ட பணிகள் தொடங்கும். உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நடிகை டாப்ஸி ரகசிய திருமணம்



தனுஷ் நடித்த 'ஆடுகளம்' படம் மூலம் ஹீரோயினாக அறிமுகமானவர் டாப்ஸி. தொடர்ந்து 'ஆரம்பம்', 'காஞ்சனா 2' உட்பட பல படங்களில் நடித்த டாப்ஸி, இப்போது இந்திப் படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். அவர் ஷாருக்கானுடன் நடித்த 'டங்கி' படம் கடந்த ஆண்டு வெளியானது. இவர், டென்மார்க்கை சேர்ந்த பாட்மிண்டன் பயிற்சியாளர் மத்யாஸ் போ என்பவரைக் கடந்த 10 வருடங்களாகக் காதலித்து வருகிறார்.

இவர்கள் திருமணம் மார்ச் இறுதியில் ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் நடைபெற இருப்பதாகத் தகவல் வெளியாகி இருந்தது. இந்நிலையில் இவர்கள் திருமணம் கடந்த 23ம் தேதி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. சீக்கிய மற்றும் கிறிஸ்துவ முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளது. இதில் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், சில திரைபிரபலங்கள் மட்டுமே கலந்துகொண்டனர். இதையடுத்து சமூக வலைதளங்களில் ரசிகர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.



# சிவாவின் 'சூது கவ்வும் 2'

மிர்ச்சி சிவா நடித்துள்ள 'சூது கவ்வும் 2: நாடும் நாட்டு மக்களும்' படத்தின் முதல் தோற்ற டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

நலன் குமாரசாமி இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்து 2013ம் ஆண்டு வெளியான படம், 'சூது கவ்வும்'. பாபி சிம்ஹா, சஞ்சிதா ஷெட்டி, அசோக் செல்வன், ரமேஷ் திலக், கருணாகரன், முனீஸ்காந்த் உட்பட பலர் நடித்திருந்தனர். திருக்குமரன் என்டெர்டெயின்மென்ட் சார்பில் சி.வி.குமார் தயாரித்திருந்தார். இந்தப் படம் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் இதன் அடுத்த பாகம் உருவாகியுள்ளது. 'சூது கவ்வும் 2: நாடும் நாட்டு மக்களும்' என்று தலைப்பு வைத்துள்ளனர். சி.வி.குமார் தயாரிக்கும் இதில், மிர்ச்சி சிவா, கருணாகரன், ரமேஷ் திலக், ராதா ரவி உட்பட பலர் நடித்துள்ளனர். 'யங் மங் சங்' படத்தை இயக்கிய அர்ஜுன் இயக்கியுள்ளார். கார்த்திக் கே.தில்லை ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

டீசர் எப்படி? "வெற்றிப் படமான 'சூது கவ்வும்' படத்தின் இரண்டாம் பாகம் ரிலீஸுக்கு தயாராக உள்ளது" என ட்ரெய்லரின் தொடக்கத்திலேயே டிவியில் வாய்ஸ் ஓவர் ஒலிக்கிறது. "நீ லாடா இருந்தாலும்" என்ற பாடலின் வழியே காட்சிகள் நகர்கிறது. ஜாலியான கேங்க்ஸ்டர் படமாக இருக்கும் என்பதை காட்சிகள் உணர்த்துகிறது. மிர்ச்சி சிவாவின் செயல்பாடுகள் அதனை உறுதி செய்கின்றன.

இறுதியில், "பொண்ணுங்களோட கற்பனையில தான் நிம்மதியா வாழமுடியும்; கல்யாணம் பண்ணா நிம்மதியா வாழவே முடியாது" என்ற பஞ்ச் வசனத்துடன் டீசர் முடிகிறது. இந்த டீசர் படத்தின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

# மனைவி மீது ஒருதலைக் காதல்



விஜய் ஆண்டனி, மிர்ணாலினி ரவி நடிப்பில் உருவாகியுள்ள 'ரோமியோ' படத்தின் ட்ரெய்லர் வெளியாகியுள்ளது.

விநாயக் வைத்தியநாதன் இயக்கத்தில் விஜய் ஆண்டனி நடித்துள்ள புதிய படம் 'ரோமியோ'. இதில் மிருணாளினி ரவி நாயகியாக நடித்துள்ளார். விடிவி கணேஷ், இளவரசு, தலைவாசல் விஜய், சுதா உள்ளிட்ட பலர் நடிக்கும் இப்படம் தமிழ், தெலுங்கு என இருமொழிகளிலும் வெளியாகிறது. இப்படத்தை விஜய் ஆண்டனியே தயாரிக்கவும் செய்திருக்கிறார். இப்படத்தின் ட்ரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

ட்ரெய்லர் எப்படி? 'என் மனைவியை இனி ஒருதலையாக காதலிக்கப் போகிறேன்' என்னும் டயலாக்குடன் ட்ரெய்லர் தொடக்கத்திலேயே நம்மை இழுத்துக் கொள்கிறது.

விருப்பமில்லாமல் திருமணத்துக்கு சம்மதிக்கும் ஹீரோயின், மனைவியின் அன்பைப் பெற பலவழிகளில் போராடும் கணவன் என்ற கதைக்களத்துடன் தமிழில் 'மௌன ராகம்' தொடங்கி, 'ராஜா ராணி' எண்ணற்ற படங்கள் தமிழில் வந்துவிட்டன. இதுவும் அதே பாணி கதைதான் என்பதை ட்ரெய்லரின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

எனினும் ட்ரெய்லர் முழுக்க வரும் நகைச்சுவையான வசனங்கள், கலகலப்பான காட்சிகள் மூலம் இது ஒரு ஜாலியான படமாக இருக்கும் என்று தோன்றுகிறது. ட்ரெய்லரில் ஆங்காங்கே விடிவி கணேஷ் அடிக்கும் ஒன்லைனர்களும் ரசிக்க வைக்கின்றன. இப்படம் வரும் ரம்ஜான் பண்டிகைக்கு திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

# பெண்கள் வாழ்வியலில் அன்றும் இன்றும்

இன்றைய காலத்தில் ஓரளவு சுதந்திரம் பெற்ற பெண்களாகவே நாம் வாழ்கின்றோம். கல்வி, பொருளாதாரம், தொழில், சுயஉரிமை, ஆளுமை என்று மாற்றங்களைப் பெண்கள் பெற்றுள்ளதால் இன்றைய காலத்தில் பல பெண்கள் சாதனைப் பெண்ணாக சாதித்து கொண்டிருக்கின்றனர். பெண்கள், ஆண்களுக்கு சமமாக கல்வியிலும் தலைமை வகிப்பதிலும் போட்டி போட்டுக்கு



கொண்டு முன்னேற்றம் காண்கின்றனர்.

ஆண்களுக்கு மட்டுமே முடியும் என்கிற சில கடுமையான தொழில்களைக் கூட மிகவும் அழகாகவும் இலகுவாகவும் பெண்கள் செய்து சாதித்து காட்டியுள்ளனர், காட்டுகிறார்கள் .

இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சி இதற்கு பேருதவியாக இருக்கிறது. திருமணம், விவாகரத்து,உரிமைகள் என்பவற்றுக்கு சட்டங்களும் பெண்களுக்கு உறுதுணை புரிகின்றது. அத்துடன் சொத்துக்களில் ஆண்பிள்ளைகளைப் போலவே பெண் பிள்ளைகளும் உரிமை கேட்க முடிகிறது. தனியாக தூர தேசங்களில் கூட இன்றையப் பெண்கள் வாழ்கிறார்கள். தங்கள் பெற்றோர்களை பார்க்கும் உரிமையை இன்று பெண்கள் பெற்றுள்ளனர். பிள்ளை பெறுதல், சுய உழைப்பு, தங்கள் எதிர்கால தீர்மானங்களை தாங்களே எடுக்கும் சூழலுக்குள் வாழ்கிறார்கள்.

பெண்கள் முன்னேறினாலும் அவர்களுக்கும் கிடைக்காத முக்கியமான சில விடயங்களை உற்றுக் கவனித்தால், மகப்பேறு விடுமுறை, குடும்ப வன்முறைகள், குடும்பத்தை ஆளுமை செய்வது, ஊதியமில்லாப் பணி, பணிபுரியும் வயது விகிதம், வேலையில்லாதவர் விகிதம், சர்வதேச அளவில் பணியில் பெண்கள் முறைசாரா வேலைவாய்ப்பு, பெண்களுக்கு எதிரான வன்முறை, சட்டபூர்வ தடைகள் என்பனவற்றில் பாகுபாடு காணப்படுகிறது. இதில் பாரியளவு முன்னேற்றமும் விழிப்புணர்வும் வேண்டும்.

சமூக பாதுகாப்பு பெண்களுக்கு மிகவும் குறைவாகவே உள்ளது. முன்னையக் காலத்தில் குழந்தை திருமணம் கொடூரம் என்றால் இன்று குழந்தைகள் துஷ்பிரயோகம் மகா கொடூரமாய் இடம்பெறுகிறது.

இன்றும் வீட்டு வன்முறைகள் ஓயவில்லை. இதில் படித்தப் பெண்கள், படிக்காதப் பெண்கள் என்கிற வேறுபாடெல்லாம் இல்லை எனலாம்.

தொழிலில் பாகுபாடு, பெண்களின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்க விருப்பமின்மை, சாதாரண தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு எந்தவொரு அடிப்படை தேவைகளும் கிடைப்பதில்லை என்று பல பிரச்சினைகள் தொடர்ந்தாலும் முன்னைய காலங்களை விட இன்று மாற்றங்கள் நிறையவே உண்டு.

அதை வைத்துக்கொண்டு சமூகத்தில் பெண்களுக்குத் தேவையான பிரச்சினைகளை பேசித் தெரிந்து வெளிக் கொண்டுவந்து நல்லதொரு விடிவான பெண் சமூகத்தை உருவாக்கிட துணை புரியலாம்.

அதற்கு பெண்களின் கல்வியே பிரதான ஆயுதம். பெண் குழந்தைகளுக்கு கல்வி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். கல்வி இடைவிலகல் அதிகமாக உள்ளதால் பெண் குழந்தைகளின் வாழ்க்கையை திசை மாறிப் போகிறது. கல்வியே வாழ்க்கை மாற்றும் சக்தி கொண்டது என்பதை உணர வைப்பது தலையாயக் கடமையாக இருக்கிறது. எனவே பெண் கல்வி வேண்டுமென இவ்வருட பெண்கள் தின உறுதி மொழியாக எடுத்துக் கொண்டு நாம் செயற்படுவோம்.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...✍

# வீட்டு அலங்காரம்

வீட்டின் உட்பகுதிகளை அலங்காரம் செய்வது என்பது ஒரு கலை ஆகும். வெகு சிலரே இதில் அதிக ஆர்வத்துடன் இருப்பர். மிகச் சரியான பர்னிச்சர் பொருள்களைக் கண்டறிந்து அவற்றை தேர்ந்தெடுப்பதற்கு அதிக பயிற்சிகள் தேவை. ஒரு அழகு நிறைந்த பொருளைப் பார்க்கும் போது, நாம் மனக்கிளர்ச்சி அடைந்து அவற்றை வாங்க முயற்சி செய்கிறோம். சில நேரங்களில் நமது பார்வைக்கு ஆடம்பரமாகத் தெரியும் ஒரு அலங்காரப் பொருளை வாங்கி வீட்டில் வைத்தால், வெகு விரைவில் அது நமக்கு சலிப்பைத் தட்டிவிடும்.

விமர்சனப் பார்வையோடு பகுப்பாய்வு செய்து, வீடு மற்றும் அது சார்ந்த பொருள்களை தேர்ந்தெடுத்தால், நாம் விரும்பும் கனவு இல்லத் தோற்றத்தை நமது வீட்டிற்கு வழங்கலாம். வீட்டின் உட்புற அலங்காரம் என்பது, மின் விளக்குகள், பர்னிச்சர் பொருள்கள் மற்றும் வீட்டின் சுவர்கள் போன்றவற்றைப் பொருத்து அமைகிறது. ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு வீட்டிற்கான அலங்காரப் பொருள்களை வாங்க வேண்டும். வீட்டை அலங்காரம் செய்யும் போது ஏற்படும் பொதுவான தவறுகளை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதை இந்த பதிவில் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

**1. சரியான தரை விரிப்புகள்**

தரை விரிப்புகளை வாங்கும் போது சிறிய விரிப்புகளைத் தவிர்க்க வேண்டும். பலர் சிறிய தரை விரிப்புகளை



வாங்கி தவறுகள் செய்வர். பொதுவாக அறையின் நடுப்பகுதியில் விரிப்பதற்காக தரை விரிப்பை வாங்குகிறோம். ஆகவே பெரிய தரை விரிப்பை வாங்குவது நல்லது. பர்னிச்சர் பொருள்களின் கால்கள் அதன் மீது இருப்பது நல்லது. எல்லா கால்களும் தரை விரிப்பின் மீது இல்லை என்றாலும், அவற்றின் முன்னங்கால்களாவது தரை விரிப்பின் மீது இருப்பது நல்லது. அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

**2. தாமதமாக வண்ணம் அடித்தல்**

வீட்டிற்கு வண்ணம் அடிப்பதற்கு முன்பாக, வீட்டை அலங்காரம் செய்வதற்கான பொருள்கள் மற்றும் கலை அலங்காரப் பொருள்களை வாங்குவது நல்லது. பின் அந்த அலங்காரப் பொருள்களுக்குப் பொருத்தமான வண்ணங்களைத் தேர்ந்டுதெக்கவும். பொதுவாக வீட்டின் சுவரில் அடிக்கப்பட்டிருக்கும் வண்ணத்திற்கும், வீட்டில் இருக்கும் பர்னிச்சர் பொருள்களுக்கும் இடையே எந்த ஒரு பொருத்தமும் இல்லாமல் இருப்பதை நாம் பார்க்கலாம்.

தொடரும்...

# மணப்பெண் அலங்காரம்

மணப்பெண் அலங்காரத்தில் பல்வேறு புதுமைகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. அந்த புதுமைகளை பெற்று, தங்களை முழுமையாக அழகுப்படுத்த விரும்பும் பெண்கள் கவனிக்கத்தக்க விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

திருமணத்திற்கு தயாராக இருக்கும் பெண்கள் அனைவருமே, மணப்பெண் அலங்காரத்தை விரும்புகிறார்கள். அவர்களது விருப்பத்தை நிறைவேற்றும் விதத்தில் மணப்பெண் அலங்காரத்திலும் பல்வேறு புதுமைகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. அந்த புதுமைகளை பெற்று, தங்களை முழுமையாக அழகுப்படுத்த விரும்பும் பெண்கள் கவனிக்கத்தக்க விஷயங்கள் நிறைய இருக்கின்றன.



★ எந்த இடத்தில் திருமணம் நடக்கிறதோ அந்த இடத்துக்கு தக்கபடி அலங்கார விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதிக மேக்கப் செய்து கொண்டு கோவிலில் எளிமையாக திருமணம் செய்வது முரண்பாடாக அமையும்.

★ ஏ.சி. வசதி இல்லாத இடத்தில் திருமணம் நடைபெறுவதாக இருந்தால் அதற்கு தக்கபடி மேக்கப் செய்து கொள்வது சவுகரியமாக இருக்கும்.

★ நீங்கள் எல்லா நாட்களிலும் எப்படி சிகை அலங்காரம் செய்கிறீர்களோ அதே மாதிரியான அலங்காரத்தைதான் திருமணத்தின்போதும் பின்பற்ற வேண்டும். வழக்கத்துக்கு மாறாக சிகை அலங்காரம் செய்தால் அது ஒட்டுமொத்த அழகையும் கெடுத்துவிடும்.

★ சிலருக்கு கூந்தலை விதவிதமான ஸ்டைல்களில் அலங்கரித்தால் பார்க்க அழகாக இருக்கும். சிலருக்கு சாதாரணமாக சிகை அலங்காரம் செய்தாலே அருமையாக அமைந்துவிடும். எது பொருத்தமாக இருக்குமோ அதனையே பின்பற்றலாம்.

★ திருமணத்திற்கு முன்பாக கட்டாயம் மேக்அப் ஒத்திகை பார்க்க வேண்டும். ஒரு தடவையாவது எந்த மாதிரியான மேக்கப் செய்வது நன்றாக இருக்கும் என்று பரிசோதித்து பார்த்தால்தான் உங்களுக்கும், அழகுக்கலை நிபுணருக்கும் நம்பிக்கையும், திருப்தியும் ஏற்படும்.

★ மேக்அப் ஒத்திகை செய்யும் போது திருமணத்திற்கு உடுத்தப்போகும் புடவை, அணியும் ஆபரணம் போன்றவற்றை உடன் எடுத்து செல்லவேண்டும். அது மேக்கப்பை முழுமைப்படுத்தும். நிறை, குறைகளை சரி செய்ய உதவியாக இருக்கும். ஜீன்ஸ், டாப் போன்ற மேற்கத்திய ஆடைகளை அணிந்து கொண்டு மேக்கப் ஒத்திகைக்கு சென்றால் பலன் தராது.

★ சிலருக்கு தங்கள் முகத்தில் எந்த உறுப்பு அழகாக இருக்கிறது என்பது தெரியாது. உதடுதான் அழகாக இருப்பதாக நினைப்பார்கள். ஆனால் கண்கள்தான் வசீகரிக்கும் அழகை கொண்டிருக்கும். முகத்தில் எந்த உறுப்பு அழகாக இருக்கிறதோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதுதான் ஒப்பனைக்கு கூடுதல் அழகு சேர்க்கும்.

★ மணப்பெண் அலங்காரம் பெரும்பாலும் காலை வேளையில் தான் அதிகமாக நடக்கிறது. அவசர, அவசரமாக கிளம்பி சென்று சீக்கிரமாக மேக்கப்பை முடித்துவிடுமாறு நிறைய பேர் சொல்கிறார்கள். ஒருவேளை மேக்கப் சரி இல்லை என்றால் அதனை மாற்ற நேரம் இல்லாமல் போய் விடும். அதனால் மேக்கப் செய்ய அழகுக்கலை நிபுணருக்கு போதுமான நேரம் கொடுங்கள்.



★ ஆண்கள், பெண்கள் எல்லோருக்குமே இளநரை பிரச்சினை இருக்கிறது. அதனை முதலிலேயே சரிபடுத்திவிட வேண்டும். திருமணத்திற்கு முந்தைய நாள் டை அடித்துக்கொள்ளலாம் என்று தள்ளிவைக்காதீர்கள்.

★ ஒருசிலர், 'நாங்கள் பார்க்க கலராக தெரிய வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்' என்று அழகுக்கலை நிபுணர்களிடம் சொல்கிறார்கள். அப்படி குறுக்கு வழியில் அழகை கூட்ட நினைப்பது ஆபத்தானது. இயல்பான அழகையும், நிறத்தையும் சற்று மேம்படுத்துவதில் மட்டும் அக்கறைகாட்டுங்கள்.

# 16 ஆவது எடிசன் விருது விழா

















## விருது பெற்ற தமிழ் திரை கலைஞர்கள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற 16ஆம் ஆண்டு எடிசன் திரை விருது விழா நடைபெற்றது அந்நிகழ்வில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திரைக்கலைஞர்கள் பல்வேறு பிரிவுகளில் விருதுகளைப் பெற்றனர். அந்நிகழ்வில் மலேசியா தமிழர்கள் தயாரித்த 'நான் கற்ற இசை' திரைப்படமும், சிங்கப்பூர் வசந்தம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'ஓ பட்டர்ஃபிளை' வெப் சீரிஸ், 22 கோடி பார்வையாளர்களைக் கொண்ட 'ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்' எனும் பாடலுக்கும் தமிழ் திரைப்பட கலைஞர்களுக்கு இணையாக விருது வழங்கப்பட்டது.

| S.No | AWARD NAMES | AWARDEES | MOVIES |
|---|---|---|---|
| 1 | Best Director | Nelson Dilipkumar | Jailer |
| 2 | Best Music Director | Anirudh Ravichander | Jailer / Leo / Jawan |
| 3 | Best Playback Singer Male | Vijay Yesudas | Nenjame - Maamannan |
| 4 | Best Lyricist | Super Subbu | Hukum- Jailer |
| 5 | Best Character Role Male | Jithan Ramesh | Farhana |
| 6 | Best Character Role Female | Abhirami | Are you ok Baby |
| 7 | Best Screenplay | Adhik Ravichandran | Mark Antony |
| 8 | Best Editor | Nirmal | Jailer |
| 9 | Best Story | Vinayak Chandrasekaran | Good Night |
| 10 | Best Debut Actress | Preethi Asrani | Ayothi |
| 11 | Best Debut Actor | Shakthi Mithran | Yaathisai |
| 12 | Best Comedian | Redin Kingsley | Jailer |
| 13 | Best Appearance | Sandy | Leo |
| 14 | Best Child Artist | Sahasra Sree | Chiththa |
| 15 | Best Small Screen Entertainer | Pugazh | |
| 16 | Best Cinematographer | GK Vishnu | Jawan |
| 17 | Best Debut Director | Vignesh Raja | Por Thozil |
| 18 | Favorite Director of the year 2023 | Karthik Subbaraj | Jigarthanda DoubleX |
| 19 | Feelgood Entertainer | Manoj Bharathiraja | Margazhi Thingal |
| 20 | Classic Icon Award | Bhavani Sre | Viduthalai Part 2 |
| 21 | Rising Star – Female | Aparna Das | DADA |
| 22 | Best Commencing Hero | Santhosh Prathap | Koadraal Paavam |
| 23 | Versatile Icon | Yogi Babu | |
| 24 | Best Documentary | Koose Munisamy Veerappan | |
| 25 | Social Impact Series of the Year | Label | |
| 26 | Best Social Justice Drama | Are You Ok Baby? | |
| 27 | Notable Comedian of the Year | Cool Suresh | |
| 28 | Diabolic Debonair Award | Vasanth Ravi | Jailer |
| 29 | Best Studio for Visual Mastery | Knack Studios | |
| 30 | Visual Marvel Award | PhantomFX | |
| 31 | Sensational Song of the Year | Ayyo Saami | |
| 32 | Global Tamil Series Excellence Award | Oh Butterfly | |
| 33 | Premier Malaysian Tamil Movie of 2023 | Naam Katra Isai | |
| 34 | Best Female Small-screen Entertainer | Nisha | |
| 35 | Comic Entertainer Award | Kathir | |
| 36 | Enthusiastic Performer Award | Sanchita Shetty | |
| 37 | Best Actor | Vikram | Ponniyin Selvan 2 |
| 38 | Best Actress | Trisha | Ponniyin Selvan 2 |

























# கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 2002 O/L, 2005 A/L பயின்று கட்டார் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்








கல்முனை ஸாஹிரா கல்லூரியில் 2002 O/L மற்றும் 2005 A/L கல்விபயின்று தற்போது கட்டாரில் வசிக்கும் பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும் சனிக்கிழமை Rotana Restaurant இல் மிக சிறப்பான முறையில் இடம்பெற்றது.

## வெற்றிகரமாக நடைபெற்ற 98 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் கவியரங்க வரிசையின் 98 ஆவது கவியரங்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு பழைய நகர மண்டத்தில் நடைபெற்றது. உலகக் கவிதை தின அரங்காக இடம்பெற்ற நிகழ்வுகளைவகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார். பொருளாளர் கவிஞர் ஈழகணேஷ் வரவேற்புரையும், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நன்றியுரையும் வழங்கினர். 98 ஆவது கவியரங்கிற்கு கவிஞர் ராஜா நித்திலன் தலைமைத் தாங்கி கலகலப்பாக கவிஞர்களை வழி நடாத்தினார். கவிஞர்கள் தமிழ்த்தென்றல் அலி அக்பர், கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், ராதா மேத்தா, கவிநேசன் நவாஸ், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், பவானி சச்சிதானந்தன், நேகம ஷிபானியா பௌசுல், தி. ஸ்ரீதரன், பிறைக்கவி முஸம்மில், கிண்ணியா அமீர் அலி, அருந்தவம் அருணா, எஸ். அருணன், வாழைத்தோட்டம் எம். வஸீர், ந. தாமரைச் செல்வி, பி. எம். எம். ரமீஸ், லிந்துல ஆர். நவரட்னம், ஆர். தங்கமணி, கம்மல்துறை இக்பால், எம். பீ.எஸ்.பாலா, சிந்தனைப் பிரியன் முஸம்மில், ஜீவேஸ் கௌதம் இளநெஞ்சன் முர்ஷிதீன் ஆகியோர் மிகவும் ஆர்வத்துடன் தங்கள் உணர்வுகளைக் கவிதைகளாக முன் வைத்தனர்.அண்மையில் மறைந்த வகவக் கவிஞர் கவிநேசன் நவாஸின் துணைவியாருக்காகவும், சிரேஷ்ட புகைப்படக் கலைஞர் எஸ்.ஏ. கரீமுக்காகவும் பிரார்த்தனை இடம்பெற்றது. தற்போது நோய்வாய்ப்பட்டிருக்கும் கவிஞர் இஸ்மத் பாத்திமா விரைவில் பரிபூரண சுகம் பெற வேண்டுமெனவும் பிரார்த்தனைச் செய்யப்பட்டது.

படங்கள் முஹம்மத் நசார்

## "சிறந்த எழுத்தாளர்" விருது பெற்றார் கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இந்திய இலங்கை நட்புறவு ஒன்றியம் (10), கண்டியில் நடாத்திய "மலையகம் 200" விருது வழங்கும் நிகழ்வின் போது, கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஓய்வுபெற்ற ஆசிரியையும் பன்னூலாசிரியரும், இலக்கிய ஆளுமையுமான இவர், முன்னாள் ஆளுநரும், முன்னாள் மத்திய மாகாண சபை முதலமைச்சருமான சரத் ஏக்கநாயக்க உட்பட்ட அதிதிகளிடமிருந்து இவ்விருதைப் பெற்றுக் கொண்டார்.

## சுயாதீன அறிவிப்பாளராக லைலா அக்ஷியா



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்ச் சேவைப் பிரிவின் சுயாதீன அறிவிப்பாளராக லைலா அக்ஷியா நியமனம் பெற்றார். இ.ஒ.கூ. தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் கணபதிப் பிள்ளை, இவரை உத்தியோகபூர்வமாக (19.03.2024) நியமித்தார். வானொலி நிகழ்ச்சிகளில் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் லைலா அக்ஷியா, "தினகரன் பத்திரிகையிலும் பல உள்ளூர் மற்றும் வெளியூர் சஞ்சிகைகள், புத்தகங்களிலும் உளவியல் கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதி பகிர்ந்து வருகிறார்.

# 34 வருட ஆசிரியர் தொழிலிருந்து ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒலுமுதீன் கியாஸ் ஷாபி

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்விப் பணியையும் ஊடகப் பணியையும் சம நேரத்தில், சமூகத்துக்கு ஆற்றி, சாதனை படைத்த பன்முக ஆளுமை கொண்ட, எழுத்தாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஒலுமுதீன் கியாஸ் ஷாபி, தனது 34 வருட கால ஆசிரியர் சேவையிலிருந்து, ஓய்வு பெற்றார். அவருடனான ஒரு நேர்காணல்.

**கே : ஆசிரியர் தொழிலில் உங்களுடைய ஆரம்ப காலம் குறித்து கூற முடியுமா?**

பதில் : இலங்கையில் உள்நாட்டு யுத்தம் உக்கிரம் அடைந்திருந்த ஒரு காலகட்டம்தான் 1990 ஆம் ஆண்டு. இந்த ஆண்டுதான் எனது முதலாவது நியமனமும். அதிகஷ்ட பிரதேச பாடசாலையான கிண்ணியா கச்சக்கொடித்தீவு வித்தியாலயத்துக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். அங்கு 1 தொடக்கம் தரம் 5 வரையும் 5 வகுப்புகள் இருந்தன. இந்த தரம் ஐந்து மாணவர்களை சாதாரண தரம் வரைக்கும் கொண்டு சென்று, 1995 இல் பொது பரீட்சைக்கு தோற்ற வைத்தோம். இந்த மாணவர்களுக்கு ஐந்தாம் தரத்தில் இருந்து ஆங்கில பாடத்தை கற்பித்து வந்தேன். சாதாரண தர பெறுபேற்றின் அடிப்படையில் ஆங்கில பாடத்தில் 68 வீதம் சித்தி கிடைத்தது. அப்போது கிண்ணியா கல்வி கோட்டத்திலே இது ஒரு சாதனையாக பதியப்பட்டது. இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும். வசதிகள் இல்லாத அந்த காலகட்டத்தில் சைக்கிளில் 14 கிலோமீட்டர் பிரயாணம் செய்து, யுத்த பீதிக்கு மத்தியிலும் மாலை நேர வகுப்புகளை இலவசமாக நடாத்தி, ஆசிரியர் தொழிலின் தூய்மையை பாதுகாக்க முடிந்தது.

**கே : பல்கலைக்கழக பட்டதாரியான நீங்கள், உயர்தர வகுப்புக்களில் கற்பித்தல் பணியில் ஈடுபட்டிருக்கிறீர்களா?**

பதில் : ஆம், 1997 ஆம் ஆண்டு கிண்ணியா கோட்ட கல்வி அதிகாரியாக இருந்த எம். ஏ. எம். ரசீது சேர் ஒரு முறை என்னை அழைத்து, கிண்ணியாவில் வர்த்தக துறையை கட்டி எழுப்ப வேண்டும் என என்னிடம் கூறினார். இதற்கு நான் விருப்பம் தெரிவித்ததால் என்னை கிண்ணியா நகரின் மத்தியில் உள்ள அல் அக்ஷா கல்லூரிக்கு இடமாற்றம் செய்தார். இது எனது ஆரம்பக் கல்வி பாடசாலை ஆகும். இங்கு வர்த்தகப் பிரிவில் பொருளியல் பாடத்தை கற்பிப்பதற்கு நியமிக்கப்பட்டேன். இந்தப் பாடசாலையின்அதிபர் ஏ. ஆர். எம்.பரீட் சேர் எனக்கு பொருளியல் பாடத்தை கற்பிப்பதற்கு பல வழிகளிலும் பக்கபலமாக இருந்தார். இதன் காரணமாக 2002 ஆம் ஆண்டு, பொருளியல் பாடத்தில் 10 மாணவர்கள் ஏ தேர்ச்சி பெற்றனர். இதுவும் ஒரு சாதனையாகும். இந்த சாதனை இன்னும் கிண்ணியாவில் முறியடிக்கப்படவில்லை.



**கே : திருகோணமலை மாவட்டத்தில் ஊடகத்துறையில் உங்களுடைய நாமம் அதிகமாக பேசப்படுகின்றது. எனவே இந்த துறையில் உங்களுடைய ஆரம்பம், குறித்து வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில் : ஆசிரியர் பணியில், 34 வருடங்களும் ஊடகத்துறையில் 38 வருடங்களும் எனது அனுபவமாகும். நான் பாடசாலையில் உயர்தரப் பிரிவில் படிக்கின்ற காலத்திலேயே தினசரி பத்திரிகைகளுக்கு பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக எழுதியதோடு, கட்டுரைகளையும் அதிகமாக எழுதி வந்தேன். அப்போது வெளிவந்த தினபதி, சிந்தாமணி ஆகிய இரு பத்திரிகைகளும் எனது செய்திகளையும் கட்டுரைகளையும் பிரசுரித்தன. இந்த வயதில் எழுத்துத் துறையில் எனக்கு இருந்த ஆர்வமே, கலைப் பிரிவில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக் கழகம் செல்வதற்கு வழிகோலியது.

**கே : ஊடகக் கற்கை பாடத்தை கிண்ணியாவில் முதலாவதாக அறிமுகப்படுத்தும்போது, ஏதாவது சவால், பிரச்சினைகளை எதிர் கொண்டீர்களா?**

பதில் : ஆம், இதன் போது பாடசாலைக்கு உள்ளே இருந்து சக ஆசிரியர்களிடமிருந்தே பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இது ஒரு பெண்கள் பாடசாலையாக இருந்ததனால் , பிரச்சனைகள் அதிகரித்தே காணப்பட்டது. டெனீம் டவுசரும் டீசர்ட்டும் போட்டுக்கொண்டு கெமராவை தூக்கிக்கொண்டு சந்திப்பொந்தெல்லாம் அலைந்து திரிய வேண்டுமென மாணவர்களுக்கு சொல்லப்பட்டது.

**கே : திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவராக இருந்தபோது, நீங்கள் ஆற்றிய பணிகள் குறித்து, ஏதாவது கூற முடியுமா?**

பதில் : ஆம், 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் நான் மாவட்ட தலைவராக செயற்பட்டு, ஊடகவியலாளர்களுக்கு மாத்திரமன்றி, மாணவ சமூகத்துக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடிந்தது. ஊடகவியலாளர்களின் வாண்மை விருத்திக்காக பல்வேறு பயிற்சிநெறிகள் செயலமர்வுகள் என்பவற்றை ஏற்பாடு செய்து கொடுக்க முடிந்தது. மேலும், மாகாண ஊடகவியலாளர்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையின் கட்டி எழுப்புவதற்காக வடக்கு, தெற்கு நோக்கிய ஊடக சுற்றுலாவை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறேன். இந்த சங்கத்தின் மூலம் சர்வ மத நல்லிணக்கத்திற்கு தேவையான பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். மேலும் நான் தேசிய ரீதியில், அகில இலங்கை முஸ்லிம் மீடியா போரம், இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் சங்கம், உரிமைகளுக்கான ஊடகவியலாளர் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராகவும் இணைந்து செயல்படுகின்றேன்.





**கே : ஓய்வுக்கு பின்னரான காலப்பகுதியை கழிப்பதற்கு உங்களுடைய செயற்பாடுகளை எவ்வாறு திட்மிட்டுள்ளீர்கள்?**

பதில் : அரச சேவையில் இன்னும் மூன்று வருடங்கள் சேவையாற்றக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும், இருக்கின்ற தேக ஆரோக்கியத்துடன் ஒரு முழு நேர ஊடகவியலாளராக கொஞ்ச காலமாவது பணியாற்ற வேண்டும் என்ற விருப்பம் காரணமாகவே அரச சேவையிலிருந்து இளைப்பாறியிருக்கிறேன். இதுவரை காலமும் அச்சு ஊடகங்களில் பகுதி நேரமாக ஊடகப் பணியை மேற்கொண்டு வருகிறேன். இந்த நிலையில் இலத்திரனியில் ஊடகங்கள் மூலமும் எனது ஊடகப் பங்களிப்பை செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் இருக்கின்றபடியால், முழு நேர ஊடகவியலாளராக சமூகத்துக்கு பணியாற்ற திட்டமிட்டிருக்கிறேன்.

**ஏ.எம். கஸ்புள்ளா**
**கிண்ணியா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# காஸாவின் நோன்பு

சஹருமில்லாத நோன்பு
கண்ணீரும் இல்லை
கவலையுமில்லை
கல்பின் கலசம் நிரம்பி வழியும்
ஈமானில் தொடங்குகிறது

இடிந்த பள்ளியின் கற்குவியலில் குவிகிறது கனத்த சுஜுது
தராவிஹின் இரவுகளில் விரியும் இரும்புச் சிறகை
ஊடுறுகிறது ஈமானின் ஒளி
நடுநிசியின் வெளிகளில் நிறைகிறது தஸ்பீஹின் மீக்குரல்
அல்லாஹு அக்பரென
மண்ணின் துகள் படிந்த நெற்றியை எதிரிக்கு
நேர்காட்டி நிமிரும் உறுதியின் சொற்கள் காய்வதில்லை

இதயத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது
இடிபாடுகளிடை தேடுகிறேன்
உடையாத நோன்பின் சிறு துண்டு
இப்தாருக்கும் ஒன்றுமில்லை
ஸஹருக்கும் ஒன்றுமில்லை
மிடர்தாகமும் தவிப்புமென
திறக்கப்படாததாயிற்று நோன்பு
என்றோவொரு காலத்திற்காய்
நோற்கப்படுகிறது
இடிபாடுகளிடை தேடுகிறேன்
உடையாத நோன்பின் ஈரம்
காஸாவின் நோன்பு மீது
படிகிறது எனது நோன்பும்



# ஃபாயிஸ் அலி:குறிப்புக்கு குறிப்பு



ஃபாயிஸாவிற்குச் சொல்வது என்னவென்றால் நம் வாழ்வியல் சுற்றியே ஏராளமான கதைகள் இருக்கின்றன. கிண்ணியாவில் நடப்பதை யாழ்ப்பாணமாக மாற்றுங்கள். இருநூறு கிலோ மீற்றர் இடைவெளியில் யாரும் எதையும் கண்டுபிடிப்பதற்கில்லை. தைரியமாக எழுதுங்கள், தொடர்ந்து எழுதுங்கள்"

இந்த மேற்கோள் சரவணன் மாணிக்க வாசகம் ஃபாயிஸா அலியின்'ஒளிப் பொட்டுகளாய் 'சிறுகதைப்பிரதி குறித்து 'ஒளிப்பொட்டுகளாய் உருமாறிஃபாயிஸா அலி:என்ற குறிப்பில் இருந்து பெறப்பட்டது.

ஈழத்துக் கதை சொல்லிகளில் கிழக்கின் வாழ்வியல் கோலங்களை தன் எழுத்தில் கொணர்ந்த பெண் எழுத்தாளர்களில் ஃபாயிஸா அலி குறிப்பிடும்படியானவர். தன்னைச்சூறிறி நிகழும் வாழ்வியல் அனுபவங்களை எளிமையான மொழியில் உணர்வைக் கிளர்த்தி யதார்த்தத் தளத்தில் நின்றெழுதுபவர் ஃபாயிஸா.

கவிதைகளும் கதைகளுமான அவரது எழுத்து வெளி சமூக யதார்த்தப் பின்புலத்தில் தோன்றுவன.அண்மையில் வெளிவந்த ஒளிப் பொட்டுக்களாய் குறித்து ச.மாணிக்கவாசகம் எழுதும்போது தன்அனுபவத்தையும் சேர்த்துக்கதையனுபவத்தைப் பார்க்கிறார்.

இறுதி மரியாதை ,காணாமல் ஆக்கப் பட்டவர்கள் கதைகளை முன்வைத்துப் பதிகிறார்.

கதைகள் அவரவர் வாழ்வியலின் அனுபவம்,தம்மைச்சுற்றி நிகழுவனவற்றின் தரிசிப்பது,தன் உணர்வைக் கிளர்த்தி விடும் சம்பவங்களின் தொகுப்பு,மனசைப் பிசைந்து விடும் காட்சிகளின் அகப் பார்வை.இது கண்முன்னாலான நிகழ்வுகளின் மீது படியும் எழுத்துக்களால் ஆவது.

மாணிக்கவாசகம் சொல்வதுபோல் 'நம் வாழ்வியலைச் சுற்றியே ஏராளமான கதைகள் இருக்கின்றன' என்பதற்கு ஃபாயிஸா அலி கதைகள் காட்சிதான்.

ஆனால் சரவணன் மாணிக்கவாசகம் முன்வைக்கின்ற "கிண்ணியாவில் நடப்பதை யாழ்ப்பாணமாக மாற்றுங்கள்" என்கிற சொற்றொடர் எந்த அர்த்தத்தைக் கிளப்புகிறது.

கதைக்களமாக யாழ்ப்பாணத்தை மாற்றுமாறு கிண்ணியாவின் கிராமத்துக்காரிக்குச் சொல்லும் தேவையென்ன?

கதைகளில் கிண்ணியாவின் மண் வாசனை அதிகமதிகம் வந்து போய்விட்டதே.எழுத்தை திசைதிருப்புங்களென ஆலோசனை முன்வைக்கிறாரா அல்லது கதைக்களமாக யாழ்ப்பாணம் இருந்தால்தான் கதை மேலெழும் என்கிற மேலாதிக்க குணத்தைச் சுட்டுகிறாரா?

அவலங்களும் துயரங்களும் ஒத்த தன்மை கொண்டிருக்கலாம். ஆனால் யாழ்ப்பாண பின்புலம் வேறு கிழக்கின் பின்புலம் வேறு. அவை யதார்த்தமில்லாமல் வெறும் புனைவாக முடியாதே.

சரனணன் கூற்றின் உண்மைத்துவம் என்ன?

கீழே இன்னுமொன்றையும் கூறுகிறார்."இருநூறு கிலோ மீட்டர் இடைவெளியில் யாரும் எதையும் கண்டுபிடிப்பதற்கு ல்லை"

ஒரு எழுத்தாளரை நோக்கி ஏன் இவ்வாறு கூறப்பட வேண்டும்.

# சிறுவர்கள் நாடகம் நடித்தல்



ஏப்ரல் 30 வரை இதற்கான முதற் கட்டத் தேர்வுக்காக எழுத்துப்பிரதிகள் கோரப்பட்டிருக்கின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த பிரிவுகளில் நாடக அளிக்கைகள் இடம் பெறும்.விருது,பணப் பரிசு,சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளன.ஆண்டின் சிறந்த தயாரிப்பு,சிறந்த பிரதி,சிறந்த நடிகர்,நடிகை(திறந்த/மட்டுப்பட்ட) என்பவற்றிற்கு இவை கிடைக்கவுள்ளன.

பாடசாலைகள் 35 மாணவர் பங்குபற்றும் வகையில்(வயதெல்லை614,1518) நடிக மாணவர்களைத் தேர்வு செய்து ஆசிரியர்,மாணவர் பங்களிப்புடன் தயார்படுத்த வேண்டும்.

தேசிய சிறுவர் நாடக விழாவுக்கான போட்டி அழைப்பை கலாசார அலுவல்கள் திணைக்களம் விடுத்துள்ளது.சிறுவர் நாடகத்தை உயர்தரத்தில் பேணுவது நோக்காகக் கொண்டு இம்முறையும் போட்டி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விபரங்கள்

www.culturaldep.gov.lk இணையத்தளத்தில் பெறலாம்.அன்றேல்0112872385/0113167540 மை அழைக்கலாம்.



# ஒளியின் ஓவியம்



சூரிய ஒளியில் ஓவியம் வரைதல் மீது இன்று கவனக்குவிவு ஏற்பட்டுள்ளது.

யாழ் அல்வாய் இளைஞன் பிரதீசன் ஒளி ஓவியத்தில் சாதிக்கும் எண்ணத்தில் செயற்படுகிறார்.

ஓவியத்தை வரைந்து அதன்மீது சூரிய வெளிச்சத்தை ஒளி ஊடகக் கருவியூடாக வீழ்த்தி வர்ணமயமாக்கும் இந்தப்பாணியில் இலங்கையில் முதலில் ஈடுபடுபவராக பிரதீசன் முன்னெழுகிறார்.

வெயில் ஓவியமாக இதனைப் பார்க்க முடியும். வெயில் நிழலை விழுத்தும் போது இயல்பாகவே நிழல் ஓவியம் தோன்றிவிடும். அதுபோல சூரிய சக்தியைவெயிலைக்கருவியின் மூலம் வரையப்பட்ட நிழல்படத்தில் வீழ்த்தி ஓவியமாக்கும் ஒளி ஓவியக்கலை அழகானது.

புதியன கண்டடையும் வரைதல் கலை பரிமாணமென இதனை நோக்கலாம்.

மூன்றாம் பக்க அடிக்குறிப்பு
(இ)
பாடசாலை கோலம் காலத்தின்
ஊற்றும்தான்
ஊன்று கோலும்தான்
இடைவிலகிப் போனாலும்
வாழ்வின் இடைப்புகுந்து வாழ்வின்
எல்லைகளில் வென்று விடுகிறவர்க
ளும் உள்ளனரே
எல்லைகளில் தேய்ந்து போனோரும்
உள்ளனரே
இடைவிலகியவன்
முதலாளி
முதல்நிலையில் தேறியவன்
அவனுக்குக்கீழொரு தொழிலாளியான
கதையுண்டு
இடைவிலகியவன்
வாழ்வின் மேடுபள்ளங்களில்
ஏறியிறங்கி
மனிதரைப்படித்துப்
படிக்காத மேதையாதலும்
புத்தகம் படித்தவன்
மனிதரை
வாழ்வைப்படிக்காது
வாழ்வைப் பிடிக்காது போன
கதையுமுண்டு
படித்தவன்
பட்டங்கள் சூடி பதவியிலமர்ந்து
திமிரிலாடிப் போனதும்
இடைவிலகியவன்




பண்பாடு படித்து
மனிதம் பூத்த கதையுமுண்டு
இடைவிலகியவரோ
மாண்பில் பிந்தியிருக்க
இடை விலகாது
வாழ்க்கை நீடித்த கல்வியில்
நினைத்தவன்
முந்தியிருந்த கதையுமுண்டு
கல்வியென்பது
அறிவுந்திறனும் மட்டுமல்ல அது
மனப்பக்குவத்தின் பாடப் புத்தகம்
பக்கமெல்லாம் படித்தவர்களால்
தானே
மனிதம் வாழ்கிறது
மாண்பு உயிர்க்கிறது
நானும் கண்டிருக்கிறேன்
இடை விலகியோர் கதை
நானும் கண்டிருக்கிறேன்
இடை விலகாதோர் கதை
பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின்
பக்கங்களில் இருக்கிறது பெருங்
கதை மூன்றாம் பக்க அடிக்குறிப்பு

## கறுப்பு காந்தி

# நெல்சன் மண்டேலா



ஜொஹன்னர்ஸ் பெக் நகர வாழ்க்கை மண்டேலாவுக்கும் ஜஸ்டிஸுக்கும் புது அனுபவமாக இருந்தது. தந்தையின் அரவணைப்பில் அரண்மனையின் செல்லப்பிள்ளைகளாக துள்ளித்திரிந்து சொகுசு வாழ்க்கையில் மிதந்துகொண்டிருந்த இவர்களுக்கு தற்போது வாழ்க்கையின் உண்மை நிலையும் யதார்த்தமும் தாத்பரியமும் வாழ்க்கைப் பாடங்களும் கொஞ்சம் கொஞ்சமாக புரியபத் தொடங்கின. உணவு,உடை,உறைவிடம் எல்லாவற்றுக்கும் பணம் தேவை. பணத்திற்கு எங்கே போவது. சிந்தித்தார்கள். தொழிலை தேடிக் கொள்வோம் என முடிவு செய்து களத்தில் இறங்கினார்கள். மண்டேலாவும் ஜஸ்டிஸும் தாம் படித்த படிப்பிற்கேற்ப தொழிலை தேடிக் கொள்ளஜொஹன்னர்ஸ்பெக்நகரம் முழுதும் அலைந்து திரிந்தார்கள். இறுதியில் தங்கச் சுரங்கமே அவர்களுக்கு கைகொடுத்தது.

தங்கச் சுரங்கம் கடுமையான உழைப்பைக் கோரியது. மிக ஆழத்தில் புதைந்து கிடக்கும் தங்கப் பாளங்களை வெட்டி எடுக்க பல லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தேவைப்பட்டதால் கறுப்பின மக்களை வெள்ளைக்கார முதலாளிகள் சூசகமாக பயன்படுத்திக்கொண்டனர். கறுப்பின மக்களின் அறியாமையும் வறுமையும் வெள்ளையர்களுக்கு சாதகமாக அமைந்துவிட்டது. ஓய்வில்லாமல் நீண்ட நேரம் வேலை வாங்கி விட்டு குறைவான ஊதியத்தையே வழங்கினர். கறுப்பின மக்களும் வேறு வழியில்லாமல் வெள்ளைக்கார முதலாளிகளுக்கு அடிமைகளாகவே கீழ்ப்படிந்து நடக்கத் தொடங்கினார்கள். இதுதான் அன்றைய ஆபிரிக்காவின் நிலையாக இருந்தது. மண்டேலா இதை மாற்ற விரும்பினான். இந்த அடிமைத்தன வாழ்க்கையை அவன் உள்ளம் ஜீரணிக்க முடியாமல் மாற்றம் தேடி அலைந்தது. இந்த நிலையில்தான் மண்டேலாவும் ஜஸ்டிஸும் பிழைப்பிற்கு வேறு வழியின்றி அரை மனதுடன் விரும்பியும் விரும்பாமலும் தங்கச் சுரங்கத்தில் பணியாற்ற முடிவெடுத்தார்கள்.

ஜஸ்டிஸ் ஜொஹன்னர்ஸ்பெக் சென்று சுரங்கப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதே அரசர் ஜொங்கிந்தாபா ஏற்கனவே தீர்மானித்த விடயமாக இருந்தது. அதனால் அவர் முன்னரே தங்கச் சுரங்கப் பணியகத்திற்கு இது குறித்து கடிதம் எழுதி அனுப்பி வைத்திருந்தார். இந்த நிலைமை ஜஸ்டிஸுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. தங்கச் சுரங்கப் பணியகத்திற்கு கடிதம் கிடைத்து ஒரு சில தினங்களிலேயே ஜஸ்டிஸ் வந்து சேர்ந்துவிட்டதால் ஜொங்கிந்தாபாவின் அனுமதியுடன்தான் வந்திருப்பான் என்று நினைத்து நிர்வாகம் அவனை வரவேற்று உடனேயே தங்கச் சுரங்கப் பணியகத்தில் எழுதுவினைஞர் வேலையும் கொடுத்துவிட்டது. ஆனால் மண்டேலாவை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவில்லை. சிபாரிசு கடிதம் இல்லாமல் நாங்கள் வேலை கொடுக்க மாட்டோம் என்று நிர்வாகம் உறுதியாக கூறிவிட்டது. மண்டேலா பெரிதும் சங்கடத்திற்கு உள்ளானான். யாரையும் அறியாத புது ஊரில் புது இடத்தில் தனியாக வேலை செய்வதை விட ஜஸ்டிஸுடன் சேர்ந்து வேலை பார்ப்பதையே விரும்பிய மண்டேலாவுக்கு இது பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. அடுத்து என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்தான். அச்சந்தர்ப்பத்தில் ஜஸ்டிஸ் மண்டேலாவை தோளோடு தோள் அணைத்து ஆறுதல்படுத்தி ஆலோசனைகள் வழங்கினான். "மண்டேலா நீ கவலைப்படாதே. நான் ஒரு போதும் உன்னை விட்டு விலகுவதுமில்லை. கைவிடப் போவதுமில்லை. நாம் இருவரும் உடன்பிறவா சகோதரர்கள் மட்டுமல்ல நல்ல நண்பர்களும் கூட என்பதை நீ மறந்துவிடாதே. நாம் இருவரும் ஒன்றாக இங்கேயே வேலை செய்யலாம். நீ எங்கேயும் போய் வேலை தேடி அலைய வேண்டியதில்லை. என்னிடம் நல்லதொரு உபாயம் இருக்கிறது. நாம் நிர்வாகத்திடம் ஒரு பொய்க்கதை சொல்வோம். அதாவது எனக்கான சிபாரிசு கடிதத்தை தந்தை தபாலில் எழுதி அனுப்பி இருக்கிறார். இன்னும் சில தினங்களில் அது உங்களுக்கு வந்து சேர்ந்துவிடும். என்னை நம்பி வேலை கொடுங்கள் என்று நீ நிர்வாகத்திடம் அவர்கள் நம்பும்படியாக கூறவேண்டும். நானும் அதற்கு ஒத்தூதுகிறேன். உடனே வேலையும் கிடைத்துவிடும்" என்று நம்பிக்கை ஊட்டும்படியாக பேசினான். மண்டேலாவும் வேறு வழியின்றி சரியென்று தலையாட்டி ஆமோதித்தான்.

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் ஜஸ்டிஸ் மண்டேலாவையும் அழைத்துக் கொண்டு சுரங்க பணியக நிர்வாகத்திற்கு சென்று ஏற்கனவே திட்டமிட்டபடி இருவரும் கபட நாடகமாடினார்கள். இவர்களது நாடகத்தை நிர்வாகமும் உண்மையென நம்பி ஏமாந்துவிட்டது. ஜொங்கிந்தாபா அரசரின் சிபாரிசு என்றால் அந்த தங்கச் சுரங்கத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். அதனால் மண்டேலா

**அத்தியாயம் – 11**

வுக்கு உடனே வேலை கிடைத்துவிட்டது. மண்டேலாவை சுரங்கப் பணியகத்தில் பணி உரிமப் பரிசோதகராக நியமித்தார்கள். ஜஸ்டிஸும் மண்டேலாவும் தங்களது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியதால் சந்தோஷத்தில் திளைத்தார்கள்.

சுரங்கப் பணியகத்தில் பணி உரிமப் பரிசோதகரான மண்டேலா தனது சீருடையை அணிந்து கொண்டு நுழைவாயிலில் விறைப்பாக நின்றுகொண்டு பணிக்கு வரும் தொழிலாளர்கள் பணி உரிமம் பெற்றவர்களா என்பதை பரிசோதிப்பதே அவனின் பொறுப்பாக இருந்தது. அவன் கண்ணும் கருத்துமாக ஆசையுடனும் ஆர்வத்துடனும் தொழிலில் ஈடுபட்டான்.

**(தொடரும்)**



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# குழந்தை நட்சத்திரமாக ஷோபனா அறிமுகமான படம்



ராஜேந்திரகுமார், நுதன் நடித்து இந்தியில் வெளியான படம், 'சாஜன் பினா சுஹாகன்'. ஸ்வான்குமார் தக் இயக்கிய இந்தப் படத்தை தமிழில் 'மங்கள நாயகி' என்ற பெயரில் ரீமேக் செய்தார்கள், இரட்டை இயக்குநர்களான கிருஷ்ணன்–பஞ்சு. ஸ்ரீகாந்த், கே.ஆர். விஜயா, சரத்பாபு, சிவச்சந்திரன், மனோரமா, நிஷா. ஸ்ரீகீதா உட்பட பலர் நடித்தனர்.

வி.குமார் இசையமைக்க, வாலி பாடல்களை எழுதினர். கே.ஜே. யேசுதாஸ் பாடிய 'கண்களால் நான் வரைந்தேன்', எஸ்.பி.சைலஜா, பி.சுசீலா இணைந்துபாடிய 'ஓ மம்மா', டி.எம்.சவுந்தர ராஜன், எஸ்.பி.சைலஜா பாடிய 'மாப்பிள்ளை மாப்பிள்ளை மண்ணாங்கட்டி தோப்பிலே', சுசிலா பாடிய, 'வடிவேலனே சிவபாலனே' ஆகிய பாடல்கள் கவனிக்கப்பட்டன.

நாயகிக்கும் மருத்துவம் படிக்கும் நாயகனுக்கும் காதல். படிப்பு முடிந்ததும் திருமணம் என்ற கனவில் இருக்கிறார் நாயகி. ஆனால், நாயகன் மேல் படிப்புக்காக வெளிநாடு செல்கிறான். இதற்கிடையே மரணப்படுக்கையில் இருக்கும் நாயகியின் தந்தை, அவர் நண்பர் மகனை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என சத்தியம் வாங்கிவிட்டு இறந்துபோகிறார்.

வேறு வழியின்றி, அப்பாவின் ஆசையை நிறைவேற்ற அவரை திருமணம் செய்துகொள்கிறார். இதற்கிடையே நாயகியின் காதல் விவகாரத்தைத் தெரிந்து வைத்திருக்கிற ஒருவன், பிளாக்மெயில் செய்கிறான்.

ஒரு கட்டத்தில் அவன் கொல்லப்பட, பிறகு என்ன நடக்கிறது என்று கதை போகும்.நடிகை ஷோபனா, தனது 10 வயதில் குழந்தை நட்சத்திரமாக இந்தப் படத்தில்தான் அறிமுகமானார். 1980ம் ஆண்டு இந்தப் படம் வெளியானது.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# ஆக்ஷன் ஜெய்சங்கரை அதிலிருந்து மாற்றிய 'நூற்றுக்கு நூறு'



ஆக்ஷன் படங்களில், துப்பாக்கி தோட்டாவுடன் நடித்துக் கொண்டிருந்த 'தென்னகத்து ஜேம்ஸ் பாண்ட்' ஜெய்சங்கரை வேறுமாதிரி காட்டிய படம், கே.பாலசந்தரின் 'நூற்றுக்குநூறு'.

இதில், ஸ்ரீவித்யா, நாகேஷ், லட்சுமி, கே.ஆர். விஜயா, விஜயலலிதா, ஜெயக்குமாரி, வி.கோபாலகிருஷ்ணன், வி.எஸ். ராகவன், ஒய்.ஜி.மகேந்திரன், ஆர்.எஸ்.மனோகர், ஸ்ரீகாந்த், ஜெமினி கணேசன், வி.கோபாலகிருஷ்ணன் என ஏகப்பட்ட நட்சத்திர பட்டாளம்.

என்.பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்த இந்தப் படத்துக்கு கே.பாலசந்தரின் ஆஸ்தான இசை அமைப்பாளர் வி.குமார் இசை அமைத்தார். பாடல்களை வாலி எழுதினர்.

இதில் இடம் பெற்ற 'நான் உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்' பாடல் எவர்கிரீன் ஹிட். இப்போதும் பலரின் விருப்ப லிஸ்ட்டில் விடாமல் இடம்பெற்றிருக்கிறது இந்தப்பாடல்.நேர்மையான கல்லூரி பேராசிரியர் ஜெய்சங்கருக்கு லட்சுமியுடன் திருமண ஏற்பாடுகள் நடக்கும்போது அவருக்கு எதிராக, பாலியல் புகார் வருகிறது.

ஒரு கட்டத்தில் ஜெய்சங்கர் கைது செய்யப்பட, தான் நிரபராதி என்று நிரூபித்து எப்படி அதிலிருந்து வெளிவருகிறார் என்பது கதை. கிளைமாக்ஸில் வழக்கம்போல குடும்பத்துக்கான அட்வைஸும் உண்டு.

த்ரில்லர் பாணியில் படத்தை உருவாக்கி இருப்பார் பாலசந்தர். திரைக்கதையும் வசனங்களும் பேசப்பட்டன. வழக்கமாக நடனக் காட்சிகளில் மட்டும் நடிக்கும் விஜயலலிதாவுக்கு இதில் முக்கியமான கேரக்டர்.

ஸ்ரீவித்யாவுக்கு நெகட்டிவ் கேரக்டர் போலதான். வி.எஸ்.ராகவன்ஆங்கிலோ இந்தியராக நடிப்பில் பிரமாதப்படுத்தி இருப்பார். இந்தப் படம் ஹிட்டானது.

1971ல் ஆண்டு இதே தேதியில் வெளியான இந்தப் படம், இந்தியில் வினோத் கன்னா நடிப்பில் 'இம்திஹான்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு வரவேற்பைப் பெற்றது.

# ஐயோ சாமி நீ எனக்கு வேணாம் பாடலுக்கு சிறந்த உணர்ச்சிபூர்வமான பாடலுக்கான எடிசன் விருது











சிறந்த உணர்ச்சிபூர்வமான பாடலுக்கான எடிசன் விருதினை "ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்" பாடல் பெற்றுள்ளது.(Best Sensational Song 2023) 16 ஆவது எடிசன் திரைப்பட விருது விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொத்துவில் ஜெஸ்மின் எழுதிய ''ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்'' பாடல் சிறந்த உணர்ச்சிபூர்வமான பாடல் 2023 (Best Sensational Song 2023) விருதினைப் பெற்றுள்ளது.இசையமைப்பாளர் சனுக்க, பாடகி விண்டி குணதிலக்க மூவரும் இணைந்து இவ்விருதினை பெற்றுக்கொண்டார்கள். விருதினை இயக்குனர், நடிகர் மனோஜ் பாரதிராஜா, சென்னைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர். இவர்களுக்கான வரவேற்பு மாலை இலங்கை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. அமரகாவியம் திரைப்படத்தில் ஜிப்ரான் இசையில் பொத்துவில் ஜெஸ்மின் எழுதிய தாகம் தீர பாடலுக்கு சிறந்த பாடலாசிரியருக்கான எடிசன் விருது கிடைத்தது. பத்தாண்டுகளுக்குப் பிறகு ''ஐயோ சாமி'' பாடலுக்கு விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.